புத்திரன்......புத்திரி
2 1
புத்திரன்......புத்திரன்
பகறு..........உமறு
2 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 3-வகுப்புகளுண்டு, 3-வது வகுப்பார்தான் உயிரோடிருக்கிறார்கள், இவர்களுக்குதான் பாகம் கிடைக்கவேண்டியது, பகறுஎன்பவனும், உமறு என்பவனும்ஜவில் அர்ஹாமின் சந்ததியில் சமவரிசையில் இருக்கிறார்கள், பின்னும் இவர்கள் ஒரேஜின்சுள்ளவர்களாயிருக்கிறார்கள், அதாவது ஆண் ஆணாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களுடைய உசூல் பேதகமாயிருக்கிறது, அதாவது உசூலின் 2-வது தர்ஜாவில் ஒரே ஜின்சில்லாமல் புத்திரனென்றும், புத்திரியென்றும் பேதகப்பட்டிருக்கிறது. இப்படி 2-வது தர்ஜாவில் பேதகப்பட்டிருப்பதினால் உசூலின்பேரில் லிஜ்ஜகரிமிஸ்லி ஹச்சில் உன்சயைனி என்ற காயிதாப்படி புத்திரனுக்கு 2-ம், புத்திரிக்கு 1-ம் கொடுக்கப்பட்டது, பின்னும் இந்த பாகங்களை அவரவர்களின் சந்ததிக்கு கொடுத்துவிடப்பட்டது, எப்படியென்றால் ஷெடி உசூலின் 2-வது தர்ஜாவிலிருக்கிற தௌஹித்திரனுடைய பாகமாகிய 2. இவனுடைய புத்திரனாகிய பகறு என்பவனுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் உசூலின் 2-வது தர்ஜாவிலிருக்கிற தௌஹித்திரியுடைய பாகமாகிய 1. இவளுடைய புத்திரனாகிய உமறு என்பவனுக்கு கொடுக்கப்பட்டது,

இப்படிப்பட்ட பிரிவினையோ இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கௌலின்படி யிருக்கிறது.

பின்னும் இமாம் அபூயூசுபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கௌலின்படி பாகபிரிவினை மேலேகண்டபடி உருவின்பேரில் செய்யப்படாமல் புருஎன்ற சந்ததியில் இருக்கிற ஆண்களின்பேரில் பாகம் செய்யப்படும், எப்படியென்றால் இதற்கு உதாரணம்.

மய்யத்து வஹீது மஸ்அலா 2.
புத்திரியின்...புத்திரியின்
புத்திரன்.....புத்திரி
புத்திரன்.....புத்திரன்
பகரு.........உமரு
1 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 3-வகுப்புகளுண்டு, 3-வது வகுப்பார்தான் உயிரோடிருக்கிறார்கள், இவர்களுக்குதான் பாகம் கிடைக்கவேண்டியது, இமாம் அபூயூசுபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கௌலின்படி உருவின் 2-வது தர்ஜாவில் பேதமிருந்தபோதிலும் லிஜ்ஜகரிமிஸ்லி ஹச்சில் உன்சயைனி என்ற காயிதாப்படி பாகம் செய்யாமல் புருவினுள்ளவர்களாகிய ஆண்களின்பேரில் சமபாகம் செய்யப்பட்டது, எப்படியென்றால் பகரு என்பவனும், உமரு என்பவனும் ஒரே ஜின்சுள்ளவர்களா யிருக்கிறபடியால் பகரு என்பவனுக்கு ஒரு பாகமும், உமரு என்பவனுக்கு ஒருபாகமும் கொடுக்கப்பட்டது.

3-வது உதாரணம் உருவின் தர்ஜாவில் பேதமும். புருவில் பேதமில்லாமலு மிருப்பதைப்பற்றி.

மய்யத்து வஹீது மஸ்அலா 3.
புத்திரியின்...புத்திரியின்
புத்திரன்.....புத்திரி
2 1
புத்திரி.......புத்திரி
ஹலீமா.......சோதா
2 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 3-வகுப்புகளுண்டு, 3-வது வகுப்பார்தான் உயிரோடிருக்கிறார்கள், இவர்களுக்குதான் பாகம் கிடைக்கவேண்டியது, ஹலீமா என்பவளும், சோதா என்பவளும் ஜவில்அர்ஹாமின் சந்ததியில் சமவரிசையில் இருக்கிறார்கள். பின்னும் இவர்கள் ஒரே ஜின்சுள்ளவர்களா யிருக்கிறார்கள், அதாவது பெண்ணாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களுடைய உருவில் பேதமாயிருக்கிறது, அதாவது உருவின் 2-வது தர்ஜாவில் ஒரே ஜின்சில்லாமல் புத்திரன் என்றும், புத்திரி என்றும் பேதப்பட்டிருக்கிறது, இப்படி 2-வது தர்ஜாவில் பேதப்பட்டிருப்பதினால் லிஜ்ஜகரிமிஸ்லி ஹச்சில் உன்சயைனி என்ற காயிதாப்படி புத்திரனுக்கு 2-ம், புத்திரிக்கு 1-ம் கொடுக்கப்பட்டது, பின்னும் இந்த பாகங்களையே அவரவர்களின் சந்ததிக்கு கொடுத்துவிடப்பட்டது, எப்படியென்றால் ஷை உருவின் 2-வது தர்ஜாவிலிருக்கிற தௌஹீத்திரனுடைய பாகமாகிய 2. இவனுடைய புத்திரியாகிய ஹலீமா என்பவளுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் உருவின் 2-வது தர்ஜாவிலிருக்கிற தௌஹீத்திரியுடைய பாகமாகிய 1 இவளுடைய புத்திரியாகிய சோதா என்பவளுக்கு கொடுக்கப்பட்டது, இப்படிப்பட்ட பிரிவினையோ இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கௌலின்படியிருக்கிறது.

பின்னும் இமாம் அபூயூசுபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கௌலின்படி பாகபிரிவினை மேல்கண்டபடி உருவின்பேரில் செய்யப்படாமல் புருஎன்ற சந்ததியில் இருக்கிற பெண்களின்பேரில் பாகம் செய்யப்படும், எப்படியென்றால் இதற்கு உதாரணம்.

மய்யத்து வஹீது மஸ்அலா 2
புத்திரியின்...புத்திரியின்
புத்திரன்......புத்திரி
புத்திரி.......புத்திரி
ஹலீமா.......சோதா
1 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 3-வகுப்புகளுண்டு, 3-வது வகுப்பார்தான் உயிரோடிருக்கிறார்கள், இவர்களுக்குத்தான் பாகம் கிடைக்கவேண்டியது. இமாம் அபூயூசுபு றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் கொள்கைப்படி உடலின் 2-வது தரஜாவில் பேதகமிருந்தபோதிலும் மிஞ்ஜுகரிபிஸ்விஹக்கில் உள்சமபவி என்று சாயித்தப்படி பாகம் செய்யாமல் புருஷனுள்ளவர்களாகிய பெண்களின்பேரில் சமபாகம் செய்யப்பட்டது, எப்படியென்றால் ஹமீமா என்பவளும், சோதா என்பவளும் ஒரேவிதமுள்ளவர்களாயிருக்கிறபடியால் ஹமீமா என்பவளுக்கு ஒருபாகமும் சோதா என்பவளுக்கு ஒருபாகம் கொடுக்கப்பட்டது.

8-வது வகை ஜிஹதும் என்ற ஒரு தாயபந்துவானவன் இருவகையான பாத்தியமுள்ளவனாயிருந்தால் அப்போது இவனுக்கு இருவகையான தாயபாகம்கிடைக்கும் உதாரணம்



இந்த உதாரணத்தில் சைது என்பவனுக்கு 2-வாரிசுகள் இருக்கிறார்கள், 1-வது ஷரீப்பு என்றவன்தான், இவனே தௌஹித்திரியின் புத்திரனாயிருக்கிறான், பின்னும் 2-வது மஜீதா என்றவள்தான் இவளோ தௌஹித்திரியின் புத்திரியாயிருக்கிறாள், பின்னும் மேற்படி மஜீதா என்றவளுக்கு சைதுடன் இன்னும் வேறே ஒருமுறையுமிருக்கின்றது, அதாவது தௌஹித்திரனாகிய உமறு என்பவனுடைய புத்திரியாயும் இருக்கிறாள், எப்படியென்றால் சைதின் தௌஹித்திரனாகிய உமறு என்பவனுக்கு மேற்படி சைதின் தௌஹித்திரியாகிய ஹமீதா என்பவளுடன் விவாகம் செய்யப்பட்டு மஜீதா என்பவள் பிறந்திருக்கிறாள்; ஆகையால் மஜீதாவுக்கு 2-முறை உண்டு, பின்னும் ஷரீப்பு என்பவனும், மஜீதா என்பவளும் இறந்துபோன சைது என்பவனுக்கு சிரஜுமாயிருக்கிறார்கள், அதாவது தாயபந்துக்களாயிருக்கிறார்கள், பின்னும் சைது என்பவனுடைய சொத்தை உடலின்படி 4 பாகங்களாக்கி தௌஹித்திரியாகிய சோதாவுக்கு 1-பங்கும், தௌஹித்திரனாகிய உமறு என்பவனுக்கு 2-பங்கும், தௌஹித்திரியாகிய ஹமீதா என்பவளுக்கு ஒருபங்கும் கொடுக்கப்பட்டது, பின்னும் ஷரீப்பு என்பவனுக்கு அவனுடைய மாதாவின் பங்கு ஒன்று கொடுக்கப்பட்டது, பின்னும் மஜீதா என்பவளுக்கு இவளுடைய மாதாவின் பாகம் ஒன்றும், பிதாவின் பாகம் 2-ம், ஆகமொத்த வகை 2-க்கு 3-பாகங்கள் கிடைத்தன.

2-வது வகையார் அஸ்லேமய்யத்து.

இவர்கள் யாரென்றால் இவர்களோ மய்யத்தின் வேர்களாயிருக்கிறார்கள், இவர்கள் 2-பிரிவாராக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், 1-வது பிரிவார் பிதாவைப்பற்றினவர்களென்றும், 2-வது பிரிவார் மாதாவைப்பற்றினவர்களென்றுமே, பின்னும் 1-வது பிரிவாராகிய பிதாவைப்பற்றினவர்களில் கிரமமற்ற பிதாமகன் என்றும், கிரமமற்ற பிதாமகி என்றும் 2-உட்பிரிவார் இருக்கிறார்கள். பின்னும் 2-வது பிரிவாராகிய மாதாவைப்பற்றினவர்களிலும்கூட கிரமமற்ற மாதாமகன் என்றும், கிரமமற்ற மாதாமகி என்றும் 2-உட்பிரிவார் இருக்கிறார்கள்.

1-வது பிரிவார் பிதாவைப்பற்றிய கிரமமற்ற பாட்டமார்களும், பாட்டிகளும.

1-வது உள்பிரிவார் கிரமற்ற பாட்டமார்களின் பயான்.

பிதாமகியின் பிதா
மய்யத்தின் பிதாவின் மாதாவின் பிதா

பிதாமகனின் மாதாமகன்
மய்யத்தின் பிதாவின் பிதாவின் மாதாவின் பிதா

பிதாமகியின் பிதாமகன்
மய்யத்தின் பிதாவின் மாதாவின் பிதாவின் பிதா

பிதாமகியின் மாதாமகன்
மய்யத்தின் பிதாவின் மாதாவின் மாதாவின் பிதா

பிதாமகனின் பிதாமகியுடைய பிதா
மய்யத்தின் பிதாவின் பிதாவின் பிதாவின் மாதாவின் பிதா

பிதாமகியின் மாதாமகியுடைய பிதா
மய்யத்தின் பிதாவின் மாதாவின் மாதாவின் மாதாவின் பிதா

2-வது உள்பிரிவார் கிரமமற்ற பாட்டிகளின் பயான்.

பிதாமகனின் மாதாமகி
மய்யத்தின் பிதாவின் பிதாவின் மாதாவின் மாதா

பிதாமகியின் மாதாமகி
மய்யத்தின் பிதாவின் மாதாவின் பிதாவின் மாதா

பிதாமகனின் மாதாமகியுடைய மாதா
மய்யத்தின் பிதாவின் பிதாவின் மாதாவின் பிதாவின் மாதா

பிதாமகியின் மாதாமகியுடைய மாதா
மய்யத்தின் பிதாவின் மாதாவின் மாதாவின் பிதாவின் மாதா

மாதாமகியின் பிதாமகனுடைய மாதா
மய்யத்தின் பிதாவின் மாதாவின் பிதாவின் பிதாவின் மாதா

67

இவ்விதயாகவே எவ்வளவு மேல்போனாலும் சரி, இவர்கள் எல்லோரும் பிதாவைப்பற்றிய கிரமமற்ற பாட்டமார்களும், பாட்டிமார்களுமாக யிருக்கிறார்கள்.

2-வது பிரிவார் மாதாவைப்பற்றிய கிரமமற்ற பாட்டமார்களும், பாட்டிகளும்.

1-வது உள்பிரிவார் கிரமமற்ற பாட்டமார்களின் பயான்.

மாதாமகன்
மய்யத்தின் மாதாவின் பிதா

மாதாமகனின் பிதா
மய்யத்தின் மாதாவின் பிதாவின் பிதா

மாதாமகனின் பிதாமகன்
மய்யத்தின் மாதாவின் பிதாவின் பிதாவின் பிதா

மாதாமகனின் பிதா.
மய்யத்தின் மாதாவின் பிதாவின் பிதா

மாதாமகியின் பிதா
மய்யத்தின் மாதாவின் மாதாவின் பிதா

மாதாமகியின் மாதாமகன்
மய்யத்தின் மாதாவின் மாதாவின் மாதாவின் பிதா

மாதாமகியின் பிதாமகன்
மய்யத்தின் மாதாவின் மாதாவின் பிதாவின் பிதா

2-வது உள்பிரிவார் கிரமமற்ற பாட்டிகளின் பயான்.

மாதாமகனின் மாதா
மய்யத்தின் மாதாவின் பிதாவின் மாதா

மாதாமகனின் பிதாமகி
மய்யத்தின் மாதாவின் பிதாவின் பிதாவின் மாதா

மாதாமகனின் மாதாமகி
மய்யத்தின் மாதாவின் பிதாவின் மாதாவின் மாதா

மாதாமகியின் பிதாமகி
மய்யத்தின் மாதாவின் மாதாவின் பிதாவின் மாதா

இவ்விதமாகவே எவ்வளவு மேல்போனாலும் சரி, இவர்கள் எல்லோரும் மாதாவைப்பற்றிய கிரமமற்ற பாட்டமார்களும், பாட்டிகளுமாக இருக்கிறார்கள்.

அறிக்கை.

இந்த 2-வது வகையாராகிய அஸ்லேமய்யத்தாருடன் 3-வது, 4-வது, 5-வது வகையார் வந்தால் அப்போது இவர்கள் மஹ்ரூமாய்ப் போய்விடுகிறார்கள், இவர்களுக்கு பாகம் கிடைக்கமாட்டாது, பின்னும் இந்த 2-வது வகையாரின் பயானது 3-பகுதிகளில் எழுதப்படும், 1-வது பகுதி பிதாவைப்பற்றியவர்களிலும், 2-வது பகுதி மாதாவைப்பற்றியவர்களிலும், 3-வது பகுதி மாதாபிதாவைப்பற்றியவர்களிலும் இருக்கின்றன.

1-வது பகுதி பிதாவைப்பற்றியவர்களின் பயான்.

இதில் 10-காயிதாக்கள் இருக்கின்றன.

1-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் வாரிசுகள் ஆண் ஆண்களாயும், இவர்களின் உசூலென்ற மேல்வகுப்பார்களும் ஆண் ஆண்களாயும் இருப்பார்களானால் இவ்விதவகை கூடாமை இவ்விதமஸ்அலா வரமாட்டாது. உதாரணம்.

மய்பத்து
பிதா.........பிதா
பிதா.........பிதா
பிதா.........பிதா
பிதா.........பிதா
0 ——— 0

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் பிதாமகனுடைய பிதாமகன் என்றும், பின்னும் பிதாமகனுடைய பிதாமகன் என்றும், 2-தடவை வந்திருக்கிறது, இவ்விதமாக வருவது கூடாமை, ஏனெனில் இறந்தவனுக்கு ஒரேமுறையான 2 பிதாமகன் வருகிறதில்லை, பின்னும் இவ்விதமாகவே பிதாமகனுடைய பிதாமகி என்றும், பிதாமகியுடைய பிதாமகியென்றும், ஒரேமுறையான 2 பிதாமகிகள் வருகிறதில்லை.

2-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் பேதமில்லாமல் ஆண் ஆண்களாகவும், பின்னும் இவர்களின் உசூலென்ற மேல்வகுப்பாரில் பேதமிருந்து ஆணும் பெண்ணுமாகவும் வந்தால் அப்போது மேற்படி கடைசி வாரிசுகளின் பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதமிருக்குமோ அந்த பேதத்தின் பேரில் லில்துக்கரிமிஸ்லிஹத்தில் உன்சயைனி என்ற வகைப்படி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும், அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேணும்; உதாரணம்.

மய்யத்து வலீது மஸ்அலா 3.
பிதா.........பிதா
பிதா.........மாதா
2 1
மாதா.........மாதா
பிதா.........பிதா
வலீது.........ரஷீது
2 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஷீதென்பவனே மய்யத்துடைய பிதாமகியின் மாதாமகனாக இருக்கிறான், பின்னும் வலீது என்பவனே மய்யத்துடைய பிதாமகனின் மாதாமகனாயிருக்கிறான், இவ்விரண்டுபேர்களும் ஜவில்அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டமார்களாயுமிருக்கிறார்கள், பின்னும் இவர்கள் பிதாவைப்பற்றியவர்களாயும் ஒரே வகுப்புள்ளவர்களாயுமிருக்கிறார்கள், பின்னும் இவர்களின் உசூலின் 2-வது வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதமிருக்கின்றது, அதாவது ரஷீது என்பவனுடைய 2-வது வகுப்பில் பெண்ணும், வலீது என்பவனுடைய 2-வது வகுப்பில் ஆணுமிருக்கிறது. பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதமில்லாமல் இவர்கள் ஆண் ஆண்களாகவே யிருக்கிறார்கள், ஆகையால் ரஷீது என்பவனும், வலீது என்பவனும் ஆக இந்த இருவரும் ஆண்களாயிருக்கிறார்கள், ஆகையால் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளின்

பேரில் பாகிக்கப்படாமல் இவர்களின் உருலின் பேதகமாகிய ஆணும் பெண்ணும் என்ற பேதகத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லிஹறக்கில் உன்ஸயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ஸஷீது என்பவனுக்கு இவனுடைய உருலின் பங்காகிய ஒருபாகமும், வஷீது என்பவனுக்கு இவனுடைய உருலின் பங்காகிய 2-பாகமும் கொடுக்கப்பட்டது.

3-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் வாரிசுகள் பெண்பெண்களாயும் இவர்களின் உருலென்ற மேல்வகுப்பார்களும் பெண்பெண்களாயும் இருப்பார்களானால் இவ்விதவகை கூடாமை, இவ்வித மஸ்அலா வாபாட்டாது. உதாரணம்.

மய்யத்து
பிதா.........பிதா
மாதா........மாதா
மாதா........மாதா
மாதா........மாதா
0 ——— 0

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் பிதாமகியின் மாதாமகி என்றும், பின்னும் பிதாமகியின் மாதாமகி என்றும் 2-தடவை வந்திருக்கிறது, இவ்விதமாக வருவது கூடாமை. ஏனெனில் இறந்தவனுக்கு ஒரே முறையான 2-பிதாமகியின் மாதாமகிகள் வருவதில்லை, இப்படியே ஒரே முறையான மாதாமகியின் மாதாமகிகள் வருவதில்லை.

4-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் பேதகமில்லாமல் பெண்பெண்களாகவும் இவர்களின் உருலென்ற மேல்வகுப்பாரில் பேதகமிருந்து ஆணும் பெண்ணுமாகவும் வந்தால் அப்போது ஷை கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹறக்கில் உன்ஸயைனி என்ற வகைப்படி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும், உதாரணம்.

மய்யத்து வளீதாமஸ்அலா 3.
பிதா.........பிதா
பிதா.........மாதா
2 1
மாதா........மாதா
பிதா.........பிதா
மாதா........மாதா
ஹலீமா....ஹமீதா
2 ——— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹமீதா என்பவளோ மய்யத்துடைய பிதாமகியின் மாதாமகனுடைய மாதாவாயிருக்கிறாள், பின்னும் ஹலீமா என்பவளோ மய்யத்துடைய பிதாமகனின் மாதாமகனுடைய மாதாவாயிருக்கிறாள், இவ்விரண்டுபேர்களும் ஸவில்அர்ஹாமானவர்களாயும் சரமற்ற பாட்டிகளாயுமிருக்கிறார்கள். பின்னும் இவர்கள் பிதாவைப்பற்றியவர்களாயும், ஒரே வகுப்புள்ளவர்களாயுமிருக்கிறார்கள், பின்னும் இவர்களின் உருலின் 2-வது வகுப்பில் ஆண்பெண் என்ற பேதகம் இருக்கின்றது அதாவது ஹமீதா என்பவளுடைய உருலின் 2-வது வகுப்பில் பெண்ணும், ஹலீமா என்பவளுடைய உருலின் 2-வது வகுப்பில் ஆணுமிருக்கிறது, பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமில்லாமல் இவர்கள் பெண்பெண்களாயிருக்கிறார்கள், அதாவது ஹமீதா என்பவளும், ஹலீமா என்பவளும் ஆகிய இந்த இருபேர்களும் பெண்களாயிருக்கிறார்கள். ஆகையால் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளின் பேரில் பாகம் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உருலின் பேதகமாகிய ஆணும்பெண்ணும் என்ற பேதகப்படி லிஜ்ஜகரிமிஸ்லிஹறச்சில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ஹமீதா என்பவளுக்கு இவளுடைய உருலின் பங்காகிய ஒருபாகமும் ஹலீமா என்பவளுக்கு இவளுடைய உருலின் பங்காகிய 2-பாகமும் கொடுக்கப்பட்டது.

5-வது காயிதா.

இந்த காயிதாவானது 2-வது காயிதாவுக்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இந்த காயிதாவுடைய உசூலின் 2-வது வகுப்புகளில் ஆணும்பெண்ணும் என்ற வித்தியாசங்கள் யிருக்கின்றன, பின்னும் இவ்வித ஒரேவித வித்தியாசங்கள் 2-இருந்து மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் முற்றிலும் ஆண்பெண்ணென்கிற பேதகமில்லாமல் ஆண்ஆண்களாகவே இருந்தால் அப்போது கூடி கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின்பேரில் லிஜ்ஜகரிமிஸ்லி ஹஜ்ஜில் உன்சயைனி என்றவகைப்படி பக்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

மய்யத்து வலீது மஸ்அலா 3.
பிதா.........பிதா
மாதா.........பிதா
1 2
மாதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........பிதா
கரீம்.........ரஹீம்
1 —— 2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஹீம் என்பவனும், கரீம் என்பவனும், ஜவில்அர்ஹாமானவர்களாயும், பிதாவைப்பற்றியவர்களாயும், ஒரே வகுப்பானவர்களாயும் பரமத்ருபிதாமகர்களாயுமிருக்கிறார்கள், இவர்களுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்கள் இருக்கின்றன, அதாவது உசூலின் 2-வது வகுப்பிலும், 3-வது வகுப்பிலுமே, பின்னும் 2-வது வகுப்பில் எத்தன்மையான பேதகம் இருக்கிறதோ அதேதன்மையான பேதகம், 3-வது வகுப்பிலும் இருக்கின்றது, வேறேவிதமான பேதகமில்லை, பின்னும் கரீம் என்பவன் இறந்தவனுக்கு பிதாமகியுடைய மாதாமகியின் பிதாவாயும் பின்னும் ரஹீம் என்பவன் இறந்தவனுக்கு பிதாமகனுடைய பிதாமயின் பிதாவாயுமிருக்கிறான், பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசமில்லாமலிருக்கிறது, ஆனால் ஆண்ஆண்களாக இருக்கிறார்கள், அதாவது ரஹீம் என்பவனென்றும், கரீம் என்பவனென்றும் இருக்கிறார்கள், ஆகையால் கடைசியான வாரிசுகளின்பேரில் பாகங்கள் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உசூலின் மேலான வித்தியாசமாகிய 2-வதுவகுப்பின் வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரி மிஸ்லி ஹஜ்ஜில் உன்சயைனியைக் கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ரஹீம் என்பவனுக்கு இவனுடைய உசூலின் பாகமாகிய 2. இவனுக்கு கொடுக்கப்பட்டது. பின்னும் கரீம் என்பவனுக்கு இவனுடைய உசூலின் பாகமாகிய 1. இவனுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் 3-வது வகுப்பில் 2-வது வகுப்பின்படியே வித்தியாசமிருக்கிறபடியால் இரண்டாந்தரம் 3-வது வகுப்பின் வித்தியாசப்படி பாகம் பாகிக்கவேண்டியதில்லை, இதின் மஸ்அலா 3-ஆல் செய்யப்பட்டது.

6-வது காயிதா.

இந்த காயிதாவோ 4-வது காயிதாவுக்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இந்த காயிதாவுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆணும்பெண்ணுமென்ற வித்தியாசங்கள் இருக்கின்றன. பின்னும் இவ்வித ஒரேவித வித்தியாசங்கள் 2-இருந்து மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் முற்றிலும் ஆண்பெண்ணென்கிற பேதகமில்லாமல் பெண்பெண்களாகவே இருந்தால் அப்போது கூடி கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலானவகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹஜ்ஜில் உன்சயைனிப்படி பக்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

மய்யத்து வலீது மஸ்அலா 3.
பிதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........மாதா
2 1
மாதா.........பிதா
மாதா.........மாதா
ரஹீமா.....கரீமா
2 —— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஹீமா என்பவளும், கரீமா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயும், ஒரே வகுப்புள்ளவர்களாயும் கிரமமற்ற பாட்டிகளாயுமிருக்கிறார்கள், இவர்களுடைய உருவின் 2-வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்கள் இருக்கின்றன, அதாவது உருவின் 3-வது வகுப்பிலும், 4-வது வகுப்பிலுமே, பின்னும் 3-வது வகுப்பில் எத்தன்மையான பேதகம் இருக்கிறதோ அத்தன்மையான பேதகம் 4-வது வகுப்பிலும் இருக்கின்றது, வேறுவிதமான பேதகமில்லை. பின்னும் ரஹீமா என்பவள் இறந்தவனுக்கு பிதாமகியுடைய பிதாமகனின் மாதாவாயும், பின்னும் கரீமா என்பவள் இறந்தவனுக்கு பிதாமகியுடைய மாதாமகனின் மாதாவாயும் இருக்கிறார்கள், பின்னும் கடைசியான மவுஜூதாயிருக்கும் வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசமில்லாமலிருக்கிறது, ஆனால் இவர்கள் பெண் பெண்களாக இருக்கிறார்கள், அதாவது ரஹீமா என்பவளொன்றும், கரீமா என்பவளொன்றுமிருக்கிறார்கள், ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின்பேரில் பாகங்கள் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உருவின் மேலான வித்தியாசமாகிய 3-வது வகுப்பின் வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹழ்ழில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ரஹீமா என்பவளுக்கு இவளுடைய உருவின் பாகமாகிய 2. இவளுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் கரீமா என்பவளுக்கு இவளுடைய உருவின் பாகமாகிய 1 இவளுக்கு கொடுக்கப்பட்டது. பின்னும் 4-வது வகுப்பில் 3-வது வகுப்பின்படியே வித்தியாசமிருக்கிறபடியால் 2-க்கதும் 4-வது வகுப்பின் வித்தியாசப்படி பாகம் பாகிக்கவேண்டியதில்லை.

7-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமிருந்தும் இவர்களின் உருவின் மேலான வகுப்புகளில் எந்த வகுப்பிலாவது ஆண்பெண்ணென்ற பேதகமிருக்காமல் இருந்தும் இருக்குமாகில் அப்போது மேற் கடைசி வாரிசுகளின் ஆண்பெண்ணென்கிற பேதகத்தின்படி லிஜ்ஜக்ரி மிஸ்லி ஹழ்ழில் உன்சயைனியைக்கொண்டு பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை அவரவர்களுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்,

மய்யத்து வலீது மஸ்அலா 3.
பிதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........பிதா
மாதா........பிதா
ஹிந்தா......வலீது
1 —— 2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் வலீது என்பவனே இறந்தவனுக்கு பிதாமகியுடைய பிதாமகனாயிருக்கிறான், பின்னும் ஹிந்தா என்பவளோ இறந்தவனுக்கு பிதாமகியுடைய பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் இவ்விருவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும், பிதாவைப்பற்றியவர்களாயும், ஜவில்அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டனும் பாட்டியுமாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களுடைய உருவின் எந்த வகுப்பிலும் ஆண்பெண்ணென்கிற வித்தியாசமில்லாமல் ஆண் ஆண் என்றே இருக்கிறது, ஆனால் கடைசியான வாரிசுகளில் மாத்திரம் ஆண்பெண்ணென்ற வித்தியாசமுண்டு, ஆகையால் உருவின்பேரில் பாகம் பாகிக்காமலே கடைசியான வாரிசுகளின் ஆண்பெண்ணென்ற வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹழ்ழில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது. இப்படி பாகித்து அவரவர்களின் பாகம் அவரவர்களுக்கே கொடுக்கப்பட்டது, அதாவது மஸ்அலா, 3-ஆல் செய்து ஹிந்தா என்பவளுக்கு ஒருபாகமும், வலீது என்பவனுக்கு 2-பாகமும் கொடுக்கப்பட்டது.

8-வது காயிதா.

பிதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளுக்குள் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்கள் இருந்து இவர்களுடைய உருவின் எந்த வகுப்புகளிலும், ஆண்பெண்ணென்ற வித்தியாசங்களுமிருந்தால் அப்போது மேலான வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹழ்ழில் உன்சயைனியின் வகைப்படி பாகங்களை பாகித்து ஒவ்வொருவருடைய பாகத்தை அவரவர்களின் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளுக்கு கொடுக்கவேண்டும், பின்னும் மேற்படி உருக்களின் 2-வகுப்புகளில் ஒரேவகையான வித்தியாசங்கள் இருந்தால் அதாவது 3-வது வகுப்பின் வித்தியாசத்துக்கு விரோதமாக

4-வது வகுப்பின் வித்தியாசம் இருந்திராமலிருந்தால் அப்போது மேலான வகுப்பின் வித்தியாசப்படி பாகம் செய்வது போதுமானதாயிருக்கும், மறுபடியும் உசூலின் 4-வதுவகுப்பின் வித்தியாசப்படியாயாவது மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின் வித்தியாசப்படியாயாவது வேறுபாகம் செய்யவேண்டியதில்லை இப்படி மேலான வகுப்பின் வித்தியாசப்படி பாகம் செய்து அவரவர்களின் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளுக்கு அப்பாகங்களை கொடுத்துவிடவேண்டும், இதில் 2-உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்.

மய்யத்து சையது மஸ்அலா 3.
பிதா.........பிதா
மாதா.........மாதா
மாதா.........பிதா
1 2
பிதா.........மாதா
ஹாஷிம்.....பாஜிலா
1 —— 2

2-வது உதாரணம்.

மய்யத்து உமரு மஸ்அலா 3.
பிதா.........பிதா
மாதா.........மாதா
மாதா.........பிதா
1 2
மாதா.........பிதா
பிதா.........மாதா
ரஹீம்.........கரீமா
1 —— 2

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹாஷிம் என்பவனே இறந்தவனுக்கு பிதாமகியுடைய மாதாமகனாயிருக்கிறான், பின்னும் பாஜிலா என்பவளோ இறந்தவனுக்கு பிதாமகியுடைய பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் இவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும், பிதாவைப்பற்றியவர்களாயும், ஜவில்அர்ஹாமாயும், கிரமமற்ற பாட்டியும் பாட்டனுமாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களுடைய உசூலின் ஒரேஒரு வகுப்பாகிய 3-வது வகுப்பில்மாத்திரம் ஆண்பெண்ணென்ற வித்தியாசமும், பின்னும் இவர்களின் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளிலுங்கூட ஆண்பெண்ணென்ற வித்தியாசமும் இருக்கிறது, ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின்பேரில் பாகம் பாகிக்காமல் உசூலின் 3-வது வகுப்பிலிருக்கும் ஆண்பெண்ணென்ற வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியின் வகைப்படி பாகங்களை பாகித்து அவரவர்களின் மவுஜூதான வாரிசுகளுக்கு அப்பாகங்கள் கொடுக்கப்பட்டன, அதாவது மஸ்அலா 3-ஆல் செய்து ஹாஷிம் என்பவனுக்கு ஒருபாகமும், பாஜிலா என்பவளுக்கு 2 பாகமும் கிடைத்தது,

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஹீம் என்பவனே இறந்தவனுக்கு பிதாமகியுடைய மாதாமகியின் பிதாவாயிருக்கிறான், பின்னும் கரீமா என்பவளோ இறந்தவனுக்கு பிதாமகியுடைய பிதாமகனின் மாதாவாயிருக்கிறாள், பின்னும் இவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும், பிதாவைப்பற்றியவர்களாயும், ஜவில்அர்ஹாமாயும், கிரமமற்ற பாட்டியும் பாட்டனுமாயிருக்கிறார்கள், பின்னும் உசூலிலும், புறு என்ற கடைசியான வாரிசுகளிலும் ஆண்பெண்ணென்ற வித்தியாசம் சேர்ந்து வந்தமையால் புறுவின்பேரில் பாகம் செய்யவில்லை, பின்னும் இவர்களுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதங்களிருக்கின்றன, பின்னும் மேற்படி உசூலின் 3-வது வகுப்பில் இருக்கும் பேதகத்துக்கு ஒப்பாகவே 4-வது வகுப்பின் வித்தியாசமும் உண்டு. ஆகையால் உசூலின் 3-வது வகுப்பின் வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியின் வகைப்படி பாகங்கள் பாகிக்கப்பட்டன, பின்னும் மேற்படி 3-வது, 4-வதுவகுப்பின் பேதகம் ஒன்றுக்கொன்று விரோதமாக யில்லாமல் ஒன்றானவையாக இருந்தமையால் மறுபடியும் 4-வது வகுப்பின் பேதகப்படி வேறு பாகம் செய்யவில்லை, இப்படி 3-வது வகுப்பின்பேரில் பாகங்கள் செய்து அவரவர்களின் வாரிசுகளுக்கு அதே பாகங்கள் கொடுக்கப்பட்டன, அதாவது ரஹீம் என்பவனுக்கு 1-பாகமும் கரீமா என்பவளுக்கு 2-பாகமும் கொடுக்கப்பட்டன.

9-வது காயிதா.

பிதாவைப்பற்றிய மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகள் சமவகுப்புள்ளவர்களாயிருந்திராமல் ஏற்றத்தாழ்ச்சியானவர்களாயிருந்திருக்கவேண்டும், பின்னும் இவர்கள் ஆண்ஆண்களாயாவது, அல்லது பெண்பெண்களாயாவது, அல்லது ஆண்பெண்களாயாவது இருந்திருக்கவேண்டும், பின்னும் இவர்களின் உசூலின் வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகமும் இல்லாதிருக்கவேண்டும், இப்படி

யிருந்தால் சமீபமுள்ளவன் முக்கிய பாத்தியஸ்தனாயிருக்கிறான், இவனுக்கே பாகம் கிடைக்கும், தூரமுள்ளவனுக்கு பாகம் கிடைக்காது, பின்னும் உருவின் வகுப்பின்பேரில் பாகம் செய்யப்படமாட்டாது, இதில் 3-உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம் ஆண் ஆண்களைப்பற்றி

மய்யத்து ஸைது மஸ்அலா 1.
பிதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........பிதா
பிதா......... ,,
ரஷீது.......ஹமீது
மஹ்றூம் — 1

2-வது உதாரணம் பெண் பெண்களைப்பற்றி

மய்யத்து உமறு மஸ்அலா 1.
பிதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........பிதா
பிதா.........மாதா
மாதா......... ,,
ஜமீமா......கரீமா
மஹ்றூம் — 1

3-வது உதாரணம் ஆண் பெண்களைப்பற்றி

மய்யத்து ஜப்பார் மஸ்அலா 1.
பிதா.........பிதா
மாதா.........மாதா
பிதா.........பிதா
பிதா.........மாதா
பிதா......... ,,
ஹைதர்.....ஹிந்தா
மஹ்றூம் — 1

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹமீது என்பவனே இறந்தவனுடைய பிதாமகியின் பிதாவாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனே இறந்தவனுக்கு பிதாமகியின் பிதாமகனாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனைவிட ஹமீது என்பவன் இறந்தவனுக்கு சமீபமுள்ள வாரிசாயிருப்பதால் பாகமடைய முக்கியஸ்தனாயிருக்கிறான், ரஷீது தூரமுள்ளவனாகையால் மஹ்றூமாயிருக்கிறான், பின்னும் இந்த மஜ்கூறாயிருக்கிற கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமில்லாமல் இவர்கள் ஆண் ஆண்களாகவே யிருக்கிறார்கள், பின்னும் இவர்கள் சமவகுப்பானவர்களாயிருக்கவில்லை, பின்னும் ரஷீது என்பவனும், ஹமீது என்பவனும் பிதாவைப்பற்றியவர்களா யிருக்கிறார்கள், பின்னும் இவர்களின் உருவின் வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகமுமிருந்திருக்கவில்லை, ஆகையால் மஸ்அலா 1-ஒன்றை கடைசியான வாரிசாயும், சமீபமுள்ளவனுமான ஹமீதின்பேரில் ஒன்றால் செய்து இவனுக்கே அந்த ஒன்று கொடுக்கப்பட்டது.

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ முதல் உதாரணத்துக்குச் சரிசமானமாகவே யிருக்கிறது, பின்னும் ஜமீமா என்பவள் இறந்தவனுக்கு பிதாமகியின் பிதாமகனுடைய மாதாவாயிருக்கிறாள், கரீமா என்பவளோ இறந்தவனுக்கு பிதாமகியின் பிதாமகியாயிருக்கிறாள், ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் முதல் உதாரணத்தின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண்ஆண்களாக யிருக்கிறார்கள், இந்த உதாரணத்திலோ இவர்கள் பெண்பெண்களாக யிருக்கிறார்கள், பின்னும் இந்த உதாரணம் மற்ற எல்லாவகைகளிலும் சரியாகவே இருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவளாகிய கரீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

3-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது உதாரணத்துக்கு சரிசமானமாகவே யிருக்கிறது, ஆனால் இதில் என்னவித்தியாச மிருக்கிறதென்றால் இதின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண்பெண்களா யிருக்கிறார்கள், பின்னும் ஹைதர் என்பவன் இறந்தவனுக்கு பிதாமகியின் பிதாமகனுடைய பிதாவாயிருக்கிறான், ஹிந்தா என்பவளோ பிதாமகியின் பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் இந்த உதாரணம் மற்ற எல்லா வகைகளிலும் சரியாகவே இருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவளாகிய ஹிந்தா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

10-வது காயிதா.

பிதாவைப்பற்றின மஜ்கூறாயிருக்கும் கடைசியான வாரிசுகள் சமவகுப்புள்ளவர்களாயிருந்திருந்தால் ஏற்றத்தாழ்ச்சியானவர்களாயிருந்திருக்கவேணும், பின்னும் இவர்கள் ஆண்ஆண்களாயாவது, அல்லது பெண்பெண்களாயாவது, அல்லது ஆண்பெண்களாயாவது இருக்க

வேண்டும், பின்னும் இவர்களின் உருவின் ஒன்று, அல்லது பலவகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகமும் இருந்திருக்கவேண்டும், இப்படியிருந்தபோதினும் சமீபமுள்ளவனே முக்கிய பாத்தியஸ்தனாயிருக்கிறான், இவனுக்கே பாகம் கிடைக்கும் தூரமுள்ளவனுக்கு பாகம் கிடைக்கமாட்டாது, பின்னும் உருவின் வகுப்புகளின் பேதகப்படி பாகம் செய்யப்படமாட்டாது, இதில் 4 உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம் ஆண்
ஆண்களைப்பற்றி

மய்யத்து சைது மன்ஆலா 1.
பிதா……பிதா
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
பிதா……பிதா
பிதா……,,
சப்தர்……ரஷீது
மஹ்றூம் — 1.

2-வது உதாரணம் பெண்
பெண்களைப்பற்றி

மய்யத்து ஹைதர் மன்ஆலா 1.
பிதா……பிதா
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
பிதா……மாதா
மாதா……,,
சபியா……ரஹீமா
மஹ்றூம் — 1

3-வது உதாரணம் ஆண்
பெண்களைப்பற்றி

மய்யத்து சப்தர் மன்ஆலா 1.
பிதா……பிதா
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
பிதா……பிதா
மாதா……,,
ஹிந்தா……காலிது
மஹ்றூம் — 1

4-வது உதாரணம் உருவின் 2-வகுப்பில் வித்தியாசமுள்ளதைப்பற்றி

மய்யத்து பகரு மன்ஆலா 1.
பிதா……பிதா
மாதா……பிதா
பிதா……மாதா
பிதா……பிதா
மாதா……,,
ஹபீபா……சைது
மஹ்றூம் — 1

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் சப்தர் என்பவனே இறந்தவனுடைய பிதாமகியின் பிதாமகனுடைய பிதாமகனாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனே இறந்தவனுடைய பிதாமகியின் பிதாமகியுடைய பிதாவாயிருக்கிறான், பின்னும் சப்தர் என்பவனைவிட ரஷீது என்பவன் இறந்தவனுக்கு சமீபமுள்ள வாரிசாயிருப்பதால் பாகமடைய இவன் முக்கியஸ்தனாயிருக்கிறான், சப்தர் தூரமுள்ளவனானதால் மஹ்றூமாயிருக்கிறான், பின்னும் இந்த மஷ்ஹூராயிருக்கிற கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமில்லாமல் இவர்கள் ஆண் ஆண்களாகவே யிருக்கிறார்கள், பின்னும் இவர்கள் சமவகுப்பானவர்களாயிருக்கவில்லை, பின்னும் சப்தர் என்பவனும், ரஷீது என்பவனும் பிதாவைப்பற்றியவர்களாயிருக்கிறார்கள், பின்னும் இருபேர்களின் உருவின் வகுப்புகளில் ஒரேஒரு வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதகம் இருந்திருக்கிறது, ஆனபடியால் மன்ஆலா புறுவென்ற கடைசியான வாரிசாயும், சமீபமுள்ளவனுமான ரஷீது என்பவன்பேரில் ஒன்றால்செய்து இவனுக்கே அந்த ஒன்று கொடுக்கப்பட்டது, உருவின் பேதகத்தின்பேரில் பாகம் செய்யப்படவில்லை.

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ முதல் உதாரணத்துக்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் முதல் உதாரணத்தின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண் ஆண்களாயிருக்கிறார்கள், ஆனால் இந்த உதாரணத்திலோ இவர்கள் பெண் பெண்களாயிருக்கிறார்கள், பின்னும் இந்த உதாரணம் மற்றெல்லா வகைகளிலும் சரியாகவே இருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவளாகிய ரஹீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

3-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது உதாரணத்துக்கு சரிசமானமாகவே யிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் இதின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண்பெண்களாயிருக்கிறார்கள், அதாவது ஹிந்தா என்ற பெண்ணும், காலிது என்ற ஆணுமாக இருக்கிறார்கள், பின்னும் இந்த உதாரணம் மற்றெல்லா வகைகளிலும் சரியாகவே யிருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவனாகிய காலிது என்பவனுக்கு பாகம் கிடைத்தது.

4-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது, 3-வது உதாரணத்துக்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் முக்கியமாய் 3-வது உதாரணத்

துக்கு சரிசமானமாகவே யிருக்கிறது, இந்த உதாரணத்தில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால், 1-வது, 2-வது, 3-வது உதாரணங்களின் உசூலின் வகுப்புகளில் ஒரேமுதல்வகுப்பில் பேதகமிருக்கின்றது ஆனால் இந்த உதாரணத்தின் உசூலின் வகுப்புகளில் 2-வகுப்புகளில் பேதகமிருக்கின்றது, அதாவது 2-வது வகுப்பிலும், 3-வது வகுப்பிலும் பேதகமிருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவனுகிய சைது என்பவனுக்கு பாகம் கிடைத்தது.

2-வது பகுதி மாதாவைப்பற்றியவர்களின் பயான்.

இதில் 10 காயிதாக்கள் இருக்கின்றன.

1-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் வாரிசுகள் பெண்பெண்களாயும் இவர்களின் உசூலென்ற மேல்வகுப்பார்களும் பெண்பெண்களாயும் இருப்பார்களானல் இவ்விதவகை கூடாமை, இவ்வித மஸ்அலா வராமாட்டாது. உதாரணம்.

மய்யத்து
மாதா……மாதா
மாதா……மாதா
மாதா……மாதா
பிதா……பிதா
0 —— 0

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மாதாமகியுடைய மாதாமகன் என்றும், பின்னும் மாதாமகியுடைய மாதாமகன் என்றும் 2-தடவை வந்திருக்கிறது, இவ்விதமாக வருவது கூடாமை, ஏனெனில் இறந்தவனுக்கு ஒரேமுறையான 2-மாதாமகன்கள் வருகிறதில்லை, பின்னும் இவ்விதமாகவே மாதாமகியுடைய மாதாமகிஎன்றும், மாதாமகியுடைய மாதாமகி என்றும், ஒரேமுறையான 2-மாதாமகிகள் வருவதில்லை.

2-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் பேதகமில்லாமல் ஆண்ஆண்களாகவும், பின்னும் இவர்களின்

லென்ற மேல்வகுப்பாரில் பேதகமிருந்தாலும், பெண்ணுமா வும் வந்தால் அப்போது கூடி கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் ப்பாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதத்தின்பேரில் விஜுதரி மிஸ்ஹாத்தில் உன்சபைனி என்ற வகைபடி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். தாரணம்.

மய்யத்து ரஹீம் மஸ்அலா 3.
மாதா……மாதா
மாதா……பிதா
1 2
பிதா……பிதா
மாதா……மாதா
பிதா……பிதா
சப்தர்……ஹைதர்
1 —— 2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் சப்தர் என்பவனே மய்யத்துடைய மாதாமகியின் பிதாமகியுடைய பிதாவாயிருக்கிறான், பின்னும் ஹைதர் என்பவனே மய்யத்துடைய மாதாமகனின் பிதாமகியுடைய பிதாவாயிருக்கிறான், இவ்விரண்டுபேர்களும் ஸவில்அர்ஹாமானவர்களாயும், மற்ற பட்டார்களாயும் இருக்கிறார்கள், பின்னும் இவர்கள் மாதாவைப்பற்றியவர்களாயும், ஒரே வகுப்புள்ளவர்களாயுமிருக்கிறார்கள், பின்னும் இவர்களின் உசூலின் 2-வது வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதகம் இருக்கின்றது, அதாவது சப்தர் என்பவனுடைய 2-வது வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதகமிருக்கின்றது, அதாவது சப்தர் என்பவனுடைய 2-வது வகுப்பில் பெண்ணும், ஹைதர் என்பவனுடைய 2-வது வகுப்பில் ஆணுமிருக்கிறது, பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமில்லாமல் இவர்கள் ஆண்ஆண்களாகவே இருக்கிறார்கள், அதாவது சப்தர் என்பவனும், ஹைதர் என்பவனும் ஆக இந்த இருவரும் ஆண்களாக விருக்கிறார்கள். ஆகையால் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளின் பேரில் பங்கிடாமல் இவர்களின் உசூலின் பேதகமாகிய ஆணும்

பெண்ணும் என்ற பேதகத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியைக்கொண்டு இப்படி பாகித்து சப்தர் என்பவனுக்கு இவனுடைய உருவின் பாகமாகிய ஒருபாகமும், ஹைதர் என்பவனுக்கு இவனுடைய உருவின் பங்காகிய 2-பாகமும் கொடுக்கப்பட்டது.

3-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் வாரிசுகள் பெண்பெண்களாயும், இவர்களின் உருவென்ற மேல்வகுப்பார்களும், பெண்பெண்களாயும் இருப்பார்களானால் இவ்விதவகை கூடாமை இவ்வித மஸ்அலா வரமாட்டாது. உதாரணம்.

மய்பத்து
மாதா.........மாதா
மாதா.........மாதா
மாதா.........மாதா
மாதா.........மாதா
0 —— 0

வியாக்கியானம்,

இந்த உதாரணத்தில் மாதாமகியின் மாதாமகியென்றும், பின்னும் மாதாமகியின் மாதாமகி என்றும் 2-தடவை வந்திருக்கிறது, இவ்விதமாக வருவது கூடாமை, ஏனெனில் இறந்தவனுக்கு ஒரேமுறையான 2-மாதாமகியின் மாதாமகிகள் வருகிறதில்லை.

4-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் பேதகமில்லாமல் பெண்பெண்களாகவும் இவர்களின் உருவென்ற மேல்வகுப்பாரில் பேதகமிருந்து ஆணும் பெண்ணுமாகவும் வந்தால் அப்போது கடைசிவாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின் பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனி என்ற வகைப்படி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

சப்தர் மஸ்அலா 3.
மய்பத்து
மாதா.........மாதா
மாதா.........பிதா
1 2
பிதா.........பிதா
மாதா.........மாதா
ரஷீதா......ஹலீமா
1 —— 2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹலீமா என்பவளோ மய்பத்துடைய மாதாமகனின் பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் ரஷீதா என்பவளோ மய்பத்துடைய மாதாமகியின் பிதாமகியாயிருக்கிறாள், இவ்விரண்டு பேர்களும் சவில்அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டிகளாயு மிருக்கிறார்கள், பின்னும் இவர்கள் மாதாவைப்பற்றியவர்களாயும், ஒரே வகுப்புள்ளவர்களாயு மிருக்கிறார்கள், பின்னும் இவர்களின் உருவின் 2-வது வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதகம் இருக்கின்றது, அதாவது ரஷீதா என்பவளுடைய உருவின் 2-வது வகுப்பில் பெண்ணும், ஹலீமா என்பவளுடைய உருவின் 2-வது வகுப்பில் ஆணுமிருக்கிறது, பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகமில்லாமல் இவர்கள் பெண்பெண்களாயிருக்கிறார்கள், அதாவது ரஷீதா என்பவளும், ஹலீமா என்பவளும் ஆக இந்த இருபேர்களும் பெண்களாகவே யிருக்கிறார்கள், ஆகையால் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளின்பேரில் பாகம் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உருவின் பேதகமாகிய ஆணும்பெண்ணும் என்ற பேதகப்படி லிஜ்ஜக்கரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியைக் கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ரஷீதா என்பவளுக்கு இவளுடைய உருவின் பங்காகிய 1-பாகமும், ஹலீமா என்பவளுக்கு இவளுடைய உருவின் பங்காகிய 2-பாகமும் கொடுக்கப்பட்டது.

5-வது காயிதா.

இந்த காயிதாவானது 2-வது காயிதாவுக்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இந்த காயிதாவுடைய உருவின் 2-வகுப்புகளில் ஆணும்பெண்ணும் என்ற வித்தியாசங்கள் இருக்கின்றன. பின்னும்

இவ்வித ஒரேவித வித்தியாசங்கள் 2-இருந்து மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் மூற்றிலும் ஆண்பெண் என்கிற பேதகமில்லாமல் ஆண் ஆண்களாகவே இருந்தால் அப்போது மேற்படி கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின்பேரிலேயே லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனி என்ற வகைப்படி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

மய்யத்து சப்தர் மஸ்அலா 3.
மாதா........மாதா
மாதா........பிதா
1 2
மாதா........பிதா
பிதா........பிதா
பிதா........பிதா
கரீம்........றஹீம்
1 —— 2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் கரீம் என்பவனும், றஹீம் என்பவனும் ஜவில்அர்ஹாமானவர்களாயும், பிதாவைப்பற்றினவர்களாயும் ஒரே வகுப்புள்ளவர்களாயும், கிரமமற்ற மாதாமகர்களாயுமிருக்கிறார்கள், இவர்களுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்கள் இருக்கின்றன, அதாவது உசூலின் 2-வது வகுப்பிலும், 3-வது வகுப்பிலுமே. பின்னும் 2-வது வகுப்பில் எத்தன்மையான பேதகம் இருக்கிறதோ அதேதன்மையான பேதகம் 3-வது வகுப்பிலும் இருக்கின்றது, வேறெவிதமான பேதகமில்லை, பின்னும் கரீம் என்பவன் இறந்தவனுக்கு மாதாமகியின் மாதாமகனுடைய பிதாவாயும், பின்னும் றஹீம் என்பவனே இறந்தவனுக்கு மாதாமகனின் பிதாமகனுடைய பிதாவாயும் இருக்கிறான், பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசமில்லாமலிருக்கிறது, ஆனால் ஆண் ஆண்களாகவிருக்கிறார்கள், அதாவது றஹீம் என்பவன் என்றும், கரீம் என்பவன் என்றும் இருக்கிறார்கள்

ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின்பேரில் பாகங்கள் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உசூலின் மேலான வித்தியாசமாகிய 2-வது வகுப்பின் வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து றஹீம் என்பவனுக்கு இவனுடைய உசூலின் பாகமாகிய 2. இவனுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் கரீம் என்பவனுக்கு இவனுடைய உசூலின் பாகமாகிய 1. இவனுக்கு கொடுக்கப்பட்டது. பின்னும் 3-வது வகுப்பில் 2-வது வகுப்பின்படியே வித்தியாசமிருக்கிறபடியால் இரண்டாந்தரம் 3-வது வகுப்பின் வித்தியாசப்படி பாகம் பாகிக்கவேண்டியதில்லை. இதின் மஸ்அலா 3-ஆல் செய்யப்பட்டது.

6-வது காயிதா.

இந்த காயிதாவோ 4-வது காயிதாவுக்கு சரிசமானமாயிருக்கிறது. ஆனால் இந்த காயிதாவுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆணும் பெண்ணுமென்ற வித்தியாசங்கள் இருக்கின்றன. பின்னும் இவ்வித ஒரேவித வித்தியாசங்கள் 2-இருந்து மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் மூற்றிலும் ஆண்பெண்ணென்கிற பேதகமில்லாமல் பெண்பெண்களாகவே இருந்தால் அப்போது மேற்படி கடைசி வாரிசுகளின்பேரில் பாகம் செய்யாமல் எந்த மேலான வகுப்பில் பேதகமிருக்குமோ அந்த பேதகத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனிபடி பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை மவுஜூதாயிருக்கும் அவரவர்களின் கடைசியான வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

மய்யத்து காஸிறா மஸ்அலா 3.
மாதா........மாதா
பிதா........மாதா
2 1
பிதா........மாதா
பிதா........பிதா
மாதா........மாதா
றஹீமா........கரீமா
2 —— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஹீமா என்பவளும், கரீமா என்பவளும் மாதாவைப்பற்றியவர்களாயும், ஒரேவகுப்புள்ளவர்களாயும் கிரமமற்ற மாதாமகிகளாயும் இருக்கிறார்கள், இவர்களுடைய உருவின் 2-வகுப்புகளில் ஆண்பெண் என்ற வித்தியாசங்கள் இருக்கின்றன, அதாவது உருவின் 2-வது வகுப்பிலும், 3-வது வகுப்பிலுமே, பின்னும் 2-வது வகுப்பில் எத்தன்மையான பேதகமிருக்கிறதோ அதேதன்மையான பேதகம் 3-வது வகுப்பிலும் இருக்கின்றது, வேறுவிதமான பேதகமில்லை, பின்னும் ரஹீமா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனின் பிதாமகனுடைய மாதாவாயும், பின்னும் கரீமா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகியின் மாதாமகனுடைய மாதாவாயும் இருக்கிறார்கள், பின்னும் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற வித்தியாசமில்லாமலிருக்கிறது, ஆனால் இவர்கள் பெண்பெண்களாயிருக்கிறார்கள், அதாவது ரஹீமா என்பவளென்றும், கரீமா என்பவளென்றுமிருக்கிறார்கள், ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின்மேரில் பாகங்கள் பாகிக்கப்படாமல் இவர்களுடைய உருவின் மேலான வித்தியாசமாகிய 2-வது வகுப்பின் வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது, இப்படி பாகித்து ரஹீமா என்பவளுக்கு இவளுடைய உருவின் பாகமாகிய 2-இவளுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் கரீமா என்பவளுக்கு இவளுடைய உருவின் பாகமாகிய 1. இவளுக்கு கொடுக்கப்பட்டது, பின்னும் 3-வது வகுப்பில் 2-வது வகுப்பின்படியே வித்தியாசமிருக்கிறபடியால் இரண்டாந்தரம் 3-வது வகுப்பின் வித்தியாசப்படி பாகம் பாகிக்கவேண்டியதில்லை.

7-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் ஆண் பெண்ணென்ற பேதகமிருந்தும் இவர்களின் உருவென்ற மேலானவகுப்புகளில் எந்தவகுப்பிலாவது ஆண்பெண்ணென்ற பேதகமிருந்திராமல் இருந்தும் இருக்குமாகில் அப்போது அடிகடைசிவாரிசுகளின் ஆண் பெண்ணென்கிற பேதகத்தின்படி லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியைக்கொண்டு பங்கிட்டு அவரவர்களின் பாகங்களை அவரவர்களுக்கு கொடுத்துவிடவேண்டும் உதாரணம்.

மய்யத்து

சப்தர் மஸ்அலா 3.

மாதா........மாதா

பிதர்.........பிதா

மாதா........மாதா

பிதா.........மாதா

ஹைதர்......ரஷீதா

2 —— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹைதர் என்பவனே இறந்தவனுக்கு மாதாமகனின் மாதாமகனாயிருக்கிறான் பின்னும் ரஷீதா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனின் மாதாமகியாயிருக்கிறாள் பின்னும் இவ்விருவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும் மாதாவைப்பற்றியவர்களாயும், ஐவில் அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டனும் பாட்டியுமாயிருக்கிறார்கள் பின்னும் இவர்களுடைய உருவின் எந்த வகுப்பிலும் ஆண் பெண்ணென்கிற வித்தியாசமில்லாமல் ஆண் ஆண் பெண் பெண்ணென்றே இருந்தது ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளில் மாத்திரம் ஆண் பெண்ணென்ற வித்தியாசமுண்டு ஆகையால் உருவின்மேரில் பாகம் பாகிக்காமலே மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின் ஆண் பெண்ணென்ற வித்தியாசத்தின்படி லிஜ்ஜக்ரி மிஸ்லிஹச்சில் உன்சயைனியைக்கொண்டு பாகிக்கப்பட்டது இப்படி பாகித்து அவரவர்களின் பாகம் அவரவர்களுக்கே கொடுக்கப்பட்டது, அதாவது மஸ்அலா 3-ஆல் செய்து ஹைதர் என்பவனுக்கு 2-ம், ரஷீதா என்பவளுக்கு 1-ம் கொடுக்கப்பட்டது.

8-வது காயிதா.

மாதாவைப்பற்றியவர்களில் மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளுக்குள் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்கள் இருந்து இவர்களுடைய உருக்களின் எந்த வகுப்புகளிலும் ஆண்பெண்ணென்ற வித்தியாசங்களுமிருந்தால் அப்போது மேலான வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லிஹச்சில் உன்சயைனியின் வகைப்படி பாகங்கள் பாகித்து ஒவ்வொருவருடைய பாகத்தை அவரவர்களின் மவுஜூதாயிருக்கும் வாரிசுகளுக்கு கொடுக்கவேண்டும், பின்னும் உருக்களின் 2-வகுப்புகளில் ஒரேவிதமான வித்தியாசங்கள் இருந்தால் அதாவது

3-வது வகுப்பின் வித்தியாசத்திற்கு 4-வது வகுப்பின் வித்தியாசம் இருந்திராமல் இருந்தால் அப்போது மேலான வகுப்பின் வித்தியாசப்படி பாகம் செய்வது போதுமானதாயிருக்கும், மறுபடியும் உசூலின் 4-வது வகுப்பின் வித்தியாசப்படியாவது மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின் வித்தியாசப்படியாவது வேறுபாகம் செய்யவேண்டியதில்லை, இப்படி மேலான வகுப்பின் வித்தியாசப்படி பாகம் செய்து அவரவர்களின் மவுஜூதாயிருக்கும் கடைசியானவாரிசுகளுக்கு அப்பாகங்களை கொடுத்துவிடவேண்டும், இதற்கு 2-உதாரணங்கள் உண்டு.

1-வது உதாரணம்

மய்யத்து சைது மஸ்அலா 3.
மாதா........மாதா
பிதா.........மாதா
2 1
பிதா.........பிதா
மாதா.........பிதா
பாசிலா... ஹாஷிம்
2 —— 1

2-வது உதாரணம்.

மய்யத்து கரீம் மஸ்அலா 3.
மாதா........மாதா
பிதா.........பிதா
மாதா.........பிதா
1 2
மாதா........பிதா
பிதா.........மாதா
ஹைதர்......ரஷீதா
1 —— 2

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹாஷிம் என்பவனே இறந்தவனுக்கு மாதாமகனுடைய பிதாமகனாயிருக்கிறான், பின்னும் பாசிலா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனுடைய பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் இவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும், மாதாவைப்பற்றின வர்களாயும், ஜவில்அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டியும், பாட்டனுமிருக்கிறார்கள், பின்னும் இவர்களுடைய உசூலின் ஒரே ஒருவகுப்பாகிய 2-வது வகுப்பில்மாத்திரம் ஆண்பெண்ணென்கிற வித்தியாசமும் பின்னும், இவர்களின் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளிலுங்கூட ஆண்பெண்ணென்ற வித்தியாசமும் இருக்கிறது, ஆகையால் மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகளின் பேரில் பாகம் பாகிக்காமல் உசூலின் 2-வது வகுப்பில் ஆண்பெண்ணென்ற வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹச்சில் உன்சயைனியின் வகைப்படி பாகங்களை பாகித்து அவரவர்களின் மவுஜூதான

வாரிசுகளுக்கு அப்பாகங்கள் கொடுக்கப்பட்டன, அதாவது மஸ்அலா 3-ஆல் செய்து ஹாஷிம் என்பவனுக்கு 1-பங்கும், பாசிலா என்பவளுக்கு 2-பங்கும் கிடைத்தது.

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹைதர் என்பவனே இறந்தவனுக்கு மாதாமகனுடைய மாதாமகியின் பிதாவாயிருக்கிறான், பின்னும் ரஷீதா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனுடைய பிதாமகனின் மாதாவாயிருக்கிறாள், பின்னும் இவர்கள் ஒரே வகுப்புள்ளவர்களாயும், பிதாவைப்பற்றியவர்களாயும், ஜவில்அர்ஹாமானவர்களாயும், கிரமமற்ற பாட்டியும், பாட்டனுமாயிருக்கிறார்கள், பின்னும் உசூலிலும் புருஎன்ற கடைசியான வாரிசுகளிலும், ஆண்பெண்ணென்ற வித்தியாசம் சேர்ந்துவந்தமையால் புருவின்பேரில் பாகம் செய்யவில்லை, பின்னும் இவர்களுடைய உசூலின் 2-வகுப்புகளில் ஆண்பெண் என்ற பேதகங்கள் இருக்கின்றன, பின்னும் மேற்படி உசூலின் 3-வது வகுப்பில் இருக்கும் பேதகத்துக்கு/ஒப்பாகவே 4-வது வகுப்பின் வித்தியாசமும் உண்டு, ஆகையால் உசூலின் 3-வது வகுப்பின் வித்தியாசத்தின்பேரில் லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹச்சில் உன்சயைனியின்படி பாகங்கள் பாகிக்கப்பட்டன, பின்னும் 3-வது, 4-வது வகுப்பின் பேதகம் ஒன்றுக்கொன்று விரோதமாக இல்லாமல் ஒன்றுமையாக இருந்தமையால் மறுபடியும் 4-வது வகுப்பின் பேதகப்படி வேறு பாகம் செய்யவில்லை, இப்படி 3-வது வகுப்பின்பேரில் பாகங்கள் செய்து அவரவர்களின் வாரிசுகளுக்கு அதே பாகங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது ஹைதர் என்பவனுக்கு ஒருபாகமும், ரஷீதா என்பவளுக்கு 2-பாகமும் கொடுக்கப்பட்டன.

9-வது காயிதா.

மாதாவைப்பற்றிய மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகள் சமவகுப்புள்ளவர்களாயிராமல் ஏற்றத்தாழ்ச்சியானவர்களா யிருக்க வேண்டும், பின்னும் இவர்கள் ஆண் ஆண்களாயாவது, அல்லது பெண்பெண்களாயாவது, அல்லது ஆண்பெண்களாயாவது இருந்திருக்கவேண்டும், பின்னும் இவர்களின் உசூலின் வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகமும் இல்லாதிருக்கவேண்டும், இப்படியிருக்

தால் சமீபமுள்ளவன் முக்கிய பாத்தியஸ்தனாயிருக்கிறான். இவனுக்கே பாகம் கிடைக்கும், தூரமுள்ளவனுக்கு பாகம் கிடைக்காது. பின்னும் உருவின் வகுப்பின்பேரில் பாகம் செய்யப்படமாட்டாது. இதில் 3-உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்
ஆண் ஆண்களைப்பற்றி

மய்யத்து சைது மஸ்அலா 1.
மாதா........மாதா
பிதா..........பிதா
மாதா....... மாதா
பிதா..........பிதா
பிதா.......... ,,
ரஷீது.......ஹமீது
மஹ்ரூம — 1

2-வது உதாரணம்
பெண் பெண்களைப்பற்றி

மய்யத்து உமறு மஸ்அலா 1.
மாதா..........மாதா
பிதா..........பிதா
மாதா..........மாதா
மாதா.......... ,,
ரஹீமா........கரீமா
மஹ்ரூம — 1

3-வது உதாரணம் ஆண் பெண்களைப்பற்றி

மய்யத்து கரீம் மஸ்அலா 1.
மாதா........மாதா
பிதா..........பிதா
மாதா........மாதா
பிதா.......... ,,
ஹைதர்...ஹமீதா
மஹ்ரூம — 1

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஷீதானவனே இறந்தவனுடைய மாதா மகனின் மாதாமகனுடைய பிதாவாயிருக்கிறான், பின்னும் ஹமீது என்பவனோ இறந்தவனுடைய மாதாமகளின் மாதாமகனாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனைவிட ஹமீது என்பவன் இறந்தவனுக்கு சமீபமுள்ள வாரிசாயிருப்பதால் பாகமடைய முக்கியஸ்தனாயிருக்கிறான், ரஷீது தூரமுள்ளவனாகையால் மஹ்ரூமாய்விட்டான், பின்னும் இந்த மவுஜூதாயிருக்கிற கடைசியான வாரிசுகளில் ஆண்பெண்ணென்ற பேதகம் இல்லாமல் இவர்கள் ஆண் ஆண்களாகவே இருக்கிறார்கள், பின்னும் இவர்கள் சமவகுப்பானவர்களா யிருக்கவில்லை, பின்னும் ரஷீது என்பவனும். ஹமீது என்பவனும் மாதாவைப்பற்றியவர்களாயிருக்கிறார்கள், பின்னும் பெரியார்களின் உருவின் வகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகமும் இருந்திருக்கவில்லை. ஆகையால் மஸ்அலா புறு என்ற கடைசியான வாரிசாயும், சமீபமுள்ளவனுமான ஹமீதின்பேரில் 1-ஆல் செய்து இவனுக்கே அந்த ஒன்று கொடுக்கப்பட்டது.

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ முதல் உதாரணத்திற்குச்சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் முதல் உதாரணத்தின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண்ஆண்களாகயிருக்கிறார்கள், இந்த உதாரணத்திலோ இவர்கள் பெண்பெண்களாயிருக்கிறார்கள், பின்னும் ரஹீமா என்பவள் இறந்தவனுக்கு மாதா மகனின் மாதாமகளாயிருக்கிறாள், கரீமா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனின் மாதாவாயிருக்கிறாள், பின்னும் இந்த உதாரணம் மற்ற எல்லா வகைகளிலும் சரியாகவே இருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவர்களாகிய கரீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

3-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது உதாரணத்திற்கு சரிசமானமாகவேயிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் இதின் புறு என்ற கடைசியான வாரிசுகள் ஆண்பெண்களாயிருக்கிறார்கள், பின்னும் ஹைதர் என்பவன் இறந்தவனுக்கு மாதா மகனின் மாதாமகனாயிருக்கிறான், ஹமீதா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகனின் மாதாவாயிருக்கிறாள், பின்னும் இந்த உதாரணத்திலோ இவர்கள் ஆண்பெண்களாயிருக்கிறார்கள், பின்னும் சமீபமுள்ளவளாகிய ஹமீதா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

10-வது காயிதா.

மாதாவைப்பற்றிய மவுஜூதாயிருக்கும் கடைசியான வாரிசுகள் சமவகுப்புள்ளவர்களா யிருந்திராமல் ஏற்றத்தாழ்ச்சியானவர்களா யிருந்திருக்கவேண்டும், பின்னும் இவர்கள் ஆண் ஆண்களாயாவது, அல்லது பெண்பெண்களாயாவது, அல்லது ஆண்பெண்களாயாவது இருக்கவேண்டும், இவர்களின் உருவின் ஒன்று, அல்லது பலவகுப்புகளில் ஆண்பெண்ணென்ற பேதகம் இருந்திருக்கவேண்டும், அல்லது இருந்திராமல் இருக்கவேண்டும், இப்படி இருக்கும்பக்ஷத்தில் சமீப

முள்ளவனே முக்கிய பாத்தியஸ்தனாயிருக்கிறான், இவனுக்கே பாகம் கிடைக்கும் தூரமுள்ளவனுக்கு பாகம் கிடைக்கமாட்டாது, பின்னும் உசூலின் வகுப்புகளின் பேதகப்படி பாகம் செய்யப்படமாட்டாது. இதில் 4-உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்
ஆண் ஆண்களைப்பற்றி

மய்யத்து ஹைதர், மஸ்அலா 1
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
பிதா……பிதா
பிதா…… ,,
சப்தர்……ரஷீது
மஹ்றூம் — 1

2-வது உதாரணம்
பெண் பெண்களைப்பற்றி

மய்யத்து ரஹீம், மஸ்அலா 1.
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
மாதா……மாதா
மாதா…… ,,
சபியா……ரஹீமா
மஹ்றூம் — 1

3-வது உதாரணம்.

ஆண் பெண்களைப்பற்றி

மய்யத்து வலீது, மஸ்அலா 1.
மாதா……மாதா
பிதா……பிதா
பிதா……மாதா
பிதா……பிதா
மாதா…… ,,
ஹிந்தா……காலிது
மஹ்றூம் — 1

4-வது உதாரணம் உசூலின்
2-வகுப்புகளில் வித்தியாசமுள்ளதைப்பற்றி

மய்யத்து பசுரு, மஸ்அலா 1.
மாதா……மாதா
பிதா……மாதா
மாதா……பிதா
பிதா……மாதா
பிதா…… ,,
வலீது……ஹிந்தா
மஹ்றூம் — 1

1-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் சப்தர் என்பவனே இறந்தவனுடைய மாதாமகனின் பிதாமகனுடைய பிதாவாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனே இறந்தவனுடைய மாதாமகனின் மாதாமகனாயிருக்கிறான், பின்னும் சப்தர் என்பவனைவிட ரஷீது என்பவன் இறந்தவனுக்கு சமீபமுள்ள வாரிசாயிருப்பதால் பாகமடைய இவன் முக்கியஸ்தனாயிருக்கிறான், சப்தர் தூரமுள்ளவனாகையால் மஹ்றூமாய்விட்டான் பின்னும் இந்த மவுஜூதாயிருக்கிற கடைசியான வாரிசுகளில் ஆண் பெண்ணென்ற பேதகமில்லை, இவர்கள் ஆண் ஆண்களாகவே யிருக்கிறார்கள், பின்னும் இவர்கள் சமவகுப்புள்ளவர்களா யிருக்கவில்லை, பின்னும் சப்தர் என்பவனும், ரஷீது என்பவனும் மாதாவைப்பற்றியவர்களாயிருக்கிறார்கள், பின்னும் ஷெடியார்களின் உசூலின் வகுப்புகளில் ஒரேஒரு வகுப்பில் ஆண்பெண்ணென்ற பேதகம் இருக்கிறது, ஆகையால் மஸ்அலா புறுஎன்ற கடைசியான வாரிசாயும், சமீபமுள்ளவனுமான ரஷீது என்பவன்பேரில் ஒன்றால் செய்து இவனுக்கே அந்த ஒன்று கொடுக்கப்பட்டது. உசூலின் பேதகத்தின் பேரில் பாகம் செய்யவில்லை.

2-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ முதல் உதாரணத்திற்கு சரிசமானமாயிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசம் இருக்கிறதென்றால் முதல் உதாரணத்தின் புறுஎன்ற கடைசியான வாரிசுகள் ஆண் ஆண்களாயிருக்கிறார்கள், ஆனால் இந்த உதாரணத்திலோ இவர்கள் பெண் பெண்களாயிருக்கிறார்கள், பின்னும் சபியா என்பவளோ இறந்தவனுடைய மாதாமகனின் பிதாமகியுடைய மாதாவாயிருக்கிறாள், பின்னும் ரஹீமா என்பவளோ இறந்தவனுடைய மாதாமகனின் மாதாமகியாயிருக்கிறாள், பின்னும் இந்த உதாரணம் மற்றெல்லா வகைகளிலும் சரிசமானமாயிருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவளாகிய ரஹீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

3-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது உதாரணத்திற்கு சரிசமானமாகவே யிருக்கிறது, ஆனால் இதில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் இதின் புறுஎன்ற கடைசியான வாரிசுகள் ஆண்பெண்களாயிருக்கிறார்கள், அதாவது ஹிந்தா என்ற பெண்ணும், காலிது என்ற ஆணுமாயிருக்கிறார்கள், பின்னும் ஹிந்தா என்பவளோ இறந்தவனுடைய மாதாமகனின் பிதாமகனுடைய மாதாவாயிருக்கிறாள், பின்னும் காலிது என்பவனே இறந்தவனுடைய மாதாமகனின் மாதாமகனாயிருக்கிறான், பின்னும் இந்த உதாரணம் மற்றெல்லா வகைகளிலும் சரியாகவே இருக்கிறது, பின்னும் சமீபமுள்ளவனாகிய காலிது என்பவனுக்கு பாகம் கிடைத்தது.

4-வது உதாரணத்தின் வியாக்கியானம்.

இந்த உதாரணமோ 1-வது, 2-வது, 3-வது உதாரணத்திற்கு சரிசமானமாயிருக்கிறது, பின்னும் இந்த உதாரணத்தில் என்ன வித்தியாசமிருக்கிறதென்றால் 1-வது, 2-வது, 3-வது உதாரணங்களின் உருவின் வகுப்புகளில் ஒரேஒரு வகுப்பில் பேதகமிருக்கின்றது, ஆனால், இந்த உதாரணத்தின் உருவின் வகுப்புகளில் 2-வகுப்புகளில் பேதகமிருக்கின்றது, அதாவது 2-வது வகுப்பிலும், 3-வது வகுப்பிலும் பேதகமிருக்கிறது. பின்னும் வலீது என்பவனே இறந்தவனுக்கு மாதாமகனின் மாதாமகனுடைய பிதாவாயிருக்கிறான், பின்னும் ஹிந்தா என்பவளோ இறந்தவனுக்கு மாதாமகியின் பிதாமகியாயிருக்கிறாள், பின்னும் இந்த உதாரணம் மற்றெல்லா வகைகளிலும் சரியாகவேயிருக்கிறது, பின்னும் சமீபமுள்ள ஹிந்தா என்பவளுக்கு பாகம் கிடைத்தது.

3-வது பகுதி, மாதாவைப்பற்றியவர்களின் பயான்.

இதில் 5-காயிதாக்கள் இருக்கின்றன.

1-வது காயிதா.

மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் பிதாவைப்பற்றிய வாரிசு மய்யத்திற்கு சமீபமுள்ளவனும், மாதாவைப்பற்றிய வாரிசு தூரமுள்ளவனுமிருந்தால் அப்போது சமீபமுள்ளவனாகிய பிதாவைப்பற்றிய வாரிசு முக்கியனாயிருக்கிறான், தூரமுள்ளவன் மஹ்ரூமாய்விடுகிறான். உதாரணம்.

மய்யத்து சப்தர், மஸ்அலா 1.
மாதா……பிதா
பிதா……மாதா
மாதா……பிதா
மாதா…… ,,
ஹலீமா…ஹைதர்
மஹ்ரூம் — 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஹைதர் என்பவன் பிதாவைப்பற்றினவனாயிருக்கிறான், ஹலீமா என்பவளோ மாதாவைப்பற்றினவளாயிருக்கிறாள், பின்னும் இவ்விருவர்களும் சவில்அர்ஹாமாயிருக்கிறார்கள். பின்னும் ஹைதர் என்பவன் ஹலீமாவைவிட இறந்தவனுக்கு சமீபமுள்ளவனாயிருக்கிறான், ஹலீமாவோ தூரமுள்ள முறையுள்ளவளாயிருக்கிறாள், எப்படியென்றால் ஹைதர் என்பவன் மய்யத்திற்கு பிதாமகியுடைய பிதாவாயிருக்கிறான், ஹலீமா என்பவளோ மய்யத்திற்கு மாதாமகனுடைய மாதாமகியாயிருக்கிறாள். இக்காரணத்தாலேயே ஹலீமா மஹ்ரூமாய்ப் போய்விட்டாள், ஆகையால் மஸ்அலா ஒன்றால் செய்து, ஹைதர் என்பவனுக்கு ஒன்று கொடுக்கப்பட்டது, ஹலீமா என்பவள் மஹ்ரூமாய் போனாள்.

2-வது காயிதா.

மவுஜூதாயிருக்கும் கடைசி வாரிசுகளில் மாதாவைப்பற்றிய வாரிசு மய்யத்திற்கு சமீபமுள்ளவனும், பிதாவைப்பற்றிய வாரிசு தூரமுள்ளவனுமிருந்தால் அப்போது சமீபமுள்ளவனாகிய மாதாவைப்பற்றிய வாரிசு முக்கியனாயிருப்பான், தூரமுள்ளவன் மஹ்ரூமாய்விடுவான். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 1.
மாதா……பிதா
பிதா……மாதா
,, ……பிதா
காதிர்……ரஷீது
1 — மஹ்ரூம்

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் காதிர் என்பவன் மாதாவைப்பற்றினவனாயிருக்கிறான், ரஷீது என்பவன் பிதாவைப்பற்றினவனாயிருக்கிறான், பின்னும் இவ்விருவர்களும் சவில்அர்ஹாமாயிருக்கிறார்கள், பின்னும் காதிர் என்பவன் ரஷீது என்பவனைவிட இறந்தவனுக்கு சமீபமுள்ளவனாயிருக்கிறான், பின்னும் ரஷீது என்பவனோ தூரமுள்ள முறையானவனாயிருக்கிறான், எப்படியென்றால் ரஷீது என்பவன் மய்யத்திற்கு பிதாமகியின் பிதாவாயிருக்கிறான், பின்னும் காதிர் என்பவனோ மய்யத்திற்கு மாதாமகனாயிருக்கிறான், இக்காரணத்தாலேயே ரஷீது என்பவன் மஹ்ரூமாய்விட்டான், ஆகையால் மஸ்அலா ஒன்றால் செய்து, காதிர் என்பவனுக்கு ஒன்று கொடுக்கப்பட்டது, ரஷீது என்பவனோ மஹ்ரூமாய்ப்போனான்.

3-வது காயிதா.

மவுஜூதாயிருக்கும் வாரிசுகளாகிய மாதாபிதாவைப்பற்றிய வாரிசுகள் ஒன்றாக சேர்ந்துவந்து இவர்கள் சமவரிசையுள்ளவர்களாயும், இவர்கள் ஆண்ஆணுயாவது, அல்லது பெண்பெண்ணுயாவது, அல்லது ஆண்பெண்ணுயாவது இருந்தாலும் அப்போது மாதாவைப் பற்றியவர்களைவிட பிதாவைப்பற்றியவர்களுக்கு இரட்டிப்பு பாகம் கொடுக்கவேண்டும். அதாவது மாதாவைப்பற்றிய ஆணுக்கு கிடைக்கும் பாகத்துக்கு இரட்டிப்பு பிதாவைப்பற்றிய ஆணுக்கு கொடுக்கவேண்டும். பின்னும் மாதாவைப்பற்றிய பெண்ணுக்கு கிடைக்கும் பாகத்துக்கு இரட்டிப்பு, பிதாவைப்பற்றிய பெண்ணுக்கு கொடுக்கவேண்டும். பின்னும் இவர்களுடைய உருவின் எந்த வகுப்பிலும், ஆண்பெண்ணென்ற பேதகம் இருந்தபோதிலும் அப்பேதகத்தின் பேரில் பாகம் செய்யாமல் மவுஜூதாயிருக்கும் கடைசியான பிதாவைப்பற்றியவனுக்கு 2-பாகமும், பின்னும் கடைசியான மாதாவைப் பற்றியவனுக்கு 1-பாகமும் கொடுக்கவேண்டும். இதில் 4 உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்...மாதாவின்
சகோதரி...சகோதரி
புத்திரி......புத்திரி
ரஹீமா.....கரீமா
2 — 1

2-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்...மாதாவின்
பின்னோகரி.பின்னோகரி
புத்திரி......புத்திரி
ஹலீமா.....ஹிந்தா
2 — 1

3-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்...மாதாவின்
சகோதரி .பின்னோகரி
புத்திரி.....புத்திரி
பாத்திமா...ரஷீதா
2 — 1

4-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3
பிதாவின்...மாதாவின்
பின்னோகரி.பின்னபிதுருகி
புத்திரி......புத்திரி
சயீதா......சோதா
2 — 1

5-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்...மாதாவின்
பின்னோகரி.பின்னோகரி
புத்திரி......புத்திரி
அரீசா......ரஹீமா
2 — 1

6-வது உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்.....மாதாவின்
பின்னபிதுருகி.பின்னபிதுருகி
புத்திரி......புத்திரி
ஹமீதா.....ஹனீபா
2 — 1

7-வது உதாரணம்

மய்யத்து ஸைது, மன்அலா 3.
பிதாவின்.மாதாவின்
பின்ஞெதரி.சகோதரி
புத்திரி...புத்திரி
ஷரீபா....மஜீதா
2 — 1

8-வது உதாரணம்

மய்யத்து ஸைது, மன்அலா 3.
பிதாவின்......மாதாவின்
பின்னாபிஞருகி..பின்ஞெதரி
புத்திரி.......புத்திரி
நயீமா.........சாஹிதா
2 — 1

வியாக்கியானம்.

1-வது, 2-வது, உதாரணங்களில் ரஹீமா என்பவளும் ஹலீமா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயும்; பலத்தவர்களாயுமிருக்கிறார்கள். பின்னும் இவ்விதமாகவே கரீமா, என்பவளும், ஹமீதா என்பவளும் மாதாவைப்பற்றியவர்களாயும், பலத்தவர்களாயுமிருக்கிறார்கள், பின்னும் ரஹீமா என்பவளும், ஹலீமாஎன்பவளும் பிதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 2-பங்குகளும் கரீமாஎன்பவளும், ஹமீதாஎன்பவளும் மாதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 1-பங்கும் கிடைத்தது.

பின்னும் 3-வது, 4-வது உதாரணங்களில் பாத்திமா என்பவளும் சயீதா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயும், பலத்தவர்களாயும் இருக்கிறார்கள், பின்னும் ரஷீதா என்பவளும், ஸோதா என்பவளும் மாதாவைப்பற்றியவர்களாயும், பலயீனமுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். பின்னும் பாத்திமா என்பவளும், சயீதா என்பவளும் பிதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 2-பங்குகளும், ரஷீதா என்பவளும், ஸோதா என்பவளும் மாதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 1-பங்கும் கிடைத்தது

பின்னும் 5-வது, 6-வது உதாரணங்களில் அசீசா என்பவளும் ஹமீதா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயும், பலயீனர்களாயும் இருக்கிறார்கள், பின்னும் இப்படியே ரஹீமா என்பவளும், ஹனீபா என்பவளும் மாதாவைப்பற்றினவர்களாயும், பலயீனர்களாயும் இருக்கிறார்கள். பின்னும் அசீசா என்பவளும். ஹமீதா என்பவளும் பிதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 2-பங்கும், ரஹீமா என்பவளும், ஹனீபா என்பவளும் மாதாவைப்பற்றினவர்களானபடியால் இவர்களுக்கு 1-பங்கும் கிடைத்தது.

பின்னும் 7-வது, 8-வது உதாரணங்களில் ஷரீபா என்பவளும், நயீமா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயும், பலயீனர்களாயும் இருக்கிறார்கள். பின்னும் மஜீதா என்பவளும், சாஹிதா என்பவளும் மாதாவைப்பற்றியவர்களாயும், பலத்தவர்களாயும் இருக்கிறார்கள். பின்னும் பிதாவைப்பற்றியவர்கள் மாதாவைப்பற்றியவர்களைவிட பலயீனர்களாயிருந்தபோதிலும் பிதாவைப்பற்றியவர்களாகிய ஷரீபா என்பவளுக்கும், நயீமா என்பவளுக்கும் இரட்டிப்பு பங்கு கிடைத்தது. மாதாவைப்பற்றியவர்கள் பலத்தவர்களாயிருந்தபோதிலும் இவர்களுக்கு ஒத்தைபங்கு கிடைத்தது.

9-வது வகை. பிதாவைப்பற்றினவர்களில் பலமுள்ள வாரிசுகளும், பலயீனர்களான வாரிசுகளும் வந்து இவர்களுடன் மாதாவைப்பற்றினவர்களிலும் அப்படியே பலமுள்ளவாரிசுகளும் பலயீனமுள்ள வாரிசுகளும் கலந்துவந்தால் அப்போது இருதரத்தாரின் பலமுள்ளவர்களுக்கு பாகமும், பலயீனர்களுக்குபாகமில்லாமலும் போய்விடும். இதில் 2-உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்

மய்யத்து ஸைது, மன்அலா 3.
பிதாவின்......பிதாவின்......மாதாவின்......மாதாவின்
சகோதரி......பின்ஞெதரி...சகோதரி......பின்ஞெதரி
புத்திரி.......புத்திரி........புத்திரி..........புத்திரி
ரஹீமா......கரீமா...........ஹமீதா.........ஸோதா
2 —— மஹ்றூம் — 1 —— மஹ்றூம்

2-வது உதாரணம்

மய்யத்து ஸைது, மன்அலா 3.
பிதாவின்......பிதாவின்......மாதாவின்......மாதாவின்
பின்ஞெதரி..பின்னாபிஞருகி..பின்ஞெதரி..பின்னாபிஞருகி
புத்திரி.......புத்திரி.........புத்திரி...........புத்திரி
ரஹீமா.........கரீமா...........ஹமீதா..........ஸோதா
2 —— மஹ்றூம் — 1 —— மஹ்றூம்

வியாக்கியானம்.

1-வது உதாரணத்தில் ரஹீமா என்பவளும், கரீமா என்பவளும் பிதாவைப்பற்றியவர்களாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களில் ரஹீ

மா என்பவள் கரீமாவைவிட பலமுள்ளவளாயிருக்கிறாள், கரீமா என்பவளோ பலயீனமுள்ளவளாயிருக்கிறாள்; ஆகையால் பலமுள்ளவளாகிய ரஹீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது, கரீமா என்பவளுக்கு பாகம் கிடைக்கவில்லை. பின்னும் ஹிந்தா என்பவளும், சோதா என்பவளும் மாதாவைப்பற்றியவர்களாயிருக்கிறார்கள், இவர்களில் ஹிந்தா என்பவள் சோதா என்பவளைவிட பலமுள்ளவளாயிருக்கிறாள், சோதா என்பவளோ பலயீனமுள்ளவளாயிருக்கிறாள், ஆகையால் பலமுள்ளவளாகிய ஹிந்தா என்பவளுக்கு பாகம் கிடைத்தது, சோதா என்பவளுக்கு கிடைக்கவில்லை.

பின்னும் 2-வது உதாரணத்திலும் மேற்கண்ட தன்மையின்படியே பிதாவைப்பற்றின பலத்தவர்களாகிய ரஹீமா என்பவளுக்கு பாகம் கிடைத்தது. பலயீனமுள்ளவளாகிய கரீமாவுக்குபாகம் கிடைக்கவில்லை, இவ்விதமாகவே மாதாவைப்பற்றின பலத்தவளாகிய ஹிந்தா என்பவளுக்கு பாகம் கிடைத்தது, பலயீனமுள்ளவளாகிய சோதா என்பவளுக்கு பாகம் கிடைக்கவில்லை, பின்னும் பிதாவைப் பற்றியவர்களுக்கு இரட்டிப்பும், மாதாவைப்பற்றியவர்களுக்கு ஒத்தையுமொன்றென்ற வகைப்படி ரஹீமா என்பவளுக்கு 2-ம், ஹிந்தா என்பவளுக்கு 1-ம் கிடைத்தது.

10-வது வகை. பிதாவைப்பற்றினவர்களும், மாதாவைப்பற்றினவர்களும் கலந்துவந்து பிதாவைப்பற்றினவர்களில் எவனாவது அசபத்துக்காரனுடைய சந்ததியாயிருந்தால் அப்போது அசபத்துக்காரனை அவ்லா என்று முக்கியஸ்தனாயிருப்பான், இவனுடைய பங்கு இவனுடைய சந்ததிக்கு கொடுக்கப்படும். பிதாவைப் பற்றிய மற்றவர்களுக்கு பாகம் கிடைக்கமாட்டாது. மஹ்றூமாய் போய் விடுவார்கள், ஆனால் மாதாவைப்பற்றியவர்களுக்குபாகம் கிடைக்கும் பிதாவைப்பற்றிய அசபத்துக்காரன் வந்தாலும் மாதாவைப் பற்றியவர்களுக்கு யாதொரு தடையுண்டாகாது, இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாவின்......பிதாவின்.......மாதாவின்
சகோதரன்...பின்னபிதருகி...சகோதரி
புத்திரன்.....புத்திரன்........புத்திரன்
ரஹீம்.........கரீம்........... உமரு
2 —— மஹ்றூம் —— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ரஹீம் என்பவனும் கரீம் என்பவனும் இவ்விருவர்கள் பிதாவை பற்றியவர்களாயிருக்கிறார்கள், இவர்களில் ரஹீம் என்பவன் அசபத்துக்காரனுடைய புத்திரனும் இவனும் அசபத்துக்காரனும் இருக்கிறபடியால் ரஹீம் என்பவன் வாரிசாய்விட்டான், கரீம் என்பவன் மஹ்றூமாய்போய்விட்டான். பின்னும் பிதாவைபற்றியவர்களும், மாதாவைப்பற்றியவர்களும் சேர்ந்துவந்தபடியால் பிதாவைப்பற்றிய ரஹீம் என்பவனுக்கு 2-பங்கும், மாதாவைப்பற்றிய உமரு என்பவனுக்கு 1-பங்கும் கிடைத்தது.

11-வது வகை. பிதாவைப்பற்றினவர்களிலாகிலும், மாதாவைப்பற்றினவர்களிலாகிலும் இவர்களில் ஆண்பெண் என்ற வித்தியாசமில்லாமல் ஒரே ஜின்சுள்ளவர்கள் சேர்ந்துவந்திருந்தால் அப்போது மாதாவைப் பற்றினவர்களுக்கு கிடைக்கும் பாகத்தின் இரட்டிப்பு பிதாவைப்பற்றின ஒவ்வொருவருக்கும் கிடைக்கும், அப்படிக்கி இல்லாமல் ஆணும் பெண்ணுமானவர்கள் இருந்தால் ஆணுக்கு 2-ம் பெண்ணுக்கு 1-மாக கொடுக்கவேண்டியே. இதில்2 உதாரணங்களுண்டு.

1-வது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3. தஸ்ஹீஹ் 6.
பிதாவின்......பிதாவின்......மாதாவின்......மாதாவின்
சகோதரியின்.சகோதரியின்.சகோதரியின்.சகோதரியின்
புத்திரி.........புத்திரி.........புத்திரி.........புத்திரி
கரீமா.........ரஹீமா.........சோதா............ஹிந்தா
2 —— 1
2 —— 2 —— 1 —— 1

வியாக்கியானம்.

மஸ்அலா 3-ஆல் செய்து பிதாவைப்பற்றினவர்களுக்கு 2-ம், மாதாவைப்பற்றினவர்களுக்கு 1-ம் கொடுக்கப்பட்டது, ஆனால் இப்படி கொடுப்பதினால் மாதாவைப்பற்றின 2-பேருக்கு வந்த 1-பாகத்தை இருவர்களின்பேரில் பாகிக்க முறிப்படுகிறபடியால் மஸ்அலா தஸ்ஹீஹ் செய்யவேண்டியே, அது எப்படி செய்யவேண்டுமென்றால் எந்த பாகஸ்தர்களுடைய பாகங்கள் முறிப்படுகின்றனவோ அவர்களின்

தலை எண்களால் மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும், அதாவது மாதாவைப்பற்றியவர்களின் தலை எண் 2-ஆகயிருக்கிறது, இந்த இரண்டை மஸ்அலாவின் மூன்றுடன் பெருக்கவேண்டும், 2×3=6. இப்படி பெருக்கிவந்த தொகையானது 6-ஆகயிருக்கிறது, இதுதான் மஸ்அலாவின் தஸ்ஹீஹ். பின்னும் மாதாவைப்பற்றியவர்களைவிட பிதாவைப்பற்றியவர்களுக்கு 2-பாகம் அதிகமாக கொடுக்கவேண்டியதாயிருக்கிறபடியால் இந்த ஆறை 6-பாகம் செய்து, பிதாவைப்பற்றியவர்களுக்கு 4-பாகமும், மாதாவைப்பற்றியவர்களுக்கு 2-பாகமும் கொடுக்கப்பட்டன. பின்னும் பிதாவைப்பற்றியவர்களின் பாகமாகிய 4-நாலை 2-பிரிவாக்கி 2-பாகம் ரஹீமா என்பவனுக்கும், 2-பாகம் கரீமா என்பவளுக்கும் கொடுக்கப்பட்டன. பின்னும் மாதாவைப்பற்றியவர்களின் பாகமாகிய 2-இரண்டை 2-பாகமாக்கி 1-பாகம் சோதர என்பவனுக்கும், 1-பாகம் ஹலீமா என்பவளுக்கும் கொடுக்கப்பட்டன.

2-வது உதாரணம்.

மய்யத்து சப்தர், மஸ்அலா 3. தஸ்ஹீஹ் 9.

பிதாவின்	பிதாவின்	மாதாவின்	மாதாவின்
சகோதரியின்	சகோதரியின்	சகோதரியின்	சகோதரியின்
புத்திரன்	புத்திரி	புத்திரன்	புத்திரி
ரஹீம்	கரீமா	உமறு	ஹலீமா
2		1	
4	2	2	1

வியாக்கியானம்.

மஸ்அலா 3-ஆல் செய்து பிதாவைப்பற்றினவர்களுக்கு 2-ம், மாதாவைப்பற்றினவர்களுக்கு 1-ம் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்படி கொடுப்பதினால் மாதாவைப்பற்றின 2-பேருக்கு 1-பாகம் பாகிக்க முறிப்படுகிறது, இதுவும் தவிர ஆணுக்கு 2-ம், பெண்ணுக்கு 1-மாக பாகிக்கவும் இடமில்லை. ஆகையால் மஸ்அலாவைத் தஸ்ஹீஹ் செய்யும்படி நேரிட்டது. இது எப்படி செய்யவேணுமென்றால் எந்த பாகஸ்தர்களின் பாகங்கள் முறிப்படுகின்றதோ அவர்களின் தலை எண்களை மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும், அதாவது மாதாவைப்பற்றியவர்களின் தலை எண்களாகிய மூன்றை மஸ்அலாவின் மூன்றோடு பெருக்கவேண்டும். பின்னும் மாதாவைப்பற்றியவர்கள் 2

பேர்களாக இருக்க 3-தலை எப்படியானார்களென்றால் இதின் விபரமாவது மாதாவைப்பற்றியவர்களில் ஆணாகிய உமறு என்பவனுக்கு 2-பாகமிருக்கிறபடியால் 2-தலை என்றும், பெண்ணாகிய ஹலீமாவுக்கு 1-பாகமிருக்கிறபடியால் 1-தலை என்றும் பாவித்துக்கொள்ளவேண்டும், இப்படி மூன்று தலை என்று பாவித்து மஸ்அலாவின் மூன்றோடு பெருக்கினதினால் 3×3=9. வந்த தொகையானது 9-ஆகயிருக்கிறது, பின்னும் பிதாவைப்பற்றியவர்களுக்கு மாதாவைப்பற்றியவர்களைவிட 2-பங்கு ஜாஸ்தியாக கொடுக்கவேண்டியதற்காகவே இந்த ஒன்பதை 3-பிரிவாக்கி பிதாவைப்பற்றியவர்களுக்கு 6-பாகமும், மாதாவைப்பற்றியவர்களுக்கு 3-பாகமும் கொடுக்கவேண்டும்.

தூவரீசுகளில் 3 மன்ஜிலுகளிருக்கின்றன, 1-வது மன்ஜிலுப் அஹலேதன்ஸில், 2-வது மன்ஜிலுப் அஹலேகருபத்து, 3-வது மன்ஜிலுப் அஹலேரஹிம்.

1-வது மன்ஜிலுப் அஹலேதன்ஸிலுடைய பயான்.

எந்த தூவரீஸினுடைய உறவுமுறை எந்தச் சஹீம்வாரிஸின் மூலமாய் மய்யத்துக்குச் சம்பவிக்கின்றதோ சம்மந்தப்படுகின்றதோ அப்பேர்ப்பட்ட தூவரீஸை அந்த சஹீம்வாரிஸின் பிரதிநிதியாக்கவேண்டும், அதாவது அந்த சஹீம்வாரிஸின் தாயபாகத்தை அத்தூவரீசுக்கு கொடுக்கவேண்டும்.

2-வது மன்ஜிலுப் அஹலேகருபத்துடைய பயான்.

எந்த தூவரீசு மய்யத்துக்கு ஒரு சஹீமாயிருக்கிறாரோ அவருக்கே மய்யத்தின் எல்லா சொத்தும் கொடுக்கவேண்டும், ஹனபியாக்கள் இந்த கிதைக்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பின்னும் மய்யத்தின் தூவரீசுகளில் மய்யத்தின் தௌஹித்திரியும், மய்யத்தின் பௌத்திரியுடைய தௌஹித்திரியும் இருக்கிறார்களானல் மய்யத்தின் சொத்தை 4-பாகங்களாக்கி 3-பாகம் மய்யத்தின் தௌஹித்திரிக்கும் ஒரு பாகம் மய்யத்தின் பௌத்திரியுடைய தௌஹித்திரிக்கும் கொடுப்பது அஹலேதன்ஸிலுடைய சக்தியாயிருக்கிறது, ஏனெனில் மய்யத்தின் தௌஹித்திரியுடைய மாதா மய்யத்தின் புத்திரியாயிருக்கிறாள், மய்யத்தின் பௌத்திரியுடைய தௌஹித்திரியின் மாதாமகி மய்யத்தின் பௌத்திரியாயிருக்கிறாள், ஆகையினால் மய்யத்தின் பௌத்திரியுடைய மஸ்அலா 4-ஆல்

ஆகிறது, அப்போது புத்திரிக்கு 3-பாகமும், பௌத்திரிக்கு 1-பாகமும் கிடைக்கிறது. இந்த மஸ்அலா இந்த கிதாபின் 7-வது அத்தியாயம், 2-வது பகுதியின் 3-வது பிரிவு, என்ற மஸ்அலாவில் எழுதப்பட்டிருக்கிறது. பின்னும் மய்யத்தின் எல்லா சொத்தும் மய்யத்தின் தௌஹித்திரிக்கு கொடுக்கப்படுகிறது, அஹுலே கறாபத்துக்காரர்களுடைய சங்கதியாயிருக்கிறது.

3-வது மஸ்ஹப் அஹுலே ரிஹம்முடைய பயான்.

மீறாக பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் அதாவது தாய பாகம் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் மய்யத்தின் தௌஹித்திரியும், மய்யத்தின் பௌத்திரியின் தௌஹித்திரியும் சமமானவர்களாயிருக்கிறதாக மேற்படி 3-வது வகையாகிய அஹுலே ரிஹம்காரர்களின் சங்கதியாயிருக்கிறது ஆகையால் மய்யத்தின் சொத்தை 2-பாகமாக்கி 1-பாகம் மய்யத்தின் தௌஹித்திரிக்கும், 1-பாகம் மய்யத்தின் பௌத்திரியின் தௌஹித்திரிக்கும் கொடுக்கவேண்டும்.

பின்னும் எப்போது இருபேர் உறைமுறையார்களில் அதாவது தூரபந்துக்களில் ஒரேஒரு ஸ்தானத்தின் அதாவது ஒரேஒரு தர்ஜாவின் வாரிசுகளாயிருப்பார்களானால் அப்போது அவர்களில் ஆண் பெண்ணென்கிற பேதகமிருக்கிறது, எப்படியென்றால் இறந்தவனுக்கு தௌஹித்திரனும், தௌஹித்திரியும் இருப்பார்களானால் அப்போது தௌஹித்திரனாகிய ஆணுக்கு இருபாகமும், தௌஹித்திரியாகிய பெண்ணுக்கு 1-பாகமும் கிடைக்கும், இப்படிக்கு ஆண்பெண் இல்லாமல் எல்லோரும் மய்யத்தின் தௌஹித்திரர்களாயிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் கொடுக்கவேண்டும், அல்லது எல்லோரும் மய்யத்தின் தௌஹித்திரிகளாயிருந்தால் அப்போது எல்லோருக்கும் ஒவ்வொரு பாகம் கொடுக்கவேண்டும். பின்னும் இவ்விதமாகவே மற்ற தூரவாரிசுகளின் தாயாதர்களும் இருக்கின்றது.

பின்னும் மய்யத்தின் சொத்தையடைய மய்யத்தின் சம்பவாரிசுகளிலாவது, தூரவாரிசுகளிலாவது ஒருவரும் இல்லாமற்போனால் அப்போது ஹனபிய்யா மஜ்ஹபுபடி மய்யத்தின் பந்தத்துவமில்லாத தூரவாரிசுகளுக்கு அச்சொத்து சேரும், ஆனால் ஷாபிய்யா மஜ்ஹபில் அவர்களுக்கு சொத்து சேராமட்டாது, பந்தத்துவத்தைப்பற்றிய தூரவாரிசுகள் இல்லாதிருந்தால் அப்போது தூரபந்தத்துவமில்லாத தூரவாரிசுகளுக்கு சேரும்.

9-வது கண்டம்.

பந்தத்துவமில்லாத தூரவாரிசுகளின் பயான்.

இவர்களில் 4-வகை இருக்கின்றன.

அறிக்கை.

மஜ்ஹூலுன்னசப் என்பது இன்னானுடைய கர்பப்பிரப்பால்பிறந்தவனென்று தெளிவாய் தெரியாதிருக்கப்பட்டவனுக்கு சொல்லப்படும், அதாவது தகப்பன் இன்னானென்று தெரியாதிருப்பதேயாம். பின்னும் மவுலா என்பது உடன்படிக்கையை ஒப்புக்கொண்டவன், பின்னும் மவாலாத்து என்பது உடன்படிக்கை செய்கிறவன், பின்னும் பாலிகு என்பது ருதுவானவன், பின்னும் முசாபிர் என்பது பிரயாணி.

1-வது வகை. மௌலல்மவாலாத்தி இவன் யாரென்றால் இவனே மஜ்ஹூலுன்னசப்புள்ளவனாயிருக்கிறான், இவன் ஒரு அன்னியனைப்பார்த்து நீ என்னுடைய மௌலாவாயிருக்கிறாய், அதாவது நீ என்னுடைய எஜமானாயிருக்கிறாய் என்றும், நான் எப்போது இறந்துபோவேனோ அப்போது நீ என்னுடைய வாரிசாயிருக்கிறாய் என்றும் பின்னும் என்னால் தைத்து என்ற மரணபரிகாரம் கொடுக்கத்தக்க ஏதேனும் குற்றம் சம்பவிக்குமாகில் அதை நீ கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி அதற்கு அவ்வன்னியனும் நன்மை தீமையை தன் பொறுப்பாக்கிக்கொண்டால் அப்போது அவ்வன்னியன் அவனுடைய வாரிசாய்விடுவான், இப்படிப்பட்டவனுக்கு மௌலல்மவாலாத்து என்று நிர்ணயமாக என்றுபேர். இதற்கு திருஷ்டாந்தம் ஒரு வாரிசும் உடைத்தாயிராத ஒரு முசாபிரானவன் ஒருவனைப்பார்த்து எனக்கு ஒருவாரிசுமில்லை, நீ என்னை உன்னுடைய பந்தத்துவத்திலும், உன்னுடைய ஜாதியிலும் சேர்த்துக்கொள்ளென்றும் என்னுடைய கஷ்டங்களை நீ ஏற்றுக்கொள்ளென்றும் நான் இறந்துபோவேனேயானால் நீ என்னுடைய சொத்தின் வாரிசாயிருக்கிறாயென்றும் இவ்வித உடன்படிக்கை செய்து இவைகளை மற்றவன் ஒப்புக்கொண்டு நன்மை தீமையை தன் பொறுப்பாக்கிக்கொள்ளுவானாகில் அப்போது இதற்கு மவாலாத்தின் உடன்படிக்கை என்றுபேர்.

பின்னும்மவாலாத்தின்சர்த்துகளென்றால் 1-வது இல்லாமயிருக்கவேண்டுமென்பது ஆவசியமில்லை, 2-வது உடன்படிக்கை செய்

கிறவன் அடிமையாயிருந்திராமல் ஹுர்ராயிருந்திருக்கவேண்டும். அதாவது அடிமை ஆகாதவனாயிருக்கவேண்டும். பின்னும் மஜ்ஹூலுன்னசபுள்ளவனாயிருக்கவேண்டும், 3-வது அஜம் தேசத்துக்காரனாயிருந்திருக்கவேண்டும், அஜம் தேசம் என்பது அரேபியா தேசம் நீங்கலாக மற்றெல்லா தேசங்களுக்கு அஜம் என்றுபேர். பின்னும் உடன்படிக்கை காலத்தில் அவனுக்கு அவனுடைய கர்ப்பபிறப்புள்ள வாரிசு இல்லாதிருக்கவேண்டும், 4-வது இப்பேர்ப்பட்ட உடன்படிக்கை எவனோடும் இதற்குமுன் அவன் செய்யாதிருக்கவேண்டும், 5-வது மைத்துவமாயிருந்து இவனுக்காகவென்று, தைத்து என்ற குற்ற மன்னிப்பு தொகை கொடுக்கப்படாதிருக்கவேண்டும். 6-வது புத்தி சுவாதீனமுள்ளவனும், பாலிகு என்ற தருணவானவனுமாயிருக்கவேண்டும், இப்படிப்பட்டவனால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தால் அப்போது உடன்படிக்கை செய்தவனுடைய சொத்துக்கு உடன்படிக்கையை ஒப்புக்கொண்டவன் வாரிசாவான்.

பின்னும் ஒருவனோ உடன்படிக்கை செய்தவனுக்கு முன்னதாகவே உடன்படிக்கை ஒப்புக்கொண்டவன் இறந்துபோய்விட்டால் இப்படி இறந்தவனுடைய சொத்துக்கு உடன்படிக்கை செய்தவன் வாரிசாகமாட்டான். இதற்கு உதாரணம் மஜ்ஹூலுன்னசபாயிருந்த சைது, என்பவன் அன்னியனாகிய பகரு, என்பவனைப்பார்த்து ஓ! பகரு, என்பவனே, நீ என்னுடைய மௌலாவாயிருக்கிறாயென்றும் எப்போது நான் இறந்துபோவேனோ அப்போது நீ என்னுடைய வாரிசாயிருக்கிறாயென்றும் சொல்லி அதற்கு அவ்வன்னியனாகிய ஷெ பகரு, என்பவனும் தான் ஷெ சைது, என்பவனுக்கு மௌலாவாயிருப்பதாக ஒப்புக்கொண்டால் அப்போது இந்தபகரு, என்பவன் ஷெ சைது, என்பவனுடைய வாரிசாய்விடுவான். பின்னும் அவ்வன்னியனாகிய ஷெ பகரு என்பவனும் மஜ்ஹூலுன்னசபாயிருந்த ஷெ சைது, என்பவனைப் பார்த்து ஓ! பகரு என்பவனே நீ என்னுடைய மௌலாவாயிருக்கிறாயென்று சொல்லி அதற்கு மஜ்ஹூலுன்னசபாகிய ஷெ சைது, என்பவனும் ஆம், நீ என்னுடைய மௌலாவாயிருப்பதாக அவன் ஒப்புக்கொண்டால் அப்போது ஷெ சைது, என்பவனும், ஷெ பகரு, என்பவனுடைய வாரிசாய்விடுவான். பின்னும் மௌலல்மவாலாத்தின் தாயபாக சங்கதி தாயத்துக்கொப்பாகயிருக்கிறது; எப்படியென்றால் இவன் தனிமையானவனாயிருந்தால் எல்லா சொத்துமடைவான், பதி

அல்லது பத்னி இருக்குமானால் பதி, அல்லது பத்னியின் பாகம் கொடுத்துவிட்டு மீதியிருப்பதையடைவான்.

2-வது வகை. முகிர்லஹூபின் நசபி அலல்கைரி இது எப்படியென்றால் சைது, என்பவன் மஜ்ஹூலுன்னசபாகிய பகரு, என்பவனைப் பார்த்து ஓ! சைது, என்பவனே, நீ என்னுடைய சிற்றப்பனாயிருக்கிறாய், அல்லது நீ என்னுடைய பௌத்திரனாயிருக்கிறாய், அல்லது நீ என்னுடைய சகோதரனாயிருக்கிறாய் என்று சொன்னதற்கு அப்படி சொன்னவனாகிய சைது என்பவனுடைய பிதாமகனும், புத்திரனும், பிதாவும் அச்சொல்லை நிசப்படுத்தாவிட்டால் அப்போது, முகிர்லஹூபின் நசபி அலல்கைரி, என்று சொல்லப்படும். இவ்விஷயத்தில் பகருஎன்பவன் சைது என்பவனுடைய வாரிசாய்விடுவான், இப்பேர்ப்பட்டவனுக்கு அபிமான வாரிசென்றும் சொல்லப்படும்.

முகிர்லஹூபின் நசபி அலல்கைரி எவனுக்குச் சொல்லப்படுமென்பதின் பயான்

இறந்துபோனவன்மஜ்ஹூலுன்னசபாகியஒருஅன்னியன்விஷயத்தில் ஒரு பந்துத்துவத்தைச் சுட்டிக்காட்டி இக்றார் பண்ணிருந்தா அந்த உறமுறை எவர்களால் புறப்படுகின்றதோ அவர்கள் அந்த உறமுறையை ஒப்புக்கொள்ளாதிருக்கவேண்டும். பின்னும் ஷெ இறந்துபோனவன் ஒரு மஜ்ஹூலுன்னசபாகிய அன்னியன் விஷயத்தில் தான் சுட்டிக்காட்டிய உறமுறையை தான் சாகுங்காலம் வரை ஒப்புக்கொண்டிருந்தே அதாவது இக்றார் செய்துகொண்டிருந்தே செத்திருக்கவேண்டும். பின்னும் தான் செய்த அந்த இக்றாரில் மாறிப்போகாமல் இருந்து செத்திருக்கவேண்டும், இப்படிக்கு எவன் விஷயத்தில் இறந்துபோனவன் இக்றார் பண்ணியிருந்தானோ அந்த மனிதன், முகிர்லஹூபின் நசபி அலல்கைரியாவான்.

சகோதரனென்று சொல்லப்படுவதின் பயான்.

இறந்துபோனவன் எவன் விஷயத்தில் அவன் தன்னுடைய சகோதரனாயிருக்கிறானென்று இக்றார் செய்திருக்கிறானோ அவன் எப்பேர்ப்பட்டவனாயிருக்கவேண்டுமென்றால் அவனோ மஜ்ஹூலுன்னசபாயிருக்கவேண்டும். பின்னும் இவன் ஷெ இக்றார் செய்தவனுடைய தகப்பனுடைய புத்திரனாக் கூப்பிடப்படுவனவனு

யிருக்கவேண்டும், இப்பேர்ப்பட்டவனுக்கு இறந்தவன் இவன் என்னுடைய சகோதரனாயிருக்கிறான் என்று இக்றார் செய்திருக்கவேண்டும், இந்த உறமுறையோ இறந்தவனுடைய தகப்பன்பக்கம் செல்லுகின்றது. பின்னும் இறந்தவனுடைய தகப்பன் அந்த மஜ்ஹூலுன் நசபுக்கு தன் புத்திரனென்று ஒப்புக்கொள்ளாதிருக்கவேண்டும். பின்னும் அவ்விறந்தவன் சாகும்காலம்வரை தன் இக்றாரினால் மாறிப்போகாமல் அவனை தன் சகோதரனென்றே சொல்லிக்கொண்டிருந்து செத்திருக்கவேண்டும், பின்னும் இறந்தவனுக்கு மௌலல்மவாலாத்தி இல்லாதிருந்தால் இந்த முகிர்லஹுபின் நசபி அலல்கைரி ஆகிறவன் மௌலல்மவாலாத்தியைப்போல் தாயபாகமடைய வாரிசாவான்.

சிற்றப்பனென்று சொல்லப்படுவதின் பயான்.

இறந்து போனவன் எவன் விஷையத்தில் அவன் தன்னுடைய சிற்றப்பனாயிருக்கிறானென்று இக்றார் செய்திருக்கிறானோ அவன் எப்பேர்ப்பட்டவனாயிருக்கவேண்டுமென்றால் அவனொரு மஜ்ஹூலுன்னசபாயிருக்கவேண்டும். பின்னும் அவன் இக்றார் செய்தவனுடைய பிதாமகனுடைய புத்திரனாகக் கூடியவயதுள்ளவனாயிருக்கவேண்டும், இப்பேர்ப்பட்டவனுக்கு இறந்தவன் இவன் என்னுடைய சிற்றப்பனாயிருக்கிறான் என்று இக்றார் செய்திருக்கவேண்டும், இந்த உறமுறையோ இறந்தவனுடைய பிதாமகன் பக்கம் செல்லுகின்றது. பின்னும் இறந்தவனுடைய பிதாமகன் அந்த மஜ்ஹூலுன்னசபுக்கு தன் புத்திரனென்று ஒப்புக்கொள்ளாதிருக்கவேண்டும். பின்னும் அவ்விறந்தவன் சாகுங்காலம்வரை தன் இக்றாரினால் மாறிப்போகாமல் அவனை தன் சிற்றப்பனென்றே சொல்லிக்கொண்டிருந்து செத்திருக்கவேண்டும்; பின்னும் இறந்தவனுக்கு மௌலல்மவாலாத்தி இல்லாதிருந்தால் இந்த முகிர்லஹுபின் நசபி அலல்கைரியாகிறவன் மௌலல்மவாலாத்தியைப்போல் தாயபாகமடைய வாரிசாவான்.

அறிவிப்பு.

முகிர்லஹுபின் நசபி அலல்கைரியாவதற்காகவும், மௌலல்மவாலாத்திக்குப் பின் இவன் வாரிசாய் சொத்தை அடைவதற்காகவும் 4-ஷர்த்துகள் இருக்கின்றன.

1-வது ஷர்த்து. இறந்தவன் பந்தத்துவத்தைப்பற்றி மேற்கண்டபடி செய்த இக்றாரானது ஷறுவுக்கு விரோதமாயிருந்திராமல்

ஒத்ததாயிருக்கவேண்டும், எப்படியென்றால் இறந்தவன் எந்த மஜ்ஹூலுன் நசபுள்ளவனை, அல்லது எந்த சரியான நசபுள்ளவனை தன் சகோதரனென்று சொல்லி இக்றார் பண்ணி இருக்கிறானோ, அவன் இறந்தவனுடைய தகப்பனுடைய வயதைப்பார்க்கிலும் மூப்பனாயாவது, அல்லது அவனுடைய வயதுக்குச்சரியான வயதுள்ளவனாயாவது இருக்கலாகாது. பின்னும் இறந்தவனுடைய தகப்பனுடைய புத்திரனாகக்கூடாத அவ்வளவு இளமையான வயதுள்ளவனாயாவது இருக்கலாகாது, இப்பேர்ப்பட்ட வயதுள்ளவனை இறந்தவன் தன் சகோதரனென்று இக்றார்பண்ணினால் இது ஷறுவுக்கு விரோதமுள்ளது, ஆகையால் இப்பேர்ப்பட்ட முகிர்லஹுபின் நசபி அலல்கைரியாகிறவனுக்கு ஒன்றும் கிடையாது.

2-வது ஷர்த்து. வயதில் தன் குமாரனாகத்தக்க ஒரு மஜ்ஹூலுன் நசபுள்ளவனை இறந்தவன் தன் குமாரனென்று சொல்லி இக்றார் பண்ணியிருந்தால் அப்போது அவன் முகிர்லஹுபின் நசபி அலல்கைரியாகமாட்டான். பின்னும் அவன் மௌலல்மவாலாத்திக்குப் பின் சொத்தையும் அடையமாட்டான், ஆனால் இந்த உறமுறையோ முற்றிலும் இறந்தவனுடைய பக்கம் செல்லுகிறபடியால் அவன் இறந்தவனுடைய நிச்சயக்குமாரனாய்விடுவான், பின்னும் இவன் அவன் புத்திரர்கள் ஸ்தானத்தில் தாயபாகமடைவான்,

3-வது ஷர்த்து. இறந்துபோனவனொரு மஜ்ஹூலுன் நசபுள்ளவனை தன் சகோதரனென்றாவது, அல்லது தன் சிற்றப்பனென்றாவது செய்திருக்கும் இக்றாரை இறந்தவனுடைய தகப்பனாவது, பாட்டனாவது அந்த உறமுறையை ஒப்புக்கொள்ளாமல் இருந்திருக்கவேண்டும், அப்படிக்கு அவர்கள் ஒப்புக்கொண்டால் அதாவது இறந்தவன் சொன்னபிரகாரம் இறந்தவனுடைய தகப்பன் ௸ மஜ்ஹூலுன் நசபுள்ளவனை தன் புத்திரனென்றும் இறந்தவனுடைய பாட்டன் இறந்தவனுடைய இக்றார்படி ௸ மஜ்ஹூலுன் நசபுள்ளவனை தன் புத்திரனென்றும் ஒப்புக்கொள்வார்களாகில் அப்போது ௸ மஜ்ஹூலுன் நசபுள்ளவன் முகிர்லஹுபின் நசபி அலல்கைரியாகமாட்டான். பின்னும் இவன் மௌலல்மவாலாத்திக்குப்பின் சொத்தையுமடையமாட்டான், ஆனால் இப்படிக்கு பிதாவும், பாட்டனும் ஒப்புக்கொண்டபடியால் இவன் வாசதத்துவத்தில் இறந்தவனுடைய சகோதரன் அல்லது சிற்றப்பனாய்ப்போய் அந்த ஸ்தானத்தின் தாயபாகத்தை அடைவான்.

இவன் என்னு

4-வது ஷர்த்து. இறந்தவன் ஷெய்மஜ்ஹூலுன் நசபின் இட்டவன் மேற்காட்டியபடி செய்த பந்தத்துவமுள்ள இக்குறை சாகும்வரை பிரளாமல் உறுதியாய் வெடி இக்குறுடன் செத்திருக்கவேண்டும். அப்படி பிரண்டிப்போனால் முகிர்லஹூ என்பவனுக்கு ஒன்றும் கிடையாது.

3-வதுவகை மூசாலஹூ பிஜமீயில் மாலி, இது எப்படி என்றால் மய்யத்தானவன் தன்னுடைய எல்லாசொத்தைக் கரீம் என்பவனுக்கு கொடுத்துவிடும்படி வசீயத்துச்செய்திருந்தால் அந்தவசீயத்தை அடைந்தவன் சொத்துமுழுவதும் பெற்றுக்கொள்ள வாரிசாய் விடுவான் அப்படி சொத்து முழுவதுக்கு வசீயத்து செய்யாமல் சொத்தைப்பார்க்கிலும் கொஞ்சம் குறைவாக வசீயத்து செய்திருந்தால் அவ்வசீயத்தின்படி அவனுக்கு சொத்து கொடுத்துவிட்டு மீதசொத்தை பைத்துல்மாலில் சேர்த்து விடவேண்டும். பின்னும் முகிர்லஹூ பின் நசபி அலல்கைரியில்லாமல் போனால் இறந்தவனுடைய சொத்து சம்பூர்ண உயிலாளிக்கு சேரும்.

4-வதுவகை பைத்துல் மாலாக இருக்கிறது பைத்துல்மால் என்பது எதென்றால் இதோ இஸ்லாம் இராஜாவின் கஜானாவாயிருக்கிறது இதில் பகுதிபணம் முதலானவைகள் சேர்க்கப்படுகின்றன ஆகையால் எப்போது மய்யத்துடைய சமீபவாரிசுகளிலாவது அல்லது பந்தத்துவமுள்ள தூரவாரிசுகளிலாவது ஒருவனும் இல்லாமல்போனால் அப்போது ஹனபியா மஜ்ஹபுபடி மய்யத்துடைய எல்லா சொத்து மௌலல் மவாலாத்திக்கு கொடுக்கப்படும்.

பின்னும் மௌலல்மவாலாத்தி இல்லாவிட்டால் முகிர்லஹூ பின்நசபி அலல்கைரிக்கு கொடுக்கப்படும். பின்னும் முகிர்லஹூ பின் நசபி அலல்கைரியும் இல்லாவிட்டால் மய்யத்தின் எல்லா சொத்தும் மூசாலஹூ பிஜமீயில் மாலிக்கு கொடுக்கப்படும் அதாவது சம்பூர்ண உயிலாளிக்கு கொடுக்கப்படும் இவனும் இல்லாவிட்டால் மய்யத்தின் எல்லா சொத்தும் பைத்துல்மாலில் சேர்க்கப்படும் அப்படி சேர்த்துவிட்டதின்பின் அச்சொத்து இல்லாமலானவர்களுக்கு ஆண் பெண் என்கிற பேதமில்லாமல் அதிலிருந்து நன்றுண்டாக கொடுக்கப்படும்.

ஒத்

பின்னும் மய்யத்தின் சொத்தையடைய மய்யத்துக்கு பந்தத்துவமுள்ள சமீபவாரிசுகளிலாவது அல்லது பந்தத்துவமுள்ள தூரவாரிசுகளிலாவது ஒருவனும் இல்லாமல் போனாலுங்கூட மேல்கண்ட பந்தத்துவமில்லாத தூரவாரிசுகளாகிய மௌலல் மவாலாத்திக்காவது முகிர்லஹூபின் நசபி அலல்கைரிக்காவது மூசாலஹூ பிஜமீயில் மாலிக்காவது தாயபாகம் கிடையாது என்றும் இவர்கள் மய்யத்துக்கு வாரிசுகளாக மாட்டார்களென்றும் ஷாபியா மஜ்ஹபில் கண்டிருக்கிறது பின்னும் ஷெக்கு இஜ்மாத்தின் பின் அப்துல்லாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லுகிறதாவது அதிகாரியானவன் மேல்கண்ட வாரிசில்லா மய்யத்தின் சொத்தை முஸ்லிமீன்களுடைய நன்மையில் செலவழியாமல் போனால் அப்போது எவனால் கூடுமோ அவன் அச்சொத்தை வாங்கி முஸ்லிமீன்களுடைய நன்மைகளில் செலவழிக்கவேண்டும் அதனால் அவன் சவாப் அடைவான்.

பின்னும் பதி அல்லது பத்தினியின்பேரில் ரத்துகிடையாது அதாவது தாயத்திரும்பல் கிடையாது என்று முற்காலத்து உலமாக்களின் கௌலாயிருக்கிறது இதுசரியே ஆனால் முற்காலத்திலோ பைத்துல்மாலுடைய பங்கீதாயஸ்து சேர்ந்திருக்குமாகையால் மீதத்தை பதி அல்லது பத்தினியின்பேரில் ரத்துசெய்யாமல் பைத்துல்மாலில் சேர்த்தார்கள் இக்காலத்திலோ பைத்துல்மால் இல்லவேயில்லை அப்படியிருந்தாலும் அது சீரானதாயில்லாமலும் அதின் செலவுகள் வீணானதாகவுமிருக்கிறபடியால் ரத்துபெற்றுக்கொள்ளத்தக்க வாரிசுகள் இல்லாமல் போயிருக்கும்பக்ஷத்தில் மீதத்தை பைத்துல்மாலில் சேர்க்காமல் பதி அல்லது பதனிக்கு ரத்துசெய்யப்படவேண்டுமென்று பிற்காலத்து உலமாக்களின் கௌலாயிருக்கிறது.

பின்னும் இறந்தவனுக்கு பங்குக்காரர்களாவது, மிகுதிக்காரர்களாவது பந்தத்துவமுள்ள தூரபந்துக்களாவது, மௌலல்மவாலாத்தியாவது, முகிர்லஹூபின்னசபி அலல்கைரியாவது, சம்பூர்ண உயிலாளியாவது, - இல்லாமலும் பைத்துல்மால் சீருமில்லாமலுமிருந்தால் அப்போது வாரிசுகளில்லாதவர்களாகிய ரசயீ புத்திரி அதாவது பால்குடிமகளான புத்திரியிருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள், புத்திரிகள், பின்னோதரிகள், இவர்கள் இருந்தாலும் அல்லது வெடி எஜமானனுடைய தூரபந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறது.

10-வது கண்டம்.

சகீபவாரிசுகளின் பாகங்கள் குர்ஆனெஷரீப்பின் மூலமாய் அல்லாஹுத்தஆலாவால் தீர்மானிக்கப்பட்டிருப்பதின் பயானும், சகீபவாரிசுகளாகிய 25-பேர்களில் ஒவ்வொருவருக்கு எத்தனை வகைகள் உண்டென்பதற்குள்ள பயானும், அஸ்ஹாபே பறுயலின் பங்குகள் 6-வகைகளாக இருக்கின்றன.

1-வது வகை 2-ல் 1. அதாவது அரை, 2-வது வகை 4-ல் 1. அதாவது கால், 3-வது வகை 8-ல் 1. அதாவது அரைக்கால் 4-வது வகை 3-ல் 2. 5-வது வகை 3-ல் 1. 6-வது வகை 6-ல் 1. இந்த பாகங்களை அடைகிறவர்களுக்கு அஸ்ஹாபேபறுயலென்ற கிரயபாகஸ்தர்களென்றும், அல்லது பங்குக்காரர்களென்றும் சொல்லப்படும், இவர்கள் ஆணும் பெண்ணுமாக 12-பேர்களாயிருக்கிறார்கள், இவர்களைப்பற்றி 3-வது கண்டத்தில் சொல்லிவிட்டேன், ஆனால் இப்போது 25 அத்தியாயங்களில் கண்ட தகப்பன் முதலானவர்களுக்கு குர்ஆன் மூலமாய் கிடைத்த பாகங்களை ஆதாரங்களுடன் எழுதுகிறேன்.

1-வது தகப்பன் இவனுக்கு 3-விதமுண்டு.

1-வது பறுலுமாத்திரம் கிடைக்கும்விதம்

அதாவது 6-ல் 1.

மய்யத்துக்கு ஆண்குழந்தை, அல்லது ஆண்குழந்தையின் ஆண்குழந்தை இந்த வழியில் எவ்வளவு கீழ்போனாலும் சரி, அதாவது புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன் பிரபிரபவுத்திரன் இவ்விதமாகவே ஆண்கீழ் சந்ததியார். இவர்களில் ஒருவனாவது பலர்களாவது இருந்தால் பிதாவுக்கு 6-ல் 1. இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது, வலிஅபவைஹி லிகுல்லி வாஹிதின் மின்ஹுமுஸ்ஸுதுஸு மிம்மாதரக இன்கானலஹுவலதுன், மய்யத்துக்கு பிள்ளையிருந்து அவன் விட்டுவிட்டு இறந்துபோன சொத்தில் அவனுடைய தாய்தகப்பன் ஒவ்வொருவருக்கும் 6-ல் 1. பாகம் கிடைக்கும் உதாரணம்,

மய்யத்து கரீம்; மஸ்அலா 6.

பிதா	புத்திரன்
6-ல் 1	மீதம்
5	1

2-வது பறுலும், தாசீபும் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு ஆண்குழந்தை, அல்லது ஆண்குழந்தையின் ஆண்குழந்தை இந்த வழியில் மேற்சொன்னபடி எவ்வளவு கீழ்போனாலும் சரி, இவர்களில் எவனாவது இல்லாதிருந்து மய்யத்துக்கு பெண்குழந்தை, அல்லது மய்யத்தின் ஆண்குழந்தையுடைய பெண்குழந்தை, அதாவது பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி இந்த வழியில் எவ்வளவு கீழ்போனாலும் சரி, இவர்களில் எவளாவது இருந்தால் தகப்பனுக்கு பறுலான பங்காகிய 6-ல் 1. கொடுப்பதுமன்றி மற்ற வாரிசுகளுக்கு பறுலான பங்கு கொடுத்துவிட்டதுபோக பாக்கியிருக்கும் மீதமுழுவதும் அசபத்தின் பாத்தியதைக்கொண்டு தகப்பனுக்கு கொடுக்கப்படும், இவ்விஷயத்தில் சர்வேர்காயினாத்து ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லம் அவர்கள் திருவாய்மலர்ந்தினதாவது, அல்ஹிகுல் பறுயல பி அஹ்லிஹா பமா அப்கத் ஹுபஹுவ லிஅவ்லா றஜுலின் தகரின். மஅனா பாகமுக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய பங்குகள் கொடுத்துவிட்டதின்பின் மீதத்தை ஆண்களில் முக்கியமானவனுக்குகொடுக்கவேண்டும். உதாரணங்கள் 2.

மய்யத்து சைது, மஸ்அலா 6.

	பிதா	புத்திரி
	6-ல் 1.	½
	1	3
	2	0
ஆக	3	3

மய்யத்து சைது, மஸ்அலா 6.

	பிதா	மாதா	புத்திரி
	6-ல் 1.	6-ல் 1..	½
	1	1	3
	1	0	0
ஆக	2	1	3

3-வது தாசீபு மாத்திரம் கிடைக்கும் விதம்

அதாவது மீதசொத்து.

மய்யத்துக்கு ஆண்குழந்தை, அல்லது பெண்குழந்தை, அல்லது ஆண்குழந்தையின் ஆண்குழந்தை, அல்லது ஆண் குழந்தையின் பெண்குழந்தை, அல்லது பிரபிரபவுத்திரன், அல்லது பிரபிரபவுத்திரி

இந்த வழியில் எவ்வளவு கீழ்போனாலும் சரி. மேற்சொன்னவர்களில் ஒருவருமில்லாதிருந்து மய்யத்துக்கு புருஷன், அல்லது பெண்சாதியிருந்தாலும், அல்லது மய்யத்தின் தாய், அல்லது மாதாமஹி இந்த வழியில் எவ்வளவு மேற்போனாலும் சரி. இவர்களில் யாராவது இருந்தாலும் அப்போது இவர்களுக்கு பாகுபோக மீதமுழுவதும் தகப்பனுக்குகொடுக்கப்படும், அதாவது மீதிசொத்தில் 3-ல் 2. இவ்விஷயத்தில் குறாஆன் ஷரீபின் ஆயத்தாவது, பயின்லம் யகுன்லஹு வலதுன்வ வரிஸஹு அப்வாஹு பலிஉம்மிஹிஸ்ஸுலுஸு, மஃனா அவனுக்கு அதாவது மய்யத்துக்கு சந்ததியில்லாமற்போனால் மய்யத்தின் வாரிசுகள் பிதாவும், மாதாவுந்தான் அப்போது மய்யத்தின் தாய்க்கு 3-ல் 1. பாகமுண்டு. உதாரணங்கள் 2.

மய்யத்து வலீது, மஸ்அலா 3.

பிதா	மாதா
மீதம்	3-ல் 1
2	1

மய்யத்து பகறு, மஸ்அலா 6.

பிதா	மாதா	பதி
மீதம்	3-ல் 1	½
2	1	3

4-வது எல்லாசொத்தும் கிடைக்கும் விதம்.

புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி இவர்களில் எவ்வளவு கீழ்போனாலும் சரி, பின்னும் புத்திரி, பதி, அல்லது பத்னி, மாதா, மாதாமஹி, இவர்களில் ஒருவருமில்லாதிருந்தால் அப்போது மய்யத்தின் சொத்து முழுவதும் பிதாவுக்கு கொடுக்கப்படும்.

5-வது பிதாவினால் 15-பேர்கள் மஃறூமாகும் விதம்.

1-வது பிதாமகன், 2-வது பிதாமஹி, 3-வது சகோதரன், 4-வது உடன்பிறந்தாள், 5-வது பின்னோதரன், 6-வது பின்னோதரி, 7-வது பின்னபிதுருகன், 8-வது பின்னபிதுருகி, 9-வது சகோதரன் மகன், 10-வது பின்னோதரன் மகன், 11-வது சிற்றப்பன், 12-வது பிதாவின் பின்னோதரன், 13-வது சிற்றப்பன் மகன், 14-வது பிதாவின் பின்னோதரன் மகன், 15-வது எஜமான், அல்லது எஜமானிச்சி இவர்களெல்லோரும் பிதா இருக்கும்போது மஃறூமாய்ப்போய்விடுகிறார்கள்.

6-வது ரத்து கிடையாத விதம்.

பிதாவோ மிருதிக்காரனாயிருந்து மய்யத்தின் மீதசொத்தை எல்லாம் பெற்றுக்கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருந்திருக்கிறதில்லை, மீருகிறதில்லை, ஆகையால் இவன் ரத்துப்பெற்றுக்கொள்ளுகிறவனாகிறதில்லை.

7-வது பிதா மஃறூமாகும் விதங்கள் 2.

இறந்தவனுடைய பிதா எந்த வாரிசாலும் மஃறூமாகிறதில்லை, ஆனால் 2-விஷயங்களில் மஃறூமாகிறான்.

1-வது. அடிமையை அடிமைத் தனத்திலிருந்து மீட்டின எஜமான் இறந்துபோனதின்பின் மீட்டப்பட்டவனும் இறந்துபோனான், இவனுக்கு ஜனிப்புருதாவது அசபத்தக்காரராவது, மீட்டின எஜமானும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனுடைய புத்திரனும், எஜமானனுடைய பிதாவும் இருந்திருப்பார்களானால் அப்போது பிதா மஃறூமாய்ப்போவான், ஏனெனில் அசபத்தக்காரர்களில் பிதாவோ புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன் இவர்களைவிடத் தாழ்ந்தவனாயிருக்கிறான்.

2-வது. பிதா ஷரஅப்படி அடிமையாய்ப்போயிருந்தாலும், அல்லது முர்த்தத்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிறாயிருந்தாலும், அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும், அல்லது அவனுக்கு விரோதமாய் வாரிசை கொலை செய்திருந்தாலும் மஃறூமாவான்.

8-வது சொத்தபாகத்தில் கூட்டாளியில்லை என்பதின் விதம்.

பிதாவின் எவ்விதபாகத்திலும் எவனும் கூட்டாளியில்லை, இவன் தனிமையாய் தன் பாகத்தையே பெற்றுக்கொள்ளத்தக்கவன்.

9-வது பிதாவுடன் சேர்ந்து 10-பேர் வாரிசாகும் விதம்.

1-வது மாதா, 2-வது மாதாமஹி, 3-வது புத்திரன், 4-வது புத்திரி, 5-வது பவுத்திரன், 6-வது பவுத்திரி, 7-வது பிரபவுத்திரன், 8-வது பிரபவுத்திரி, 9-வது பதி, 10-வது பத்னி.

2-வது பிதாமகன் இவனுக்கு 13 விதமுண்டு.

1-வது பறுலு கிடைக்கும் விதம் அதாவது 6-ல் 1.

மய்யத்தின் பிதா இல்லாதபோது இவன் ஸ்தானத்தில் மய்யத்தின் பிதாமகன் பிதாவுக்கு ஒப்பாக தாயபாகத்தை யடைகிறான் எப்படியென்றால் மய்யத்தின் புத்திரர்கள் பவுத்திரர்கள் இந்த வழியில் எவ்வளவு கீழ்ப்போனாலும் சரி இவர்களில் ஒருவனாவது பலர்களாவது இருந்தால் அப்போது பிதாமகனுக்கு 6-ல் 1. கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து ஜைது, மஸ்அலா 6.
பிதாமகன்...புத்திரன்
6-ல் 1.........மிகுதி
1 — 5

2-வது பறுலும் தாசிபும் கிடைக்கும்விதம்.

மய்யத்துக்கு ஆண்குழந்தை அல்லது ஆண்குழந்தையின் ஆண்குழந்தை இந்த வழியில் மேல் சொன்னபடி எவ்வளவு கீழ்போனாலும்சரி இவர்களில் எவனுமில்லாதிருந்து மய்யத்துக்கு பெண்குழந்தை, அல்லது மய்யத்தின் ஆண்குழந்தையின் பெண்குழந்தை அதாவது பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி, இந்த வழியில் எவ்வளவுகீழ் போனாலும்சரி இவர்களில் எவளாவது இருந்தால் அப்போது பிதாமகனுக்கு பாலான பங்காகிய 6-ல் 1. கொடுப்பதுமன்றி மற்ற வாரிசுகளுக்கு பாலான பங்கு கொடுத்து விட்டது போக பாக்கியிருக்கும் மீதம்முழுவதும் அசபத்தின் பாத்தியதைக்கொண்டு பிதாமகனுக்கு கொடுக்கவேண்டும். உதாரணம்.

மய்யத்து ஜைது, மஸ்அலா 6.
பிதாமகன்...புத்திரி
6-ல் 1....... ½
1 — 3
தாசிபு 2 — ..
ஆக 3 — 3

3-வது தாசிப்பு மாத்திரம் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு ஆண்குழந்தை அல்லது பெண்குழந்தை அல்லது ஆண்குழந்தையின் ஆண்குழந்தை அல்லது ஆண்குழந்தையின் பெண்குழந்தை அல்லது பிரபிரபவுத்திரன் அல்லது பிரபிரபவுத்திரி இந்தவழியில் எவ்வளவு கீழ்போனாலும்சரி இவர்களில் ஒருவரும் இல்லாதிருந்து மய்யத்துக்கு புருஷன் அல்லது பெண்ஜாதி இருந்தாலும் அல்லது மய்யத்தின் தாய் அல்லது மாதாமகி இந்தவழியில் எவ்வளவுமேல்போனாலும்சரி இவர்களில் எவளாவது இருந்தாலும் அப்போது இவர்களுக்கு பாலான பங்கு கொடுத்துவிட்டது போக மீதமிருக்கும் முழுவதும் அசபத்தின் பாத்தியதைக்கொண்டு பிதாமகனுக்கு கொடுக்கப்படும். உதாரணங்கள் 2

மய்யத்து ஜைது, மஸ்அலா 6.
பிதாமகன்..மாதா..பதி
மிகுதி....3-ல் 1......½
2 — 1 — 3

மய்யத்து ஜைது, மஸ்அலா 4.
பிதாமகன்...பத்னி
மிகுதி....... ¼
3 — 1

4-வது எல்லா சொத்தும் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு பறுலுக்காரர்களும் அசபத்துக்காரர்களும், அதாவது புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிதா, பிதாமகன், சகோதரன், பின்னேதரன், புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, மாதா, பிதாமகி, மாதாமகி, பதி, அல்லது பத்னி இவர்கள் இல்லாதிருந்து பிதாமகன் மாத்திரம் இருந்தால் அப்போது மய்யத்தின் சொத்து முழுவதும் பிதாமகனுக்கு கொடுக்கப்படும்.

5-வது பறுலுக்காரர் இல்லாதபோது மகாசிமா கிடைக்கும் விதம்.

இறந்தபோனவனுடைய பிதாமகனுடன் புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன் இவர்களும் பறுலுக்காரர்களும் இல்லாதிருந்து சகோதரர்களாவது, சகோதரிகளாவது, அல்லது பின்னேதரர்களாவது பின்னேதரிகளாவது இவர்களில் ஒருவராவது பலர்களாவது இருந்தால் அப்போது மய்யத்தின்பிதாமகனுக்கு பலத்தடவைகளில் மொத்தச்சொத்தில் 3-ல் 1-பாகம் கொடுக்கப்படும், அல்லது மகாசிமா செய்து

கொடுக்கப்படும்; அதாவது பாகித்துக்கொடுக்கப்படும், பின்னும் இவ்விரண்டுவகையில் எந்த வகைப்படி பிதாமகனுக்கு பாகித்துக்கொடுத்தால் பங்கு ஜாஸ்தி வருமோ அதை அவனுக்கு கொடுக்கவேண்டும். 1. பின்னும் மகாசிமா என்பது ஒரேகுல பிதாமகனுடன் சகோதரனாவது, பின்னோரானாவது, இருந்தால் ஒரு சகோதரனுக்கு கிடைக்கும் பாகத்துக்கு சரியாக பிதா மகனுக்கு பாகம் பிரித்துக் கொடுக்கவேண்டும். பின்னும் பிதாமகனுடன் சகோதரிகளாவது, பின்னோரிகளாவது இருந்தால் அப்போது 2-சகோதரிகளுக்கு கிடைக்கும் பாகத்துக்கு சரியாக பிதாமகனுக்கு பாகம் பிரித்து கொடுக்கவேண்டும். இப்படி பாகித்துக்கொடுப்பதற்குத்தான் மகாசிமா என்னு பேர். பின்னும் இமாம் அபூஹனீபா றஹ்மத்துல்லாஹி அலைஹி இடத்தில் மய்யத்தின் சகோதரர்களும், சகோதரிகளும் இருந்தபோதிலும் மய்யத்தின் பிதாமகனுக்கு எல்லா சொத்தும் கொடுக்கப்படும்; சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஒன்றும் கிடையாது.

3-ல் 1-க்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3. தஸ்ஹீஹ் 9

பிதாமகன். சகோதரன், சகோதரன், சகோதரன்

3-ல் 1. மிகுதி

மஸ்அலா 1 ——— 2

தஸ்ஹீஹ் 3 — 2 — 2 — 2

மகாசிமாவின் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 2.

பிதாமகன்...சகோதரன்

½...............½

1 ——— 1

3-ல் 2-ன் உதாரணம்.

மய்யத்து சைது. மஸ்அலா 3.

பிதாமகன்...சகோதரி அல்லது பின்னோதரி

3-ல் 2......... 3-ல் 1.

2 ——— 1

6-வது பறுயனுக்காரர் இருக்கும்போது மகாசிமா கிடைக்கும் விதம்.

இறந்துபோனவனுடைய பிதாமகனுடன் புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன் இவர்கள் இல்லாதிருந்து பறுயனுக்காரர்களுடனே சகோ

தார்களாவது, பின்னோதார்களாவது, சகோதரிகளாவது, பின்னோதரிகளாவது இருந்தால் அப்போது பிதாமகனுக்கு பலதடவைகளில் மொத்தசொத்தில் 6-ல் 1-பங்கு கொடுக்கப்படும், அல்லது பறுயனுக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய பங்குகள் கொடுத்துவிட்டு மீதமிருக்கும் சொத்தில் 3-ல் 1-பங்கு கொடுக்கப்படும், அல்லது பாறுக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய பங்கு கொடுத்துவிட்டு மீதமிருப்பதில் பிதாமகனுக்கு மகாசிமா கொடுக்கப்படும், அதாவது பாகித்து கொடுக்கப்படும், இம்மூவ்வகையில் பிதாமகனுக்கு எந்த பாகம் கொடுத்தால் பங்கு ஜாஸ்தி வருமோ அதைக் கொடுக்கவேண்டும், அதாவது 6-ல் 1. கொடுத்தால் பங்கு அதிகம் வரும் விஷயத்தில் 6-ல் 1. கொடுக்கவேண்டும், அல்லது 3-ல் 1. கொடுக்கும் விஷயத்தில் பங்கு அதிகம் வருமாகில் அப்படிக்கு 3-ல் 1. கொடுக்கவேண்டும், அல்லது மகாசிமா கொடுக்கும் விஷயத்தில் பங்கு அதிகம் வருமாகில் அப்படிக்கு மகாசிமா செய்து கொடுக்கவேண்டும். உதாரணம்.

மொத்தத்தில் 6-ல் 1-க்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6 தஸ்ஹீஹ் 18.

பிதாமகன்....புத்ரி....புத்ரி...சகோதரன்...சகோதரி

6-ல் 1 ....3-ல் 2.....................மிகுதி

மஸ்அலா 1 —— 4 —— 1

தஸ்ஹீஹ் 3 —— 6 —— 6 —— 2 —— 1

பாறுக்குப்பின் 3-ல் 1-க்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6. தஸ்ஹீஹ் 18.

பிதாமகன்......மாதாமகி......சகோதரன்2......சகோதரி

3-ல் 1..........6-ல் 1..........மிகுதி............மிகுதி

மஸ்அலா ,, —— 1 —— 5

தஸ்ஹீஹ் 5 —— 3 —— 8 —— 2

மகாசிமா பாறுக்குபின் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 4.

பிதாமகன்...பதி...சகோதரன்...அல்லது.பின்னோதரன்

மகாசிமா.....½.....மகாசிமா

1 — 2 — 1

7-வது பிதாமகனுக்கு நஷ்டத்தை உண்டாக்கும் விதம்.

பிதாமகனுடன் சகோதரனும், பின்ஜோதரனும் சேர்ந்துவந்தால் பின்ஜோதரனுக்கு பாகம் கிடையாது, ஏனெனில் சகோதரனிருக்க பின்ஜோதரனுக்கு பாகமில்லை, இப்படியிருந்தபோதிலும் பிதாமகனுடைய பாகம் குறைப்படவேண்டியதற்காக பின்ஜோதரனையும் சேர்த்து பாகித்து பிதாமகனுக்கு பாகம் கொடுக்கவேண்டும், இப்படி பாகித்து கொடுத்துவிட்டதின்பின் மேஷ்படி பின்ஜோதரனுடைய பாகத்தைச் சகோதரனுக்கு கொடுத்துவிட்டு பின்ஜோதரனை மஹ்ரூமாக்கி விடவேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 18.

பிதாமகன்	மாதாமகி	சகோதரன்	பின்ஜோதரன்
நஷ்டம்	6-ல்1	மிகுதி	மஹ்ரூம்
5	3	5	5
5	3	10	மஹ்ரூம்

8-வது மஹ்ரூமாகும் விதம் 3.

1-வது. பிதா இருக்கும்போது பிதாமகன் மஹ்ரூமாகிறான்.

2-வது. அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டவனுக்கு ஜவில் புருகாவது, அசபத்துக்காரராவது இல்லாதிருந்து அவன் தன் எஜமானுடைய பிதாமகனையும், எஜமானுடைய புத்திரனையும்விட்டு இறந்துபோயிருந்தால் அப்போது எல்லா சொத்தும் எஜமானுடைய புத்திரனுக்கு கிடைக்குமே யல்லாது எஜமானுடைய பிதாமகனுக்கு கிடைக்கமாட்டாது, ஏனெனில் மிகுதிக்காரர்களில் பிதாமகனைவிட புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், இவர்கள் மேலானவர்களாயிருக்கிறார்கள்.

3-வது. ஷரப்படி அடிமையாய் போயிருந்தாலும், அல்லது முர்தத்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தாருல்ஹறாபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும், அல்லது ஷரவுக்கு விரோதமாய் வாரிசை கொலை செய்திருந்தாலும் மஹ்ரூமாவான்.

9-வது பாதி, அல்லது முழுசொத்து கிடைக்கும்விதம்.

அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு இறந்துபோனவன் தன் எஜமானுடைய பிதாமகனையும், எஜமானுடைய சகோதரனையும் விட்டுவிட்டு இறந்துபோயிருந்தால் அப்போது எல்லாசொத்தும் பிதாமகனுக்கே சேரும் சகோதரனுக்கு கிடைக்கமாட்டாது, இவ்விதமாகவே அபூஹனீபா என்ற இமாமே ஆசம் றஹ்மதுல்லாஹி அலைஹியவர்களுடைய கொள்கையிருக்கிறது. பின்னும் சாஹிபைனென்ற இமாம் முஹம்மது, இமாம் அபூயூசுப றஹ்மதுல்லாஹி இடத்தில் பேர்பாதி பிதாமகனுக்கும் பேர்பாதி சகோதரனுக்கும் கிடைக்கும்.

10-வது பிதாமகனால் 10-பேர் மஹ்ரூமாகும் விதம்.

1-வது பின்னபிதாருகி, 2-வது பின்னபிதாருகன், 3-வது சகோதரன்மகன், 4-வது பின்ஜோதரன்மகன், 5-வது சிற்றப்பன், 6-வது பிதாவின் பின்ஜோதரன், 7-வது சிற்றப்பன்மகன், 8-வது பிதாவின் பின்ஜோதரன்மகன், 9-வது எஜமான், 10-வது எஜமானிச்சி இந்த 10-பேர்கள் பிதாமகன் இருக்கும்போது மஹ்ரூமாய் விடுகிறார்கள்.

11-வது ரத்து கிடையாத விதம்.

பிதாமகனே மிகுதிக்காரனாயிருந்து மய்யத்தின் மீதிசொத்தை எல்லாம் பெற்றுக்கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருக்கிருக்கிறதில்லை, மீறுகிறதில்லை, ஆகையால் இவன் ரத்து பெற்றுக்கொள்ளுகிறவனாகிறதில்லை.

12-வது பிதாமகனுடன் சேர்ந்து 15-பேர் வாரிசாகும் விதம்.

1-வது மாதா, 2-வது மாதாமகி, 3-வது பிதாமகி, 4-வது புத்திரன், 5-வது புத்திரி, 6-வது பவுத்திரன், 7-வது பவுத்திரி, 8-வது பிரபவுத்திரன், 9-வது பிரபவுத்திரி, 10-வது சகோதரன், 11-வது சகோதரி, 12-வது பின்ஜோதரன், 13-வது பின்ஜோதரி, 14-வது பதி, 15-வது பத்னி.

13-வது கூட்டாளியில்லை என்பதின் விதம்.

பிதாமகனுடைய எவ்வித பாகத்திலும் எவனும் கூட்டாளியில்லை, இவன் தனிமையே தன் பாகத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கவன்.

3-வது மாதா, இவளுக்கு 9-விதமுண்டு

1-வது மொத்தசொத்தில் 6-ல் 1. கிடைக்கும் விதம்.

மாதாவுடன் புத்திரனாவது, புத்திரியாவது, பவுத்திரனாவது, பவுத்திரியாவது, பிரபவுத்திரனாவது, பிரபவுத்திரியாவது இந்த வழியில் எவ்வளவு கீழ்போனாலும் சரி, இவர்களில் ஒருவனாவது பலர்களாவது இருந்தால் அப்போது மய்யத்தின் தாய்க்கு 6-ல 1. கிடைக்கும், இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது வலிஅபவைஹி லிகுல்லிவாஹிதின் மின்ஹுமஸ்ஸுதுசு மிம்மாதரக இன்கானலஹூ வலதுன். மய்யத்துக்கு பிள்ளையிருந்து அவன் விட்டுவிட்டு இறந்துபோன சொத்தில் அவனுடைய தாய் தகப்பன் ஒவ்வொருவருக்கும் 6-ல் 1. பாகமுண்டு. உதாரணங்கள் 6.

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா...புத்திரன்
6-ல் 1...மிகுதி
1 — 5

மய்யத்து சைது, மஸ்அலா 6 ரத்து 4
மாதா...புத்திரி
6-ல் 1...½
1 — 3

மய்யத்து சைது, மஸ்அலா 6 தஸ்ஹீ 12
மாதா...புத்திரர்கள் 2.
6-ல் 1...மிகுதி
1 — 5
2 — 10

மய்யத்து சைது மஸ்அலா 6 தஸ்ஹீ 12
மாதா...புத்திரிகள் 2
6-ல் 1...3-ல 2
1 — 4
2 — 8

மய்யத்து சைது மஸ்அலா 6 தஸ்ஹீ 18
மாதா..புத்திரன்..புத்திரி
6-ல்1.........மிகுதி
1 —— 5
3 —— 10 — 5

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா, பிதா, புத்திரன்
6-ல்1. 6-ல்1...மீதம்
1 — 1 — 4

பின்னும் மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஷை தாயுடன் சகோதரர்கள், பின்னேகர்கள், பின்னேகரிகள், சகோதரிகள், பின்னபிதுருகான் இவர்களில் யாராவது இருபேர்களாயிருந்திருந்தாலும் அல்லது இருபேர்களுக்கு அதிகமானவர்களாயிருந்திருந்தாலும் அப்போது மய்யத்தின் தாய்க்கு 6-ல் 1. கிடைக்கும். இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது, பயின்கானலஹூ இஹ்வதுன் பலிஉம்மிஹிஸ்ஸுதுசு, மய்யத்துக்கு சகோதரர்கள் இருந்தால் அவனுடைய தாய்க்கு, அதாவது மய்யத்தின் தாய்க்கு 6-ல் 1-பாகமுண்டு. உதாரணங்கள் 4.

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா..சகோதரர்கள் 2.
6-ல் 1...மிகுதி
1 — 5

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா...சகோதரிகள் 2.
6-ல் 1...3-ல் 2
1 — 4

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா, சகோதரன், சகோதரி
6-ல் 1..........மிகுதி
1 —— 5

மய்யத்து சைது, மஸ்அலா 6. தஸ்ஹீ 36.
மாதா, சகோதரர்கள் 2, சகோதரிகள் 2
6-ல் 1..................மிகுதி
மஸ்அலா 1 —— 5
தஸ்ஹீ 6 —— 30

பின்னும் மேற்சொன்னபடிக்கு சகோதரர்கள், சகோதரிகள், பின்னேகர்கள், பின்னேகரிகள் பின்னபிதுருகாருடன் பதி, அல்லது பத்னி சேர்ந்திருந்தாலும் அப்போது மாதாவுக்கு மொத்தசொத்தில் 6-ல் 1. கிடைக்கும்.

1-வது மாதா 6-ல் 1. பதி, பின்னபிதுருகான், சகோதரன்
2-வது ஷை 6-ல் 1. ஷை......ஷை........சகோதரர்கள்
3-வது ஷை 6-ல் 1. ஷை......ஷை........சகோதரன்...சகோதரி
4-வது ஷை 6-ல் 1. ஷை......ஷை...............ஷை......சகோதரிகள்
5-வது ஷை 6-ல் 1. ஷை......ஷை.........சகோதரர்கள். சகோதரி
6-வது ஷை 6-ல் 1. ஷை......ஷை...............ஷை......சகோதரிகள்

2-வது மொத்தசொத்தில் 3-ல் 1. கிடைக்கும் விதம்.

மய்யத்தின் தாயுடன் சகோதரர்கள், சகோதரிகள், பின்னேகர்கள், பின்னேகரிகள், பின்னபிதுருகான், இவர்களில் யாராவது இருபேர்களாயிருக்காமல் ஒருவராயிருந்து இவர்களுடன் பிதாவாவது, புத்திரனாவது, புத்திரியாவது, பவுத்திரனாவது, பவுத்திரியாவது, பிரபவுத்திரனாவது, பிரபவுத்திரியாவது இல்லாதிருந்தால் அப்

போது தாய்க்கு மொத்தசொத்தில் 3-ல் 1-பாகம் கிடைக்கும். உதாரணங்கள் 2.

மய்யத்து — சைது, மஸ்அலா 3.
மாதா...சகோதரன்
3-ல் 1..மிகுதி
1 — 2

மய்யத்து — சைது, மஸ்அலா 3.
மாதா, பின்னோதரன்
3-ல் 1.......மிகுதி.
1 — 2

மய்யத்தின் தாயுடன் பதியாவது, பத்னியாவது மாத்திரமிருந்தால் அப்போது தாய்க்கு மொத்த சொத்தில் 3-ல் 1-பங்கு கொடுக்கப்படும், இதற்கு, பலிஉம்மிஹிஸ்சுலுச, என்றஆயத்தே தலீலாயிருக்கிறது.

மய்யத்து — சைது, மஸ்அலா 12 ரத்து 7
மாதா......பத்னி
3-ல் 1......4-ல் 1
4 — 3

மய்யத்தின் தாயுடன் ஒரு சகோதரனாவது, அல்லதுஒரு சகோதரியாவது, அல்லது ஒரு பின்னோதரனாவது, அல்லதுஒரு பின்னோதரியாவது, அல்லது ஒரு பின்னபிதுருகன், அல்லதுஒரு பின்னபிதுருகியாவது வந்தால் அப்போது மாதாவுக்கு மொத்த சொத்தில் 3-ல் 1. கிடைக்கும். பின்னும் இவர்களுடன் பதி, அல்லது பத்னி சேர்ந்துவந்தாலும் அப்போதும் மாதாவுக்கு மொத்த சொத்தில் 3-ல் 1. கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 6.
மாதா...சகோதரன்...பதி
3-ல் 1......மிகுதி... ½
2 — 1 — 3

மய்யத்தின் தாயுடன் பிதாவாவது, பிதாமகனாவது இருந்தபோதிலும் மாதாவுக்கு மொத்த சொத்தில் 3-ல் 1-பாகமுண்டு, உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 3.
மாதா......பிதா
3-ல் 1......மிகுதி
1 — 2

மய்யத்தின் மாதாவுடன் 1. சகோதரன்மகன் 2. பின்னோதரன்மகன், 3. சிற்றப்பன், 4. பின்னோதரசிற்றப்பன், 5. சிற்றப்பன்மகன் 6. பின்னோதர சிற்றப்பன்மகன், 7. எஜமான், அல்லது எஜமானிச்சி, இந்த 7-பேர்களில் ஒருவனாவது, பலர்களாவது வந்தபோதிலும் மாதாவுக்கு மொத்தசொத்தில் 3-ல் 1. பாகம் கிடைக்கும் பின்னும் இவர்களுடன் பதியாவது, பத்னியாவது சேர்ந்துவந்தாலும் அப்போதும் மாதாவுக்கு மொத்த சொத்தில் 3-ல் 1. கிடைக்கும்.

3-வது மீதசொத்தில் 3-ல் 1. கிடைக்கும் விதம்.

தாயுடன் புத்திரன், புத்திரி, பவுத்திரன், பவுத்திரி, பிரபவுத்திரன், பிரபவுத்திரி இவர்களில் ஒருவரும் இல்லாதிருந்து மேற்படி தாயுடன் பதியாவது, பத்னியாவது, பத்னிகளாவது இருந்து மய்யத்தின் பிதாவும் இருந்திருப்பானாகில் அப்போது மேற்படி பதி, அல்லது பத்னியுடைய பங்கை கொடுத்துவிட்டு மீதமிருக்கும் சொத்தில் 3-ல் 1 பங்கு மேற்படி மய்யத்தின் தாய்க்கு கொடுக்கவேண்டும், இவ்விஷயத்தில் அல்லாஹுதஆலா சொல்லுகிறதாவது, பயின்லம்யகுன் லஹூவலதுன் வ வரிசஹூ அபவாஹு பலிஉம்மிஹிஸ் சுலுச மஅனு, மய்யத்துக்கு சந்ததி இல்லாமல்போனால் மய்யத்தின் வாரிசுகள் பிதாவும், மாதாவும்தான். பின்னும் மய்யத்தின் தாய்க்கு 3-ல் 1 இருக்கிறது, இந்த ஏற்பாடு 2 மஸ்அலாக்களில் மாத்திரம் உண்டு. உதாரணங்கள் 2.

மய்யத்து — சைது, மஸ்அலா 6.
மாதா..பதி..பிதா
3-ல்1...½...3-ல்2
1 — 3 — 2

மய்யத்து — சைது, மஸ்அலா 12.
மாதா.....பத்னி....பிதா
3-ல் 1......¼.....3-ல் 2
3 — 3 — 6

4-வது தனிமையாய் ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மாதா மாத்திரம் இருந்து ஜவில்புருதுகளாவது அசபக்காரர்களாவது இல்லாதிருந்தால் அப்போது மாதாவுக்கு மேசா

வேண்டிய மொத்த சொத்தில் 3-ல் 1, பாகம் கொடுத்துவிட்டு மீதமிருப்பது பைத்துல் மாலுக்குப்போய்ச்சேரும் தவில் அர்ஹாமுக்கு கொடுக்கப்படமாட்டாது ஆனால் பைத்துல்மால் சிர்கேடாயிருந்தால் அப்போது ஷெ மீதம் இவள் பேரிலேயே றத்துசெய்யப்படும் இவ்விஷயத்தில் சொத்து முழுவதும் இவளுக்கே சேர்ந்துபோகும்.

பின்னும் மய்யத்தின் மாதாவுடன் பதி, அல்லது பத்னி, மாத்திரம் இருந்தால் அப்போது மாதாவுக்கு மொத்த சொத்தில் 3-ல் 1. கொடுத்து விடுவதும் தவிர பதி, அல்லது பத்னிக்கு கொடுக்கவேண்டிய பங்கும் கொடுத்துவிட்டு மீதம் மேல்கண்டபடி பைத்துல் மாலுக்குசேர்க்கப்படும் ஆனால் பைத்துல்மால் சிர்கேடாயிருந்தால் அப்போது ஷெ மீதி தாய்க்கு றத்துப்பண்ணப்படும் இப்படிகொடுப்பதுக்கு தஸ்ஹீஹ் இருப்பதென்றுபேர். உதாரணம்

மய்யத்து ஸைது, மஸ்அலா 6=2	மாதா		பதி
	3-ல் 1		½
மஸ்அலா	2	—	3
றத்து	1	—	,,
ஆக	3	—	3
சுருக்கம்	1	—	1

5-வது மாதா உடன் கூட்டாய் 6 பேர் றத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிருதிக்காரர்களும் ஜவில்புருலும் இல்லாதிருந்து பைத்துல்மாலும் சிர்கேடாயிருந்தால் அப்போது மாதா உடன் றத்துபெற்றுக் கொள்ளத்தக்கவர்கள் 6 பேர்களாயிருக்கிறார்கள் 1-வது புத்திரி, 2-வது பவுத்திரி, 3-வது சகோதரி, 4-வது பின்னேறுதரி, 5-வது பின்னமிஞுருகி, 6-வது பின்னமிஞுருகன், இந்த 6 பேர்களில் ஒருவராவது, பலராவது இருந்தால் அப்போது இவர்களுடன் மாதா தாயத்திருப்பதே தன்பாகப்படி பெற்றுக்கொள்வாள். உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 6. றத்து 4.	மாதா		புத்திரி
	6-ல் 1		½
	1	—	3

6-வது மாதாவினால் 2 பேர் மஹ்றூமாகும் விதம்.

1-வது பிதாமஹி, 2-வது மாதாமஹி, இவர்கள் மாதாவிருக்கும் போது மஹ்றூமாய் போகிறார்கள்.

7-வது மாதா மஹ்றூமாகும் விதம்.

1-வது மாதா ஷரப்படி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்த்தாய்ப்போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் அப்போது மஹ்றூமாவாள்.

2-வது அடிமை தனத்திலிருந்து மீட்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர் இருந்தாலும் இல்லாமல் போனாலும்கூட மாதாவுக்கு ஷெ மீட்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது ஏனெனில் எஜமானுடைய ஜவில்புருதான பெண்கள் மீட்கப்பட்டவனுடைய சொத்துக்கு வாரிசாகமாட்டார்கள்

8-வது மாதாவுடன் சேர்ந்து 24 பேர் வாரிசாகும் விதம்.

1-வது பிதா, 2-வது பிதாமகன், 3-வது புத்திரன், 4-வது புத்திரி, 5-வது பவுத்திரன், 6-வது பவுத்திரி, 7-வது பிரபவுத்திரன், 8-வது பிரபவுத்திரி, 9-வது சகோதரன், 10-வது சகோதரி, 11-வது பின்னேறுதரன், 12-வது பின்னேறுதரி, 13-வது பின்னமிஞுருகன், 14-வது பின்னமிஞுருகி, 15-வது சகோதரன் மகன், 16-வது பின்னேறுதரன் மகன், 17-வது சிற்றப்பன், 18-வது பின்னேறுதர சிற்றப்பன், 19-வது சிற்றப்பன் மகன். 20-வது பின்னேறுதர சிற்றப்பன் மகன், 21-வது பதி, 22-வது பத்னி, 23-வது எஜமான், 24-வது எஜமானிச்சி,

9-வது கூட்டாளியில்லை என்பதின் விதம்.

மாதாவின் எவ்விதபாகத்திலும் எவளும் கூட்டாளி இல்லை இவள் தனிமையோடுதன் பாகத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கவள்.

4-வது மாதாமகி இவளுக்கு 10-விதமுண்டு.

1-வது மொத்தசொத்தில் 6-ல் 1 கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு மாதா இல்லாதிருந்து மய்யத்தின் பிதா இருந்த போதிலும் மாதாமகிக்கு 6-ல் 1. பாகம் கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து சைது. மஸ்அலா 6.
மாதாமகி.புத்திரன்
6-ல் 1...மிகுதி
1 — 5

மய்யத்து சைது, மஸ்அலா 12.
பிதா.மாதாமகி.புத்திரன்.பதி
6-ல் 1.6-ல் 1...மிகுதி...¼
2 — 2 — 5 — 3

2-வது மாதாமகிக்கு சமபாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு மாதாமகியும், பிதாமகியும் இருபேர்களும் இருந்தால் அப்போது 6-ல் 1-ல் இருபேர்களும் சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும், பின்னும் பலபாட்டிகள் இருந்தாலும் இந்த 6-ல் 1-ல் எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும்.

3-வது மாதாமகியால் ஒருவரும் மஹ்ரூமாகாமல் போகும் விதம்.

மாதாமகியுடன் இறந்துபோனவனுடைய ஜவில் புருதாவது அசபத்துக்காரர்களாவது வந்தால் இவர்களில் ஒருவரும் மஹ்ரூமாக மாட்டார்கள்.

4-வது மாதாமகி மஹ்ரூமாகும் விதம்.

1-வது மய்யத்துக்கு மாதா யிருந்தால், மாதாமகி மஹ்ரூமாகிறாள். 2-வது சமீப மாதாமகி யிருக்கும்போது தூர மாதாமகிக்கு பாகம் கிடையாது, எப்படியென்றால் மாதாமகி யிருக்கும்போது மாதாமகியின் தாய்க்கு பாகம் கிடையாது. 3-வது அடிமைத்தனத்திலிருந்து மீழ்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில புருதாவது அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர் இருந்தாலும்,

இல்லாமற்போனாலும் கூட எஜமானுடைய பிதாமகிக்கு மீழ்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது. 4-வது ஷருயபடி அடிமையாய்போயிருந்தாலும், முர்திதாய்போயிருந்தாலும், காபிறாயிருந்தாலும், அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லது வாரிசை ஷருவுக்கு விரோதமாய் கொலைசெய்திருந்தாலும் மாதாமகி மஹ்ரூமாவாள்.

5-வது மாதாமகியுடன் சேர்ந்து வாரிசாகும் 26-பேர்களின் விதம்.

1-வது பிதா, 2-வது பிதாமகன், 3-வது பிதாமகி, 4-வது மாதாமகி, 5-வது புத்திரன், 6-வது புத்திரி, 7-வது பவுத்திரன், 8-வது பவுத்திரி, 9-வது பிரபவுத்திரன், 10-வது பிரபவுத்திரி, 11-வது சகோதரன், 12-வது சகோதரி, 13-வது பின்னோதரன், 14-வது பின்னோதரி, 15-வது பின்னபிதுருகன், 16-வது பின்னபிதுருகி, 17-வது சகோதரன்மகன், 18-வது பின்னோதரன்மகன், 19-வது சிற்றப்பன், 20-வது பின்னோதரசிற்றப்பன், 21-வது சிற்றப்பன் மகன், 22-வது பின்னோதர சிற்றப்பன்மகன், 23-வது பதி, 24-வது பத்னி, 25-வது எஜமான், 26-வது எஜமானிச்சி.

6-வது மாதாமகி மஹ்ரூமாகாமல் போகும்விதம்.

இறந்து போனவனுடைய மாதாவைத்தவிரமற்ற எவ்விதவாரிசு இருந்தபோதிலும் மாதாமகி மஹ்ரூமாகிறதில்லை.

7-வது ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிகுதிக்காரர்களும் மாதாவும் இருந்திராமல் பைத்துல்மாலும் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்துபெற்றுக்கொள்ளத்தக்க வாரிசுகளாகிய புத்திரி, பவுத்திரி, சகோதரி, பின்னோதரி, பின்ன பிதுருகி, பின்னபிதுருகன் இவர்களில் யாராவது இருந்தால் இவர்களுடன் கூட்டாய் மாதாமகி தன்பாகப்படி தாயத்திரும்பலை. பெற்றுக்கொள்வாள் பின்னும் அசபத்துக்கள் இருந்தபோதிலும் இவர்களுக்கு கொடாமலே ரத்து பெற்றுக்கொள்வாள். உதாரணம்.

மய்யத்து	சைகு; மஸ்அலா 6. ரத்தின மஸ்அலா 4.
	மாதாமகி..........புத்திரி
	6-ல் 1..........$\frac{1}{2}$
	1 —— 3

8-வது தனிமையாய் ரத்துபெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்துபோனவனுக்கு மாதாமகி மாத்திரம் இருக்க ஜவில்புருதாவது அசபத்துக்காரர்களாவது இல்லாதிருந்தால் அப்போது மாதாமகிக்கு சேரவேண்டிய 6-ல் 1. பாகம் மொத்தசொத்தில் கொடுத்து விட்டு மீதமிருப்பது பைத்துல்மாலுக்கு போய்ச்சேரும் ஜவில் அர்ஹாமுக்கு கொடுக்கப்படமாட்டாது ஆனால் பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ஷை. மீதம் இவள்பேரிலேயே ரத்து செய்யப்படும் இவ்விதமையத்தில் சொத்து முழுவதும் இவளுக்கே சேர்ந்துபோகும்.

பின்னும் மய்யத்தின் மாதாமகியுடன் பதி அல்லது பத்னி மாத்திரம் இருந்தால் அப்போது மாதாமகிக்கு மொத்த சொத்தில் 6-ல் 1 கொடுத்து விடுவதுந்தவிர பதி அல்லது பத்னிக்கு கொடுக்கவேண்டிய பங்கு கொடுத்து விட்டு மீதம் மேல்கண்டபடி பைத்துல்மாலுக்கு சேர்க்கப்படும், ஆனால் பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ஷை. மீதம் மாதாமகிக்கு ரத்துபண்ணப்படும் இப்படிக்கொடுப்பதற்கு தாயத்திருப்பல் என்றுபேர்.

9-வது மாதாமகியுடன் கூட்டாய் 6 பேர் ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிருதிக்காரர்களும் ஜவில்புருளும் இல்லாதிருந்து பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது மாதாமகியுடன் ரத்து பெற்றுக்கொள்ளத்தக்கவர்கள் 6 பேர்களாக யிருக்கிறார்கள் 1-வது புத்திரி 2-வது பவுத்திரி, 3-வது சகோதரி, 4-வது பின்ஜோதரி, 5-வது பின்னசிதருசி, 6-வது பின்ன சிதருசன், இந்த 6-பேர்களில் ஒருவராவது பலர்களாவது இருந்தால் அப்போது இவர்களுடன் மாதாமகி தாயத்திருப்பலே, தன்பாகப்படி பெற்றுக்கொள்வாள்,

எச்சரிக்கை.

பாட்டி என்பது மாதா பிதாக்களின் மாதாக்களாம்.

மாதாமகளின் மூலமில்லாமல்பிதாவின் கொடியிலுள்ள மாதாக்கள் எல்லாம் பிதாமகிகளாக இருக்கிறார்கள் பின்னும் மாதாவின் கொடியிலுள்ள எல்லாமாதாக்கள் மாதாமகிகளாக இருக்கிறார்கள் எப்படியென்றால்,

சஹீஹ் பிதாமகிகள்.

1. பிதாவின் மாதா
2. பிதாவின் பிதாவின் மாதா
3. பிதாவின் பிதாவின் பிதாவின் மாதா
4. பிதாவின் பிதாவின் பிதாவின் பிதாவின், மாதா
5. பிதாவின் மாதாவின் மாதா
6. பிதாவின் மாதாவின் மாதாவின் மாதா
7. பிதாவின் பிதாவின் மாதாவின் மாதா
8. பிதாவின் மாதாவின் மாதாவின் மாதாவின் மாதா
9. பிதாவின் பிதாவின் மாதாவின் மாதாவின் மாதா
10. பிதாவின் பிதாவின் பிதாவின் மாதாவின் மாதா

இப்படியே மேல் போனவர்கள்.

சஹீ மாதாமகிகள்.

1. மாதாவின் மாதா
2 மாதாவின் மாதாவின் மாதா
3. மாதாவின் மாதாவின் மாதாவின் மாதா
4. மாதாவின் மாதாவின் மாதாவின் மாதாவின் மாதா

இப்படியே மேல் போனவர்கள்.

இவர்கள் எல்லாம் ஜத்தீய சஹீயா என்ற கிரமமான பாட்டிகளாக இருக்கிறார்கள். பின்னும் இவர்கள் எல்லோரும் ஜவில்புருலு என்ற பங்குக்காரர்களாயிருக்கிறார்கள், பின்னும் இவர்களைத்தவிர ஜத்தீய பாசிதா என்ற கிரமமற்றபாட்டிகளும் இருக்கிறார்கள் இவர்களோ ஜவில்அர்ஹாமா யிருக்கிறார்களேயன்றி பங்குக்காரர்களாகமாட்டார்கள் இவர்களின் பாபம் ஜவில்அர்ஹாமின் சங்கதியில் அதாவது இப்புத்தகத்தின் 70, 71-வது பக்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

பொதுப்படையான பயான்.

10-வது ஒருமுறையுள்ள மாதாமகிக்கு ஒரு பாகமும் பலமுறையுள்ள மாதாமகிக்கு பலபாகங்களுமுண்டென்பதின் விதம்.

பாட்டி யென்பது பொதுவான பேராயிருக்கிறது அதாவது பிதாமகிக்கும் மாதாமகிக்கும் பாட்டியென்று சொல்லப்படும் சமவரிசையிலுள்ள பிதாமகிகளாவது மாதாமகிகளாவது எத்தனைபேர்கள் இருந்தாலும் அல்லது ஒரு முறையுள்ளவளாயிருந்தாலும் அல்லது பலமுறையுள்ளவளாயிருந்தாலும் 6-ல் 1-ல் எல்லோரும் சமபாகமாகவே பாகித்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாக சமபாகமாய் பாகித்துக்கொள்ள வேணுமென்று அபுயூசுப்பு றஹுமத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லுகிறார்கள்.

பின்னும் இவர்களிடத்தில் ஒருமுறையுள்ள பாட்டியும் பலமுறையுள்ள பாட்டியும் சமமாகவே இருக்கிறார்கள் இந்த 6-ல் 1-ல் எல்லோருக்கும் சமபாகம் கிடைக்கும் ஒருமுறையுள்ளவளுக்கு குறைந்தபாகமும் பல முறையுள்ளவளுக்கு அதிகபாகமும் கிடையாது இந்த கௌலின் பேரில்தான் பத்துவாயிருக்கிறது ஆனால் இமாம் முஹம்மது றஹுமத்துல்லாஹி அலைஹி அவர்களிடத்தில் ஒருமுறையுள்ளவளும், பலமுறையுள்ளவளும், சரிசமானமான பாகஸ்தராயிருப்பதில்லை. பின்னும் இவர்களிடத்தில் மேற்படி 6-ல் 1-ல் ஒருமுறையுள்ளவளுக்கு ஒரு பாகமும் இருமுறையுள்ளவளுக்கு 2-பாகமும் 3-முறையுள்ளவளுக்கு 3 பாகமும் கிடைக்கும் இவ்விதமாகவே எத்தனை முறைகள் அதிகமாயிருக்குமோ அத்தனை பாகங்கள் கிடைக்கும். பின்னும் சமவரிசையிலுள்ள ஒருமுறையான பாட்டியுடையவும் பலமுறையான பாட்டியுடையவும் உதாரணம். ஹிந்தா வென்ற பெயருள்ள ஒருவள் தன்னுடைய பவுத்திரனாகிய சைது, என்பவனுடன் தன்னுடைய பௌத்திரியாகிய சல்மா, என்பவளை விவாகம் செய்தாள் பின்னும் சாலிஹா, என்பவள் சைது, என்பவனுடைய மாதாமகியாயிருக்கிறாள் பின்னும் சைது, என்பவனுக்கும் சல்மா, என்பவளுக்கும் உமறு என்னும்பேருள்ள ஒரு குமாரன் பிறந்தான் இந்த உமறு என்பவனுக்கு மேற்படி ஹிந்தா என்பவள் இருமுறையான பாட்டியாயிருக்கிறாள் முதல்முறையானது ஹிந்தா என்பவள் மாதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள் இந்த முறையே மாதாமகியின் முறையாயிருக்கிறது. 2-வது முறையானது மேற்படி ஹிந்தா என்பவள் பிதாவின், பிதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது பிரபிதாமகியாயிருக்கிறாள் இந்த முறையே பிதாமகியின் முறையாயிருக்கிறது. பின்னும் சாலிஹா என்பவளோ மேற்படி உமறு என்பவனுக்கு ஒரே ஒரு முறையுள்ள பாட்டியாயிருக்கிறாள் எப்படி யென்றால் மேற்படி சாலிஹா என்பவள் மேற்படி உமறு என்பவனுடைய பிதாவின், மாதாவின், மாதாவா

யிருக்கிறாள் அதாவது பிதாவின் மாதாமகியாயிருக்கிறாள் ஆகையால் அபுயூசுப்பு றஹுமத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்படி மேற்படி ஹிந்தா என்பவளுக்கும் மேற்படி சாலிஹா என்பவளுக்கும் ஆக இந்த இருவருக்கும் உமறு என்பவன் மூலமாக 6-ல் 1-ல் சமபாகம் கிடைக்கும். பின்னும் இமாம் முஹம்மது றஹுமத்துல்லாஹி அலைஹி அவர்களின் சொல்படி உமறு என்பவனுடைய 6-ல் 1-ன் தரிக்காவில் 3 பாகங்கள் செய்து 2-பாகம் மேற்படி ஹிந்தா என்பவளுக்கும் ஒரு பாகம் மேற்படி சாலிஹா, என்பவளுக்கும் கொடுக்கப்படும். பின்னும் இதனைக் கண்மனதில் நன்றாய் பதியும்பொருட்டு ஒரு கொடியும் காட்டப்படுகிறது.


பிதாவின். மாதாவின். மாதா.
சாலிஹா
2-ம்முறை பிதாவின் பிதாவின் மாதா
ஹிந்தா
1.முறை மாதாவின். மாதாவின். மாதா
ஹாமிதா என்பவளோ ரஷீதின் பெண்சாதியும் சாலிஹாவின்மகளுமாயிருக்கிறாள்.
புத்திரன் ரஷீது பத்னி ஹாமிதா
புத்திரி சல்மா
சல்மா என்பவளோ சைதுடைய பெண்சாதியும் சல்மாவின்மகளுமாயிருக்கிறாள்
புத்திரன் சைது பத்னி சல்மா
புத்திரி சல்மா
இவன் சைதுடையவும் சல்மாவுடையவும் புத்திரன் மய்யத்து
புத்திரன் உமறு

ஹிந்தா, என்பவளோ உமருஎன்பவனுக்கு முதல்முறையில் மாதாமகியின் மாதாவாயிருக்கிறாள். அதாவது மாதாவின், மாதாவின், மாதா, பின்னும் 2-வது முறையில் உமரு என்பவனுக்கு பிதாமகியாயிருக்கிறாள் அதாவது பிதாவின், பிதாவின், மாதா, ஆக இந்த 2 முறை ஹிந்தா என்பவளுக்கு இருக்கிறது பின்னும் சாலிஹா என்பவளுக்கே ௸ உமரு என்பவனோடு ஒரே ஒரு முறையிருக்கிறது அதாவது உமருவின் பிதாவின் மாதாமகியாயிருக்கிறாள்.

பின்னும் இப்படியே சமவரிசையிலுள்ள ஒரு முறையான பாட்டியுடையவும் 3 முறையான பாட்டியுடையவும் உதாரணம், ௸ ஹிந்தா என்பவள் ௸ உமரு என்பவனுக்கு தன்னுடைய வேறொரு பௌத்திரியாகிய சோதா என்பவளை விவாகம்செய்தான் பின்னும் ௸ உமரு என்பவனுக்கு சோதா என்பவளால் காலிது என்னும்பெயருள்ள ஒரு புத்திரன் பிறந்தான் ஆகையால் ௸ ஹிந்தா என்பவள் ௸ காலிது என்பவனுக்கு 3 வகையான முறையுள்ளவளாகிறாள் முதல் முறையானது ௸ ஹிந்தா என்பவள், காலிது என்பவனுக்கு, மாதாவின், மாதாவின், மாதாவின், மாதாவாகிறாள் அதாவது. மாதாமகியின், மாதாமகியாகிறாள் 2-வது முறையானது ௸ ஹிந்தா என்பவள் ௸ காலிது என்பவனுக்கு பிதாவின், மாதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது பிதாமகியின், மாதாமகியாயிருக்கிறாள், 3-வது முறையானது ௸ ஹிந்தா, என்பவள் ௸ காலிது என்பவனுக்கு பிதாவின், பிதாவின், பிதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது பிதாமகியின், பிதாமகியாயிருக்கிறாள். பின்னும் ௸ சாலிஹா என்பவளோ ௸ காலிது, என்பவனுக்கு ஒரே ஒருவகையான முறையுள்ள பாட்டியாயிருக்கிறாள் எப்படியென்றால் ௸ சாலிஹா என்பவள் காலிது என்பவனுடைய பிதாவின், பிதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள், ஆகையால் இமாம் முகம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹிவர்களுடைய கௌலின்படி காலிது என்பவனுடைய 6-ல் 1-ன் தரிக்காவில் 4-பாகங்களாக்கி 3-பாகங்கள் ஹிந்தா என்பவளுக்கும் ஒரு பாகம் சாலிஹா என்பவளுக்கும் கொடுக்கப்படும் இமாம் அபுயூசுப்பு ரஹ்மத்துல்லாஹி அலைஹிவர்களின் கௌல்படி ஹிந்தாவுக்கும் சாலிஹாவுக்கும் ௸ 6-ல் 1-ல் சமபாகம் கொடுக்கப்படும். பின்னும் இந்த வக்கணை மனதில் நன்றாய் பதியும் பொருட்டு ஒரு கொடியும் எழுதப்படுகிறது.


பிதாவின் பிதாவின் மாதாவின் மாதா
சாலிஹா
3-ம்முறை பிதாவின் பிதாவின் பிதாவின் மாதா
ஹிந்தா
1-முறை மாதாவின் மாதாவின் மாதா
2-ம்முறை பிதாவின், மாதாவின் மாதாவின் மாதா.
ஹாபிஜா என்பவளோ ரஷீதின் பத்னியும் சாலிஹாவின் புத்திரியுமே
புத்திரன் ரஷீது
புத்திரி சலமா
புத்திரி ஹலீமா
சல்மா என்பவளோ சைதுடைய பத்னியும் சலமாவுடைய புத்திரியுமே
புத்திரன் சைது
புத்திரி சல்மா
புத்திரி சோதா
புத்திரன் உமரு
சோதா என்பவளோ உமருவுடைய பத்னியும் ஹலீமாவுடைய புத்திரியுமே
இவனே உமருவுடையவும் சோதாவுடையவும் புத்திரன் மய்யத்து.
புத்திரன் காலிது

வியாக்கியானம்.

ஹிந்தா என்பவள் முதல் முறையால் காலிது வென்பவனுக்கு மாதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது மாதாமகியின் மாதா, பின்னும் 2-வது முறையால் ஷெ ஹிந்தா என்பவள், ஷெ காலிது என்பவனுக்கு பிதாவின், மாதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது பிதாமகியின், மாதாமகியா யிருக்கிறாள். பின்னும் 3-வது முறையால் ஷெ ஹிந்தா என்பவள், காலிது என்பவனுக்கு, பிதாவின், பிதாவின், பிதாவின், மாதாவாயிருக்கிறாள் அதாவது பிரப்பிதாமகனின் மாதாவாயிருக்கிறாள். சாலிஹா என்பவளுக்கு ஷெ காலிது என்பவனோடு ஒரே ஒரு முறையிருக்கிறது அதாவது பிதாமகனுடையமாதாமகியாயிருக்கிறாள் எப்படியென்றால் பிதாவின், பிதாவின், மாதாவின், மாதாவாயிருக்கிறாள்.

5-வது பிதாமகி இவளுக்கு 8 விதமுண்டு.

1-வது மொத்தசொத்தில் 6-ல் 1. கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு மாதாவாவது, பிதாவாவது, அல்லாது இந்த இருவர்களாவது இல்லாமல் இருந்து பிதாமகி யிருப்பாளானால் அப்போது ஷெ மய்யத்தின் பிதாமகிக்கு 6-ல் 1. பாகம்கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 6.
பிதாமகி.......புத்திரன்
6-ல் 1........மிகுதி
1 —— 5

2-வது பிதாமகிக்கு சமபாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு பலபிதாமகிகளும், பல மாதாமகிகளும், இருந்தால் அப்போது இவள்பாகமாகிய 6-ல்1-ல், எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும்.

3-வது ஒருவரும் மஹ்றூமாகாமலிருக்கும் விதம்.

பிதாமகியுடன் இறந்தவனுடைய ஜவில்புறூதாவது அசபத்துக் காரர்களாவது வந்தால் இவர்களில் ஒருவரும்மஹ்றூமாகமாட்டார்கள்.

4-வது பிதாமகி மஹ்றூமாகும் விதம். 5

1-வது இறந்தவனுக்கு பிதாவிருக்கும்போதும், மாதா இருக்கும்போதும், பிதாமகி மஹ்றூமாகிறாள். 2-வது எவ்விதமாய் பிதாவிருக்கும்போது எல்லா பிதாமகிகள் மஹ்றூமாகிறார்களோ அத்தன்மையாக பிதாமகன் இருக்கும்போதுஎல்லா பிதாமகிகள் மஹ்றூமாகிறதில்லை ஆனால்பிதாமகனுடைய வரிசைக்கு மேலான வரிசையிலுள்ள பிதாமகிகள்மாத்திரம் மஹ்றூமாகிறார்களே ஒழிய அவனுடைய சமவரிசையிலுள்ளபிதாமகிகள் மஹ்றூமாகிறதில்லை ஆகையால் பிதாமகன் யிருக்கும்போது இவனுடைய தாய் மஹ்றூமாகிறாள் இவனுடைய பெண்ஜாதி மஹ்றூமாகிறதில்லை 3-வதுசமீப பிதாமகியிருக்கும்போது தூர பிதாமகிக்கு பாகம் கிடையாது எப்படியென்றால் பிதாமகியும் பிரப்பிதாமகியும் இருப்பார்களானால் அப்போது பிதாமகிக்கு பாகம்கிடைக்குமே யல்லாது பிரப்பிதாமகிக்கு பாகம் கிடைக்கமாட்டாது. 4-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புறூதாவது, அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கும் அசபத்துக்காரர்கள் இருந்திராமலும் போனாலும் கூட எஜமானுடைய பிதாமகிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது ஏனெனில் எஜமானுடைய ஜவில்புறூதின் பெண்கள் மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு வாரிசாகமாட்டார்கள் ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜயீ புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள், புத்திரிகள், பின்னோகரிகள், இவர்கள் இருந்தாலும், அல்லது எஜமானுடைய தூரபந்துகள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு பிதாமகி வாரிசாவாளே யன்றி வேறல்ல. 5-வது ஷறுப்படி அடிமையாய் போயிருந்தாலும், மூர்த்தாய் போயிருந்தாலும், காபிராயிருந்தாலும், அல்லது தாருல் ஹரபில் குடியிருக்கிறவளா யிருந்தாலும், அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் அப்போது பிதாமகி மஹ்றூமாய் போவாள்.

5-வது பிதாமகி மஹ்ருமாகாமல் போகும் விதம்.

இறந்துபோனவனுடைய பிதாவும் மாதாவும் தவிர மற்ற எவ்விதவாரிசுகள் இருந்தபோதிலும் பிதாமகி மஹ்ருமாகிறதில்லை.

6-வது பிதாமகியுடன் சேர்ந்து வாரிசாகும் 25 பேர்களின் விதம்.

1-வது பிதாமகன், 2-வது பிதாமகி, 3-வது மாதாமகி, 4-வது புத்திரன், 5-வதுபுத்திரி, 6-வதுபவுத்திரன், 7-வது பவுத்திரி, 8-வது பிரபவுத்திரன், 9-வது பிரபவுத்திரி, 10-வது சகோதரன், 11-வது சகோதரி, 12-வது பின்னோதரன், 13-வது பின்னோதரி, 14-வது பின்னபிதுருகன், 15-வது பின்னபிதுருகி, 16-வது சகோதரன்மகன் 17-வது பின்னோதரன் மகன், 18-வது சிற்றப்பன், 19-வது பின்னோதர சிற்றப்பன், 20-வது சிற்றப்பன் மகன், 21-வது பின்னோதர சிற்றப்பன் மகன், 22-வது பதி, 23-வது பத்னி. 24-வது எஜமான், 25-வது எஜமானிச்சி.

7-வது ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிகுதிக்காரர்களும் மாதாவும் தூரபந்துகளும் இருந்திராமல் பைத்துல்மாலும் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க வாரிசுகளாகிய புத்திரி, சகோதரி பின்னோதரி, பின்னபிதுருகன், பின்ன பிதுருகி இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்களுடன் கூட்டாய் பிதாமகி தன் பாகப்படி தாயத்திரும்பலே பெற்றுக்கொள்வாள், உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6. ரத்தின மஸ்அலா 4.
மாதா......................புத்திரி
6-ல் 1.................... $\frac{1}{2}$
1 ——— 3

8-வது கூட்டாய் பாகித்துக்கொள்வாள் என்பதின்விதம்.

பிதாமகிகள் பலர்களாயிருந்தாலும் அல்லது பிதாமகியும் மாதாமகியும் இருந்தாலும் அல்லது இவர்கள் பலர்களாயிருந்தாலும் 6-ல் 1-ல் கூட்டாய் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும்.

6-வது புத்திரன் இவனுக்கு 10 விதமுண்டு.

எச்சரிக்கை.

அசபத்துஎன்ற மிகுதிக்காரன் யாருக்குச்சொல்லப்படுகிறதென்றால் எவன் ஒருவன் மய்யத்துக்கு சமீபவாரிசாயிருந்து அவனுக்காக பங்கு ஏற்படாமலுமிருந்து பங்குக்காரர்களுக்கு பங்குகொடுத்து விட்டதின்பின் எது மீதமிருக்குமோ அதை அடையப்பட்டவனுக்கு அசபத்துக்காரர் என்றுபேர் பின்னும் ஆண் மிகுதிக்காரர்கள் மொத்தம் 16 பேர்களாக இருக்கிறார்கள் 1-வது பிதா, 2-வது பிதாமகன், 3-வது பிரப்பிதாமகன், 4-வது புத்திரன், 5-வது பவுத்திரன், 6-வது பிரப்பவுத்திரன், 7-வது சகோதரன், 8 வது பின்னோதரன், 9,வது சகோதரன் மகன், 10.வது பின்னோதரன் மகன், 11.வது சிற்றப்பன், 12.வது பின்னோதரசிற்றப்பன் 13-வது சிற்றப்பன் மகன், 14-வது பின்னோதர சிற்றப்பன் மகன் 15.வது எஜமான், 16.வது எஜமானிச்சி, இவர்களில் எல்லாம் முதன்மையான வாரிசு புத்திரன்தான்.

1-வது அசபத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பங்குக்காரர்கள் இருந்து ஏக புத்திரன் இருந்தால் அப்போது பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்துவிட்டதின் பின் மீதமிருக்கும் எல்லாசொத்தும் இவனே அடைவான்.

2-வது சமபாகம் பாகித்துக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு பலபுத்திரர்கள் இருந்து பங்குக்காரர்களுமிருந்தால் அப்போது பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்து விட்டதின் பின் மீதமிருக்கும் சொத்தை மேற்படி புத்திரர்கள் சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது. மஸ்அலா 24. தஸ்ஹீஹ் 48.
மாதா...பத்னி...புத்திரன..புத்திரன்
6-ல் 1...8-ல்-1..............மிகுதி
மஸ்அலா 4 — 3 ——— 17
தஸ்ஹீஹ் 8 — 6 — 17 — 17

3-வது 3-ல் 2. பாகம் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரன், அல்லது புத்திரனுடைய புத்திரி, அல்லது புத்திரிகள், இருந்தால் அப்போது ஒவ்வொரு புத்திரன், 2 பாகமாகவும் ஒவ்வொரு புத்திரி, ஒருபாகமாகவும் பாகித்துக்கொள்ளவேண்டும். உதாரணம்.

மய்யத்து ஷைகு, மஸ்அலா 6.
புத்திரன்.புத்திரன்.புத்திரி..புத்திரி
3ல் 2....3-ல் 2... 3-ல் 1...3-ல் 1
2 — 2 — 1 — 1

4-வது புத்திரர்களால் மஹ்ரூமாகும் விதங்கள் 2.

1-வது விதம் இறந்தவனுக்கு புத்திரன் இருந்தால் அப்போது பவுத்திரன் 1, பவுத்திரி 2, பிரபவுத்திரன் 3, பிரபவுத்திரி 4, சகோதரன் 5, உடன் பிறந்தாள் 6, பின்னோதரன் 7, பின்னோதரி 8, பின்ன பிதுருகன் 9, பின்னபிதுருகி 10, சகோதரன் மகன் 11, பின்னோதரன் மகன் 12, சிற்றப்பன் 13, பிதாவின் பின்னோதரன் 14, சிற்றப்பன் மகன், 15, பிதாவின் பின்னோதரன் மகன் 16, எஜமான் 17, எஜமானிச்சி 18. இந்த 18 பேர்கள் மஹ்ரூமாகிறார்கள் 2 வது விதம் மீள்க்கப்பட்டவனுக்கு ஜவில்புருதாவது அசத்துக்காரராவது இல்லாதிருந்து மீட்டின எஜமானும் இல்லாதிருந்து மீட்டின எஜமானுடைய புத்திரனும் பிதாவும் பிதாமகனுயிருந்தால் அப்போது மீட்டின எஜமானுடைய பிதாவுக்கும் பிதாமகனுக்கும் பாகம் கிடைக்க மாட்டாது இவர்கள் மஹ்ரூமாவார்கள் ஏனெனில் மீள்க்கப்பட்டவனுடைய சொத்தை எஜமானனே மிருதிக்காரரின் வகையாக அடைகிறான் இவ்வகைப்படி புத்திரனோ பிதாவையும் பிதாமகனையும்விட மேலான மிருதிக்காரனாயிருக்கிறான் ஆகையால் பிதாவும், பிதாமகனும், மஹ்ரூமாகிறார்கள்.

5-வது புத்திரர் மஹ்ரூமாகும் விதம்.

புத்திரனோ எவ்விதவாரிசானாலும் மஹ்ரூமாகிறதில்லை யானால் அடியில்கண்டவகையால்மஹ்ரூமாகிறான் அதாவது ஷறுப்படி அடிமையாய்ப்போயிருந்தாலும் முர்தித்தாய் போயிருந்தாலும் அல்லதுகாபிறாயிருந்தாலும் அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் மஹ்ரூமாவான்.

6-வது ரத்து கிடையாத விதம்.

புத்திரனோ மிருதிக்காரனாயிருந்து மய்யத்தின் மிகுசொத்தை எல்லாம் பெற்றுக்கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருந்திருக்கிறதில்லைஆகையால்இவன் ரத்து பெற்றுக்கொள்ளுகிறவனாகிறதில்லை.

7-வது புத்திரன் அல்லது புத்திரர்களுடன் சேர்ந்து 8 பேர்கள் வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதா, 2-வது மாதா, 3-வது பிதாமகன், 4-வது பிதாமகி, 5-வது மாதாமகி, 6-வது புத்திரி, 7-வது பதி, 8-வது பத்னி.

8-வது எல்லாசொத்தும் பெற்றுக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு பங்குக்காரர்களில் ஒருவரும் இல்லாதிருந்து ஏக புத்திரனே யிருந்தால் அப்போது மய்யத்தின் எல்லாசொத்தும் இவனுக்கே கொடுக்கப்படும் இவ்விதமாகவே அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின் எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு அதாவது மீட்டின் எஜமானுக்கு புத்திரன் இருந்தால் அப்போது எஜமானுடைய புத்திரன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லாசொத்தையும் இவன் அடைவான் ஒருவேளை மீட்டப்பட்டவனுடைய ஜவில்புருது இருந்து மிருதிக்காரர்கள் இல்லாதிருந்தால் அப்போது பங்குக்காரருடைய பங்குபோக மீதத்தை எஜமானுடைய புத்திரனே அடைவான்

9-வது புத்திரனுடன் யாரார் சேர்ந்து மிருதி அடைவார்களென்பதின் பயான்.

இறந்தவனுக்கு புத்திரர்களும் புத்திரிகளும் இருந்தால் அப்போது இவர்கள் எல்லோரும் சேர்ந்து மிருதியடைவார்கள்.

10-வது கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

புத்திரர்களும் புத்திரர்களும் இருந்தால் சமமாக பாகித்துக் கொள்ளவேணும் புத்திரர்களும் புத்திரிகளும் இருந்தால் 2 பங்கு ஒவ்வொரு புத்திரனும், ஒவ்வொருபங்கு ஒவ்வொரு புத்திரியுமாக பாகித்துக்கொள்ளவேணும்.

7-வது புத்திரிகள் இவர்களுக்கு 11 விதமுண்டு.

1-வது மொத்தசொத்தில் 2-ல் 1. பாகம் அடையும்விதம்.

மய்யத்துக்கு புத்திரன் இல்லாதிருந்தும்மற்ற 21 வாரிசுகள் இருந்தபோதிலும் ஏகபுத்திரிக்கு மொத்த சொத்தில் ½ பாகம் கிடைக்கும் இவ்விஷயத்தில் அல்லாஹுத் தஆலா சொல்லுகிறதாவது வயின்கானத் வாஹிததன் பலஹன் னிஸ்பு, மஅனா, இறந்தவனுக்கு ஏகபுத்திரியிருந்தால் அவளுக்காக அரை பாகமுண்டு. உதாரணம்.

மய்யத்து சைஅ, மஸ்அலா 6.
மாதா...புத்திரி...சகோதரி
6-ல் 1.......½......மிருதி
1 — 3 — 2

2-வது மொத்தசொத்தில் 3-ல் 2. கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரன் இல்லாதிருந்து மற்ற 24 வாரிசுகள் இருந்தபோதிலும் பலபுத்திரிகளுக்கு 3-ல் 2, பாகம் கிடைக்கும் இதை இவர்கள் எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும் இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது, வயின் குன்ன நிசாஅன் பௌகஸ்னதைனி பலஹுன்ன சுலுசாமாதரக மஅனா இறந்தவனுக்கு பலபுத்திரிகளிருந்தால் அவன் விட்டுவிட்டு போனசொத்தில் அவர்களுக்காக 3-ல் 2, உண்டு. உதாரணம்.

மய்யத்து சைஅ, மஸ்அலா 3.
புத்திரி, புத்திரி பிதாவின் சகோதரன்
3-ல் 2...........மிருதி
2 —— 1

3-வது எல்லாசொத்து கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு ஜவில்புருலு என்ற பங்குக்காரர்களும் அசபத்து என்ற மிருதிக்காரர்களும் இல்லாதிருந்து புத்திரிமாத்திரமிருந்தால் அப்போது இவளுக்கு எல்லாசொத்தும் கிடைக்கும்.

4-வது மிருதியில் 3-ல் 1, கிடைக்கும் விதம்.

இறந்துபோனவனுக்கு புத்திரன் இருந்தால் அப்போது புத்திரி அவனுடன் சேர்ந்து மிருதிக்காரியாய் விடுகிறாள் இப்படி மிருதிக்காரியாய் விடுவதினால் ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொரு புத்திரன் அடையும்பாகத்தில் அரைபாகம் மாத்திரம் கிடைக்கும் அதாவது ஒரு புத்திரனுக்கு 2-பாகமும் ஒரு புத்திரிக்கு 1-பாகமும் கிடைக்கும் இவ்விஷயத்தில் அல்லாஹுத் தஆலா சொல்லுகிறதாவது, யூசிக்குமுல்லாஹு பீ அவ்லாதிகும் லிஜ்ஜகரிமிஸ்லு ஹச்சில்உன் சயைனி, மஅனா உங்கள் அவ்லாதென்ற சந்ததிவிஷயத்தில் அல்லாஹுத் தஆலா செய்யும் வசீயத்தாவது 2 புத்திரிக்கு உண்டான பாகம் ஒரு புத்திரனுக்கு உண்டு. உதாரணம்.

மய்யத்து சைஅ, மஸ்அலா 3.
புத்திரன்...புத்திரி
3ல் 2........3-ல் 1
2 ------ 1

5-வது புத்திரியால் மஹ்றூமாகும் விதம்.

ஒரு புத்திரி யிருக்கும்போது பின்னபிதுருகனும், பின்னபிதுருகியும், மஹ்றூமாகிறார்கள் 2 புத்திரிகள் இருக்கும்போது பவுத்திரியும், பிரபவுத்திரியும், மஹ்றூமாகிறார்கள். ஆனால் பவுத்திரியுடன் பவுத்திரன், அல்லது பிரபவுத்திரன், இருந்துவிடும் பக்ஷத்தில் பவுத்திரி மஹ்றூமாகிறதில்லை பின்னும் பிரபவுத்திரியுடன் பிரபவுத்திரன் இருந்துவிடும் பக்ஷத்திலும் பிரபவுத்திரியும் மஹ்றூமாகிறதில்லை பின்னும் புத்திரியும் சகோதரியும் இருந்தால் அப்போது பின்னோதரனும், பின்னோதரியும், சகோதரன் மகனும், பின்னோதரன்மகனும் சிற்றப்பனும், பின்னோதர சிற்றப்பனும், சிற்றப்பன் மகனும், பின்னோதர சிற்றப்பன் மகனும், எஜமானும், எஜமானிச்சியும், மஹ்றூ

மாகிறார்கள் ஏனெனில் சொத்தில் மீதம் ஒன்றும் மீருகிறதில்லை ஆகையால்தான் மஹ்ருமாகிறார்களேயன்றி வேறில்லை. உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3. தஸ்ஹீ 9.
புத்திரி 2, பவுத்திரி, பிரபவுத்திரன்
3-ல் 2..........மிகுதி
மஸ்அலா 2 —— 1
தஸ்ஹீ 6 — 1 —— 2

6-வது புத்திரிகள் மஹ்ருமாகும் விதம்.

புத்திரிகள் எவ்வித வாரிசானாலும் மஹ்ருமாகிறதில்லை ஆனால் 2 விஷயங்களில் மஹ்ருமாகிறார்கள்.

1-வது அடிமை தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர்கள் இருந்தாலும் இல்லாமல்போனாலும் கூட எஜமானுடைய புத்திரிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜயீ புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள், புத்திரிகள், பின்னோதரிகள், இவர்கள் இருந்தாலும் அல்லது எஜமானுடைய தூரபந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவன் சொத்து எஜமானுடைய புத்திரிக்கு கிடைக்கும்.

2-வது ஷரூப்படி அடிமையாய் போயிருந்தாலும் முர்த்தத்தாய் போயிருந்தாலும் காபிறாயிருந்தாலும் அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லது வாரிசை ஷறுவுக்கு விரோதமாய் கொலைசெய்திருந்தாலும் புத்திரி மஹ்ருமாவாள்.

7-வது புத்திரியுடன் யாரார் சேர்ந்து மிகுதி அடைவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு புத்திரிகளும் புத்திரர்களும் இருந்தால் அப்போது இவர்கள் எல்லோரும் சேர்ந்து மிகுதியடைவார்கள்.

8-வது புத்திரியுடன் சேர்ந்துவரும் வாரிசுகளின் விதம்.

1-வது பிதா, 2-வது பிதாமகன், 3-வது மாதா, 4-வது மாதாமகி, 5-வது பிதாமகி, 6-வது புத்திரன், 7-வது புத்திரி, 8-வது பவுத்திரன், 9-வது பவுத்திரி, 10-வது பிரபவுத்திரன், 11-வது பிரபவுத்திரி, 12-வது சகோதரன், 13-வது சகோதரி, 14-வது பின்னோதரான் 15-வது பின்னோதரி, 16-வது சகோதரன் மகன், 17-வது பின்னோதரான் மகன், 18-வது சிற்றப்பன், 19-வது பின்னோதரா சிற்றப்பன், 20-வது சிற்றப்பன் மகன், 21-வது பின்னோதரா சிற்றப்பன் மகன், 22-வது பதி, 23-வது பத்னி, 24-வது எஜமான், 25-வது எஜமானிச்சி, இவர்கள் புத்திரி அல்லது புத்திரிகளுடன் வாரிசாகிறார்கள்.

9-வது ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிகுதிக்காரர்கள் இருந்திராமல் பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்துபெற்றுக்கொள்ளத்தக்க வாரிசுகளாகிய மாதா, மாதாமகி, பிதாமகி, பவுத்திரி, பிரபவுத்திரி இவர்களுடன் கூட்டாய் புத்திரி தாயத்திரும்பலே தன்பாகப்படி பெற்றுக்கொள்வாள் ஆனால் இவர்கள் வராமல் பதி அல்லது பத்னி மாத்திரம் வந்தால் அப்போது புத்திரி பூரா ரத்து அடைவாள் பின்னும் ஒரு புத்திரி யிருந்தால் பின்னயிதுருகளும் பின்னயிதுருகியும், பல புத்திரிகளிருந்தால் பின்னோதரியும், தாயபாகமாவது தாயத்திரும்பலாவது பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.

10-வது புத்திரியிருக்கும்போது யாரார் மிகுதிக்காரர்களாகிறார்கள் என்பதின் விதம்.

1-வது புத்திரன், பின்பு பவுத்திரன், பின்பு பிரபவுத்திரன், பின்பு பிதா, பின்பு பிதாமகன், பின்பு சகோதரன், பின்பு பின்னோதரான், பின்பு சகோதரன் மகன், பின்பு பின்னோதரான் மகன், பின்பு சிற்றப்பன், பின்பு பின்னோதரா சிற்றப்பன், பின்பு சிற்றப்பன் மகன், பின்பு பின்னோதரா சிற்றப்பன் மகன், பின்பு எஜமான். அல்லது எஜமானிச்சி.

11-வது கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

புத்திரிகளும் புத்திரிகளுமிருந்தால் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும். பின்பு புத்திரர்களும் புத்திரிகளும்

இருந்தால் அப்போது 2 பாகம் ஒவ்வொரு புத்திரனுக்கும் ஒவ்வொருபாகம் ஒவ்வொரு புத்திரிக்குமாக பாகித்துக்கொடுக்க வேண்டும்.

8-வது பவுத்திரன் இவனுக்கு 11 விதமுண்டு.

1-வது மிகுதிக்காரனாகும் விதம்.

இவனே மய்யத்தின் புத்திரனைப்போலவே மிகுதிக்காரனாயிருக்கிறான் பின்னும் இவன் புத்திரன்தானத்தில் இருக்கிறான் மய்யத்துக்கு புத்திரன் இல்லாதிருந்தால் அப்போது மிகுதிக்காரனாகிறான்.

2-வது சொத்துமுழுதும் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது புத்திரனாவது, பங்குக்காரர்களாவது இல்லாதிருந்தால் அப்போது சொத்து முழுமையும் அவனே அடைவான். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதும் மிகுதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரன் இல்லாதிருந்தால் அப்போது எஜமானுடைய பவுத்திரன் மிகுதிக்காரனாய் மீள்க்கப்பட்டவனுடைய எல்லாசொத்தையும் அடைவான் எஜமானுடையபிதாவாவது பிதாமகனாவது இருந்தபோதிலும் பவுத்திரனுக்கே சொத்து கிடைக்கும் பிதாவுக்காவது பிதாமகனுக்காவது சொத்து கிடைக்க மாட்டாது ஏனெனில் பவுத்திரன் மிகுதிக்காரர்களில் பிதாவையும் பிதாமகனையும்விட மேலானவனாயிருக்கிறான். பின்னும் ஒருவேளை மீட்டப்பட்டவனுடைய ஜவில்புருது இருந்து மிகுதிக்காரர்கள் இல்லாதிருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்குபோக மீதத்தை பவுத்திரன் அடைவான்.

3-வது மீதமுழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு புத்திரன் இல்லாதிருந்து பங்குக்காரர்கள் இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்துவிட்டு மீதமிருக்கும் முழுமையும் ஏகபவுத்திரன் அடைவான்.

4-வது சமபாகம் பாகித்துக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு புத்திரர் இல்லாதிருந்து பங்குக்காரர்களும் பல பவுத்திரர்களும் இருந்தால் அப்போது பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்து விட்டதின்பின் மீதமிருக்கும் சொத்தை [illegible] பவுத்திரர்கள் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும், உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 4.
பதி, பவுத்திரன், பவுத்திரன், பவுத்திரன்
¼.. சமபாகம்.... சமபாகம்... சமபாகம்
1 .— 1 —— 1 —— 1

5-வது மிகுதியில் 3-ல் 2. பாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரன் இல்லாதிருந்து பவுத்திரன் அல்லது பவுத்திரர்களுடன் பவுத்திரி அல்லது பவுத்திரிகளிருந்தால் அப்போது ஒவ்வொரு பவுத்திரனுக்கு 2 பாகமும் அதாவது 3-ல் 2ம் ஒவ்வொரு பவுத்திரிக்கு ஒவ்வொரு பாகமும் அதாவது 3-ல் 1-மாக கிடைக்கும், உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 4.
பவுத்திரன்...பவுத்திரி...பவுத்திரி
3-ல் 2........3 ல் 1......3-ல் 1
2 —— 1 —— 1

6-வது பவுத்திரர்களால் 16 பேர்கள் மஹ்ரூமாகும் விதம்.

1-வது இறந்தவனுக்கு பவுத்திரனிருந்தால் அப்போது பிரபவுத்திரன் 1. பிரபவுத்திரி 2, சகோதரன் 3, உடன்பிறந்தாள், 4 பின்னோதரன் 5. பின்னோதரி 6, பின்னபிறநகன் 7. பின்னபிறநகி 8. சகோதரன் மகன் 9. பின்னோதரன் மகன் 10. சிற்றப்பன் 11. பிதாவின் பின்னோதரன் 12.° சிற்றப்பன் மகன் 13. பிதாவின் பின்னோதரன் மகன் 14. எஜமான் 15, எஜமானிச்சி 16. இவர்கள் மஹ்ரூமாகிறார்கள். பின்னும் மீள்க்கப்பட்டவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரராவது இல்லாதிருந்து பின்னும் எஜமானனுமில்லாதிருந்து எஜமானனுடைய பிதாவுடன் பவுத்திரன் இருந்தாலும் அல்லது பிதாமகனுடன் பவுத்திரனிருந்தாலும் அப்போது பிதாவும் பிதாமகனும்

மஹ்ரூமாவார்கள் ஏனெனில் மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு ஏஜமானனே மிகுதிக்காரரின் வகையுள்ளவனாயிருக்கிறான் இந்தவகைப்படி பவுத்திரனே பிதாவையும்பிதாமகனையும்விட மேலானமிகுதிக்காரனாயிருக்கிறான் ஆகையால் பிதாவும் பிதாமகனும் மஹ்ரூமாகிறார்கள்.

7-வது பவுத்திரர் மஹ்ரூமாகிற விதம்.2

1-வது இறந்தவனுக்கு புத்திரன் இருந்தால் பவுத்திரர்கள் மஹ்ரூமாவார்கள் 2-வது ஷறாப்படி அடிமையாய் போயிருந்தாலும் முர்தத்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹரபில் குடியிருக்கிறவராயிருந்தாலும் அல்லது ஷறாவுக்கு விரோதமாய் வாரிசை கொலைச் செய்திருந்தாலும் மஹ்ரூமாவார்கள்.

8-வது ரத்து கிடையாத விதம்.

பவுத்திரனே மிகுதிக்காரனாயிருந்து இறந்தவனுடைய மீதசொத்தை எல்லாம் பெற்றுக்கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருந்திருக்கிறதில்லை மீருகிறதில்லைஆகையால்இவன் ரத்துபெற்றுக்கொள்ளுகிறதில்லை

9-வது பவுத்திரன் அல்லது பவுத்திரருடன்சேர்ந்து 9 பேர் வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதா, 2-வது மாதா, 3-வது பிதாமகன், 4.வது பிதாமகி, 5.வது மாதாமகி, 6.வது புத்திரி, 7 வது பவுத்திரி 8.வது பதி, 9.வது பத்னி.

10-வது பவுத்திரனுடன் யாரார் சேர்ந்து, மிகுதியடைவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு புத்திரன் இல்லாதிருந்து பவுத்திரர்களும் பவுத்திரிகளும் இருந்தால் அப்போது இவர்கள் அதாவது பவுத்திரர்கள் பவுத்திரிகளுடன் சேர்ந்து மிகுதியடைவார்கள்.

11-வது கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

பவுத்திரர்களும் பவுத்திரர்களும் இருந்தால் அப்போது சமபாகமாக பாகித்துக்கொள்ள வேணும் பவுத்திரர்களும் பவுத்திரிகளுமிருந்தால் அப்போது 2 பாகம் ஒவ்வொரு பவுத்திரனும் ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு பவுத்திரியுமாக பாகித்துக்கொள்ள வேண்டும்.

9-வது பவுத்திரி இவளுக்கு 10 விதமுண்டு.

1-வது 2-ல் 1. பாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்தின் பவுத்திரியுடன் புத்திரனாவது பவுத்திரனாவது இல்லாதிருந்து இவள் ஏக பவுத்திரியாயிருந்தால் அப்போது இவளுக்கு புத்திரிக்கு ஒப்பாக மய்யத்தின் மொத்தசொத்தில் ½ பாகம் அதாவது பாதிசொத்து கொடுக்கப்படும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.	பிதா	மாதா	பவுத்திரி
	6.ல் 1	6.ல் 1	½
	1	1	3.
தாசிப	1	0	0
ஆக	2	1	3

2-வது 3-ல் 2. கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு 2 பவுத்திரி அல்லது பலபவுத்திரிகள் இருந்து இவர்களுடன் மய்யத்தின் புத்திரனாவது புத்திரியாவது பவுத்திரனாவது இல்லாதிருந்தால் அப்போது பலபவுத்திரிகளுக்கு, புத்திரிகளுக்கு ஒப்பாக 3.ல் 2. பாகம், கொடுக்கப்படும் இந்த 3.ல் 2 ல் எல்லா பவுத்திரிகளும் சமபாகம் பாகித்துக்கொள்ள வேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.	பிதா	மாதா	பவுத்திரி	பவுத்திரி
	6 ல் 1	6.ல் 1	3 ல் 2	3.ல் 2
	1	1	2	2

3-வது 6-ல் 1. கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரனாவது பவுத்திரனாவது இல்லாதிருந்து மய்யத்துடைய ஒரு பவுத்திரியுடன் அல்லது பலபவுத்திரிகளுடன் ஒரே ஒரு புத்திரியிருந்தால் அப்போது ஒரு பவுத்திரிக்கு அல்லது பலபவுத்திரிகளுக்கு 6.ல் 1. பாகம் கிடைக்கும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.

புத்திரி...பவுத்திரி...சகோதரன் மகன்

½......6-ல் 1....... மிகுதி

3 — 1 —— 2

இவ்விதமாக பவுத்திரிக்கு 6-ல் 1. கொடுக்கவேண்டிய காரணம் ஏதென்றால் புத்திரிகளுடைய ஹக்கு 3-ல் 2, இந்த மூன்றில் இரண்டைவிட ஜாஸ்தியில்லை இப்படி இருக்க புத்திரிக்கு ½ பாகம் கொடுத்து விட்டபடியால் இப்போது ஷை 3-ல் 2ல், மீதம் 6-ல் 1, தான் இருக்கிறது ஆகையால் ஷை 3-ல் 2, மூன்றில் இரண்டை பூர்த்தியாக்க பவுத்திரிக்கு 6-ல் 1, கொடுக்கப்பட்டது எப்படியென்றால் மஸ்அலா 6-ஆல் செய்யப்பட்டது இந்த 6 ன் மூன்றில் இரண்டு 4 ஆகின்றது இப்போது ஷை 6 ன் பாதி 3 ஆகிறது ஷை 6 ன் ஒரு பாகம் ஒன்றாகின்றது இந்த மூன்றையும், ஒன்றையும் கூட்டினால் 4. ஆகின்றது ஆக இந்த இருபேருக்கும் சேர்த்து 6-ன் 3-ல் 1-க்கு 4 சரியாய் போயிற்று இவ்விதமாகவே மேல்வரிசையிலுள்ளவள் வந்தால் அப்போது கீழ்வரிசையிலுள்ளவளுக்கு 6-ல் 1, கிடைக்கும் பின்னும் இதற்கு உதாரணம் இறந்தவனுக்கு ஒரு புவுத்திரியும் ஒரு பிரபவுத்திரியும் இருப்பார்களானால் அப்போது பவுத்திரிக்கு ½ பாகமும் பிரபவுத்திரிக்கு 6-ல் 1, பாகமும் கிடைக்கும் ஏனெனில் 3-ல் 2, ல் ½ போக மீதமிருக்கிறது 6-ல் 1, தான் இந்த 6-ல் 1 தான் பிரபவுத்திரி அடைவாள் ஆகையால்தான் பலபுத்திரிகள் வந்தால் பவுத்திரிக்கு ஒன்றும் கிடைக்கிறதில்லை மஹ்ரூமாய்போகிறாள் ஏனெனில் 3-ல் 2ல், ஒன்றும் மீதுகிறதில்லை இவ்விதமாகவே பல பவுத்திரிகள் வந்தால் பிர பவுத்திரிக்கு ஒன்றும் கிடைக்கிறதில்லை.

4-வது பவுத்திரிகள் மஹ்ரூமாகும் விதம்.4

1வது மய்யத்துக்கு பவுத்திரன் இல்லாதிருந்து மய்யத்துடைய ஒரு பவுத்திரியுடன் அல்லது பல பவுத்திரியுடன் ஒன்றுக்குமேல் புத்திரிகள் இருந்தால் அப்போது ஷை ஒரு பவுத்திரிக்கும் தாய பாகம் கிடைக்கமாட்டாது, பின்னும் புத்திரியுடன் புத்திரன் வந்தால் பவுத்திரி மஹ்ரூமாவாள். பின்னும் இவ்விதமாக புத்திரிக்கு ஒன்றும் கிடையாமல் போகும் காரணம் ஏதென்றால் புத்திரிகளுடைய ஹக்கு மூன்றில் இரண்டை விட ஜாஸ்தியில்லை

இந்த மூன்றில் இரண்டை 2 புத்திரிகள் அல்லது பல புத்திரிகள் வந்து பெற்றுக் கொண்டபடியால் இந்த 3-ல் 2ல், மிச்சம் ஒன்றும் இருக்கவில்லை மிச்சம் இருக்குமானால் அல்லவோ பவுத்திரிக்கு கொடுக்கப்படும் இப்படி மிச்சம் இராததினால் பவுத்திரிக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை மஹ்ரூமாய்விட்டாள் இவ்விதமாகவே மேல் வரிசையிலுள்ள 2 பெண்கள் வந்து விட்டால் கீழ்வரிசையிலுள்ளவளுக்கு பாகம் கிடையாது உதாரணம், 2 பவுத்திரிகள் இருக்கும் போது பிர பவுத்திரிக்குபாகம் கிடைக்கமாட்டாது ஏனெனில் பவுத்திரிகளுடைய ஹக்காகிய மூன்றில் இரண்டை பல பவுத்திரிகள் வந்து பெற்றுக் கொண்டபடியால் பிரபவுத்திரி தாய பாகம் அடைவதற்கு ஷை ஹக்கில் ஒன்றும் மிச்சமிருக்கவில்லை ஆகையால் பிர பவுத்திரி மஹ்ரூமாய் விட்டாள் 2-வது இறந்தவனுக்கு புத்திரன் இருந்தால் பவுத்திரி மஹ்ரூமாவாள் 3-வது அடிமை தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில் புருகாவது அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்து போயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர்கள் இல்லாமல் போனாலும் கூட எஜமானுடைய பவுத்திரிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது ஆனால்வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜஈ புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள், புத்திரிகள், பின்ஜோதிகள், இவர்கள் இருந்தாலும் அல்லது எஜமானுடைய ஞாபகந்தாக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்குபவுத்திரி வாரிசாவாள், 4-வது ஷறுப்படி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்த்தத்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில்குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லதுவாரிசை ஷறவுக்கு விரோதமாய் கொலைசெய்திருந்தாலும் பவுத்திரி மஹ்ரூமாவாள்.

5-வது மிகுதிக் காரியாகும் விதம்.

மய்யத்துக்கு ஒன்று அல்லது ஒன்றுக்குமேல் புத்திரிகளும் பவுத்திரிகளும் இருந்து இவர்களுடன் ஒரு பவுத்திரன் இருந்தால் அப்போது மய்யத்துடைய பவுத்திரி அல்லது பவுத்திரிகள் மிகுதிக்காரியாய் விடுகிறார்கள். பின்னும் மய்யத்துக்கு ஒன்று அல்லது

ஒன்றுக்குமேல் புத்திரிகளும் பவுத்திரிகளுமிருந்து இவர்களுடன் பிரபவுத்திரன் இருந்தால் அப்போது மய்யத்துடைய பவுத்திரிகள் மிருதிக்காரிகளாய் விடுகிறார்கள் பின்னும் மய்யத்துக்கு ஒரு புத்திரியாவது பல புத்திரிகளாவது இல்லாமலிருந்து ஒரு பவுத்திரனும் பவுத்திரியும் இருந்தால் அப்போது ஷெடி பவுத்திரிகள் பவுத்திரனுடன் சேர்ந்து பாகித்துக்கொள்ளுகிறார்கள் இவ்விஷயத்தில் அல்லாஹுத்தாலா சொல்லுகிறதாவது லிஜ்ஜகரி மிஸ்லி ஹச்சில் உன்சயைனி,மஅனூ,2 பெண்பிள்ளைகளுடைய பங்குக்கு ஒப்பாக ஒரு ஆண்பிள்ளைக்காக இருக்கிறது இந்த ஆயத்தின் பிரகாரம் மய்யத்துடைய பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்து விட்டு மீதமிருக்கும் சொத்தில் ஒரு பவுத்திரனுக்கு கிடைக்கும் பாகத்தின் பாதி ஒரு பவுத்திரிக்கு கிடைக்கும். பின்னும் பவுத்திரன் இருக்கும் போது பவுத்திரிகள் மிருதிக்காரியாகிறது சகசமே வழக்கமே ஆனால் பிரபவுத்திரன் இருக்கும் போது பவுத்திரிகள் மிருதிக்காரியாகிறது விசேஷமே. உதாரணங்கள் 3.

மய்யத்து	சைது, மஸ்அலா 3 தஸ்ஹீ 12		
	புத்திரிகள்2...	பவுத்திரிகள்2...	பவுத்திரன்
	3-ல் 2.................		மிருதி
மஸ்அலா	2	------	1
தஸ்ஹீ	8 -----	2 ------	2

மய்யத்து	சைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 12.		
	புத்திரிகள்2...	பவுத்திரிகள்2...	பிரபவுத்திரன்
	3-ல் 2................		மிருதி
மஸ்அலா	2	------	1
தஸ்ஹீ	8 -----	2 ------	2

மய்யத்து	சைது, மஸ்அலா 3.	
	பவுத்திரி...	பவுத்திரன்
	3-ல் 1...	3-ல் 2
	1 ----	2

6-வது பவுத்திரியால் மஃறூமாகும் விதம்.

இறந்தவனுக்கு பின்ன பிதுருகனும் பின்ன பிதுருகியும் பவுத்திரியும் இருந்தால் அப்போது பின்ன பிதுருகனும் பின்ன பிதுருகியும் மஃறூமாய் போவார்கள். பின்னும் 2 பவுத்திரிகள் இருந்தால் 3 பேர்கள் மஃறூமாகிறார்கள். 1-வது பிர பவுத்திரி 2-வது பின்ன பிதுருகன் 3-வது பின்னபிதுருகி மஃறூமாகிறார்கள் ஆனால் பிர பவுத்திரன் இருந்தால் பிரபவுத்திரி மஃறூமாகிறதில்லை.

7-வது ரத்து பெற்றுக் கொள்ளும் விதம்

இறந்தவனுக்கு மிருதிக்காரர்கள் இருந்திராமல் ரத்து பெற்றுக் கொள்ளத்தக்க வாரிசுகளாகிய புத்திரி, பவுத்திரி, மாதா, மாதாமகி, பிதாமகி, இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்களுடன் கூட்டாய் பவுத்திரி தாயத்திரும்பலே பாகப்படி பெற்றுக் கொள்ளுவாள் ஒரு பவுத்திரி யிருந்தால் பின்னபிதுருகிக்கும் பின்ன பிதுருகனுக்கும், 2 பவுத்திரி யிருந்தால் பிர பவுத்திரிக்கும் தாய பாகமாவது தாயத்திரும்பலாவது கிடையாது.

8-வது பவுத்திரியுடன் சேர்ந்து 24 பேர்கள் வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதா, 2-வது மாதா, 3-வது பிதாமகன், 4-வது பிதாமகி, 5-வது மாதாமகி, 6-வது புத்திரி, 7-வது பவுத்திரி, 8-வது பவுத்திரன், 9-வது பிர பவுத்திரன், 10-வது பிர பவுத்திரி, 11-வது சகோதரன், 12-வது சகோதரி, 13-வது பின்னோதரன், 14-வது பின்னோதரி, 15-வது சகோதரன்மகன், 16-வது பின்னோதரன்மகன் 17-வது சிற்றப்பன், 18-வது பின்னோதரசிற்றப்பன், 19-வது சிற்றப்பன்மகன், 20-வது பின்னோதர சிற்றப்பன்மகன், 21-வது பதி, 22-வது பத்னி, 2வது 3-வது எஜமான், 24-வது எஜமானிச்சி.

9-வது பவுத்திரியுடன் யாரார் சேர்ந்து மிருதி அடைவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனில்லாதிருந்து பவுத்திரனும் பவுத்திரியும் சில சந்தர்ப்பங்களில் பிரபவுத்திரனுமிருந்தால் அப்போது இவர்கள் சேர்ந்து மிருதி யடைவார்கள் ஷெடி 2-வது3-வது உதாரணங்கள் பார்க்க.

10-வது கூட்டாய் பாகித்துக் கொள்ளும் விதம்.

பவுத்திரிகளும் பவுத்திரிகளும் இருந்தால் சமபாகமாக பாகித்துக் கொள்ளவேனும் பவுத்திரிகளும் பவுத்திரர்களும் சில வேளை

களில் பிரபவுத்திரனுமிருந்தால் அப்போது 2பாகம் ஒவ்வொரு பவுத்திரனுக்கும் அல்லது பிரபவுத்திரனுக்கும் ஒவ்வொருபாகம் ஒவ்வொரு பவுத்திரிக்கும் கொடுக்கப்படும் ஷை 2வது 3வது உதாரணங்கள் பார்க்க

10-வது பிரபவுத்திரன் இவனுக்கு 11 விதமுண்டு.

1-வது மீதமுழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

இவன் பவுத்திரனைப்போலவே மிகுதிக்காரனாயிருக்கிறான், பின்னும் புத்திரனும் பவுத்திரனுமில்லாதபோது இவன் பவுத்திரன் ஸ்தானத்தில் இருக்கிறான். பின்னும் மய்யத்துக்கு புத்திரனாவது பவுத்திரனாவது இல்லாதிருந்து பங்குக்காரர்களும் ஏக பிரபவுத்திரனுமிருந்தால் அப்போது மய்யத்தின் பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்து விட்டு மீதமிருக்கும் முழுமையும் இவனுக்கே கொடுக்கப்படும்.

2-வது சமபாகம் பாகித்துக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு புத்திரன் பவுத்திரன் இல்லாதிருந்து பங்குக்காரர்களும் பல பிர பவுத்திரர்களும் இருந்தால் அப்போது பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்து விட்டதின்பின் மீதமிருக்கும்சொத்தை ஷை பவுத்திரர்கள் சமபாகமாக பாகித்துக் கொள்ள வேண்டும் உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 4.
பதி...பிரபவுத்திரன்..பிரபவுத்திரன் பிரபவுத்திரன்
$\frac{1}{4}$....சமபாகம்......சமபாகம்.....சமபாகம்
1 — 1 —— 1 —— 1

3-வது மிகுதியில் 3-ல் 2. பாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரனும் பவுத்திரனும்இல்லாதிருந்து பிரபவுத்திரன் அல்லது பிர பவுத்திரர்களுடன் ஏகபவுத்திரி வந்தாலும் அல்லது பல பவுத்திரிகள் வந்தாலும் அப்போது இவர்கள் மிகுதிக்காரர் ஆகமாட்டார்கள் ஆனால் பிர பவுத்திரனுடன் ஒரு பவுத்திரி வந்தால் அப்போது தன் பாகமாகிய $\frac{1}{2}$ யும் அல்லது பல பவுத்திரிகள் வந்தால் தங்கள்பாகமாகிய 3-ல் 2, யும் பெற்றுக் கொள்வார்கள் பவுத்திரி அல்லது பவுத்திரிகளுடன் பிரபவுத்திரியும்பிரபவுத்திரனும் வந்தால் அப்போது பிரபவுத்திரி பிரபவுத்திரனுடன்சேர்ந்து மிகுதிக்காரியாய்விடுவாள் இவ்விஷயத்தில் பிர பவுத்திரன் 2, பாகமும்பிரபவுத்திரி ஒரு பாகமுமாக பாகித்துக் கொள்வார்கள் உதாரணங்கள். 2.

மய்யத்து ஸைது, மஸ்அலா 2, தஸ்ஹீ 6.
பிரபவுத்திரன், பிரபவுத்திரி, பவுத்திரி
மிகுதி.........மிகுதி........ $\frac{1}{2}$
மஸ்அலா —— 1 —— 1
தஸ்ஹீ 2 —— 1 —— 3

மய்யத்து ஸைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 9.
பிரபவுத்திரன். பிரபவுத்திரி .பவுத்திரி..பவுத்திரி
மிகுதி...........மிகுதி...........3-ல் 2.
மஸ்அலா — 1 ——— 2
தஸ்ஹீ. 2 —— 1 —— 3 —— 3

பின்னும் இறந்தவனுடைய 2 புத்திரிகள் அல்லது பல புத்திரிகளுடன் பவுத்திரியும் பிர பவுத்திரியும் பிர பவுத்திரனும் சேர்ந்து வந்தால் அப்போது பிர பவுத்திரன் ஷை பவுத்திரியையும் பிர பவுத்திரியையும் மிகுதிக்காரிகளாக்கி இவர்களுடன் சேர்ந்து பங்குக்காரர்களுக்கு பங்கு கொடுத்து விட்டு மீதமிருக்கும் மிகுதியில் பாகித்துக்கொள்வான் அதாவது ஆணுக்கு 2 பாகமும்பெண்ணுக்கு 1 பாகமுமாக பாகித்துக் கொள்வான் உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 12
புத்திரிகள் 2. பவுத்திரி. பிரபவுத்திரி .பிரபவுத்திரன்
3-ல் 2........மிகுதி....மிகுதி...... மிகுதி
மஸ்அலா 2 —— —— 1
தஸ்ஹீ 8 ...... 1 ... 1 2

4-வது பிரபவுத்திரனால் 15 பேர் மஹ்றூமாகும் விதம்.

சகோதரன் 1, உடன்பிறந்தாள் 2, பின்னோதரன் 3, பின்னோதரி 4, பின்னபிதுருகன் 5, பின்னபிதுருகி 6, சகோதரன் மகன் 7 பின்னோதரன் மகன் 8. சிற்றப்பன் 9. பிதாவின் பின்னோதரன் 10, சிற்றப்பன்மகன் 11, பிதாவின்பின்னோதரன்மகன் 12, எஜமான் 13, எஜமானிச்சி 11, இவர்கள்மஹ்றூமாய்ப்போகிறார்கள் இதுவும்தவிர 15-வது

மீள்க்கப்பட்டவனுக்குஜவில்புரு காவது அசபத்துக்காராவது இல்லாதிருந்து எஜமானனுமில்லாதிருந்து எஜமானனுடைய பிதா அல்லது பிதாமகனுடன் பிர பவுத்திரன் இருந்தால் அப்போது பிதாவும் பிதாமகனும் மஹ்ருமாவார்கள் ஏனெனில் மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு எஜமானனை மிகுதிக்காரன் வகையாக பாத்தியமுள்ளவனாயிருக்கிறான் இந்தவகைப்படி பிரபவுத்திரனே பிதாவையும்பிதாமகனையும் விடமேலான மிகுதிக்காரனாயிருக்கிறான் ஆகையால் பிதாவும் பிதாமகனும் மஹ்ருமாகிறார்கள்.

5-வது பிர பவுத்திரர்கள் மஹ்ருமாகும் விதம்.2

1-வது இறந்தவனுக்கு புத்திரனாவது பவுத்திரனாவது இருந்தால் பிர பவுத்திரர்கள் மஹ்ருமாவார்கள் 2-வது ஷருப்படி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்திந்தாய் போயிருந்தாலும் அல்லது காபிரு யிருந்தாலும் அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவர்களாயிருந்தாலும் அல்லது ஷராவுக்குவிரோதமாய்வாரிசைகொலைச்செய்திருந்தாலும் மஹ்ருமாவார்கள்.

6-வது ரத்து கிடையாத விதம்.

பவுத்திரனே மிகுதிக்காரனாயிருந்து மய்யத்தின் மீதசொத்தை எல்லாம் பெற்றுக் கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருக்கிறதில்லை மீருகிறதில்லை ஆகையால் இவன் ரத்து பெற்றுக் கொள்ளுகிறவனாகிறதில்லை.

7-வது பிர பவுத்திரன் அல்லது பிர பவுத்திரர்களுடன் சேர்ந்து வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதா 2-வது மாதா 3-வது பிதாமகன் 4-வது பிதாமகி 5-வது மாதாமகி 6-வது புத்திரி 7-வது பதி 8-வது பத்னி 9-வது பவுத்திரி 10-வது பிர பவுத்திரி.

8-வது எல்லா சொத்தும் பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பங்குக்காரர்கள் இல்லாதிருந்து புத்திரனும் பவுத்திரனும் இல்லாதிருந்தால் அப்போது பிர பவுத்திரனுக்கு எல்லா சொத்தும் கிடைக்கும். இவ்விதமாகவே அடிமைதனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில் புருதும் மிகுதிக் காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானும் இறந்து போயிருந்து இவனுக்கு புத்திரனாவது பவுத்திரனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய பிர பவுத்திரன் மிகுதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான் ஒரு வேளை மீட்டப்பட்டவனுடைய ஜவில்புருதிருந்து மிகுதிக்காரர்கள் இல்லாதிருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு போக மீதத்தை அடைவான்.

9-வது பிர பவுத்திரனுடன் சேர்ந்து மிகுதி யாரார் அடைவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனும் பவுத்திரனும் இல்லாதிருந்து பிர பவுத்திரன் பிர பவுத்திரியும் சேர்ந்து வந்தாலும் பின்னும்சில சந்தர்ப்பங்களில் பிர பவுத்திரனுடன் பவுத்திரியும் சேர்ந்து வந்தாலும் அப்போது இவர்கள் கூட்டாய் மிகுதியடைவார்கள்.

10-வது கூட்டாய் பாகித்துக் கொள்ளும் விதம்.

பிர பவுத்திரர்களும் பிர பவுத்திரிகளுமிருந்தால் சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும். பின்னும் பிர பவுத்திரர்களும் பிர பவுத்திரிகளும் சில சந்தர்ப்பங்களில் பவுத்திரியும் இருந்தால் அப்போது 2 பாகம் ஒவ்வொரு பிர பவுத்திரனுக்கும் ஒவ்வொரு பாகம் பிர பவுத்திரிக்கும் பவுத்திரிகளுக்கும் கொடுக்கப்படும் பின்னும் பிரபவுத்திரர்கள் மாத்திரமிருந்தால் சமபாகமடைவார்கள். இதின் 3-வது வகையின் உதாரணம் பார்க்க.

11-வது பிர பவுத்திரனுடன் சேர்ந்து ரெப்பட்டவர்களின் விதம்.

இறந்தவனுக்கு பிதா, பிதாமகன், பதி, பத்னி. புத்திரி, புத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, இவர்களில்யாராவது இருந்தால் அப்போது பிர பவுத்திரன் இவர்களுடன்சேர்ந்து வந்துமிகுதி அடைவான்.

11-வது பிரபவுத்திரி இவளுக்கு 11 விதமுண்டு.
1-வது 2-ல் 1 பாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்தின் பிரபவுத்திரியுடன் புத்திரனும், புத்திரியும், பவுத்திரனும், பவுத்திரியும் பிரபவுத்திரனும் இல்லாதிருந்து இவளேக பிரபவுத்திரியாயிருந்தால் அப்போது இவளுக்கு பவுத்திரிக்கு ஒப்பாக மய்யத்தின் மொத்தசொத்தில் ½ அதாவது பாதிசொத்துகிடைக்கும்.

2-வது 3-ல் 2 கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரனும், புத்திரியும், பவுத்திரனும், பவுத்திரியும், பிர பவுத்திரனு மில்லாதிருந்து பல பிர பவுத்திரிகள் இருந்தால் அப்போது இவர்களுக்கு 3-ல் 2 பாகம் கொடுக்கப்படும் இதை எல்லோரும் சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும்.

3-வது 6-ல் 1 பாகம் கிடைக்கும் விதம்.

மய்யத்துக்கு புத்திரனும், பவுத்திரனும், பிர பவுத்திரனும், இல்லாதிருந்து ஒருபுத்திரியாவது அல்லது ஒருபவுத்திரியாவது இருந்தால் அப்போது ஏக பிரபவுத்திரிக்கு 6-ல் 1 பாகம்முழுமையும்கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து சைது மஸ்அலா 6, ரத்தின் மஸ்அலா 4.
புத்திரி............பிரபவுத்திரி
½................6-ல் 1
3 ——— 1

4-வது சமபாகம் அடையும் விதம்.

மேலே எழுதிவைத்தப்படிக்கு மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து ஒரு புத்திரியும் பல பிர பவுத்திரிகளும் இருந்தால் அப்போது பல பிர பவுத்திரிகள் 6-ல் 1 சமபாகமடைவார்கள். உதாரணம்.

மய்யத்து சைது. மஸ்அலா 6. தஸ்ஹீ 12, ரத்தின் மஸ்அலா 8.
புத்திரி.....பிரபவுத்திரி.....பிரபவுத்திரி
½...................... 6-ல் 1.
மஸ்அலா 3 ——— 1
தஸ்ஹீ 6 —— 1 —— 1

பின்னும் மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து 2 புத்திரிகளும், பவுத்திரிகளும், பிர பவுத்திரிகளும், பிர பவுத்திரனுமிருந்தால் அப்போது பிர பவுத்திரிகள் பவுத்திரிகளுடன் சேர்ந்து சமபாகமடைவார்கள் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 12.
புத்திரிகள் 2..பவுத்திரிகள், பிரபவுத்திரிகள், பிரபவுத்திரன்
3-ல் 2........மிகுதி.......மிகுதி..........மிகுதி
மஸ்அலா 2 ——— 1
தஸ்ஹீ 8 ——— 1 ——— 1 ——— 2

5-வது மிகுதிக்காரியாகும் விதம்.

2 புத்திரியுடனும் அல்லது 2 பவுத்திரிகளுடனும் அல்லது ஒரு புத்திரியுடனும் அல்லது ஒரு பவுத்திரியுடனும் ஒரு பிர பவுத்திரி அல்லது பல பிர பவுத்திரிகள் வந்து இவர்களின் தர்ஜாவிலுள்ள அல்லது இவர்களின் தர்ஜாவை விட கீழான தர்ஜாவிலுள்ள பிர பவுத்திரனும் வந்தால் அப்போது இவன் அவர்களை அதாவது தன் தர்ஜாவிலுள்ள பிர பவுத்திரியையும் தன் தர்ஜாவுக்கு மேலான தர்ஜாவிலுள்ளவளாகிய பவுத்திரியையும் மிகுதிக்காரளுக்கி விடுகிறான் புத்திரிகளின் விஷயத்தில் எழுதப்பட்டிருக்கிறதலீல் என்ற அத்தாக்ஷியாலேயே பவுத்திரிகளுடைய பங்குகளும் பிர பவுத்திரிகளுடைய பங்குகளும் சாபித்தாகின்றன அதாவது நிலைப்படுகின்றன உதாரணங்கள்

மய்யத்து சைது, மஸ்அலா 6, தஸ்ஹீ 24.
புத்திரி..புத்திரி..பிரபவுத்திரி, பிரபவுத்திரி, பிரபவுத்திரன்
3-ல் 2..................மிகுதி
மஸ்அலா 4 ——— 2
தஸ்ஹீ 8 — 8 —— 2 —— 2 —— 4

மய்யத்து சைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 12.
பவுத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபவுத்திரி, பிரபவுத்திரன்
3-ல் 2.........................மிகுதி
2 ——— 1
4 — 4 — 1 —— 1 —— 2

மய்யத்து சைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 12.
புத்திரி.. புத்திரி.. பவுத்திரி.. பிரபவுத்திரி..பிரபவுத்திரன்
3-ல் 2………………மிகுதி
மஸ்அலா 2 ——— 1
தஸ்ஹீ 4 — 4 — 1 — 1 — 2

மய்யத்து சைது, மஸ்அலா 2. தஸ்ஹீ 6,
பவுத்திரி…பிரபவுத்திரி…பிரபவுத்திரன
$\frac{1}{2}$………………மிகுதி
தஸ்ஹீ 3 — 1 — 2,

மய்யத்து சைது, மஸ்அலா 2. தஸ்ஹீ 6.
புத்திரி….பிரபவுத்திரி….பிரபவுத்திரன்
$\frac{1}{2}$………………மிகுதி
தஸ்ஹீ 3 — 1 — 2

6-வது பிரபவுத்திரி மஹ்றூமாகும் விதங்கள்.6

1-வது மய்யத்தின் 2 புத்திரிகளுடன் ஒரு பிர பவுத்திரி அல்லது பல பிர பவுத்திரிகள் இருந்தால் அப்போது பிர பவுத்திரி அல்லது பிர பவுத்திரிகளுக்கு ஒன்றும் கிடையாது. 2-வது பின்னும் 2 பவுத்திரிகளுடன் ஒரு பிர பவுத்திரி அல்லது பல பிர பவுத்திரிகள் இருந்தால் அப்போதும் பிர பவுத்திரி அல்லது பிர பவுத்திரிகளுக்கு ஒன்றும் கிடையாது. 3-வது பின்னும் ஒரு புத்திரியும் ஒரு பவுத்திரியு மிருந்து இவர்களுடன் பிர பவுத்திரி அல்லது பிர பவுத்திரிகள் இருந்தால் அப்போவும் பிர பவுத்திரி அல்லது பிர பவுத்திரிகளுக்கு ஒன்றும் கிடையாது. 4-வது பின்னும் மய்யத்துக்கு புத்திரன் அல்லது பவுத்திரன் இருந்தால் அப்போவும் பிர பவுத்திரிக்கு ஒன்றும் கிடையாது. 5-வது அடிமை தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில்புறூதாவது அசபத்துக் காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்து போயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர்கள் இருந்தாலும் இல்லாமல் போனாலும் கூட எஜமானுடைய பிர பவுத்திரிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜயி புத்திரி அதாவது பால் மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள், புத்திரிகள் பின்னோதரிகள், இவர்கள் இருந்தாலும் அல்லது எஜமானுடையதூர பந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்குச்சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் சொல்லாயிருக்கிறபடி மீள்க்கப்பட்டவனுடைய சொத்து பிர பவுத்திரிக்கு கிடைக்கும் 6-வது ஷறுப்படி. பிர பவுத்திரி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்த்தத்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறா யிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில் குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லது வாரிசை ஷறுவுக்கு விரோதமாக கொலை செய்திருந்தாலும் மஹ்றூமாவாள்

7-வது பிர பவுத்திரியால் மஹ்றூமாகும் விதம்.

இறந்தவனுக்கு பிர பவுத்திரியிருந்தால் பின்ன பிதுருகனும் பின்ன பிதுருகியும் மஹ்றூமாகிறார்கள்.

8-வது ரத்து பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிகுதிக்காரர்கள் இருந்திராமல் ரத்து பெற்றுக் கொள்ளத்தக்க வாரிசுகளாகியஒரு புத்திரியாவது, சகோதரியாவது, பின்னோதரியாவது, மாதாவாவது, மாதாமகியாவது, பிதாமகியாவது பவுத்திரியாவது, இருந்தால் அப்போது இவர்களுடன் கூட்டாய் பிர பவுத்திரி, தாயத்திரும்பலை பெற்றுக்கொள்வாள்.

9-வது பிரபவுத்திரியுடன் 23-பேர் சேர்ந்து வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதா, 2-வது மாதா, 3-வது பிதாமகன், 4-வது பிதாமகி, 5-வது மாதாமகி, 6-வது புத்திரி. 7-வது பவுத்திரி, 8-வது பவுத்திரன் 9-வது பிர பவுத்திரி, 10-வது சகோதரன், 11-வது சகோதரி, 12-வது பின்னோதரன், 13-வது பின்னோதரி, 14-வது சகோதரன் மகன், 15-வது பின்னோதரன் மகன், 16-வது சிற்றப்பன் 17-வது பின்னோதர சிற்றப்பன், 18-வது சிற்றப்பன் மகன், 19-வது பின்னோதர சிற்றப்பன் மகன். 20-வது பதி, 21-வது பத்னி, 22-வது எஜமான், 23-வது எஜமானிச்சி.

10-வது பிர பவுத்திரியுடன்யாரார் சேர்ந்து மிகுதி அடைவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனும், பவுத்திரனும், இல்லாதிருந்து பிர பவுத்திரியும் பிர பவுத்திரனும் சில சந்தர்ப்பங்களில்பவுத்திரியும் சேர்ந்து மிகுதியடைவார்கள்.

11-வது கூட்டாய் பாகமடையும் விதம்.

பிர பவுத்திரிகளும் சில சந்தர்ப்பங்களில் பவுத்திரிகளும் பிர பவுத்திரர்களும் இருந்தால் அப்போது 2 பாகம் ஒவ்வொரு பிர பவுத்திரனுக்கும், ஒரு பாகம் ஒவ்வொரு பவுத்திரிக்கும், பிர பவுத்திரிக்கும் கிடைக்கும் பின்னும் பிர பவுத்திரிகளும் பிர பவுத்திரிகளுமிருந்தால் அப்போது எல்லோரும் சமபாகமாக பாகித்துக் கொள்ள வேண்டும்.

12-வது சகோதரன் இவனுக்கு 12 விதமுண்டு

1-வது மிருதிக்காரனாகும் விதம்.

மய்யத்துக்கு பிதாவாவது புத்திரனாவது பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது பிரபிரபவுத்திரனாவது இல்லாதிருந்தால் அப்போது சகோதரன் மிருதிக்காரனாகிறான்.

2-வது சொத்துமுழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது பங்குக்காரர்களாவது இல்லாதிருந்து ஏக சகோதரனிருந்தால் அப்போது சொத்து முழுமையும் சகோதரன் பெற்றுக்கொள்வான். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புறூலும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து எஜமானுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, இல்லாதிருந்தால் அப்போது எஜமானுடைய சகோதரன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான் ஒரு வேளை மீட்டப்பட்டவனுடைய ஜவில்புறூலு இருந்து மிருதிக்காரர்கள் இல்லாதிருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்குபோக மீத்தத்தை அடைவான்.

3-வது மீதசொத்து முழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, இல்லாதிருந்து பின்னோதரி, பின்னோதரன், பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, இவர்களில்

பாராவது இருந்தால் அப்போது ஏக சகோதரனுக்கு மீதமுழுமையும் கிடைக்கும்

4-வது சமபாகம் பெற்றுக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு மேல்கண்டவர்கள் இல்லாதிருந்து பலசகோதரர்கள் இருந்தால் அப்போது இவர்கள் எல்லோரும் சமபாகம் பாகித்துக்கொள்ள வேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.

மாதா	புத்திரி	சகோதரன்	சகோதரன்
6-ல்1	½	மிருதி	மிருதி
1	3	1	1

5-வது மிருதியில் 3-ல் 2, பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மேல்கண்டவர்கள் இல்லாதிருந்து சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தால் அப்போது ஒருசகோதரிக்கு கிடைக்கும் பாகத்துக்கு இரட்டிப்பு ஒரு சகோதரனுக்கு கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.

மாதா	சகோதரன்2	சகோதரி
6-ல் 1	மிருதி	மிருதி
1	4	1

6-வது சகோதரன் மஹ்றூமாகும் விதம். 2

1-வது இறந்தவனுக்குபிதாவாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிர பவுத்திரனாவது பிரபிர பவுத்திரனாவது இருந்தால் அப்போது சகோதரன் மஹ்றூமாகிறான் 2-வது சகோதரன் ஷறுப்படி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்தித்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய்வாரிசை கொலைச்செய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்றூமாவான்.

7-வது சகோதரனால் 10 பேர் மஹ்றூமாகும் விதம்.

1-வது பின்னோதரன், 2-வது பின்னோதரி, 3-வது சகோதரன் மகன், 4-வது பின்னோதரன் மகன், 5-வது சிற்றப்பன், 6-வது

பிதாவின் பின்னோதரன், 7-வது பிதாவின் சகோதரன் மகன், 8-வது பிதாவின் பின்னோதரன் மகன், 9-வது எஜமான், 10-வது எஜமானிச்சி, இவர்கள் சகோதரன் இருக்கும் போது மஹ்ரூமாகிறார்கள்.

8-வது சகோதரனுடன் 13பேர் சேர்ந்து வாரிசுகளாகும் விதம்.

1-வது மாதா, 2.வது பிதாமகன், 3.வது பிதாமகி, 4.வது மாதாமகி, 5.வது புத்திரி, 6.வது பவுத்திரி. 7.வது பிரபவுத்திரி, 8.வது சகோதரன், 9.வது சகோதரி, 10.வது பதி, 11.வது பத்னி 12.வது பின்ன பிதுருகன், 13.வது பின்னபிதுருகி.

9-வது சகோதரனுடன் யாரார்சேர்ந்து மிகுதி யடைவார்கள் என்பதின் விதம்.

பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், இல்லாதிருந்து சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தால் இவர்கள் சேர்ந்து மிகுதியடைவார்கள்

10-வது கூட்டாய் பாகித்துக் கொள்ளும் விதம்.

சகோதரர்களும் சகோதரர்களும் இருந்தால் சமபாகம் பாகித்துக்கொள்வார்கள் பின்னும் சகோதரர்களும் சகோதரிகளுமிருந்தால் 2 பாகம் ஒவ்வொரு சகோதரனும் ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு சகோதரியுமாக பாகித்துக் கொள்வார்கள்.

11-வது மகாசிமாகிடைக்கும் விதம்.

சகோதரனுடன் பிதாமகன் சேர்ந்துவந்தால் அப்போது சகோதரனுக்கு பிதாமகனுடன் கூட்டாய் பாகம் கிடைக்கும் இந்தசங்கதி பிதாமகன் சங்கதியில் தெளிவாயெழுதப்பட்டிருக்கிறது அதைப்பார்த்துக்கொள்ள.

12-வது ரத்து கிடையாதவிதம்.

சகோதரனே மிகுதிக்காரனாயிருந்து மய்யத்தின் சொத்தை எல்லாம் பெற்றுக் கொள்ளுகிற படியால் சொத்தில் மீதம் ஒன்றும் இருந்திருக்கிறதில்லை மீருகிறதில்லை ஆகையால் இவன் ரத்து பெற்றுக்கொள்ளுகிறதில்லை.

13-வது சகோதரிகள் இவர்களுக்கு 11 விதமுண்டு

1-வது 2-ல் 1 பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரன். பவுத்திரன், பிரபவுத்திரன், இவர்களில் ஒருவராவது பலர்களாவது இருந்திருமலும், பின்னும் பிதாவும் சகோதரனும் இருந்திருமலும், பின்னும் புத்திரிகள் பவுத்திரிகள் பிரபவுத்திரிகள் இவர்களில் ஒன்றுக்குமேல் பலர்களாயிருந்திருமலும். பின்னும் சகோதரியும் இருந்திருமலும் இருந்தால், அப்போது ஏக சகோதரிக்கு மொத்தசொத்தில் 2.ல் 1 பாகம் கிடைக்கும் அதாவது ஒரு புத்திரியாவது, ஒருபவுத்திரியாவது, ஒரு பிரபவுத்திரியாவது, பிதாவாவது, பிதாமகியாவது, மாதாமகியாவது இருந்தாலும், பின்னும் பின்னோதரன், பின்னோதரி, பின்னபிதுருகன், பின்னபிதுருகி, சகோதரன் மகன், பின்னோதரன் மகன், சிற்றப்பன், பின்னோதரசிற்றப்பன், சிற்றப்பன் மகன், பின்னோதர சிற்றப்பன் மகன், இவர்களில் ஒருவராவது பலர்களாவது இருந்தாலும், பின்னும் பதி, அல்லது பத்னி, எஜமான், அல்லது எஜமானிச்சி, இவர்கள் இருந்தாலும் அப்போது ஏகசகோதரிக்கு மொத்தசொத்தில் 2.ல் 1 பாகம் கிடைக்கும். இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது வலஹூஉக்துன்பலஹா நிஸ்புமாதரக. மஅனா, இறந்து போனவனுக்கு ஒரு சகோதரியிருந்தால் அப்போது அவளுக்கு இறந்தவன் விட்டுவிட்டு போன சொத்தில் அரை பாகமுண்டு உதாரணம்:

மய்யத்து ஸைது, மஸ்அலா 2.
பதி......சகோதரி
$\frac{1}{2}$.........$\frac{1}{2}$
1 —— 1

2-வது 3-ல் 2 பாகங்கிடைக்கும் விதம்.

இறந்து போனவனுக்கு மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து அதாவது புத்திரன் பவுத்திரன் பிரபவுத்திரன் இவர்களில் ஒருவராவது பலர்களாவது இருந்திருமலும் பின்னும் பிதாவும் சகோதரனும் இருந்திருமலுமிருக்க ஒன்றுக்கு அதிக சகோதரிகளிருந்தால் அப்போது இவர்களுக்கு 3-ல் 2 பாகம் கிடைக்கும் இதை இவர்கள் எல்லோரும் சமபாகமாக பாகித்துக் கொள்ள வே

ண்டும் இவ்விஷயத்தில் அல்லாஹுத்தாலா சொல்லுகிறதாவது, பயின் கானதஸ்னதைனி பலஹுமஸ் ஸுலுஸானி. மஅனு, இறந்தவனுக்கு 2, சகோதரிகளிருந்தால் இவர்களுக்கு 3-ல்2 பாகமுண்டு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3.
சகோதரி 2..பிதாவின் சகோதரன் மகன்
3-ல்2.......மிகுதி
2 —— 1

3-வது ஆண்பிள்ளைகளால் மிகுதிக்காரிகளாகும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது பிதாவாவது இல்லாதிருந்து ஒரு சகோதரன் அல்லது பல சகோதரர்களிருந்தால் அப்போது அச்சகோதரிகள் சகோதரர்களுடன் சேர்ந்து மிகுதிக் காரியாகிறார்கள் இவ்விஷயத்தில் அல்லாஹுத்தாலா சொல்லுகிறதாவது வயின்கானு இக்வதன் ரிஜாலன் வனிசாஅன்ப லிஜ்ஜகரி மிஸ்லி ஹழ்ழில் உன்சயைனி. மஅனு, ஆண்பிள்ளைகளும்பெண்பிள்ளைகளுமாகிய அவர்கள் சகோதரர்களாயிருப்பார்களானால் 2, பெண்பிள்ளைகளுடைய பங்குக்கு ஒப்பாக ஒரு ஆண்பிள்ளைக்காக இருக்கிறது. இப்படிக்கு ஷை சகோதரிகள் மிகுதிக்காரிகளாய் இறந்து போனவனுடைய மீத சொத்தை பிரித்துக்கொள்ளுகிறார்கள் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6. தஸ்ஹீ 18.
மாதா...சகோதரன்...சகோதரி..பதி
6-ல் 1...மிகுதி.........மிகுதி..... ½
மஸ்அலா 1 —— 2 —— — 3
தஸ்ஹீ 3 — 4 —— 2 — 9

4-வது பெண்பிள்ளைகளால் மிகுதிக் காரர்களாகும்விதம்.

இறந்துபோனவனுக்கு புத்திரனாவது பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது சகோதரனாவது இல்லாதிருந்து ஒரு சகோதரி அல்லது பல சகோதரிகளுடன் புத்திரி அல்லது பவுத்திரி அல்லது பிரபவுத்திரி இவர்களில் ஒருத்தி அல்லது பலர்கள் இருந்தால் அப்போது சகோதரி அல்லது சகோதரிகள் மிகுதிக்காரியாகிறார்கள் அதாவது ஷை புத்திரி அல்லது பவுத்திரி அல்லது பிரபவுத்திரி இவர்களுக்கு

சேரவேண்டிய தாயபாகம் சேர்ந்து விட்டதின் பின் மீத மிருப்பதை சகோதரிகள் மிகுதிக்காரிகளாய் அடைவார்கள் இந்த மீதியில் எல்லா சகோதரிகள் சமபாகம் பாகித்துக் கொள்ளவேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3.
புத்திரி....புத்திரி...சகோதரி
3ல் 2............மிகுதி
2 —— 1

மய்யத்து சைது, மஸ்அலா 4.
பதி...புத்திரி...சகோதரி
¼........½......மிகுதி
1........2.......1

5-வது மகாசிமா அதாவது 3-ல் 1 கிடைக்கும் விதம்.

இறந்துபோனவனுடைய பிதாமகனுடன் சகோதரி யிருந்தால் அப்போது பிதாமகனுக்கு கிடைக்கும் பாகத்தில் பாதிதான் கிடைக்கும் இந்த சங்கதி பிதாமகனுடைய சங்கதியில் பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3.
பிதாமகன்...சகோதரி
3-ல் 2 .....3-ல் 1
2 —— 1

6-வது சகோதரி மஹ்ரூமாய்ப் போகும் விதங்கள் 3.

1-வது இறந்துபோனவனுக்கு பிதாவாவது புத்திரனாவது பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது பிர பிரபவுத்திரனாவது சில சந்தர்ப்பங்களில் சகோதரனாவது இருந்தால் அப்போது சகோதரிக்கு ஒன்றும் கிடையாது 2-வது அடிமைதனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரர்களாவது இருக்கிறமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர் இருந்தாலும் இல்லாமல் போனாலும் கூட எஜமானுடைய சகோதரிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துகிடைக்கமாட்டாது ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜுயீ

புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய தாயபந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு சகோதரி வாரிசாவாள் 3-வது ஷறுப்படி அடிமையாய்ப் போயிருந்தாலும் அல்லது முர்திதாய் போயிருந்தாலும் அல்லது காபிராயிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும் அல்லது வாரிசை ஷறுவுக்கு விரோதமாய் கொலைசெய்திருந்தாலும் சகோதரி மஹ்றூமாவாள்.

சகோதரனால் சகோதரி மஹ்றூமாகும் உதாரணம்.

மய்யத்து சைகு, மஸ்அலா 6,

பின்னபிதுருகி 2...பாட்டி...பதி...சகோதரி...சகோதரன்

3-ல் 1......6-ல் 1.... ½............மிகுதி

2 —— 1 — 3 மஹ்றூம் ... மஹ்றூம்

சகோதரன் வராமல் சகோதரியே இருந்திருப்பாளானால் அப்போது சகோதரி மஹ்றூமாகமாட்டாள் உதாரணம்

மய்யத்து சைகு, மஸ்அலா 6, அவுல் 9.

பின்னபிதுருகி 2...பாட்டி...பதி...சகோதரி

3-ல் 1..........6-ல் 1... ½..... ½

அவுல் 2 .... 1 ... 3 ... 3

இப்படி சகோதரிக்கு மஹ்றூமாக்கும் சகோதரனுக்கு தரித்திர சகோதரனென்றுபெயர்.

7-வது ரத்து பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்குமிகுதிக்காரர்கள் இருந்திராமல் பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க வாரிசுகளாகிய புத்திரி, பவுத்திரி, சகோதரி, பின்னோதரி பின்னபிதுருகி,பின்னபிதுருகன்,மாதா, மாதாமகி, பிதாமகி, இவர்களுடன் கூட்டாய் சகோதரி. தாபத்திரும்பலை தன் பாகப்படி பெற்றுக் கொள்வாள் உதாரணம்.

மய்யத்து சைகு, மஸ்அலா 6, ரத்தின் மஸ்அலா 4.

மாதா..........சகோதரி

6-ல் 1.......... ½

1 3

8-வது சகோதரியால் மஹ்றூமாகும் விதம்.

1-வது, 2 சகோதரிகள் இருந்தால் பின்னோதரி மஹ்றூமாவாள் 2-வது சகோதரியும் புத்திரியும் இருந்தாலும் அல்லது சகோதரியும் பவுத்திரியும் இருந்தாலும் அல்லது சகோதரியும் பிர பவுத்திரியும் இருந்தாலும் அப்போது பின்னோதரனும், பின்னோதரியும்,சகோதரன்மகனும், பின்னோதரன்மகனும்,சிற்றப்பனும், பிதாவின் பின்னோதரனும், சிற்றப்பன் மகனும், பின்னோதர சிற்றப்பன் மகனும், எஜமானனும், எஜமானிச்சியும் மஹ்றூமாவார்கள் இவர்கள் மிகுதிக்காரர்களாயிருக்கிறார்கள் மிகுதி மீராதினால் இவர்கள் மஹ்றூமாகிறார்களே ஒழிய வேறில்லை ஆனால்ஒரு சகோதரியிருந்தால் அப்போது இறந்தவனுடைய சமீபமுள்ள பந்துக்களாகிய 25 பேர்களில் ஒருவரும் மஹ்றூமாகமாட்டார்கள்.

9-வதுசகோதரியுடன் சேர்ந்து வாரிசுகளாகும் 23 பேர்களின் விதம்.

1-வது பிதாமகன், 2-வது மாதா, 3-வது மாதாமகி, 4-வது பிதாமகி, 5-வது புத்திரி, 6-வது பவுத்திரி, 7-வது பிரபவுத்திரி 8-வது சகோதரன், 9-வது பின்னோதரன், 10-வது பின்னோதரி, 11-வது பின்ன பிதுருகன், 12-வது பின்ன பிதுருகி, 13-வது சகோதரன், 14-வதுபின்னோதரன் 15.வதுசகோதரன்மகன்,16-வது சிற்றப்பன்,17-வது பின்னோதரசிற்றப்பன்,18-வது சிற்றப்பன்மகன், 19-வது பின்னோதர சிற்றப்பன் மகன், 20-வது பதி, 21-வது பத்னி, 22-வது எஜமான், 23-வது எஜமானிச்சி.

10-வது சகோதரியுடன் யாரார் சேர்ந்து மிகுதிக்காரர்களாகிறார்கள் என்பதின் விதம்.

பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன் இல்லாதபோது சகோதரிகளுடன் சகோதரர்கள் சேர்ந்து மிகுதிக்காரர்களாகிறார்கள்.

11வது கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தால் அப்போது ஒவ்வொரு சகோதரனுக்கு 2, பாகமும் ஒவ்வொரு சகோதரிக்கு ஒவ்வொரு பாகமுமாக பாகித்துக்கொள்ள வேண்டும் பின்னும் சகோதரர்களும் சகோதரர்களும் அல்லது சகோதரிகளும் சகோதரிகளும் இருந்தால் அப்போது எல்லோரும் சமபாகமாக பாகித்துக் கொள்ள வேண்டும்.

14-வது பின்னோதரான் இவனுக்கு 10 விதமுண்டு

1-வது பின்னோதரான் மிருதிக்காரனாகும் விதம்

இறந்தவனுக்கு தகப்பனாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது, இல்லாதிருந்தால் அப்போது இவன்மிருதிக்காரனாகிறான்.

2-வது சொத்து முழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

மய்யத்துக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, சகோதரனாவது பங்குக்காரர்களாவது இல்லாதிருந்து ஏக பின்னோதரான் இருந்தால் அப்போது சொத்து முழுமையும் பின்னோதரான், பெற்றுக் கொள்வான் பின்னும் அடிமைதனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கும் ஜவில் புருலும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது, பிதாமகனாவது பிதாவாவது சகோதரனாவது, இல்லாதிருகால் அப்போது எஜமானுடையபின்னோதரான், மிருதிக்காரனாய் மீள்க்கப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான் ஒரு வேளை மீள்க்கப்பட்டவனுடைய ஜவில்புருலும் இருந்து மிருதிகாரர் இல்லாதிருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்குபோக மீதத்தை அடைவான்.

3-வது மீத சொத்து முழுமையும் பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகபின்னோதரான் மாத்திரம் இருந்தால் அப்போது மீதசொத்தை இவன் ஒருவனே அடைவான்.

4-வது சமபாகமடையும் விதம்.

மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து பல பின்னோதார்கள் இருந்தால் அப்போது மீதசொத்தை சமபாகமாக பாகித்துக் கொள்வார்கள் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6. தஸ்ஹீ 12.
மாதா, பின்னோதரான், பின்னோதரான்
6-ல் 1..மிருதி........மிருதி
மஸ்அலா 1 —— 5
தஸ்ஹீ 2 — 5 5

5-வது மீதியில் 3-ல் 2 பெற்றுக் கொள்ளும் விதம்.

மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னோதார்களும்பின்னோதரிகளும் இருந்தால் அப்போது 2 பின்னோதரிகளுக்கு கிடைக்கும் பாகம் ஒரு பின்னோதரானுக்கு கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.
மாதா...பின்னோதரான்...பின்னோதரான...பின்னோதரி
6-ல் 1..மிருதி..........மிருதி.......... மிருதி
1 ... 2 .... 2 1

6-வது பின்னோதரான் மஹ்றுமாகும் விதங்கள் 6.

1-வது பிதாவாவது புத்திரனாவது. பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, சகோதரனாவது, இருந்தால் அப்போது பின்னோதரானுக்கு பாகம் கிடையாது. 2-வது புத்திரியும், சகோதரியும், இவ்விரண்டு பேரும் சேர்ந்துவந்தாலும் பாகமில்லே. 3-வது பவுத்திரியும், சகோதரியும், இவ்விரண்டு பேரும் சேர்ந்து வந்தாலும் பாகமில்லை 4-வது பிரபவுத்திரியும், சகோதரியும் இவ்விரண்டு பேரும் சேர்ந்து வந்தாலும் பின்னோதரானுக்கு பாகம் கிடையாது, இவர்களால் பின்னோதரான் மஹ்றுமாகிறதில்லை இவர்கள் வருந்தினால் மீதம் மிருதியில்லை ஆகையால் பின்னோதரான் மஹ்றுமாகிறான். 5-வது அடிமைதனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில் புருகாவது அசபத்துக்காரனாவது இருந்திருமல் மீட்டின எஜமானும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது பவுத்திர

னாவது பிரபவுத்திரனாவது, பிதாவாவது, சகோதரனாவது, இல்லாமல் போனால் அப்போது பின்னோதரனுக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கும் இவர்கள் இருந்தால் கிடைக்கமாட்டாது. 6-வது ஒருப்படி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்தத்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும் அல்லது ஒருவுக்கு விரோதமாய் வாரிசைகொலைசெய்திருந்தாலும் மஹ்றுமாவான்.

7-வது பின்னோதரனால் 8 பேர் மஹ்றுமாகும் விதம்.

1-வது சகோதரன்மகன், 2-வது பின்னோதரன்மகன், 3-வது சிற்றப்பன், 4-வது பிதாவின் பின்னோதரன், 5-வது சிற்றப்பன் மகன், 6-வது பிதாவின் பின்னோதரன்மகன், 7-வது எஜமான், 8.வது எஜமானிச்சி, இவர்கள் மஹ்றுமாகிறார்கள்.

8-வது மகாசிமா பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதரனும் பிதாமகனுமிருந்தால் அப்போது சரிசமானமான பாகம்பாகித்து பின்னோதரனுக்கு கொடுக்கப்படும் இந்த சங்கதி பிதாமகனுடைய சங்கதியில் பார்த்துக் கொள்ளவும்.

9-வது பின்னோதரனுடன் 14 பேர் சேர்ந்து வாரிசுகளாகும் விதம்.

1-வது பிதாமகன், 2-வது மாதா, 3-வது மாதாமகி, 4 வது பிதாமகி, 5-வது புத்திரி, 6-வது பவுத்திரி, 7-வது பிரபவுத்திரி, 8-வது சகோதரி 9-வது பின்னோதரன், 10-வது பின்னோதரி, 11-வது பதி, 12-வது பத்னி, 13-வது பின்னபிதுருகன், 14-வது பின்னபிதுருகி,

10-வது பின்னோதரனுடன் யாரார் சேர்ந்து மிகுதியடைவார்கள் என்பதின் விதம்.

பிதா பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், சகோதரன் இவர்கள் இல்லாதிருந்து பின்னோதரர்களும் பின்னோதரிகளும் இருந்தால் அப்போது இவர்கள் சேர்ந்து மிகுதியடைவார்கள்.

15-வது பின்னோதரி இவர்களுக்கு 13-விதமுண்டு.

1-வது 2-ல் 1-பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுடைய 25-வாரிசுகளில் 11-வாரிசுகளாகிய 1. பிதா, 2. புத்திரன், 3. பவுத்திரன், 4. பிரபவுத்திரன், 5. சகோதரன், 6. பின்னோதரன் இவர்களில் யாராவது பின்னும் 7. புத்திரி, 8. சகோதரி, 9. பவுத்திரி, 10. பிரபவுத்திரி, இவர்களில் யாராவது 1-க்கு மேல்பவர்களாவது பின்னும், 11. பின்னோதரியாவது இருந்திருமல் 14-வாரிசுகளாகிய 1. மாதா, 2. மாதாமகி, 3. பிதாமகி, 4. பின்னபிதுருகி, 5. பின்னபிதுருகன், 6. சகோதரன்மகன், 7. பின்னோதரன் மகன், 8. சிற்றப்பன், 9. பின்னோதரசிற்றப்பன், 10. சிற்றப்பன்மகன், 11. பின்னோதரசிற்றப்பன்மகன், 12. பதி, 13. பத்னி, 14. எஜமான், அல்லது எஜமானிச்சி இவர்களில் யாராவது இருந்தால் அப்போது ஏக பின்னோதரிக்கு 2-ல் 1 பாகம் கிடைக்கும். உதாரணம்.

மய்யத்து ஸைகு, மஸ்அலா 6, அவ்ல் 7

பின்னோதரி	பின்னபிதுருகி	பதி
$\frac{1}{2}$	6-ல 1	$\frac{1}{2}$
3	1	3

2-வது 3-ல் 2-பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுடைய 25-வாரிசுகளில் 11-வாரிசுகளாகிய 1-வது பிதா, 2-வது பிதாமகன், 3-வது புத்திரன், 4-வது பவுத்திரன், 5-வது பிரபவுத்திரன், 6-வது சகோதரன், 7-வது பின்னோதரன், 8-வது புத்திரி, 9-வது சகோதரி, 10-வது பவுத்திரி, 11-வது பிரபவுத்திரி, இவர்கள் இருந்திருமல் 14-வாரிசுகளாகிய 1 மாதா, 2 மாதாமகி, 3 பிதாமகி, 4 பின்னபிதுருகி, 5 பின்னபிதுருகன், 6 சகோதரன்மகன், 7 பின்னோதரன்மகன், 8 சிற்றப்பன், 9 பின்னோதரசிற்றப்பன், 10 சிற்றப்பன் மகன், 11 பின்னோதர சிற்றப்பன்மகன், 12 பதி, 13 பத்னி, 14 எஜமான் அல்லது எஜமானிச்சி இவர்களில் ஒருவருடனாவது பல பின்னோதரிகள் இருந்தால் அப்போது பல பின்னோதரிகளுக்கு 3-ல் 2-பாகம் கிடைக்கும், இதை எத்தனை பின்னோதரிகள் இருந்தாலும் சமபாகம் பாகித்துக்கொள்ளவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 6. ரத்தின் மஸ்அலா 5

மாதா	பின்னோதரி	பின்னோதரி
6-ல் 1	3-ல் 2	
1	2	2

3—வது 6-ல் 1. கிடைக்கும் விதம்.

இறந்தவனுடைய 25-வாரிசுகளில் 10-வாரிசுகளாகிய பின்னோதரன், புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிதா, பிதாமகன், சகோதரன் இவர்கள் இருந்திராமல் ஷை 14-பேர்களில் எந்த வாரிசாவது இருந்தபோதிலும் ஏக சகோதரியுடன் பின்னோதரியாவது, பின்னோதரிகளாவது இருந்தால் அப்போது பின்னோதரி, அல்லது பின்னோதரிகளுக்கு, 6-ல் 1-பாகம் கிடைக்கும் உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 6. ரத்தின் மஸ்அலா 5

மாதா	சகோதரி	பின்னோதரி
6-ல் 1	½	6-ல் 1
1	3	1

பல பின்னோதரிகள் இருந்தால்6-ல் ஒன்றை சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும், ஏக பின்னோதரி யிருந்தால் 6-ல் 1· முழுவதும் இவளே எடுத்துக்கொள்ளவேண்டும்.

4—வது ஆண்பிள்ளைகளால் மிருதிக்காரியாய் 3-ல் 1. பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பிதா 1. பிதாமகன் 2. புத்திரன் 3. பவுத்திரன் 4. பிரபவுத்திரன் 5. சகோதரன் 6. இவர்கள் இருந்திராமலும் பின்னும் புத்திரியும், சகோதரியும், பின்னும் பவுத்திரியும் சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும் சகோதரியும் இவர்களும் இருந்திராமல் மற்ற வாரிசுகளாகிய மாதாவும், பின்னும் மாதாமகியும், பின்னும் பிதாமகியும், பின்னும் ஏகபுத்திரியும், பின்னும் ஏக பவுத்திரியும், ஏகசகோதரியும், பின்னும் புத்திரியும், புத்திரியும், பின்னும் பவுத்திரியும் பவுத்திரியும், பின்னும் சகோதரியும், சகோதரியும், பின்னும் பின்னபிதாருகளும், பின்னும் பின்னபிதாருகியும் இவர்களில் யாராவது இருந்தபோதிலும் பின்னோதரி, அல்லது பின்னோதரிகளுடன் பின்னோதரன் வந்தால் அப்போது பின்னோதரிகள் மிருதிக்காரியாகிறார்கள், அப்போது மீதமிருப்பதில் ஒவ்வொரு பின்னோதரனுக்கு 2-பாகமும் ஒவ்வொரு பின்னோதரிக்கு ஒவ்வொரு பாகமும் கிடைக்கும், இதற்கு அத்தாஸீபாவது. லித்துகரிமித்லி ஹைசில் உன்சயைனி. மஅனு, 2 பெண்பிள்ளைகளுடைய பங்குக்கு ஒப்பாக ஒரு ஆண்பிள்ளைக்காக இருக்கிறது.

5—வது பெண்பிள்ளைகளால் மிருதிக்காரியாகும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனாவது 1, பவுத்திரனாவது 2, பிரபவுத்திரனாவது 3, பிதாவாவது 4, பிதாமகனாவது 5, சகோதரனாவது 6, இல்லாதிருந்து பின்னும் 2-சகோதரிகளாவது, பின்னும் ஒருபுத்திரியும், ஒரு சகோதரியுமாவது பின்னும் ஒரு பவுத்திரியும் ஒரு சகோதரியுமாவது பின்னும் ஒரு பிரபவுத்திரியும் ஒரு சகோதரியுமாவது இல்லாதிருந்து ஒரு புத்திரியாவது, ஒரு பவுத்திரியாவது, ஒரு பிரபவுத்திரியாவது இருந்து இவர்களுடன் பின்னோதரியாவது பின்னோதரிகளாவது இருந்தால் அப்போது பின்னோதரிகள் இந்த பெண்களால் மிருதிக்காரியாகிறார்கள், பின்னும் 2-புத்திரிகள் இருந்தாலும் பின்னும் 2 பவுத்திரிகள் இருந்தாலும், பின்னும் 2-பிரபவுத்திரிகள் இருந்தாலும் பின்னும் ஒரு பவுத்திரியும் ஒரு புத்திரியுமிருந்தாலும் பின்னும் ஒரு பிரபவுத்திரியும் ஒரு புத்திரியுமிருந்தாலும் பின்னும் ஒரு பவுத்திரியும் ஒரு பிரபவுத்திரியுமிருந்தாலும் அப்போது இந்த பெண்களால் பின்னோதரிகள் மிருதிக்காரர்களாகிறார்கள்.

6—வது மீதமுழுவதும் பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரன் மகனாவது, சிற்றப்பனாவது, பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது, பின்னோதரசிற்றப்பன் மகனாவது, எஜமானாவது, எஜமானிச்சியாவது, சகோதரியாவது, இல்லாமலிருந்து—புத்திரியாவது, பவுத்திரியாவது, பிரபவுத்திரியாவது இருந்தால் அப்போது இவர்களின் பங்கு கொடுத்துவிட்டு மீதமிருக்கும் முழுவதும் பின்னோதரிகள் பெற்றுக்கொள்ளுவார்கள், உதாரணங்கள்.

சைஅது, மஸ்அலா 6.
மய்யத்து
மாதா....பவுத்திரி.....பின்னோதரி
6-ல் 1........$\frac{1}{2}$..........மிகுதி
1 —— 3 —— 2

சைஅது, மஸ்அலா 6.
மய்யத்து
மாதா....புத்திரி.....பின்னோதரி
6 ல் 1.... $\frac{1}{2}$..........மிகுதி
1 —— 3 —— 2

சைஅது, மஸ்அலா 6.
மய்யத்து
மாதா.........பிரபவுத்திரி.......பின்னோதரி
6-ல் 1............$\frac{1}{2}$.................மிகுதி
1 —— 3 —— 2

7வது பின்னோதரிகள் மஹ்றூமாகும் விதங்கள் 7.

1-வது இறந்துபோனவனுக்கு பிதாவாவது, புத்திரனாவது பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது இருந்தால் பின்னோதரிக்கு பாகமில்லை 2-வது புத்திரியும், சகோதரியும், இவ்விரண்டு பேரும் சேர்ந்திருந்தாலும் பாகமில்லை 3-வது பவுத்திரியும் சகோதரியும் இவ்விரண்டுபேரும் சேர்ந்திருந்தாலும் பாகமில்லை 4-வது பிரபவுத்திரியும் சகோதரியும் இவ்விரண்டுபேரும் சேர்ந்திருந்தாலும் பாகமில்லை 5-வது பின்னோதரன் இல்லாதிருந்து 2 சகோதரிகள் இருந்தாலும் பாகமில்லை 6-வது அடிமைதனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில் புருகாவது அசபத்துக்காரர்களாவது இருந்திராமல் மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு அசபத்துக்காரர்கள் இருந்தாலும் இல்லாமற்போனாலும் கூட எஜமானுடைய பின்னோதரிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துகிடைக்கமாட்டாது ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜயீ புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானுடைய சகோதரிகள் புத்திரிகள் பின்னோதரிகள் இவர்கள் இருந்தாலும் அல்லது எஜமானுடைய தூரபந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாகளின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து பின்னோதரிக்கு கிடைக்கும். 7-வது ஷருப்படி பின்னோதரி அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்திதாய் போயிருந்தாலும், காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில் குடியிருக்கப்பட்டவளாயிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் பின்னோதரி மஹ்றூமாவாள்.

8-வது பின்னோதரியால் மஹ்றூமாகும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதரியிருந்தால் இறந்தவனுடைய எந்த வாரிசும் மஹ்றூமாகிறதில்லை.

9-வது 3-ல் 1 அதாவது மகாசிமாபெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதரியும், பிதாமகனுமிருந்தால் அப்போது மகாசிமாசெய்து ஒரு பாகம் பின்னோதரிக்கும் 2 பாகம் பிதாமகனுக்கும் கொடுக்கப்படும் உதாரணம்.

சைஅது, மஸ்அலா 3
மய்யத்து
பின்னோதரி...பிதாமகன்
3-ல் 1.....3-ல் 2
1 — 2

10-வது ரத்து பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மிகுதிக்காரர்கள் இருந்திராமல் பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்து பெற்றுக் கொள்ளத்தக்க வாரிசுகளாகிய ஒரு அல்லது பல புத்திரிகளாவது, ஒரு சகோதரியாவது ஒரு அல்லது பல பவுத்திரிகளாவது, மாதாவாவது, மாதாமகியாவது, பிதாமகியாவது இருந்தால் அப்போது பின்னோதரி இவர்களுடன் கூட்டாய் தன் பாகப்படி தாயத் திரும்பலை பெற்றுக் கொள்வாள்.

11-வது சொத்து முழுமையும் பெற்றுக் கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு 25 வாரிகள் இல்லாதிருந்து பின்னோதரி மாத்திரமிருந்தால் அப்போது இறந்தவனுடைய சொத்து முழுமையும் இவளே பெற்றுக்கொள்வாள்.

12-வது பின்ஹோதரியுடன் சேர்ந்து வாரிசாகும் விதம்

1-வது பிதாமகன், 2.வது மாதா, 3.வது மாதாமகி, 4-வது பிதாமகி, 5-வது புத்திரி, 6-வது பவுத்திரி, 7.வது பிரபவுத்திரி, 8-வது சகோதரி, 9-வது பின்ஹோதரன், 10-வது பின்ஹோதரி, 11 வது சகோதரன் மகன், 12-வது பின்ஹோதரன் மகன் 13-வது சிற்றப்பன் 14-வது பின்ஹோதர சிற்றப்பன், 15-வது சிற்றப்பன் மகன் 16,வது பின்ஹோதரசிற்றப்பன் மகன், 17.வது பதி, 18.வது பத்னி, 19,வது பின்ன பிதுருகன், 20-வது பின்னபிதுருகி, 21.வது எஜமான், 22,வது எஜமானிச்சி.

13-வது பின்னஹோதரியுடன் யாரார் சேர்ந்து மிகுதியடைவார்கள் என்பதின் விதம்.

இறந்து போனவனுக்கு பிதா, பிதா மகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், சகோதரன் இல்லாமலிருந்து பின்ஹோதரிகளுடன் பின்ஹோதரர்களிருந்தால் அப்போது இவர்கள் சேர்ந்து மிகுதி பெற்றுக் கொள்வார்கள்.

16-வது பின்ன பிதுருகன் அல்லது பின்ன பிதுருகி இவனுக்கு அல்லது இவளுக்கு 9 விதமுண்டு.

1-வது சமபாகம் அடையும் விதம்.

இறந்தவனுக்கு பிதாவாவது பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிர பவுத்திரனாவது, புத்திரியாவது பவுத்திரியாவது, பிரபவுத்திரியாவது, பின்னும் புத்திரியும், புத்திரியுமாவது, பவுத்திரியும், பவுத்திரியுமாவது, புத்திரியும், பவுத்திரியுமாவது, இல்லாதிருந்து பின்ன பிதுருகனாவது, பின்ன பிதுருகியாவது. இருபேர்களாக அல்லது பலர்களாக இருந்தால் அப்போது இவர்கள் தங்களுக்கு கிடைக்கும் 3-ல் 1 மூன்றில் ஒன்றை சமபாகமாக பாகித்துக் கொள்வார்கள் இவர்களில் ஆணுக்கு அதிகபாகமும் பெண்ணுக்குகுறைந்தபாகமுமில்லை இவர்கள்சமபாகஸ்தர்களாகவேயிருக்கிறார்கள்.

2-வது பின்ன பிதுருகன் மஹ்றூமாகும் விதங்கள். 6

1.வது இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிர பிரபவுத்திரனாவது, புத்திரியாவது, பவுத்திரியாவது, பிரபவுத்திரியாவது இருந்தால் அப்போது பின்ன பிதுருகனும், பின்னபிதுருகியும், மஹ்றூமாகிறார்கள். 2,வது புத்திரியும் புத்திரியும், சேர்ந்து வந்தாலும், மஹ்றூமாகிறார்கள். 3.வது பவுத்திரியும், பவுத்திரியும், சேர்ந்து வந்தாலும், மஹ்றூமாகிறார்கள். 4-வது புத்திரியும்,பவுத்திரியும், சேர்ந்து வந்தாலும், மஹ்றூமாகிறார்கள். 5.வது மீள்க்கப்பட்டவனுடைய சொத்தை எஜமானனுடையபாத்தியவிஷயமாய்பின்னபிதுருகனுக்காவது பின்ன பிதுருகிக்காவது, எவ்வளவும் பாத்தியமில்லை. ஆனால் வாரிசுகள் இல்லாதவர்களாகிய ரஜயீ புத்திரி அதாவது பால்மூலமான புத்திரி இருந்தாலும் அல்லது எஜமானனுடையசகோதரிகள், புத்திரிகள், பின்ஹோதரிகள்," இவர்கள் இருந்தாலும் அல்லது எஜமானனுடைய தூரபந்துக்கள் இருந்தாலும் இவர்களுக்கு சொத்து கொடுக்கப்படுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறபடிக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்துக்கு பின்னபிதுருகன்வாரிசாவான் 6-வது ஷரூப்படிக்கு அடிமையாய்ப் போயிருந்தாலும் முர்தத்தாய் போயிருந்தாலும் காபிறாயிருந்தாலும்அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும் அல்லது ஷறூவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் மஹ்றூமாவான்.

3-வது மொத்த சொத்தில் 3-ல் 1. கிடைக்கும் விதம்.

மேல்எழுதியப்படி இறந்தவனுக்கு மேற்கண்ட 1 முதல் 4 வரையிலுள்ளவர்கள் இல்லாதிருந்துபலபின்னபிதுருகானும் பலபின்னபிதுருகிகளும் இருந்தால் அப்போது இவர்களுக்கு 3-ல1 பாகம் கிடைக்கும். இந்த 3-ல் ஒன்றை எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும், இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது பயின்கானூ அக்சரமின்ஜாலிக பஹும் ஷுறகாவு பில்சுலுதி, மஃனா; அவர்கள் அனேகர்களாயிருப்பார்களானால் அவர்கள் 3-ல் 1-ல் கூட்டாளியாயிருக்கிறார்கள்.

4-வது மொத்தசொத்தில் 6-ல் 1-பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு மேற்கண்ட 1-முதல் 4-வரையிலுள்ளவர்கள் இல்லாதிருந்து ஏகபின்ன பிதுருகனாவது ஏக பின்னபிதுருகியாவது

இருந்தால் அப்போது ஏகபின்னபிதுருகன் அல்லது ஏகபின்னபிதுருக்கு மொத்தசொத்தில் 6-ல் 1-பாகம் கிடைக்கும், இவ்விஷயத்தில் அல்லாஹுதஆலா சொல்லுகிறதாவது வயின்கான ரஜுலுன் யூறது கலாலதன் அவிம்ரஅதுன் வலஹு அகுன் அவுஉக்துன் பலிகுல்லி வாஹிதின் மின்ஹுமஸ்ஸுதுஸு, அதாவது ஒருவன் அல்லது ஒருவன் கலாலாவுக்குரியவனாகில் அவனுக்கேகசகோதரனாவது, சகோதரியாவது இருக்கும் பக்ஷத்தில் அவ்விருவர்களில் ஒவ்வொருவருக்கு 6-ல்1 இருக்கிறது.

5-வது பின்னபிதுருகனால் மஹ்றூமாகும் விதம்.

இறந்தவனுடைய ஜவில்புருதாவது, அசபத்துக்காரராவது பின்னபிதுருகனாலும், பின்னபிதுருகியாலும் மஹ்றூமாகிறதில்லை.

6-வது சொத்து முழுமையும் பாகப்படியும், ரத்தின் படியும் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு பின்னபிதுருகன், அல்லது பின்னபிதுருகியைத் தவிர மற்ற 24 வாரிசுகளும் இல்லாதிருந்தால் அப்போது தன் பாகமாகிய 6-ல் 1. பெற்றுக்கொள்வதும் தவிர பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது ரத்தின் வகையால் மீதமுழுமையும் பெற்றுக்கொள்வான்.

7-வது பின்னபிதுருகன், மிருதிக்காரன் அல்ல என்பதின் விதம்.

இவன் ஜவில்புருதாயிருக்கிறான், அசபத்துக்காரனல்ல.

8-வது பின்னபிதுருகனோடு 17-பேர்கள் சேர்ந்து வரப்பட்டவர்களின் விதம்.

இறந்தவனுடைய 1-வது சகோதரன்மகன், 2-வது பின்னோதரன்மகன், 3-வது சகோதரி, 4-வது சகோதரிகள், 5-வது பின்னோதரி, 6-வது பின்னோதரிகள், 7-வது சிற்றப்பன், 8-வது பின்னோதர சிற்றப்பன், 9-வது சிற்றப்பன்மகன், 10-வது பின்னோதரசிற்றப்பன்மகன், 11-வது மாதா, 12-வது மாதாமகி, 13-வது பிதாமகி, 14-வது பதி, 15-வது பத்னி, 16-வது எஜமான், 17-வது எஜமானிச்சி இவர்கள் பின்னபிதுருகனோடு சேர்ந்துவருகிறார்கள்.

9-வது பின்னபிதுருகனுடன் யாரார் சேர்ந்து ரத்து பெற்றுக்கொள்ளுவார்கள் என்பதின் விதம்.

இறந்தவனுக்கு ஜவில்புருதாவது மிருதிக்காரர்களாவது இல்லாதிருந்து பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் அப்போது பதி, அல்லது பத்னி, மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, பின்னோதரி இவர்களில் யாராவது பின்னபிதுருகனுடன் சேர்ந்துவந்தால் அப்போது பின்னபிதுருகன் தன் பாகப்படி ரத்து பெற்றுக்கொள்வான்.

17-வது சகோதரன்மகன், இவனுக்கு 7-விதமுண்டு.

1-வது மஹ்றூமாகும் விதங்கள். 9

1.வது இவனும் மிருதிக்காரனாயிருக்கிறான், இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது இருந்தால் அப்போது சகோதரன் மகனுக்கு பாகமில்லை. 2.வது புத்திரியும் சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தால் மஹ்றூமாவான். 3.வது பவுத்திரியும், சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 4-வது பிரபவுத்திரியும், சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 5.வது புத்திரியும் பின்னோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 6-வது பவுத்திரியும், பின்னோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 7.வது பிரபவுத்திரியும் பின்னோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். பின்னும் ஷெடி 2.வது முதல் 7.வரையிலுள்ள பெண்களால் சகோதரன்மகன் மஹ்றூமாகிறதில்லை, ஆனால் இவர்கள் வருவதினால் மீதம் ஒன்றும் மீறாதபடியால் மஹ்றூமாகிறான் 8-வது அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரராவது இருந்திராமல் மீட்டினஎஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது இருந்தால் சகோதரன்மகனுக்கு மீட்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது. 9-வது ஷறுப்படி சகோதரன்மகன் அடிமைப்பட்டுப்போயிருந்தாலும், அல்லது முர்த்தத்தாய்ப்போயிருந்

தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தாருல்ஹறாபில் குடியிருக்கிறவனாயிருந்தாலும், அல்லது ஒருவருக்கு விரோதமாய் வாரிசைகொலைச்செய்திருந்தாலும் மஹ்றூமாவான்.

2-வது சொத்து முழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு மேல்கண்டவர்களும், மாதா, மாதாமஹி, பிதாமஹி, பதி. பத்னி, பின்ன பிதுருகி, இவர்களும் இல்லாதிருந்து பின்னோதரன் மகனாவது, சிற்றப்பனாவது பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது, பின்னோதர சிற்றப்பன்மகனாவது, எஜமானனாவது, எஜமானிச்சியாவது இருக்கபோதிலும் சகோதரன்மகன் ஏகனாயிருந்தால் அப்போது சொத்துமுழுமையும் இவனே அடைவான். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய சகோதரன்மகன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைகிறான்.

3-வது மீதசொத்தை அடையும் விதம்.

இறந்தவனுக்கு மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து புத்திரியாவது 1, புத்திரிகளாவது 2, பவுத்திரியாவது 3, பவுத்திரிகளாவது 4, மாதாவாவது 5, மாதாமஹியாவது 6, பிதாமஹியாவது 7, சகோதரியாவது 8, சகோதரிகளாவது 9, பின்னோதரியாவது 10, பின்னோதரிகளாவது 11, பின்னபிதுருகியாவது 12, பின்னபிதுருகனாவது 13, பதியாவது 14, பத்னியாவது 15, இருக்கபோதிலும் சகோதரன்மகன் ஏகனுக்கு மீதமுழுமையும் கிடைக்கும். அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு மிருதிக்காரர்கள் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இல்லாதிருந்து இவனுக்கு புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிதா, பிதாமகன், சகோதரன், பின்னோதரன் இல்லாதிருந்து மீள்க்கப்பட்டவனுடைய ஜவில்புருது இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்துவிட்டு மீதத்தை அடைவான்.

4-வது சமபாகம் அடையும் விதம்.

இறந்தவனுக்கு சகோதரனுடைய ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது மேற்கண்ட முழுசொத்தையாவது, மீதசொத்தையாவது சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும்.

5-வது சகோதரன் மகனால் 6 பேர் மஹ்றூமாகும் விதம்.

1.வது பின்னோதரன் மகன், 2.வது சிற்றப்பன், 3·வது பிதாவின் பின்னோதரன், 4.வது சிற்றப்பன் மகன், 5.வது பிதாவின் பின்னோதரன்மகன், 6-வது எஜமான், அல்லது எஜமானிச்சி இவர்கள் மஹ்றூமாகிறார்கள்.

6-வது சகோதரன் மகன் கூட்டாய் பாகித்துக் கொள்ளும் விதம்.

சகோதரனுடைய ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது எல்லோரும் சமபாகம் அடைவார்கள் ஆனால் இவர்களுடைய சகோதரிகள், தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள் ஏனெனில் ௸ சகோதரிகள், தூரபந்துக்களாயிருக்கிறார்கள்.

7-வது சகோதரன் மகனுடன் சேர்ந்து வாரிசுகளாகும் விதம்.

இறந்தவனுக்கு பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமஹி, பிதாமஹி, சகோதரி, சகோதரிகள், பின்ன பிதுருகன், பின்னபிதுருகி இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்கள் சகோதரன் மகனுடன் சேர்ந்து வாரிசாவார்கள்.

18-வது பின்னோதரன் மகன் இவனுக்கு 7 விதமுண்டு.

1வது மஹ்றூமாகும் விதம்.

1-வது இவனும் மிருதிக்காரனாயிருக்கிறான் இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிர பிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, இருந்தால் அப்போது பின்னோதரன் மகனுக்கு பாகமில்லை. 2-வது புத்திரியும், சகோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தால் மஹ்றூமாவான். 3.வது பவுத்திரியும்

சகோதரியும், இருபேரும்சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 4-வது பிரபவுத்திரியும் சகோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான் 5-வது புத்திரியும், பின்னோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 6-வது பவுத்திரியும், பின்னோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 7-வது பிரபவுத்திரியும், பின்னோதரியும், சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். பின்னும் ஷை 2-வது முதல் 7-வது வரையிலுள்ள பெண்களால் பின்னோதரன் மகன் மஹ்றூமாகிறதில்லை ஆனால் இவர்கள் வருவதினால் மீதம் ஒன்றும் மீறமற்போகிறபடியால் மஹ்றூமாகிறான். 8-வது ஷறுப்படி பின்னோதரன்மகன், அடிமையாய்ப்போயிருந்தாலும் அல்லது முர்தித்தாய்ப்போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹறாபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும் அல்லது தொறவுக்கு விரோதமாய் வாரிசை கொலைச் செய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்றூமாவான். 9-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்பறுதாவது அசபத்துக்காரராவது இருந்திருயல் மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, இருந்தால் மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது.

2-வது சொத்துமுழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு மேலேகண்டவர்களும், மாதா, மாதாமகி, பிதாமகி, பதி, பத்னி, பின்னபிறூகி, இவர்களும் இல்லாதிருந்து சிற்றப்பனாவது, பின்னோதா சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது பின்னோதாசிற்றப்பன் மகனாவது, எஜமானனாவது, எஜமானிச்சியாவது இருந்தபோதிலும், பின்னோதரன் மகன், ஏகனாயிருந்தால், அப்போது எல்லா சொத்தும், இவன் ஒருவனே, அடைவான். அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புறூதும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய பின்னோதரன்மகன் மீள்க்கப்பட்டவனுடைய எல்லா சொத்தை அடைவான்.

3-வது மீதம்முழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு முதலாவது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பதியாவது, பத்னியாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, மாதாவாவது, மாதாமகியாவது பிதாமகியாவது, சகோதரியாவது, சகோதரிகளாவது, பின்னோதரியாவது, பின்னோதரிகளாவது, பின்ன பிறூகியாவது. பின்ன பிறூகளாவது. இருந்தாலுங்கூட பின்னோதரன்மகன் ஏகனுக்கு, மீதமுழுமையும் கிடைக்கும். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன், இறந்து போயிருந்து, இவனுக்கு மிருதிக்காரர்கள் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்து போயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது. சகோதரன் மகனாவது, இல்லாதிருந்து மீட்டப்பட்டவனுடைய சவில்புறூது இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்குபோக மீதத்தை அடைவான்.

4-வது சமபாகமடையும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதரனுடைய ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது மேல் கண்ட முழு சொத்தையாவது மீத சொத்தையாவது சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும்.

5-வது பின்னோதரன் மகனால் மஹ்றூமாகும் விதம்.

1-வது சிற்றப்பன், 2-வது பிதாவின் பின்னோதரன், 3-வது சிற்றப்பன்மகன், 4-வது பிதாவின் பின்னோதரன்மகன், 5-வது எஜமான், 6-வது எஜமானிச்சி இவர்கள் மஹ்றூமாய்போகிறார்கள்.

6-வது பின்னோதரன்மகன் கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

பின்னோதரனுடைய ஆண்மக்கள் பலர்களிருந்தால் அப்போது எல்லோரும்சமபாகம் அடைவார்கள், ஆனால்இவர்களுடைய சகோதரிகள் தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள், ஏனெனில் ஷை சகோதரிகள் தூரபந்துகளாய் இருக்கிறார்கள்.

7-வது பின்னோதரனுடன் சேர்ந்துவரப்பட்டவர்களின் விதம்.

இறந்தவனுக்கு பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், பின்னபிதுருகன், பின்னபிதுருகி இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்கள் பின்னோதரன் மகனுடன் சேர்ந்துவருகிறார்கள்.

19-வது பிதாவின் சகோதரன், இவனுக்கு 7-விதமுண்டு.

1-வது மஹ்ருமாகும் விதம்.

1-வது இவன் மிருதிக்காரனாயிருக்கிறான், இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரன் மகனாவது இருந்தால் அப்போது பிதாவின் சகோதரனுக்கு பாகமில்லை. 2-வது புத்திரியும் சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான், 3-வது பவுத்திரியும், சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான். 4-வது பிரபவுத்திரியும் சகோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான். 5-வது புத்திரியும் பின்னோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான். 6-வது பவுத்திரியும் பின்னோதரியும் இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான். 7-வது பிரபவுத்திரியும் பின்னோதரியும் சேர்ந்திருந்தாலும் மஹ்ருமாவான். பின்னும் மேபடி 2-வது முதல் 7-வது வரையில் உள்ள பெண்களால் சிற்றப்பன் மஹ்ருமாகிறதில்லை, ஆனால் இவர்கள் வருகிறதினால் மீதம் ஒன்றும் மிஞ்சாதபடியால் இவன் மஹ்ருமாகிறான். 8-வது ஷரப்படி பிதாவின் சகோதரன் அடிமையாய்ப்போயிருந்தாலும், முர்த்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிறாயிருந்தாலும், அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும், அல்லது ஷறுவுக்கு விரோதமாய்வாரிசை கொலைச் செய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்ருமாவான். 9-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது அசபத்துக்காரராவது இருந்திராமல் மீட்டின எஜமானும் இறந்து போயிருந்து இவனுக்கு புத்திரனாவது பவுத்திரனாவது பிரபவுத்திரனாவது பிதாமகனாவது சகோதரனாவது பின்னோதரனாவது சகோதரன் மகனாவது பின்னோதரன் மகனாவது இருந்தால் மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது.

2-வது சொத்து முழுமையும் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு மேல் கண்டவர்களும் மாதா. மாதாமகி, பிதாமகி, பதி, பத்னி, பின்னபிதுருகி, இவர்களும் இல்லாதிருந்து பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது, பின்னோதர சிற்றப்பன்மகனாவது, எஜமானனாவது, எஜமானிச்சியாவது, இருந்தாலும்கூட ஏகசிற்றப்பனுக்கு எல்லா சொத்தும் கிடைக்கும்.

பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்து போயிருந்து இவனுக்கு ஜவில்புருதும், மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரன் மகனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய பிதாவின் சகோதரன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான்.

3-வது மீதசொத்து முழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பதியாவது, பத்னியாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, மாதாவாவது, மாதாமகியாவது, பிதாமகியாவது, சகோதரியாவது, சகோதரிகளாவது, பின்னோதரியாவது, பின்னோதரிகளாவது, பின்னபிதுருகியாவது, பின்னபிதுருகனாவது இருந்தாலும்கூட சிற்றப்பனுக்குப்பங்குக்காரர்களுடையபங்குபோக மீதமுழுமையும்கிடைக்கும். [illegible] அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு மிருதிக்காரர்கள் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு

புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரான் மகனாவது இல்லாதிருந்து மீட்டப்பட்டவனுடைய ஜவில்புரூது இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்துவிட்டு மீதத்தை அடைவான்.

4-வது சமபாகமடையும் விதம்.

இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரான் மகனாவது இல்லாதிருந்து சிற்றப்பமார்கள் பலர்களாயிருந்தால் அப்போது மேற்கண்ட முழுசொத்தையாவது மீதிசொத்தையாவது சமபாகமாக பாகித்துக்கொள்ளவேண்டும்.

5-வது பிதாவின் சகோதரனல் 5 பேர் மஹ்றூமாகும் விதம்.

1.வது பிதாவின் பின்னோதரன். 2,வது சிற்றப்பன் மகன், 3-வது பிதாவின் பின்னோதரன் மகன், 4.வது எஜமான், 5.வது எஜமானிச்சி, இவர்கள் மஹ்றூமாய் போகிறார்கள்,

6-வது பிதாவின் சகோதரன் கூட்டாய் பாகித்துக் கொள்ளும் விதம்.

பிதாவின், சகோதரர்கள், பலர்களாயிருந்தால் எல்லோரும் சமபாகமடைவார்கள் ஆனால் இவர்களுடைய சகோதரிகள், தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள் ஏனெனில்லை. சகோதரிகள் தூரபந்துக்களாக இருக்கிறார்கள்.

7-வது பிதாவின் சகோதரனுடன் சேர்ந்து வரப்பட்டவர்களின் விதம்.

இறந்தவனுக்கு [illegible], பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி. சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், இருந்தால் அப்போது இவர்களுடன் பிதாவின், சகோதரன், சேர்ந்து வருகிறான்.

20-வது பின்னோதர சிற்றப்பன் இவனுக்கு 7 விதமுண்டு.

1-வது மஹ்றூமாகும் விதம்.

1,வது இவனும் மிருதிக்காரனாயிருக்கிறான் இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரான் மகனாவது, பிதாவின் சகோதரனாவது, இருந்தால் அப்போது பின்னோதர சிற்றப்பனுக்கு பாகமில்லை. 2.வது. புத்திரியும், சகோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தால் மஹ்றூமாவான். 3.வது பவுத்திரியும், சகோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தால் மஹ்றூமாவான். 4.வது பிரபவுத்திரியும், சகோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தால் மஹ்றூமாவான் 5.வது புத்திரியும், பின்னோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும், மஹ்றூமாவான். 6.வது பவுத்திரியும், பின்னோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 7.வது பிரபவுத்திரியும், பின்னோதரியும், இருபேரும் சேர்ந்திருந்தாலும், மஹ்றூமாவான். பின்னும் [illegible] முதல் 7,வது வகையிலுள்ள பேர்களால், பின்னோதர சிற்றப்பன், மஹ்றூமாகிறதில்லை ஆனால் இவர்கள் வருவதினால் மீதமிருக்கிறதில்லை ஆகலால் மஹ்றூமாகிறான். 8.வது ஷறுப்படி பின்னோதர சிற்றப்பன் அடிமையாய் போயிருந்தாலும் அல்லது முர்தத்தாய் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹரபில் குடியிருந்துக் கொண்டிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைச் செய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்றூமாவான். 9-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புரூதாவது அஸபத்துக்காரனாவது இருந்திராமல் மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரான்மகனாவது, சிற்றப்பனாவது இருந்தால் பிதாவின் பின்னோதர சிற்றப்பனுக்கு மீள்க்கப்பட்டவனுடைய சொத்து கிடைக்கமாட்டாது.

2-வது சொத்து முழுமையும் பெற்றுக் கொள்ளும் விதம்.

சிற்றப்பன் மகனாவது, பின்னோதர சிற்றப்பன் மகனாவது, எஜமானனாவது, எஜமானிச்சியாவது, இருந்தபோதிலுங்கூட இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்களுள் மாதா, மாதாமகி, பிதாமகி, பதி, பத்னி, பின்னபிதுருகள் இவர்களும் இல்லாமலிருந்தால் அப்போது பின்னோதர சிற்றப்பன் மகனுக்கு சொத்து முழுமையும் கிடைக்கும் பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீட்டப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜனிஸ் புருஷும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரன் மகனாவது பிதாவின் சகோதரனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய பின்னோதர சிற்றப்பன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான்.

3-வது மீதம் முழுமையும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பதியாவது, பத்னியாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது. மாதாவாவது, மாதாமகியாவது பிதாமகியாவது, சகோதரியாவது, சகோதரிகளாவது, பின்னோதரியாவது, பின்னோதரிகளாவது, பின்ன பிதுருகியாவது, பின்ன பிதுருகளாவது, இருந்தாலுங்கூட பின்னோதர சிற்றப்பன் மகனுக்கு பங்குக்காரர்களுடைய பங்குபோக மீதமுழுமையும் கிடைக்கும் பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீக்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு மிருதிக்காரர்கள் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும் இல்லாதிருந்து இவனுக்கு புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிதா, பிதாமகன், சகோதரன், பின்னோதரன் சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன் இவர்கள் இல்லாதிருந்து மீக்கப்பட்டவனுடைய ஜனிப்புருஷ இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்துவிட்டு மீதத்தை அடைவான்.

4-வது சமபாகமடையும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதர சிற்றப்பமார்கள் பலர்களாயிருந்தால் அப்போது மேல் கண்ட முழு சொத்தையாவது மீத சொத்தையாவது சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும்.

5-வது பின்னோதர சிற்றப்பனால் 4-பேர் மஹ்ஜூபாகும் விதம்.

1-வது சிற்றப்பன்மகன், 2-வது பிதாவின் பின்னோதரன்மகன், 3-வது எஜமான், 4-வது எஜமானிச்சி இவர்கள் மஹ்ஜூபாவார்கள்.

6-வது பின்னோதர சிற்றப்பன் கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னோதர சிற்றப்பமார்கள் பலர்களாயிருந்தால் அப்போதுமல்லோரும் சமபாகம் அடைவார்கள், ஆனால் இவர்களுடைய சகோதரிகள் தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள் ஏனெனில் இந்த சகோதரிகளோ தூரபந்துக்களாயிருக்கிறார்கள்.

7-வது பின்னோதர சிற்றப்பனுடன் சேர்ந்துவராப் பட்டவர்களின் விதம்.

இறந்துபோனவனுக்கு பின்னபிதுருகள், பின்னபிதுருகி, பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்கள் பின்னோதர சிற்றப்பனுடன் சேர்ந்துவருகிறார்கள்.

21-வது சிற்றப்பன் மகன். இவனுக்கு 7-விதமுண்டு.

1-வது மஹ்ஜூபாகும் விதம்.

1-வது இவனும் மிருதிக்காரனாயிருக்கிறான், இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரன்மகனாவது, பிதாவின் சகோதரனாவது, பின்னோதர சிற்றப்பனாவது இருந்தால் அப்போது

சிற்றப்பன் மகனுக்கு ஒன்றும் கிடையாது, இவன் மஹ்றூமாகிறான். 2-வது புத்திரியும், சகோதரியும் இவ்விருபேரும் இருந்தாலும் மஹ்றூமாவான். 3-வது பவுத்திரியும், சகோதரியும் இவ்விருவரும்சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 4-வது பிரபவுத்திரியும், சகோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 5-வது புத்திரியும், பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 6-வது பவுத்திரியும் பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 7-வது பிரபவுத்திரியும் பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்றூமாவான். 2-வது முதல் 7-வது வரையிலுள்ள பெண்களால் சிற்றப்பன்மகன் மஹ்றூமாகிறதில்லை, ஆனால் இவர்கள் வருவதினால் மீதம் மீறுகிறதில்லை, ஆகலால் மஹ்றூமாகிறான். 8-வது ஷறுப்படி சிற்றப்பன்மகன் அடிமையாய்போயிருந்தாலும், அல்லது முர்த்தத்தாய்போயிருந்தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும், அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைச்செய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்றூமாவான். 9-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புரூதாவது, அசபத்துக்காரராவது இருந்திராமல் மீட்டின எஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரன் மகனாவது, சிற்றப்பனாவது, பின்னோதர சிற்றப்பனாவது இருந்தால் மீள்க்கப்பட்டவனுடைய சொத்து சிற்றப்பன் மகனுக்கு கிடைக்கமாட்டாது.

2-வது எல்லா சொத்தும் அடையும் விதம்.

இறந்தவனுக்கு முதலாவது விதத்தில் கண்டவர்களும் மாதா, மாதாமகி, பிதாமகி, பதி, பத்னி பின்னபிறாருதி இவர்களும் இல்லாதிருந்துபின்னோதரசிற்றப்பன்மகனாவதுஎஜமான் அல்லது எஜமானிச்சியாவது இருந்தபோதிலும் சிற்றப்பன்மகன் ஏகனாயிருந்தால் அப்போது இறந்தவனுடைய சொத்துமுழுமையும் இவனே அடைவான். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீட்டப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புரூதும் மிருதிக்காரரும் இல்லாதிருந்து மீட்டின எஜமானனும்இறந்துபோயிருந்து இவனுக்குபுத்திரனாவது,

பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரன் மகனாவது, பிதாவின் சகோதரனாவது, பின்னோதர சிற்றப்பனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய சிற்றப்பன் மகன் மிருதிக்காரனும் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான்.

3-வது மீதமுழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்துபோனவனுக்கு முதலாவது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னபிறாருகளுமாவது, பின்னபிறாருதியாவது, பதியாவது, பத்னியாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, மாதாவாவது, மாதாமகியாவது, பிதாமகியாவது, சகோதரியாவது, சகோதரிகளாவது, பின்னோதரியாவது, பின்னோதரிகளாவது இருந்தாலும்கூட சிற்றப்பன்மக்களுக்கு பங்குக்காரர்களுடைய பங்குபோகமீதமுழுமையும்கிடைக்கும். பின்னும் அடிமைத்தனத்திலிருந்துமீள்க்கப்பட்டவன்இறந்துபோயிருந்துஇவனுக்குமிருதிக்காரர்கள் இல்லாதிருந்துமீட்டினஎஜமானனும் இல்லாதிருந்துஇவனுக்குபுத்திரன்,பவுத்திரன்,பிரபவுத்திரன்,பிதா,பிதாமகன் சகோதரன்,பின்னோதரன்,சகோதரன்மகன்,பின்னோதரன்மகன், சிற்றப்பன், பின்னோதர சிற்றப்பன் இவர்கள் இல்லாதிருந்து மீள்க்கப்பட்டவனுடைய ஜவில்புரூது இருந்தால் அப்போது பங்குக்காரர்களுடைய பங்கு கொடுத்துவிட்டு மீதத்தை அடைவான்.

4-வது சமபாகம் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு முதலாவது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து சிற்றப்ப ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது மேற்கண்ட முழுசொத்தையாவது, மீத சொத்தையாவது எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும்.

5-வது சிற்றப்பன்மகனால் 3-பேர் மஹ்றூமாகும் விதம்.

1-வது பிதாவின் பின்னோதரன்மகன், 2-வது எஜமான், 3-வது எஜமானிச்சி இவர்கள் மஹ்றூமாய்போகிறார்கள்.

6-வது சிற்றப்பன்மகன் கூட்டாய்ப் பாகித்துக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து சிற்றப்பனுடைய ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது எல்லோரும் சமபாகம் அடைவார்கள் ஆனால் இவர்களுடைய சகோதரிகள் தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள். ஏனெனில் இந்த சகோதரிகளோ தூரபந்துகளாக இருக்கிறார்கள்.

7-வது சிற்றப்பன் மகனுடன் சேர்ந்து வாரிசாகிறவர்களின் விதம்.

இறந்துபோனவனுக்கு பின்னபிதுருகன், பின்னபிதுருகி, பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள். மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்கள் சிற்றப்பன்மகனுடன் சேர்ந்து வருகிறார்கள்.

22-வது பின்னோதர சிற்றப்பன்மகன், இவனுக்கு 7-விதமுண்டு.

1-வது மஹ்ரூமாகும் விதம்.

1-வது இவனும் மிருதிக்காரனாயிருக்கிறான், இறந்தவனுக்கு பிதாவாவது, பிதாமகனாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிர்பிரபவுத்திரனாவது, சகோதரனாவது, பின்னோதிரனாவது, சகோதரன் மகனாவது, பின்னோதரன் மகனாவது, பிதாவின் சகோதரனாவது, பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது இருந்தால் அப்போது பின்னோதர சிற்றப்பன் மகனுக்கு ஒன்றும் கிடையாது, இவன் மஹ்ரூமாகிறான். 2-வது புத்திரியும், சகோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 3-வது பவுத்திரியும் சகோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 4-வது பிரபவுத்திரியும் சகோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 5-வது புத்திரியும் பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 6-வது பவுத்திரியும் பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 7-வது பிரபவுத்திரியும் பின்னோதரியும் இவ்விருவரும் சேர்ந்திருந்தாலும் மஹ்ரூமாவான். 8-வது ஒருப்படி பின்னோதரசிற்றப்பன்மகன் அடிமையாய்ப்போயிருந்தாலும் அல்லது முர்தத்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தாருல்ஹறபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும், அல்லது ஷருவுக்கு விரோதமாய் வாரிசை கொலைசெய்திருந்தாலும் அப்போது இவன் மஹ்ரூமாவான். 9-வது அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில்புருதாவது, அசபத்துக்காரராவது இருந்திராமல் மீட்டினஎஜமானனும் இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரன்மகனாவது, சிற்றப்பனாவது, பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது இருந்தால் மீள்க்கப்பட்டவனுடைய சொத்து பின்னோதர சிற்றப்பன்மகனுக்கு கிடைக்கமாட்டாது.

2-வது எல்லா சொத்துமடையும் விதம்.

இறந்தவனுக்கு முதல்விதத்தில் கண்டவர்களும் மாதா, மாதாமகி, பிதாமகி, பதி, பத்னி, பின்னபிதுருகி இவர்களும் இல்லாதிருந்து எஜமானனாவது, எஜமானிச்சியாவது இருந்தபோதிலும் பின்னோதர சிற்றப்பன்மகன் ஏகனாயிருந்தால் அப்போது இறந்தவனுடைய சொத்துமுழுமையும் இவனே அடைவான். பின்னும் அடிமைத்தனத்திலிருந்து மீட்டப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில் புரூதும் மிருதிக்காரரும் இல்லாதிருந்துமீட்டினஎஜமானனும்இறந்துபோயிருந்து இவனுக்கு புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிதாவாவது, பிதாமகனாவது, சகோதரனாவது, பின்னோதரனாவது, சகோதரன்மகனாவது, பின்னோதரன் மகனாவது, பிதாவின் சகோதரனாவது, பின்னோதர சிற்றப்பனாவது, சிற்றப்பன் மகனாவது இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுடைய பின்னோதர சிற்றப்பன் மகன் மிருதிக்காரனாய் மீட்டப்பட்டவனுடைய எல்லா சொத்தையும் அடைவான்.

3-வது மீதமுழுமையும் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்துபோனவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னபிதுருகன், பின்னபிதுருகி, பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள் இவர்களில் யாரா

வது இருந்தாலுங்கூட பின்னோதர சிற்றப்பன்மகன் ஏகனாயிருந்தால் அப்போது மீதமுழுமையும் இவனே பெற்றுக்கொள்வான்.

4-வது சமபாகம் பெற்றுக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு 1-வது விதத்தில் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னோதர சிற்றப்பன் ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது மீதத்தை எல்லோரும் சமபாகமாக பாகித்துக்கொள்ள வேண்டும்.

5-வது பின்னோதர சிற்றப்பன் மகனால் 2-பேர் மஹ்ரூமாகும் விதம்.

இறந்தவனுக்கு பின்னோதர சிற்றப்பன் மகன், இருப்பதினால் எஜமான், எஜமானிச்சி. மாத்திரம் மஹ்ரூமாவார்கள்.

6-வது பின்னோதர சிற்றப்பன் மகன் கூட்டாய் பாகித்துக்கொள்ளும் விதம்.

இறந்தவனுக்கு மேல் கண்டவர்கள் இல்லாதிருந்து பின்னோதர சிற்றப்பனுடைய ஆண் மக்கள்கள் பலர்களாயிருந்தால் அப்போது எல்லோரும் சமபாகம் அடைவார்கள், ஆனால் இவர்களுடைய சகோதரிகள் தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து பாகமடையமாட்டார்கள், ஏனெனில் இந்த பெண் மக்கள்கள் துரபத்துக்களாக யிருக்கிறார்கள்.

7-வது பின்னோதர சிற்றப்பன் மகனுடன் சேர்ந்து வருகிறவர்களின் விதம்.

இறந்தவனுக்கு பின்ன பிதுருகன், பின்ன பிதுருகி, பதி, பத்னி, புத்திரி, புத்திரிகள், பவுத்திரி, பவுத்திரிகள், மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், இவர்களில் யாராவது இருந்தால் அப்போது இவர்கள் பின்னோதர சிற்றப்பன் மகனுடன், சேர்ந்துவருகிறார்கள்.

23-வது எஜமான் இவனுக்கு 13 விதமுண்டு.

மேல் கண்ட 22 வாரிசுகள் அதாவது பராயதுக்காரர்களும் அசபயேநசபியாக்காரர்களும் இல்லாதிருந்தால் அப்போது எஜமான் அல்லது எஜமானிச்சி, மிருதிக்காரியாகிறாள், இறந்தவனை அடிமைத்தனத்திலிருந்து மீட்டினக் காரணத்தாலேயே இவர்கள் அசபத்துக்காரராகிறார்களே ஒழிய பந்தத்துவத்தைப்பற்றி அசபத்துக்காராகிறதில்லை ஆகையால் இவர்களுக்கு விசேஷக் காரணத்தைப்பற்றிய மிருதிக்காரர்களென்று பேர், அல்லது அசபயேசபபியா என்று பேர்.

1-வது மீதம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு அசபயேநசபியா அதாவது பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன், பின்னோதரசிற்றப்பன், பிதாவின் சகோதரன்மகன், பிதாவின் பின்னோதரன்மகன் இவர்கள் இல்லாமலிருந்து பராயதுக்காரர் . அதாவது பிதா, பிதாமகன், மாதா, பிதாமகி, மாதாமகி, புத்திரி, பவுத்திரி, சகோதரி, பின்னோதரி, பின்னபிதுருகன், பின்னபிதுருகி, பதி, பத்னி, இவர்கள்மாத்திரம் இருப்பார்களானால் அப்போது இவர்களுக்கு சேரவேண்டிய பாகுபோக மீதத்தை எஜமான் அல்லது எஜமானிச்சி அடைவார்கள்.

2-வது எல்லா சொத்தும் கிடைக்கும் விதங்கள். 2

1-வது அடிமைத்தனத்திலிருந்து மீட்டப்பட்டவன் இறந்துபோயிருந்து இவனுக்கு ஜவில் புருதாம், மிருதிக்காரரும் இல்லாதிருந்தால் அப்போது எஜமானனுக்குமீட்டப்பட்டவனுடையயெல்லாசொத்தும் கிடைக்கும் 2-வது இறந்தவன்முற்றிலும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படாமலே இருப்பானாகில் அப்போது சொத்து முழுவதும் அவனுடையஎஜமானனுக்கே கொடுக்கப்படும், இவனுடைய வாரிசுகளுக்கு கொடுக்கப்படமாட்டாது.

3-வது எஜமானனுடைய ஆண் மிருதிக்காரருக்கு பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு பராயதுக்காரராவது அசபயேநசபியாவாவது அசபயேசபபியா என்ற எஜமான் அல்லது எஜமானிச்சியாவது இல்லாமலிருந்து பெ, எஜமான் அல்லது எஜமானிச்சிக்கு ஆணான அச

பத்துக்காரர் இருந்தால் அப்போது அவர்களுக்கு இறந்தவனுடைய சொத்து அவரவர்களின் வகுப்புப்படி கொடுக்கப்படும்.

4-வது பிதா வகையரு மஹ்ருமாகும் விதம்.

இறந்தவனுடைய எஜமான் அல்லது எஜமானிச்சிக்கு புத்திரனும் புத்திரியும், சகோதரியும் பிதாவும் பிதாமகனுமிருந்தால் அப்போது புத்திரனுக்கு சொத்து கிடைக்குமேயல்லாமல் புத்திரிக்காவது சகோதரிக்காவது பிதாவுக்காவது பிதாமகனுக்காவது சொத்து கிடைக்கமாட்டாது ஏனெனில் ஷை புத்திரனே எதிராளுடைய கூட்டில்லாமல் தன்னைக்கொண்டு தானே சொத்தை அடையக்கூடிய அசபத்துக்காரனாயிருக்கிறான் இவனுக்கு அஸ்பாபி நப்ஸிஹீ என்று பேர் ஷை புத்திரியும் சகோதரியும் பிதாவும் பிதாமகனும் இப்படிப்பட்டவர்களாயிருப்பதில்லை ஆனால் புத்திரியோ ஆனால் அசபத்துக்காரனாகிய புத்திரனுடன் சேர்ந்து கூட்டாய் தாயபாகம் அடையும் மிகுதிக்காரியாயிருக்கிறாள், இவ்விஷயத்தைக் கொண்டு புத்திரியும், பவுத்திரியும் பிரபவுத்திரியும் சொத்தையடைய மஹ்ருமாகிறார்கள். ஆகையில் இவர்களுக்கு அசபாபிகைரிஹீ என்று பேர். சகோதரிகளோ பெண்ணான அசபத்துக்காரிகளாகிய புத்திரிகளுடன் சேர்ந்து கூட்டாய் தாயபாகமடையும் மிகுதிக்காரிகளாயிருக்கிறார்கள். ஆகையால் இவர்களுக்கு அச்பாமாகைரிஹீ என்று பேர் இவ்விஷயத்தைக் கொண்டு சகோதரிகளும் பின்னோதரிகளும் சொத்து அடைய மஹ்ருமாகிறார்கள். பிதாவும் பிதாமகனுமோவென்றால் அசபத்துக்காரர்களில் புத்திரனை விட தாழ்ந்தவர்களாயிருக்கிறார்கள் ஆகையால் இவ்விஷயத்தைக்கொண்டு இவர்கள் புத்திரன் பவுத்திரன் பிரபவுத்திரன் பிரபிரபவுத்திரன் இவர்களிருக்கும்போது மஹ்ருமாகிறார்கள்.

5-வது அரைக்குறைவாய் பாகம் கிடைக்கும் விதம்.

இறந்துபோனவனாகிய அடிமையானவன் அரைக்குறைவாய் மீட்டப்பட்டிருந்தால் அதற்கு தக்கதாக அதாவது எவ்வளவுக்கு மீட்டப்பட்டானோ அவ்வளவுக்கு அவனுடைய சொத்து அவனுடைய வாரிசுகளுக்கு கொடுக்கப்படும், அப்படி வாரிசுகளுக்கு கொடுத்துவிட்டதுபோக மீதம் அவனுடைய எஜமானனுக்கு சேரும்.

6-வது அடிமைக்கு சொத்து கிடையாத விதம்.

எவனாவது ஒருவன் எவனுடையவாவது அடிமையாய்ப்போய் விட்டால் இவனுக்கு இவனுடைய வாரிசின் சொத்து கிடைக்கமாட்டாது.

7-வது பலர்கள் எஜமான்களாகும் விதம்.

இறந்தவன் பலர்களின் அடிமையாயிருந்தால் அப்போது அப்பலர்களும் அவனுடைய எஜமான்களாயிருக்கிறார்கள்.

8-வது கிரமமான எஜமான், கிரமமில்லாத எஜமான் இவர்களின் விதம்.

அசபியே சபபியா, என்ற விசேஷக்காரணத்தால் உண்டான மிகுதிக்காரர்களில் 2 வகையுண்டு 1,வது வகை கிரமமான எஜமான் 2-வது கிரமமில்லாத எஜமான் கிரமமான எஜமான் யாரென்றால் ஒருவன் தன் அடிமையை அடிமைத்தனத்திலிருந்து ஆசாது செய்துவிட்டதின்பின் இந்த மீட்டப்பட்டவன் இறந்துபோனான், இவனுக்கு ஷை அடிமைத்தனத்திலிருந்து மீட்டின எஜமானனைத்தவிர வேறே அசபியே நசபியா என்ற பந்தத்துவத்தைப்பற்றிய மிகுதிக்காரர்கள் இல்லாதிருந்தார்கள் இப்படியிருக்கிறபடியால் இப்போது அடிமைத்தனத்திலிருந்து மீட்டினவனே மிகுதிக்காரனாயிருக்கிறான், இப்படி மீட்டின எஜமானனுக்குக்கிரமமான எஜமானன் என்றுபேர். 2-வது வகை கிரமமில்லாத எஜமான், இவன் யாரென்றால் ஒருவன் ஒரு அடிமையை அடிமைத்தனத்திலிருந்து ஆசாது செய்துவிட்டான், இப்படி ஆசாதானவன் தானும் ஒரு அடிமையை ஆசாதுப்பண்ணினான், இப்படி இவன் ஆசாது செய்ததின்பின் இவனால் ஆசாது செய்யப்பட்ட அடிமையானவன் இறந்துவிட்டான், இவனுக்கு அசபியே நசபியா அதாவது பந்தத்துவத்தைப்பற்றிய மிகுதிக்காரர்கள் இல்லாமலேயிருந்து முதல் அடிமையை மீட்டின எஜமானனே இருப்பானாகில் அப்போது இவன் மிகுதிக்காரனாய்விடுவான், இப்படிப்பட்டவனுக்கு கிரமமில்லாத எஜமானன் என்றுபேர்.

9-வது மிகுதி கிடையாமற்போகும் விதம்.

ஒரு பெண்ணின் அடிமையானவன் தன் எஜமானிச்சியுடைய உத்தரவின்பேரில் வேறொருவனால் ஆசாதுபண்ணப்பட்ட ஒரு பெண்

னேதிகாஹ்செய்ததின்பின் இவ்விருவர்களால் ஜனனமான ஒரு குழந்தையானது அடிமையாகாமல் ஆசாதாயிருக்கின்றது, ஏனெனில் இக்குழந்தையின் தாயோ அடிமைத்தனத்திலிருந்து மீள்க்கப்பட்டவளாயிருக்கிறாள், இப்படியிருக்கிறபடியால் இக்குழந்தையின் சொத்துக்கு தாயை அடிமைத்தனத்திலிருந்து மீட்டினஎஜமானன்விலேசைக்காரனை மிருதிக்காரனாவானேயன்றி இக்குழந்தையின் பிதாவின் எஜமானிச்சி மிருதிக்காரியாகமாட்டாள்.

10-வது மிருதிக்காரனாகும் விதம்.

ஷை எஜமானிச்சியும் ஷை தன் அடிமையையும் அடிமைத்தனத்திலிருந்து மீட்டிவிட்டால் அப்போது அக்குழந்தையின் தகப்பன் வழியாக ஷை எஜமானிச்சி மிருதிக்காரியாய்விடுவாள்.

11-வது எஜமானனுடைய பிதா சொத்து அடையும் விதம்.

அடிமை தனத்திலிருந்து மீட்டப்பட்ட ஒருவன் இறந்து போய விட்டால் அப்போது அவனுடையசொத்து எஜமானனுடைய புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், இவ்விதமாகவே எவ்வளவுகீழ் போனாலும்சரி இவர்களே வாரிசுகளாயிருக்கிறார்கள், இவர்களில் ஒருவனும் இல்லாமல் போனால் அப்போது ஷைஎஜமானனுடைய பிதா, பிதாமகன், பிரப்பிதாமகன், இவர்கள்வாரிசுகளாயிருக்கிறார்கள், இவர்களிலும் ஒருவனுமில்லாமல் போனால் அப்போது ஷைஎஜமானனுடையபிதாவின், சகோதரர்கள், வாரிசாயிருக்கிறார்கள் இவர்களிலும் ஒருவனும் இல்லாமல் போனால் ஷை எஜமானனுடைய பிதாமகனின் சகோதரர்கள் வாரிசாயிருக்கிறார்கள்.

12-வது பல எஜமான்கள் தாயபாகம் அடையும் விதம்.

எவனாவது ஒருவன்தன் குராறும் மற்றாருடைய எஜமானனும் விடும்பக்ஷத்தில் உடனே அந்த குராறும்பற்றாம் அவன் மூலமாய் அடிமை தனத்திலிருந்து நீங்கிப் போய் விடுகிறான் மீட்டினவனே அந்த குராறும் மற்றாருடைய மௌலாஎன்றஎஜமானனாயிருக்கிறான் இதற்கு உதாரணம் ஒருவன் ஒருவனுடைய அடிமையாயிருந்தான் அந்த அடிமைக்கு 3, புத்திரிகள் இருந்தார்கள் இவர்களில் மூத்த

புத்திரி, 30, ரூபாயும் இளையவள் 20, ரூபாயும் கொடுத்து தன்னுடைய தகப்பனை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள் இப்படியிருக்கையில் மீள்க்கப்பட்ட ஷை தகப்பன் கொஞ்ச சொத்துவைத்து இறந்து போனான் அச்சொத்துக்கு அவனுடைய புத்திரிகள், வாரிசாயிருக்கிறபடியால் ஷை புத்திரியின், பாகமாகிய 3-ல் 2 மூன்றில் இரண்டை ஷை 3 புத்திரிகளும் சமானமாக பாகித்துக் கொள்ளவேண்டும். மீதமிருக்கும், 3-ல் 1 மூன்றில் ஒன்றை எசமானிச்சிகளின் வகைப்படி அசபத்துக்காரிகளாகிய மூத்த புத்திரியும் இளைய புத்திரியும், பெற்றுக் கொள்ளவேண்டும் எப்படி என்றால் ஷை மீதத்தை 5 பாகங்களாக்கி 3 பாகம் மூத்த புத்திரியும், 2 பாகம் இளைய புத்திரியுமாக பாகித்துக் கொள்ளவேண்டும் இதன் மஸ்அலா 3 ஆகவும் இதன் தஸ்ஹீ 45 ஆகவுமிருக்கிறது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3. தஸ்ஹீ, 9 = 45.
புத்திரி...புத்திரி...புத்திரி
3-ல் 2.
2
10 — 10 — 10

வியாக்கியானம்.

மஸ்அலாவின்மூன்றைபுத்திரிகளின், பாகமாகிய 3-ல் 2 ஆல்வகுத்தால் 3-ல் 2க்கு 2 வந்தது இந்த இரண்டை 3 புத்திரிகளுக்குபாகிக்கக் கூடாதபடியால ஷை மஸ்அலாவைதஸ்ஹீ செய்ய வேண்டும் அது எப்படி செய்யவேண்டுமென்றால் ஷை மஸ்அலாவின் மூன்றை 3 புத்திரிகளின் தலையாகிய 3-ல் பெருக்கினால் 9 வந்தது, 3×3=9 பின்னும் மூத்தபுத்திரி, பிதாவைமீட்டின தொகையாகிய 30க்கு 3பாகமும் இளையவள் மீட்டின் தொகையாகிய 20க்கு 2 பாகமுமாகிறது இந்த மூன்றையும் இரண்டையும்கூட்டினால் 5 ஆகிறது இந்தஐந்தைமேலேபெருக்கிவந்திருக்கிற 9 ஓடு பெருக்கினால் 45 ஆகின்றது. 9×5=45 இதுதான் தஸ்ஹீயேமஸ்அலா இந்த 45 நாற்பத்தி ஐந்தை புத்திரிகளின் பாகமாகிய 3-ல் 2 ஆல்வகுத்தால் 3-ல் 2 பாகத்துக்கு 30 வந்தது இந்த 30 முப்பதை மூன்றுபாகம் செய்து ஒவ்வொரு புத்திரிக்கு, 10- 10 ஆக கொடுக்க வேண்டும் மீதமிருக்கும் 15 பதினைந்தை 5, ஆல் வகுக்க வேண்டும் ஏனெனில் தகப்பனை மீட்டின மூத்த புத்திரி

யின், தொகை 30ம் இளைய புத்திரியின் தொகை 20 மாக இருக்கிறபடியால் இதை விலைப்பு செய்ததில் 3 பங்கு மூத்த புத்திரியாலும் 2 பங்கு இளைய புத்திரியாலும் கொடுக்கப்பட்டிருக்கிறது ; ஆதலால் இளைய புத்திரியைப் பார்க்கிலும் மூத்த புத்திரி ஒரு பங்கு ஜாஸ்தியாய் கொடுத்திருக்கிறாள் ஆகையால் மீதமிருக்கிற 15 பதினைந்தை 5 ஆல் வகுத்தால் பங்கு 1க்கு 3- 3- வந்தது மூத்த புத்திரியின் 3 பாகத்துக்கு 9ம் இளைய புத்திரியின் 2 பாகத்துக்கு 6ம் வந்தது இந்த 9 ஒன்பதை மூத்த புத்திரிக்கும் 6 ஆறை இளைய புத்திரிக்கும் கொடுத்து விட வேண்டும் உதாரணம்

மய்யத்து சைது, மஸ்அலா 3. தஸ்ஹீ 9 = 15.

	புத்திரி……	புத்திரி……	புத்திரி
		(2)	
மஸ்அலா	10 ——	10 ——	10
மீதம்	9 ——	,, ——	6
ஆக	19 ——	10 ——	16

13-வது எஜமானனுக்கு சொத்து கிடையாத விதம்.

எஜமான் ஷரூப்படி அடிமையாய்ப்போயிருந்தாலும் அல்லது முர்இத்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தாருல்ஹரபில் குடியிருக்கப்பட்டவனாயிருந்தாலும், அல்லது ஷருவுக்குவிரோதமாய்வாரிசைகொலைசெய்திருந்தாலும் அப்போது எஜமான் மஹ்ரூமாவான்.

21-வது பதி, இவனுக்கு 8-விதமுண்டு.

1-வது மொத்த சொத்தில் 2-ல் 1-பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவளுக்கு புத்திரன், புத்திரி, பவுத்திரன், பவுத்திரி, பிரபவுத்திரன், பிரபவுத்திரி இவர்களில் யாராவது இல்லாதிருந்து பிதா, பிதா மகன், சகோதரன், பின்னோதரன், பின்ன பிதுருகன், சகோதரன் மகன், பின்னோதரன் மகன், சிற்றப்பன், பின்னோதர சிற்றப்பன், சிற்றப்பன்மகன், பின்னோதர சிற்றப்பன்மகன், எஜமான், எஜமானிச்சி, மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி, பின்னோதரிகள், பின்னமி

ரும் இவர்களில் யாராவது இருந்தால் அப்போது பதிக்கு 2-ல் 1, அதாவது மொத்தசொத்தில் அரைபாகமுண்டு, இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது, வலகும் நிஸ்புன் மாதரக அஸ்வாஜுகும் இன்லம் யகுன் லஹுன்ன வலதுன், மஅனு, உங்களுடைய பத்னிகளுக்கு சந்ததியே இல்லாதிருக்குமாகில் அப்போது எதை அந்த ஸ்திரிகள் விட்டுவிட்டு இறந்துவிட்டார்களோ அதில் உங்களுக்கு அரைபாகமிருக்கிறது

2-வது மொத்தசொத்தில் 4-ல் 1-பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவளுக்கு புத்திரனாவது, புத்திரர்களாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, பவுத்திரனாவது, பவுத்திரர்களாவது, பிரபவுத்திரனாவது, பிரபவுத்திரர்களாவது இவர்களில் யாராவது இருந்தால் அப்போது பதிக்கு ¼ பாகம் அதாவது கால்பாகமுண்டு, இவ்விஷயத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது, பயின்கானலஹுன்ன வலதுன் பலகு முர்றுபுவு மிம்மாதரக்ன, மஅனு, பின்னும் அந்த ஸ்திரிகளுக்கு சந்ததியிருக்குமாகில் அப்போது எதை அவர்கள் விட்டுவிட்டு இறந்[illegible]களோ அதில் உங்களுக்கு கால்பங்கு யிருக்கிறது. பின்னும் இறந்தவளுக்கு முன் புருஷனால் பிள்ளைகள் இருந்தாலும் பதிக்கு ¼ பாகமுண்டு.

3-வது மிருதிக்காரனாகாத விதம்.

இறந்தவளுக்கு அதாவது பத்னிக்கு பதியானவன் இரத்தக்கலப்பில்லாதவன் ஆனால் நிகாஹுவின் காரணத்தால் பந்துவானவன் பின்னும் இவன் பங்குக்காரன். பங்கை பெற்றுக்கொள்ளத்தக்கவனாகையால் மிருதிக்காரனாகிறதில்லை.

4-வது பதி மஹ்ரூமாகாத விதம்.

இறந்தவளுக்கு பாலுக்காரராவது, அசபத்துக்காரராவது இருந்தபோதிலும் இவன் மஹ்ரூமாகான்.

5-வது பதி மஹ்ரூமாகும் விதம்.

ஷரூப்படி பதி அடிமையாய்ப்போயிருந்தாலும், அல்லது முர்இத்தாய்ப்போயிருந்தாலும், அல்லது காபிராயிருந்தாலும், அல்லது தா

தாருல்ஹர்பில் குடியிருக்கிறவனாயிருந்தாலும், அல்லது அவளுக்கு விரோதமாய்வாரிசைகொலைசெய்திருந்தாலும் பதி மஹ்றூமாவான்.

6-வது பதியால் மஹ்றூமாகாத விதம்.

இறந்தவளுக்கு பதி இருப்பதினால் இவளுடைய ஒரு வாரிசும் மஹ்றூமாகமாட்டான்.

7-வது பதி எல்லா சொத்துமடையும் விதம்.

இறந்தவளுக்கு பர்ளுக்காரர்களாவது, அசபத்துக்காரர்களாவது, ஜவில்அர்ஹாமாவது, மௌலல் முவாலாத்தியாவது, முகிர்லஹூ பின்னசபி அலல்கைரியாவது, சம்பூர்ண உயிலாளியாவது இல்லாமலிருந்தும் பைத்துல்மாலும் சீர்கெட்டாயிருக்கும் இருக்குமாகில் அப்போது இவனுக்கு இவன் பாகம் கொடுத்துவிட்டு மீதமிருப்பதையும் இவன் பேரில் ரத்து செய்யப்படும், இவ்விதமாக இறந்தவளுடைய எல்லா சொத்தும் பதிக்கு கிடைக்கும். இதற்கு அத்தாட்சி பைத்துல்மால் சீர்கெட்டிருப்பதால் மீதத்தையும் பதியின்பேரில் ரத்து செய்து விடவேண்டுமென்று பிற்கால உலமாக்களின் பத்வாயிருக்கிறது.

8-வது பதியுடன் சேர்ந்துவரும் வாரிசுகளின் விதம்.

இறந்தவளுடைய 24-வாரிசுகளும் பதியுடன் சேர்ந்து வாரிசாய் வருகிறார்கள்.

25-வது பத்னி இவளுக்கு 9 விதமுண்டு

1-வது மொத்த சொத்தில் 4-ல் 1 பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனாவது, புத்திரர்களாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, பவுத்திரனாவது, பவுத்திரர்களாவது, பிரபவுத்திரனாவது, பிரபவுத்திரர்களாவது இவர்களில் ஒருவரும் இல்லாதிருந்து பிதா, பிதாமகன், சகோதரன், பின்னோதரன், பின்ன பிறந்தான், சகோதரன் மகன், பின்னோதரன் மகன், சிற்றப்பன், பின்னோதர சிற்றப்பன், சிற்றப்பன் மகன், பின்னோதர சிற்றப்பன் மகன், எஜமான், எஜமானிச்சி, மாதா, மாதாமகி, பிதாமகி, சகோதரி, சகோதரிகள், பின்னோதரி,

பின்னோதரிகள், பின்னபிறந்தி இவர்களில் யாராவது இருந்தால் அப்போது பத்னிக்கு 4-ல் 1 பாகமிருக்கிறது, இவ்விதத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது. வலஹுன்ன ர்ருபுவுமிம்மா தரக்தும் இன்லம் யகுன்லகும் வலதுன், மஅனு, உங்களுக்கு சந்ததியில்லாதே போகுமாகில் அப்போது எதை நீங்கள் விட்டு விட்டு இறந்து போனீர்களோ அதில் அந்த ஸ்திரிகளுக்கு கால் பங்கு இருக்கிறது.

2-வது மொத்த சொத்தில் 8-ல் 1 பாகம் கிடைக்கும் விதம்.

இறந்தவனுக்கு புத்திரனாவது, புத்திரர்களாவது, புத்திரியாவது, புத்திரிகளாவது, பவுத்திரியாவது, பவுத்திரிகளாவது, பவுத்திரனாவது, பவுத்திரர்களாவது, பிரபவுத்திரனாவது, பிரபவுத்திரர்களாவது, இருந்தால் அப்போது பத்னிக்கு 8-ல் 1 பாகமிருக்கிறது அதாவது அரைக்கால் பாகம் இவ்விதத்தில் அல்லாஹுத்தஆலா சொல்லுகிறதாவது. பயின்கானலகும் வலதுன் பலஹுன்னஸ்ஸுமுனுமிம்மா தரக்தும், மஅனு, உங்களுக்கு சந்ததியிருக்குமாகில் எதைநீங்கள் விட்டு விட்டு இறந்து போனீர்களோ அதில் அந்த ஸ்திரிகளுக்கு 8-ல் 1 பாகமிருக்கிறது பின்னும் இறந்தவனுக்கு வேறே ஸ்திரியால் பிள்ளைகள் இருந்த போதிலும் பத்னிக்கு 8-ல் 1 பாகம் கிடைக்கும்.

3-வது சமபாகம் கிடைக்கும்விதம்

இறந்தவனுக்கு பல பத்னிகள் இருந்தால் அப்போது பத்னியின் பாகமாகிய 4-ல் 1ல் அல்லது 8-ல் 1ல் எல்லா பத்னிகளும் சமபாகமாக பாகித்துக் கொள்ளவேண்டும்.

4-வது மிருதிக்காரியாகாத விதம்.

இறந்தவனுக்கு அதாவது பதிக்கு பத்னியானவள் இரத்தக் கலப்பில்லாதவள் ஆனால் நிகாஹ்வின் காரணத்தால்பந்துவானவள் இவள் பாகம் பெற்றுக் கொள்ளப்பட்டவளே யல்லாது மிருதியை பெற்றுக் கொள்ளத்தக்கவள் அல்ல ஆகையால் இவள் மிருதிக்காரியாகிறதில்லை.

5-வது பத்னி மஹ்றூமாகாத விதம்.

இறந்தவனுக்கு பர்ளுக்காரராவது அசபத்துக்காரராவது இருந்த போதிலும் இவள் மஹ்றூமாகாள்.

6-வது பத்னி மஹ்றூமாகும் விதம்.

ஷறுப்படி பத்னி அடிமையாயிருந்தாலும் அல்லது முர்தத்தாய்ப் போயிருந்தாலும் அல்லது காபிறாயிருந்தாலும் அல்லது தாருல் ஹறபில் குடியிருக்கிறவளாயிருந்தாலும் அல்லது ஷறுவுக்கு விரோதமாய் வாரிசை கொலைச் செய்திருந்தாலும் பத்னி மஹ்றூமாவாள் மற்றப்படி எவ்வித வாரிசும் இவளை மஹ்றூமாக்குகிறதில்லை.

7-வது பத்னியால் மஹ்றூமாகாத விதம்.

இறந்தவனுக்கு பத்னியிருப்பதினால் இவனுடைய ஒரு வாரிசும் மஹ்றூமாகமாட்டான்.

8-வது பத்னிக்கு எல்லா சொத்தும் கிடைக்கும் விதம்

இறந்தவனுக்கு பாறுக் காரர்களாவது அசபத்துக்காரர்களாவது மௌலல்மவாலாத்தியாவது முகிர்லஹூ பின்னசபி அலல்கையாவது சம்பூரண உயிலாளியாவது இல்லாமலிருந்து பைத்துல்மாலும் சீர்கேடாயிருந்திருக்குமாகில் அப்போது இறந்தவனுடைய பத்னியின் பாகம் கொடுத்து விட்டு மீதமிருப்பதையும் இவள் பேரில் ரத்துசெய்யப்படும் இத்தன்மையாகவே எல்லாசொத்தும் பத்னிக்கு கிடைக்கும் இதற்கு அத்தாக்ஷி பைத்துல்மால் சீர்கேடாயிருந்தால் மீதத்தையும் பத்னியின் பேரில் ரத்துசெய்ய வேணுமென்று பிற்கால உலமாக்களின் கௌலாயிருக்கிறது.

9-வது பத்னியுடன் சேர்ந்து வரும் வாரிசுகளின் விதம்

இறந்தவனுடைய 24 வாரிசுகளும் பத்னியுடன் சேர்ந்து வாரிசாய் வருகிறார்கள்.

11-வது கண்டம், ஒரேஒரு சமயத்தில் பலவாரிசுகள் இறந்துபோகிறவர்களின் பயான்.

இதில் 2-சங்கதிகளுண்டு.

1-வது சங்கதி இருபேர்கள் அல்லது பலர்கள் தங்களுக்குள் பந்தத்துவமுள்ளவர்களாயிருந்து ஒரே சமயத்தில் இறந்துபோவார்களாகில் அப்போது இவர்களில் யார் முதலில் இறந்துபோனானென்று தெரியாமற்போகும்பக்ஷத்தில் ஒருவன் மற்றொருவனுடைய வாரிசாகமாட்டான், ஆனால் இப்படி இறந்துபோனவர்களின் வாரிசுகள் ஜீவந்தராயிருப்பார்களானால் இவர்கள் வாரிசுதாராய் ஒவ்வொருவனுடைய சொத்தை பிரத்தியேகப்பிரத்தியேகமாய் அடைவார்கள், எப்படியென்றால் கூடப்பிறந்த சகோதர பந்தத்துவமுள்ள கரீம் என்பவனும், சைது என்பவனுமான இருபேர்கள் சுவர் விழுந்து ஒரே சமயத்தில் இறந்துபோனார்கள். இவ்விருவர்களுக்கு ஒரு தாயும், ஒரு எஜமானனும் இருக்கிறார்கள். பின்னும் கரீம் என்பவனுக்கு ஒரு புத்திரியும், சைது என்பவனுக்கு ஒரு புத்திரியும் ஜீவந்தராயிருக்கிறார்கள், பின்னும் இவ்விருவர்களுடைய சொத்து பொதுப்படையாய் ரூபாய் 90 இருக்கிறது, இவ்விஷயத்தில் ஷறுப்படி தாய்க்கு 6-ல் 1 பங்கு இருக்கிறபடியால் மேற்படி தொகையை 6-பாகம் செய்து இதின் ஆறில் ஒன்றாகிய ரூபாய் 15. பதினைந்தை மாதாவுக்கு கொடுக்க வேண்டும், பின்னும் ஒவ்வொருவருக்கு ஏகபுத்திரியிருக்கிறபடியால் ஷறுப்படி ஏகபுத்திரிக்கு மொத்தசொத்தில் 2-ல் 1-பாகமுண்டு. இவ்வகைப்படிக்கு ரூபா 90-ன் மேற்பாதி பங்காகிய ரூபா 45 இருபேர்களுடைய இரு புத்திரிகளுக்கும் கொடுத்துவிடவேண்டும், பின்னும் மேற்படி ரூபா 90-ல் தாய்க்கும், புத்திரிகளுக்கும் கொடுத்துவிட்ட ரூ 60 போக மீதமிருக்கும் ரூ 30 எஜமானனுக்குமாக கொடுத்துவிடவேண்டும். பின்னும் இவ்விடத்தில் 2 புத்திரிகளுக்கு 3-ல் 2. கொடுக்கவேண்டியது நியாயமிருக்க 2-ல் 1. பாகம் கொடுக்கவேண்டிய காரணம் ஏதென்றால் ஒரேஒருவனுக்கு 2 புத்திரிகள் இருக்குமாகில் அப்படிக்கு 3-ல் 2 கொடுக்கப்பட்டிருக்கும் இந்த புத்திரிகளோ வெவ்வேறான 2-பேர்களின் 2-புத்திரிகளாக இருக்கிறபடியால் மொத்தசொத்தில் 2-ல்1-பாகம் 2-புத்திரிகளுக்கு கொடுக்கப்பட்டது.

2-வது சங்கதி மேற்படி இருபேர்களில் எவனாவது முன் இறந்துபோயிருந்தால் அப்போது பின் இறந்தவன்முன் இறந்தவனுடைய

வாரிசாயிருப்பான், எப்படி என்றால் ஒரு விஷயத்தில் வந்திருக்கிறதாவது மேற்கண்ட எஜமானனுக்கு ஆசபத்துவகையாக கிடைத்த ௹ 30 அவனுக்கு கொடுக்கப்படாமல் இவனையும்விட மேலான ஆசபத்துக்காரனாகிய பின் இறந்துபோன சகோதரனுக்கு கொடுக்கப்படும், பின்னும் இப்படி கொடுத்துவிட்டதின்பின் மேற்படியும் இவனுக்கு கிடைத்த பாகமாகிய ௹ 30-ம் இவனுடைய வாரிசுகளின் மேரில் பாகிக்கப்படவேண்டும். அதாவது தாய்க்கு 6-ல் ஒன்றாகிய ௹ 5-ம் இரு புத்திரிகளுக்கு ½-பாகமாகிய ௹ 15-ம் மீதமிருக்கும் ௹ 10-ம் எஜமானனுக்கு கிடைக்கும், இப்படிபாகம் செய்தவிதத்தில் ஒவ்வொரு வாரிசுக்கு வந்த தொகை எதென்றால் தாய்க்கு 2-வகையில் வந்த ௹ 20 இருபுத்திரிகளுக்கு ஷை 2-வகையால் வந்த ௹ 60 ஷை எஜமானனுக்கு ஒருவகையாக வந்த ௹ 10 ஆக ௹ 90-ரின் பாகம் சரி.

இதற்கு தெளிவான விபரம் 3-வகையாக யிருக்கிறது.

1-வது வகை, முன்னும் பின்னும் இறந்துபோனதாக தெரியாத சகோதரர்களாகிய சைது என்பவனுக்கும், கரீம் என்பவனுக்கும் ஒரு தாயும், ஒரு எஜமானனும் சைதுக்கு ஒருபுத்திரியும் கரீமுக்கு ஒரு புத்திரியும் இருக்கிறார்கள். இவர்களைத்தவிர வேறே வாரிசு இல்லை, இவர்களே வாரிசுகளாயிருக்கிறார்கள், பின்னும் ஷை இரு சகோதரர்களுக்கும் பொதுப்படையாக ரூபா 90மாத்திரம் ஆஸ்தியிருக்கிறது, இதில் சைதின் ரூபாய் இவ்வளவென்றும் கரீமுடைய ரூபாய் இவ்வளவென்றும் தெரியவில்லை. ஆகையால் ஷை இருபேர்களுடைய தாயாருக்கு ஷரூப்படி 6-ல் 1-பாகமுண்டு. இந்த பாகப்படி ஷை ௹ 90-ஐ 6-பாகம் செய்து 6-ல் 1-க்கு வந்த ரூபா 15 தாயாருக்கு கொடுத்துவிடவேண்டும், பின்னும் ஷை இருபேர்களின் புத்திரிகள் 2-க்கு ஷரூப்படிக்கு 2-ல்1-பாகமுண்டு, இந்த பாகப்படி ஷை ரூபா 90-ரின் பாதி ரூபா 45 ஆகிறது, இந்த ரூபாய் நாற்பத்தைந்தை 2-புத்திரிகளுக்கும் கொடுத்துவிடவேண்டும், பின்னும் இப்படிக்கு தாய்க்கும், புத்திரிகளுக்கும் கொடுத்துவிட்ட ரூபாய் 60 போக மீதமிருக்கும் ரூபா 30 ஷை இருபேர்களின் மிகுதிக்காரனாகிய எஜமானனுக்கு கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, கரீம், மன்அலா 90
மாதா...புத்திரி...புத்திரி...எஜமான்
6-ல்1...............½...............மிகுதி
15 —— 45 —— 30

2-வது வகை சைது என்பவன் முன்னும் கரீம் என்பவன் பின்னும் இறந்து போயிருந்திருப்பானேயானால் அப்போது முன் இறந்துபோன சைது என்பவனுக்கு ஒரு தாயும் ஒரு புத்திரியும் கரீம் என்ற சகோதரனும் ஒரு சகோதரன் மகனும் ஒரு எஜமானனும் ஆக 5 பேர்கள் மாத்திரம் வாரிசுகளாயிருக்கிறார்கள் இவர்களில் சகோதரன் இருப்பதால் சகோதரன், மகனும், எஜமானனும், பாக மற்றவர்களாய் போனார்கள் ஆகையால் மீதமிருக்கிறவர்கள் தாயும் மகளும் கரீம் என்ற சகோதரனுமே இவர்களே வாரிசுகளாயிருக்கிறார்கள் இப்போது ஷை தொகை ௹ 90 ஐ 6 பாகம் செய்து தாயின் பாகமாகிய 6-ல் 1க்கு ௹ 15-ம் புத்திரியின் பாகமாகிய அரை அதாவது ½க்கு 45-ம் மொத்தம் ௹ 90ல் ௹ 60 போக மீதமிருக்கும் ௹ 30 இதை மிகுதிக்காரனும் இறந்து போன சகோதரனாகிய கரீம் என்பவனுக்கு கொடுக்கவேண்டும் சகோதரன் வந்தபடியால் எஜமான் மஹ்ரூமாய்ப்போனான். உதாரணம்.

மய்யத்து சைது,மன்அலா 90.
மாதா. புத்திரி..சகோதரன்...எஜமான்...சகோதரன் மகன்
6-ல் 1......½....மிகுதி........மஹ்ரூம்...மஹ்ரூம்
15 — 45 — 30 —— மஹ்ரூம் மஹ்ரூம்

3-வது வகை, பின் இறந்து போன ஷை கரீம் என்பவனுக்கு சைது என்பவனுடைய சொத்தில் கிடைத்த பாகமாகிய ௹ 30க்கு ஒரு தாயும், ஒரு புத்திரியும், ஒரு சகோதரன் மகனும் ஒரு எஜமானனும் இவர்கள் மாத்திரம் வாரிசுகளாயிருக்கிறார்கள் இவர்களில் ஷை சகோதரன் மகன் தூரபந்துவாயிருப்பதால் பாக மற்றவனாய் போனான் ஆனபடியால் மேல் கண்ட ௹ 30ல் தாயின் பாகமாகிய 6-ல் 1க்கு வந்த ௹ 5 இது ஷை தாய்க்கும் புத்திரியின் பாகமாகிய அரை அதாவது 2-ல் 1க்கு வந்த ௹ 15 இந்த ௹ பதினைந்தை புத்திரிக்கும் மீதமிருக்கும் ௹ 10 எஜமானனுக்குமாக பாகிக்கப் படவேண்டும். உதாரணம்.

மய்யித்து சைது, கரீம், மஸ்ஊதா 30.
மாதா...புத்திரி...சகோதர மகள்...எஜமான்
6-ல் 1......½..........மற்றதும்...............மீதம்
5 — 15 — மற்றது — 10

ஆக வகை-2-க்கு தாய்க்கு வந்த கூ 20-ம் இரு புத்திரிகளுக்கு சேர்ந்த கூ 60-ம் எஜமானனுக்கு சேர்ந்த கூ 10-ம் ஆக மொத்த கூ 90-ம் சரி.

12-வது கண்டம், கர்ப்பத்தைப்பற்றி.

இறந்தவனுடைய ஒரு வாரிசு இறந்தவனுடைய மரணக்காலத்தில் தன் தாயின் கர்ப்பத்தில் இருந்திருந்து அப்பால் உயிருடன் ஜனனமாவானாகில் அப்போது இவன் இறந்தவனுடைய வாரிசாவான், ஆனால் உயிரோடு ஜனனமாகாமற்போனால் அப்போது அவன் இறந்தவனுடைய வாரிசாகமாட்டான்.

பின்னும் சில குழந்தைகள் நேரே ஜனனமாகின்றன, இது எப்படியென்றால் முதலில் குழந்தைகளின் தலையும் அப்பால் எல்லா தேகமும் வெளியே வருகின்றன, இப்படி ஜனனமாகும்போது தலையும் நெஞ்சும் இவ்விரண்டும் உயிருள்ளதாயிருந்து மற்ற தேகம் வெளியே வருவதற்கு முன்னதாகவே குழந்தை இறந்துபோகுமாகில் அப்போது இக்குழந்தை இறந்தவனுடைய வாரிசாய் மீறுசையடையும், பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றி மற்ற வாரிசுகளுக்கும் இவனால் மீறுசு கிடைக்கும், பின்னும் தலை மாத்திரம் வெளியே வரும்வரை உயிருள்ளதாயிருந்து நெஞ்சு வெளியே வருவதற்குமுன் இறந்துவிட்டால் அப்போது மெடி குழந்தை இறந்தவனுடைய வாரிசாகமாட்டாது.

பின்னும் சில குழந்தைகள் நேர்த்தப்பாக ஜனனமாகின்றன, எப்படியென்றால் முதலில் கால்களும், அப்பால் எல்லா தேகமும் வெளியே வருகின்றன, இப்படி ஜனனமாகும்போது கால்களும் தொப்புளும் இவ்விரண்டும், உயிருள்ளதாயிருந்து மற்ற தேகம் வெளியே வருவதற்கு முன்னதாகவே குழந்தை இறந்துபோகுமாகில் அப்போது இக்குழந்தை இறந்தவனுடைய வாரிசாய் மீறுசு அடையும், பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றி மற்றவர்களுக்கும் இவனால் மீறுசு கிடைக்கும், பின்னும் மெடி குழந்தை கால் மாத்திரம் வெளியே வரும்வரை உயிருள்ளதாயிருந்து தொப்புள் வெளியே வருவதற்குமுன் இறந்துவிட்டால் அப்போது மெடி குழந்தை இறந்தவனுடைய வாரிசாகமாட்டாது.

பின்னும் கர்ப்பத்தின் அக்லெமுத்தத்து என்ற குறைந்த காலமானது 6-மாதமும் அதிக காலமானது 2-வருடமுமாக இருக்கின்றன, பின்னும் இறந்தவனுடைய பத்தினி தன் பர்த்தா இறந்ததுமுதல் 2-வருடத்துக்குள் பிள்ளைப்பெறுவாளாகில் அப்போது அக்குழந்தை இறந்தவனுடைய நசல் என்று தீர்மானிக்கப்படும், பின்னும் இறந்தவனுடைய சொத்தில் அக்குழந்தைக்கு பாகமும் கிடைக்கும், பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றியும், வேறு ஜனங்களுக்கும் இவனால் மீறுசு கிடைக்கும், பின்னும் இந்த 2-வருடக்காலம் ஒழிந்ததின்பின் மெடி குழந்தை ஜனனமானால் அக்குழந்தை இறந்தவனுடைய நசல் என்று தீர்மானிக்கப்படமாட்டாது, பின்னும் இறந்தவனுடைய மீறுசும் கிடைக்கமாட்டாது. பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றி மற்ற ஜனங்களுக்கும் இவனால் மீறுசு கிடைக்கமாட்டாது. தஸ்ஹீலுல் பருயிது 54-வது பக்கம்.

பின்னும் ஒருவன் ஒரு ஸ்திரீயை நிகாஹ் செய்து இறந்துவிடுவானாகில் மெடி ஸ்திரீ மெடி நிக்கா தேதிமுதல் 6-மாதத்திற்குள் பிள்ளைபெற்றால் அந்தப்பிள்ளை இறந்தவனுடைய நசல் என்று தீர்மானிக்கப்படமாட்டாது, பின்னும் இறந்தவனுடைய சொத்தும் கிடைக்கமாட்டாது, பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றியும் வேறு ஜனங்களுக்கு அவனால் மீறுசு கிடைக்கமாட்டாது, பின்னும் இத்தத்து என்பது எதென்றால் ஒருவன் இறந்ததின்பின்னாவது அல்லது ஒருவன் தன் பெண்சாதியை தலாக்கு கொடுத்ததின்பின்னாவது அவனுடைய பத்தினி 4 மாதம் 10 நாள் கோஷாவில் உட்காரும் காலத்துக்கு இத்தத்து என்றுபேர், பின்னும் இந்தகாலம் கழிகிறவரை அவள் எவனுக்கும் நிக்கா செய்வதால் தடைப்பட்டிருக்கிறாள், இதின் விபரம் நிக்கா புத்தகங்களில் விபரமாய் எழுதப்பட்டிருக்கிறது.

பின்னும் கர்ப்பமானது மப்பத்தால் இல்லாதிருந்த அன்னியனுடைய, அதாவது பந்துவினுடைய கர்ப்பமாயிருந்திருக்குமாகில் அப்போது அதின் அக்லெதுமுத்தத்தன்ற குறைந்த காலமானது 6-மாதமாயிருக்கிறது, இந்த ஆறும் மாதத்தில் அல்லது 6 மாதத்திற்குள் ஷெடி குழந்தை ஜனனமானால் இறந்தவனுடைய சொத்தையடைய அது வாரிசாகும், இப்படிக்கு இல்லாமல் 6 மாதத்துக்கு மேற்பட்டு ஜனனமானால் இறந்தவனுடைய சொத்தை அடைய அது வாரிசாகமாட்டாது, பின்னும் இந்த பந்தத்துவத்தைப்பற்றி மற்ற ஜனங்களுக்கும் இவனால் மீராசு கிடைக்கமாட்டாது, இது எப்படியென்றால் இறந்துபோனவனுடைய சகோதரன் பெண்சாதி கர்ப்பனியாயிருந்து இறந்தவனுடைய இறந்த தேதிமுதல் 6 மாதத்திலாவது, அல்லது அதற்குள்ளாவது குழந்தையை பெறுவாளாகில் அப்போது அக்குழந்தைக்கு ஷெடி இறந்தவனுடைய மீராசு கிடைக்கும், இப்படி பெறாமல் 6 மாதம் கழித்ததின்பின் ஷெடி ஸ்திரீ குழந்தை பெறுவாளாகில் அப்போது அக்குழந்தை இறந்தவனுடைய வாரிசாகமாட்டாது, இதுக்கு மீராசும் கிடைக்கமாட்டாது. இல்முல் பறுயது 51-வது பக்கம்.

பின்னும் இறந்தவனுக்கு கர்ப்பத்தில் இருக்கப்பட்ட குழந்தை தவிர வேறொருவனும் வாரிசாயிருந்திரு விட்டாலும் அல்லது வாரிசாயிருக்கும் வேறொருவன் அந்த கர்ப்பத்தினால் வாரிசிலிருந்து நீங்கிப்போகத்தக்கவனாயிருந்தாலும் அல்லது அந்த கர்ப்பத்தினால் அந்த வாரிசின் பாகத்தில் குறைவுதல் நேரிடுகிறதாயிருந்தாலும் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் அந்த கர்ப்பத்தின் குழந்தை ஜன்னமாகும் வரை இறந்தவனுடைய சொத்தைவாரிசுகளின் பேரில்பாகிக்ககூடாது பின்னும் அந்த கர்ப்பத்தின் குழந்தையால் மற்ற வாரிசுகள் வாரிசிலிருந்து நீங்கிப் போகப்படாதவர்களாயிருந்தாலும் அல்லது அந்த கர்ப்பத்தால் இந்த வாரிசுகளின் பாகத்துக்கு யாதொரு குறைவுதல் நேரிடாமல் இருந்தாலும் அதாவது அந்த வாரிசுக்கு இட்டமாயிருக்கும் பாகமானது அந்த கர்ப்பத்தின் குழந்தையால் மாறத்தக்கதாயில்லாமல் இருக்குமாகில் அப்போது ஷெடி கர்ப்பத்தின் குழந்தை பிறந்ததின் பின்தான் சொத்து பாகிக்கப்படவேண்டுமென்பது அவசியமில்லை அதற்குமுன்னமே அந்தவாரிசின் பாகத்தை கொடுத்து விடலாம். பின்னும் அந்த வாரிசுக்கு யாதொரு பாகம் இன்ன

தென்று தீர்மானமாகாமல் இருந்தாலும் அல்லது பாகம் தீர்மானமாயிருந்த அது மாறத்தக்கதாயிருந்தாலும் அப்போது ஷெடி கர்ப்பத்தின் சங்கதி தெரிந்துக் கொள்ளும் வரை ஷெடி வாரிசுக்கு பாகம் கொடுக்கப்படமாட்டாது. கர்ப்பத்தின் குழந்தையால் வாரிசுகள் வாரிசிலிருந்து நீங்கிப் போவதின் உதாரணம்.

மய்யத்து ஜைது,
பத்னி..புத்திரி..பவுத்திரி..கர்ப்பம்
8-ல் 1..மிகுதி...மஹ்ரூம்...ஆண்

ஷெடி கர்ப்பம் ஆணாக பிறந்தால் அப்போது இறந்தவனுக்கு இவன் புத்திரனாகிறான் ஆகையால் பத்னிக்கு 8-ல் 1 கிடைக்கும் பின்னும் புத்திரி மிகுதிக்காரியாய் விடுவாள் பின்னும் பவுத்திரிக்கு ஒன்றுமே இல்லாமல் போய் விடுகிறது பின்னும் அவள் மஹ்ரூமாய் விடுகிறாள் வாரிசிலிருந்து நீங்கிப் போய் விடுகிறாள் 2-வது உதாரணம்.

மய்யத்து ஜைது
பத்னி......சகோதரி மரணமான புத்திரனுடைய
8-ல் 1......அமானம்
கர்ப்பம்.
ஆண்

ஷெடி கர்ப்பம்ஆணாய்பிறந்தால் அப்போது ஜைது, என்பவனுக்கு அவன் பவுத்திரனாகிறான் ஆகையால் பத்னிக்கு 8-ல் 1ம் சகோதரிக்கு ஒன்றுமே இல்லாமல் போய் விடும் மஹ்ரூமாய் விடுவாள் வாரிசிலிருந்து நீங்கி விடுவாள் ஆகையால் பத்னிக்கு 8-ல் 1 கொடுத்து விட்டு மீத முழுமையும் அமானமாகவைக்கவேண்டும்.

கர்ப்பத்தின் குழந்தையால் வாரிசுகள் வாரிசிலிருந்து நீங்காமல் தன் பாகம் சரியாய் பெற்றுக் கொள்வதின் உதாரணம்.

மய்யத்து ஜைது
பத்னி......சகோதரி மரணமான புத்திரனுடைய
8-ல் 1......அமானம்
கர்ப்பம்.
பெண்

கர்ப்பம்பெண்ணாய்ப்பிறந்தால் அப்போது இறந்தவனுக்கு அவள் பவுத்திரியாகிறாள் ஆகையால் பத்னிக்கு 8-ல் 1ம் சகோதரிக்கு ½-ம் பவுத்திரிக்கு ½ யாக கிடைக்கும் ஆதலால் பத்னிக்கு 8-ல் 1 கொடுத்து விட்டு மீத முழுமையும் அமானத் தாகவைக்கவேண்டும் இந்த உதாரணத்தில் பத்னிக்கு அவளுடைய அசல் பாகமாகிய 8-ல் 1 மாறுமல் அவளுக்கு சரியாய் கிடைத்தது பின்னும் சகோதரிக்கு அவளுடைய அசல்பாகமாகிய ½ மாறுமல் அவளுக்கு சரியாய் கிடைத்தது.

கர்ப்பத்தின் குழந்தையால் வாரிசுகளின் பாகத்தில்குறைவுதல் நேரிடுவதின் உதாரணம்.

மய்யத்து ஜைது
பத்னி....புத்திரி....கர்ப்பம்
ஆண்

ஷை. கர்ப்பம் ஆணாக பிறந்தால் அப்போது இறந்தவனுக்கு அவன்புத்திரனாகிறான் ஆகையால்பத்னிக்கு8-ல்1ம்மீதத்தில் புத்திரனுக்கு 2ம்புத்திரிக்கு 1ம்கிடைக்கும் ஆதலால் பத்னிக்கு8-ல்1கொடுத்து விட்டு மீத முழுமையும் அமானத்தாகவைக்க வேண்டும் இந்த மஸ்அலாவில் புத்திரிக்கு கர்ப்பத்தினால் அவள் பாகத்தில் குறைவுதல் நேரிட்டது.

பின்னும் இவ்விஷயத்தில் ஹனபியாக் காரரிடம் பத்வா எப்படியிருக்கிறதென்றால் அந்த கர்ப்பத்தை ஆணென்று பாவித்துக்கொள்ளும் விஷயத்தில் அதிக பாகம் கிடைக்குமோ அல்லது பெண்ணென்று பாவித்துக் கொள்ளும்விஷயத்தில் அதிகபாகம் கிடைக்குமோ என்று யோசித்து இவைகளில் எந்த பாகம் அதிகமாயிருக்குமோ அதை கர்ப்பத்துக்காக வென்று வைத்துக் கொண்டு மற்ற சொத்தை மற்ற வாரிசுகளின் பேரில் பாகித்து அவரவர்களுக்கு கொடுத்து விடுவார்கள் பின்னும்ஷைகர்ப்பத்தால் ஒன்றை விட அதிக குழந்தைகள் ஜன்மமானால்எவ்வளவு பங்கு ஜாஸ்தியாகுமோ வாபசு பண்ணுவதற்காக வாரிசுகளிடத்திலிருந்து ஜாமீன் வாங்குவார்கள்.

பின்னும் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் மஸ்அலாவின் தஸ்ஹீயுடைய பயான்.

இதற்கு 2-வகை இருக்கின்றன.

எப்படியென்றால் 1-வது வகை. கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை ஆண் குழந்தையென்று பாவித்து ஒரு மஸ்அலாவும் 2-வது வகை கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை பெண் குழந்தையென்று பாவித்து ஒரு மஸ்அலாவும் ஆக 2 மஸ்அலாக்கள் செய்து இவ்விரண்டும் தஸ்ஹீ செய்யவேண்டும், இப்படி தஸ்ஹீ செய்தபின் இந்த 2 மஸ்அலாக்களின் தஸ்ஹீகளுடைய எண்களில் தவாபுக்குடைய சம்பந்தமிருக்கிறதா, அல்லது தபாயுனுடைய சம்பந்தமிருக்கிறதா வென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் அவைகளில் தவாபுக்குடைய சம்பந்தமிருக்குமாகில் ஒரு மஸ்அலாவின் தஸ்ஹீயுடைய இலக்கத்தின் ஜுஸ்உல்வபுக்கை 2-வது மஸ்அலாவின் தஸ்ஹீயுடைய இலக்கத்தால் பெருக்கவேண்டும், இப்படி பெருக்கிவந்த தொகையானது கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கும், இப்படிக்கு தவாபுக்குடைய சம்பந்தமில்லாமல் தபாயுனுடைய சம்பந்தமிருக்குமாகில் அப்போது ஒரு மஸ்அலாவின் தஸ்ஹீயுடைய எல்லா இலக்கங்களை மற்ற மஸ்அலாவின் எல்லா இலக்கங்களோடு பெருக்கவேண்டும், அப்படி பெருக்கி ஆகுனால் வரும் தொகையானது ஷை கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கும். பின்னும் ஆண் என்று பாவித்துக்கொள்ளும் விஷயத்தில் அதிக பாகம் கிடைக்கும் என்பதற்கு உதாரணம்.

மய்யத்து ஜைது, மஸ்அலா 8 தஸ்ஹீ 16.
பத்னி..புத்திரன்..கர்ப்பம்
புத்திரன்
8-ல் 1..மிகுதி....மிகுதி
1 —— 7
2 — 7 — 7

இவ்விஷயத்தில் கர்ப்பத்தை ஆண் என்று தீர்மானித்துக் கொண்டபடியால் ஷை கர்ப்பகுழந்தை மஸ்அலாவின் தஸ்ஹீயின் தொகையாகிய 16-ல் பத்னியின் பாகம் 2-போக மீதமிருக்கும் 14-ல் பாதிபங்கு அதாவது 7-அடையும்படியான வாரிசாய்விட்டது ஒருவேளை இவ்விஷயத்தில் ஷை கர்ப்பத்தை பெண்ணென்ற புத்திரி என்று தீர்மானித்துக்கொண்டால் அப்போது ஷை கர்ப்ப குழந்தை ஷை மஸ்அலாவின் தஸ்ஹீயின் தொகையாகிய 16-ல் பத்னியின் பங்கு 2-போக மீதமிருப்பதில் 3-ல் 1-க்கு மாத்திரம் வாரிசாய் விடும், இவ்

விரண்டு வகையில் புத்திரியின் பாகம் குறைந்ததாயும் புத்திரனுடைய பாகம் அதிகமானதாயும் இருக்கிறபடியால் ஷை. கர்ப்பம் புத்திரனென்று பாவித்து மஸ்அலா செய்து கர்ப்பத்தின் பாகமாகிய மீதத்தின் ½ பாகத்தை அமானத்தாக வைக்கவேண்டும்.

பின்னும் பெண்ணென்று பாவித்துக்கொள்ளும் விஷயத்தில் அதிக பாகம் கிடைக்கும் என்பதற்கு உதாரணம்.

மய்யத்து — சைதா, மஸ்அலா 6 அவுல் 8.

பதி	மாதா	பின்னபிதுருதி	கர்ப்பம் பின்னோதரி
½	6-ல் 1	6-ல் 1	½
3	1	1	3

இவ்வகையில் ஷை. கர்ப்பத்தை பெண்ணென்ற பின்னோதரியென்று தீர்மானித்தபடியால் ஷை. கர்ப்பம் ஜவில்புருஜ என்ற பங்குக்காரியாய்விட்டது, அதாவது 2-ல் 1 பாகத்தை அடையத்தக்க வாரிசாய்விட்டது, ஆகையால் மஸ்அலா 6-ஆல் செய்து பின்னோதரிக்கு 3 கொடுக்கப்பட்டது, இப்படிக்கு தீர்மானிக்காமல் ஆண் என்ற பின்னோதரனென்று தீர்மானித்தால் அப்போது ஷை. கர்ப்ப குழந்தை மிகுதிக்காரனாய் மீதமிருக்கும் ஒரு பாகத்துக்கு உடையவனாய்விடும், ஆகையால் ஷை. கர்ப்பத்தை இந்த இடத்தில் அதிக பங்கு வரவேண்டியதற்காக பெண்ணென்ற பின்னோதரியென்று தீர்மானிக்கப்பட்டது, இவ்விஷயத்தில் கர்ப்பத்துக்கு 3 பங்கு கிடைத்தது.

பின்னும் எந்த வாரிசுக்கு எந்த பங்கு கிடைத்ததோ அது ஆண்குழந்தையின் வகைப்படி கிடைத்திருந்தால் அதை பெண் குழந்தையின் வகைப்படி தஸ்ஹீ செய்யப்பட்ட இலக்கத்தால் பெருக்கவேண்டும், பின்னும் எந்த வாரிசுக்கு எந்த பங்கு கிடைத்ததோ அது பெண்குழந்தையின் வகைப்படி கிடைத்திருந்தால் அதை ஆண் குழந்தையின் வகைப்படி தஸ்ஹீ செய்யப்பட்ட இலக்கத்தால் பெருக்கவேண்டும். இப்படி 2-வகையாக பெருக்கிவைத்த 2-வகைகளின் தொகைகளில் எந்த தொகை தாழ்ந்த தொகையாயிருக்குமோ அந்த தொகையை அந்த வாரிசுக்கு கொடுக்கவேண்டும், ஷை. 2-வகைகளின் தொகைகளில் ஒன்று மற்றொன்றில் கழித்து மீதமிருக்கும் தொகையை ஷை. கர்ப்பகுழந்தை ஜனனமாகும்வரை அமானத்தாக வைக்கவேண்டும்.

பின்னும் ஷை. கர்ப்பக் குழந்தை பிறந்தின்பின் அமானத்தாய் வைக்கப்பட்ட பாக்கி தொகையை பெற்றுக்கொள்ள அவன் வாரிசாவானாகில் அப்போது அந்த பாக்கியை அவனுக்கு கொடுக்கவேண்டும், அப்படி பெற்றுக்கொள்ளத்தக்க வாரிசு அவன் ஆகாமற்போனால் அப்போது எத்தெந்த பாகம் யார் யாரால் வாங்கி அமானமாக வைக்கப்பட்டிருக்கின்றதோ அவரவர்களுக்கு வாபசுகொடுத்துவிடவேண்டும், எப்படியென்றால் இறந்தவனுக்கு ஒரு தகப்பனும், ஒரு தாயும், ஒரு புத்திரியும், ஒரு பத்தினியும், ஒரு கர்ப்பமுமிருந்தால் அப்போது பிதாவுக்கு 32-ம், மாதாவுக்கு 32-ம், புத்திரிக்கு 13-ம், பத்னிக்கு 24-ம் கொடுக்கப்படும்.

பின்னும் அமானமாக வைக்கப்பட்ட தொகையாகிய பிதாவின் 4. மாதாவின் 4. பத்னியின் 3. கர்ப்பத்தின் 104 ஆகமொத்தம் 115 இந்த தொகையை ஷை. கர்ப்பம் வெளியாகும்வரை அமானமாக வைக்கப்படும்.

பின்னும் ஷை. கர்ப்பமானது 4-ஆண்குழந்தைகளாக ஜனனமானால் அப்போது அமானமாக வைக்கப்பட்ட மீத தொகையில் பிதாவுக்கு 4, மாதாவுக்கு 4, பத்னிக்கு 3,4, புத்திரர்களில் ஒவ்வொருவருக்கு 26, 26-ஆக கொடுக்கப்படும்.

பின்னும் ஷை. கர்ப்பத்தின்குழந்தைகள் 3 ஆண்குழந்தைகளாகவாவது, அல்லது இதைவிட குறைந்தவர்களாகவாவது பிறந்தால் அப்போது புத்திரிக்கு கொடுக்கப்பட்ட பங்காகிய 13, பதிமூன்றையும் கர்ப்பத்துக்காக வைக்கப்பட்ட பங்காகிய 104-ஐயும் சேர்த்து கூடிய தொகை 117, நூற்றிப்பதினேழை ஒவ்வொரு புத்திரர்களுக்கு 2 பாகமாகவும், புத்திரிக்கு ஒரு பாகமாகவும் பாகிக்கப்படும்.

பின்னும் ஷை. கர்ப்பமானது ஒரு புத்திரியாகவாவது, பல புத்திரிகளாகவாவது பிறந்தால் அப்போது பிதாவுக்கும், மாதாவுக்கும், பத்னிக்கும் கொடாமல் கர்ப்பத்துக்காகவென்று அமானமாக வைத்த பங்குகளாகிய பிதாவின் 4-ம், மாதாவின் 4-ம், பத்னியின் 3-ம், புத்திரியின் 13-ம் கர்ப்பத்தின் பாகமாகிய 104-ம், ஆகமொத்தம் 128,

நாக்கி யிருப்பத்தி எட்டை எல்லா புத்திரிகளுக்கும் சமபாகமாக பாகித்துக் கொடுக்கவேண்டும்.

மேற்கண்ட கர்ப்ப பாகத்தின் சங்கதி திவ்வியமாய் மனதில் பதியும்படி இலேசாய் விவரித்து எழுதப்படுகிறது.

கர்ப்பம் ஆண் குழந்தையென்று பாவித்துக்கொண்டு செய்யும் பாகம்.

1-வது இறந்துபோனவனுடைய வாரிசின் நாமங்கள் இவ்விதமாக எழுதப்படவேண்டும், அதாவது பிதா, மாதா, புத்திரி, கர்ப்பம் ஆண், பத்னி இவ்விதமாக எழுதிக்கொண்டதின்பின் அந்த வாரிசுகளுடைய நாமங்களின் அடியில் அவரவர்களின் பாகங்களை எழுதிக் கொள்ளவேண்டும். எப்படியென்றால்,

பிதா — மாதா — புத்திரி கர்ப்பம் — பத்னி
ஆண்
6-ல் 1. — 6-ல் 1. — மிகுதிக்காரர்கள் — 8-ல் 1.

இவ்விதமாக எழுதிக்கொண்டதின்பின் மஸ்அலாவை கண்டு பிடிக்கவேண்டும், அது எப்படியென்றால் மேற்கண்ட எல்லா வாரிசுகளின் பாகங்கள் எந்த இலக்கத்தினால் பாகிக்கப்படுமென்று யோசிக்கவேண்டும், அப்படி யோசித்ததின் இலக்கம் 24-ஆக இருக்கிறது, இந்த 24 தான் மேற்கண்ட வாரிசுகளின் பாக மஸ்அலாவாக இருக்கிறது, இந்த 24 இருபத்திநாலை ஒருபக்கம் எழுதிக்கொண்டு ஒவ்வொரு வாரிசின் பாகத்தால் இதை பாகிக்கவேண்டும், எப்படியென்றால் மஸ்அலாவானது 24-ஆகவும் தகப்பனுடைய பாகமானது 6-ல் 1. ஆகவுமிருக்கிறபடியால் இந்த 6-ஆறைக்கொண்டு 24 இருபத்திநாலை பாகிக்கவேண்டும், 6÷24=4. இப்படி பாகித்ததினால் தகப்பனுடைய பங்கு மஸ்அலாப்படி 4 ஆகின்றது. பின்னும் இவ்விதமாகவே மாதாவின்பங்கு6-ல்1-ஆகவிருக்கிறபடியால்இந்த6-றைக்கொண்டு 24 இருபத்திநாலை பாகிக்கவேண்டும். 6÷24=4. இப்படி பாகித்ததினால் மாதாவுடைய பங்கு மஸ்அலாப்படி 4-ஆகின்றது பின்னும் இவ்விதமாகவே வாரிசுதாரராகிய பெண்சாதியின் பாகம் 8-ல் 1-ஆக இருக்கிறது, இந்த 8 எட்டைக்கொண்டு மே௸ மஸ்அலாவாகிய 24 இருபத்திநாலை வகுக்கவேண்டும், அப்போது பத்னியின் பாகம் மஸ்அலாவின்படி 3-ஆகின்றது.8÷24=3. இப்போது ஒரு புத்திரியும், ஒரு புத்திரியும் மீதியாயிருக்கிறார்கள், இந்த இருவர்கள் அஸபத்து என்ற மிகுதிக்காரர்களாயிருக்கிறார்கள், அதாவது மீதமிருக்கும் பதின்மூன்றை பெற்றுக் கொள்ளப்பட்டவர்களா யிருக்கிறார்கள், எப்படியென்றால்,

மய்யத்து தைசநு, மஸ்அலா 24
பிதா......மாதா......பத்னி......புத்திரி......கர்ப்பம்
புத்திரன்
4 4 3 மீதம் 13

இந்த மூவர்களின்பாகத்தின் மொத்தம் 11 ஆகின்றது இந்த பதினொன்றை மஸ்அலாவின் எண்ணாகிய 24-ல் கழிக்கவேண்டும். அப்படி கழித்ததில் மீதமிருக்கும் 13 பதிமூன்று புத்திரியுடையவும், புத்திரனுடையவும், பாகமாயிருக்கிறது. இந்த பாகங்களை மஸ்அலாவின்படி வாரிசுகளின் பேரில் பாகிக்கப்பட்டவைகளா யிருக்கின்றன இதின் விபரம்.

கர்ப்பம் பெண்குழந்தையாக பாவித்துக்கொண்டு செய்யும் பாகம்.

முதலில் இறந்துபோனவனுடைய வாரிசுகளின் நாமங்கள் இவ்விதமாக எழுதவேண்டும் அதாவது பிதா–மாதா–பத்னி–புத்திரி கர்ப்பபுத்திரி இவ்விதமாக எழுதிக்கொண்டதின்பின் அந்தந்த வாரிசுகளுடைய நாமங்களின் அடியில்அவரவர்களின் பாகங்களைஎழுதிக் கொள்ளவேண்டும் எப்படி என்றால்,

பிதா——மாதா——பத்னி——புத்திரி——கர்ப்பம்
6-ல்1——6-ல் 1——8-ல் 1—— 3-ல் 2——புத்திரி

இப்படி எழுதிக்கொண்டதின்பின் மஸ்அலாவைக் கண்டுபிடிக்கவேண்டும், அது எப்படியென்றால் மேற்கண்ட எல்லா வாரிசுகளின் பாகங்கள் எந்த இலக்கத்தால் பாகிக்கப்படுமென்று யோசிக்கவேண்டும், அப்படி யோசித்ததினால் வந்த இலக்கமானது 24-ஆக இருக்கிறது, இந்த 24 தான் மேற்கண்ட வாரிசுகளின் பாக மஸ்அலாவாயிருக்கிறது, இந்த 24 இருபத்திநாலை ஒருபக்கம் எழுதிக்கொண்டு ஒவ்வொரு வாரிசின் பாகத்தால் இதை பாகிக்கவேண்டும். எப்படியென்றால் மஸ்அலாவானது 24-ஆகவும் தகப்பனுடைய பாகமானது 6-ல் 1 ஆகவுமிருக்கிறபடியால் இந்த 6-றைக்கொண்டு 24 இருபத்தி

னாலே பாகிக்கவேண்டும், 6÷24=4. இப்படி பாகித்ததினால் தகப்பனுடைய பங்கு மஸ்அலாப்படி 4-ஆகின்றது, இவ்விதமாகவே வாரிசாகிய தாயாரின் பாகம் 6-ல் 1-ஆக இருக்கிறது, இந்த 6 ஆறைக் கொண்டு ஷெ. மஸ்அலாவாகிய 24 இருபத்திநாலை பாகித்தால் தாயாரின் பாகம் மஸ்அலாவின்படி 4-ஆகின்றது, பின்னும் இவ்விதமாகவே வாரிசாகிய பெண்ஜாதியின்\ பாகம் 8-ல் 1-ஆக இருக்கிறது, இந்த 8 எட்டைக்கொண்டு ஷெ. மஸ்அலாவாகிய 24 இருபத்திநாலை வகுக்கவேண்டும், அப்போது பத்னியின் பாகம் மஸ்அலாப்படி 3-ஆகின்றது. இவ்விதமாகவே வாரிசுகளாகிய இரு புத்திரிகளின் பாகம் 3-ல் 2-ஆக இருக்கிறது, இந்த மஸ்அலாவின் எண்ணாகிய 3 மூன்றால் வகுக்கவேண்டும், இப்படி வகுத்ததினால் மூன்றாவது பங்கு 8 வந்தது, மூன்றில் இரண்டுபங்கு ஆவதற்காக ஷெ. 8. எட்டை இரட்டித்துக்கொள்ளவேண்டும், அப்போது 3-ல் 2-பங்குக்கு 16 வந்தது, இந்த 16 இரண்டு புத்திரிகளின் பாகமாக இருக்கிறது, பாகங்களின் விபரமாவது.

மய்யத்து ஷை.ஷ, மஸ்அலா 24 அவுல் 27.

பிதா	மாதா	பத்னி	புத்திரி	கர்ப்பம் புத்திரி
4	4	3	16	

இந்த பங்குகளே மஸ்அலாவின்படி வாரிசுகளின்பேரில் பாகிக்கப்பட்டவைகளாயிருக்கின்றன, இப்படி மஸ்அலாவின் எண்ணாகிய 24. இருபத்திநாலை வாரிசுகளின்பேரில் பாகித்துவிட்டதின்பின் அந்த பாகங்களை கூட்டும்போது மொத்த தொகை 27 இருபத்தி ஏழாகின்றது, ஆகையால் இந்த மஸ்அலா 24-ஆக இல்லாமல் 27-ஆக இருக்கின்றது. இது மஸ்அலாவின் அவுலாயிருக்கிறது.

பின்னும் ஷெ. கர்ப்பத்தை புத்திரன் வகைப்படி ஒரு மஸ்அலாவும், புத்திரியின் வகைப்படி ஒரு மஸ்அலாவும் செய்யப்பட்டது, இப்படி இரண்டு வகையாக மஸ்அலா செய்ததின்பின் மஸ்அலாவின் தஸ்ஹீ கண்டுபிடிக்க ஜுஸ்ஸேவிப்பை தேடவேண்டும், இதற்காக புத்திரன் வகைப்படி பாவித்துக்கொண்ட மஸ்அலாவின் எண்ணாகிய 24-ம், புத்திரியின் வகைப்படி பாவித்துக்கொண்ட மஸ்அலாவின் எண்ணாகிய 27-ம் ஆக இந்த இரண்டு எண்களும் எந்த இலக்கத்தால் சரியாய் பகரப்படுமென்று யோசிக்கவேண்டும், அப்படி யோசித்ததில் இவ்விரண்டும் ஒரே இலக்கமாகிய மூன்றால் வகுக்கப்படுகின்றனவென்று தெரியவந்தது, அதாவது 24 இருபத்திநாலை 3-ஆல் வகுத்தால் 8 பேராப்பணம் வந்தது, இந்த 8-தான் புத்திரன் வகைப்படி பாவித்துக்கொண்ட மஸ்அலாவின் ஜுஸ்சேவிப்பாயிருக்கிறது வகுக்கும் விதம் 3÷24=8.

பின்னும் 27 இருபத்தியேழை மூன்றால் வகுத்தால் 9 பேராப்பணம் வந்தது, இந்த 9-தான் புத்திரி வகைப்படி பாவித்துக்கொண்ட மஸ்அலாவின் ஜுஸ்சேவிப்பாயிருக்கிறது, வகுக்கும் விதம் 3÷27=9.

பின்னும் இவ்விரண்டு ஜுஸ்சேவிப்குகளில் எந்த வகையின் சம்மந்தமிருக்கிறதென்று பார்க்கவேண்டும். அதாவது தவாபுக்குடைய சம்மந்தமிருக்கிறதா, அல்லது தபாயுனுடைய சம்மந்தமிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் இவ்விரண்டில் அதாவது 9-லும், 8-லும், தபாயுனுடைய சம்மந்தம் இருக்கிறதென்று தெரியவந்தது, இப்படி தபாயுனுடைய சம்மந்தமிருக்கிறபடியால் புத்திரன் வகைப்படியுள்ள மஸ்அலாவின் ஜுஸ்சேவிப்பின் எண்ணாகிய 8 எட்டை புத்திரியின் வகைப்படியுள்ள மஸ்அலாவின் எண்ணாகிய 27 இருபத்தியேழோடு பெருக்கவேண்டும். அதாவது 8 எட்டையும் 27 இருபத்தியேழையும் பெருக்கவேண்டும், 8×27=216. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 216 புத்திரன் வகைப்படியுள்ள மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கிறது.

பின்னும் புத்திரியின் வகைப்படியுள்ள மஸ்அலாவுடைய ஜுஸ்சேவிப்பின் எண்ணாகிய 9 ஒன்பதை புத்திரன் வகைப்படியுள்ள மஸ்அலாவின் எண்ணாகிய 24 இருபத்திநாலோடு பெருக்கவேண்டும். அதாவது 9 தையும், 24 இருபத்திநாலையும் பெருக்கவேண்டும். 9×24=216 இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 216 புத்திரியின் வகைப்படியுள்ள மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கிறது.

பின்னும் புத்திரன் வகைப்படி வந்த தஸ்ஹீயே மஸ்அலாவின்படி பாகிக்கும் விதமாவது ஷெ. தஸ்ஹீயே மஸ்அலாவின் தொகையாகிய 216 இருனூற்றி பதினாறை பிதாவின் பாகமாகிய 6 ஆறால் வகுக்கவேண்டும், அப்போது பிதாவின் பாகம் 36-ஆகிறது, இவ்விதமாகவே இந்த 216 இருனூற்றிபதினாறை மாதாவின் பாகமாகிய6 ஆறால்

வகுக்கவேண்டும், அப்போது மாதாவின் பாகம் 36 ஆகிறது, பின்னும் இவ்விதமாகவே ஷெ 216 இருநூற்றிபதினாறை பத்னியின் பாகமாகிய 8 எட்டால் வகுக்கவேண்டும், அப்போது பத்னியின் பாகம் 27 ஆகிறது, இப்படி பாகித்து கொடுத்த மாதா பிதா, பத்னி இந்த 3 வாரிசுகளின் பாகத்தொகை 99 ஆகிறது, இதை ஷெ 216-ல் கழித்தால் 117 மீதமிருக்கிறது, இது ஷெ புத்திரியின் பாகமும் கர்ப்பத்திலிருக்கும், புத்திரனுடைய பாகமுமாக யிருக்கிறது அதாவது.

மய்யத்து சைது, மஸ்அலா 216.
பிதா......மாதா......பத்னி......புத்திரி......கர்ப்பம்
புத்திரன்
36 36 27 117

பின்னும் புத்திரி வகைப்படி வந்த தஸ்ஹீயே மஸ்அலாவின்படி பாகிக்கும் விதமாவது ஷெ தஸ்ஹீயே மஸ்அலாவின் தொகையாகிய 216 இருநூற்றிபதினாறை பிதாவின் பாகமாகிய 6-ஆறால் வகுக்கவேண்டும், அப்போது பிதாவின் பாகம் 36 ஆகிறது, இவ்விதமாகவே இந்த 216 இருநூற்றிபதினாறை மாதாவின் பாகமாகிய 6-ஆல் வகுக்கவேண்டும், அப்போது மாதாவின் பாகம் 36 ஆகிறது, பின்னும் இவ்விதமாகவே ஷெ 216 இருநூற்றி பதினாறை பத்னியின் பாகமாகிய 8 எட்டால் வகுக்கவேண்டும். அப்போது பத்னியின் பாகம் 27 ஆகிறது, இவ்விதமாகவே ஷெ 216 இருநூற்றி பதினாறை இரண்டு புத்திரிகளின் பாகமாகிய 3-ல் 2-ஆல் வகுக்கவேண்டும், அப்போது இரு புத்திரிகளின் பாகம் 144 ஆகிறது. அதாவது.

மய்யத்து சைது, மஸ்அலா 216.
பிதா......மாதா......பத்னி......புத்திரி......கர்ப்பம்
புத்திரி
36 36 27 144

கர்ப்பம் ஆணாக பாவித்து தஸ்ஹீயே மஸ்அலாப்படி பாகித்த பாகங்கள் இதின் தஸ்ஹீயே மஸ்அலாவானது 216.	பிதா-மாதா-பத்னி-புத்திரி-கர்ப்பம் 36 – 36 – 27 — 117 புத்திரன் எதில்கழிக்கவேணுமோ அதின்தொகை
கர்ப்பம் ஆணாக பாவித்து மஸ்அலாப்படி பாகித்த பாகங்கள் இதின் மஸ்அலாவானது 24.	4 – 4 – 3 —— 13 கழிக்கப்படவேண்டிய தொகை.
தஸ்ஹீயே மஸ்அலாவின் பாகங்களில் மஸ்அலாவின் பாகங்களின் தொகையை இதின் வலது பக்கத்தில் கண்டிருக்கிறபடி கழிக்கவேண்டும்,	32 – 32 – 24 — 104 கழித்த தொகை

ஏனெனில் கர்ப்பத்திலிருக்கும் குழந்தை ஜனனமாகும்வரை அமானமாக வைக்கவேண்டிய பாகங்கள் இன்னதென்றும் ஜனனமாவதற்கு முன் வாரிசுகளுக்கு பகர்ந்து கொடுக்கவேண்டிய பாகங்கள் இன்னதென்றும் அறிவதற்காக அப்படி கழிக்கவேண்டும்.

கர்ப்பம் பெண்ணாக பாவித்து தஸ்ஹீயே மஸ்அலாப்படி பாகித்தபாகங்கள் இதின் தஸ்ஹீயே மஸ்அலாவானது 216	பிதா-மாதா-பத்னி-புத்திரி - கர்ப்பம் 36 – 36 – 27 —— 144 புத்திரி எதில்கழிக்கவேணுமோ அதின்தொகை
கர்ப்பம்பெண்ணாக பாவித்து மஸ்அலாப்படி பாகித்த பாகங்கள் இதின் மஸ்அலா 24.	4 – 4 – 3 —— 16 கழிக்கப்படவேண்டிய தொகை
கழித்த தொகை.	32 – 32 – 24 —— 128

இப்படி தஸ்ஹீயே மஸ்அலாவின் பாகங்களின் தொகைகளில் மஸ்அலாவின் பாகங்களின் தொகையை கழிக்கவேண்டிய காரணமென்னவென்றால். கர்ப்பத்திலிருக்கும் குழந்தை ஜனனமாகும்வரை அமானமாக வைக்கவேண்டிய பாகங்கள் இன்னதென்றும், ஜனனமாவதற்குமுன் மற்ற வாரிசுகளுக்கு பகர்ந்து கொடுக்கவேண்டிய பாகங்கள் இன்னதென்றும் அறியவேண்டியதற்காகவே அப்படி கழிக்கவேண்டும்.

கர்ப்ப குழந்தை ஜனனமாவதற்குமுன் பகர்ந்து கொடுக்கவேண்டிய பாகங்கள் மொத்தம் 101, எப்படியென்றால்.

பிதா	மாதா	புத்திரி	பத்னி	கர்ப்பம்
32	32	13	24	பிறந்தபின் கொடுக்கப்படும்

ஜனனமாகும் வரை அமானமாக வைக்கப்படும் பாகங்கள் மொத்தம் 115 எப்படியென்றால்,

பிதா	மாதா	புத்திரி	பத்னி	கர்ப்பம்
4	4	பெற்றுக்கொண்டாள்	3	104

அன்பர்களே இவ்விதமாக அமானத்து வைக்கவேண்டிய பங்குகள் இன்னதென்றும் பாகித்துவிடவேண்டிய பங்குகள் இன்னதென்றும் தெரிந்துக்கொண்டதின்பின் செய்யவேண்டியது, என்ன

வென்றால் ஷெடி கர்ப்பம் ஜனனமாவதற்குமுன் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுத்துவிடவேண்டியது, அவசியமானால் அப்போது பாகித்துக்கொடுத்துவிடவேண்டிய பாகங்களாகிய 101-ல் பிதாவுக்கு 32 மாதாவுக்கு 32, புத்திரிக்கு 13, பத்னிக்கு 24 கொடுத்துவிடவேண்டும், ஆக இதின் மொத்தம் 101-ம் சரி.

பின்னும் ஷெடி கர்ப்பமானது 4 ஆண்குழந்தையாக ஜனனமானால் அப்போது அமானமாக வைக்கப்பட்ட பங்குகளாகிய 115-ல் பிதாவுக்கு 4. மாதாவுக்கு 4. பத்னிக்கு 3. ஆகமொத்தம் 11. வாப்பசு கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 104, நூத்திநாலை ஷெடி ஜனனமான 4 புத்திரர்களில் ஒவ்வொருவனுக்கு 26, 26, 26-ஆக பாகித்துக்கொடுத்துவிடவேண்டும், ஆக மொத்தம் 104-சரி.

பின்னும் ஷெடி கர்ப்பமானது 3 ஆண்குழந்தைகளாகவாவது, அல்லது இதைவிட குறைந்தவர்களாகவாவது பிறந்தால் அப்போது மேற்கண்டபடி பிதா, மாதா, பத்னிகளுக்கு ஷெடி 11 பாகங்களை வாப்பசு செய்துவிட்டு புத்திரிக்கு கொடுத்துவிடப்பட்ட பாகமாகிய 13 பதிமூன்றையும் கர்ப்பத்துக்காக வைக்கப்பட்ட பங்காகிய 104 நூத்திநாலையும் சேர்த்துக்கூடிய தொகை 117 ஆகின்றது, இதை ஒவ்வொரு புத்திரனுக்கு 2 பாகமாகவும், புத்திரிக்கு ஒரு பாகமாகவும் பாகித்துக்கொடுக்கவேண்டும், எப்படியென்றால் ஜனனமான கர்ப்ப ஆண்குழந்தைகள் 3 பேரும் முன்னிருந்த புத்திரி ஒன்றும் இருந்தால் அப்போது ஷெடி 117 நூத்திபதினேழை 7 பாகமாக்கி முதல் புத்திரனுக்கு 2 பாகமும், 2-வது புத்திரனுக்கு 2 பாகமும், 3-வது புத்திரனுக்கு 2 பாகமும், புத்திரிக்கு ஒரு பாகமுமாக பாகித்துக்கொடுக்கவேண்டும். பின்னும் ஒருவேளை ஷெடி கர்ப்பத்தின் ஆண்குழந்தைகள் 2 பேர்களாகயிருந்தால் அப்போது ஷெடி 117 நூத்திபதினேழை 5 பாகமாக்கி 2 பாகம் முதல் புத்திரனுக்கும் 2-பாகம் இரண்டாவது புத்திரனுக்கும், ஒரு பாகம் புத்திரிக்குமாக கொடுக்கவேண்டும். பின்னும் ஒருவேளை ஷெடி கர்ப்பத்தின் குழந்தை ஒரே ஒரு ஆண்குழந்தையாயிருந்தால் அப்போது ஷெடி 117 நூத்திபதினேழை 3 பாகமாக்கி இருபாகம் புத்திரனும் ஒருபாகம் புத்திரியுமாக பாகித்துக்கொள்ளவேண்டும்.

பின்னும் ஷெடி கர்ப்பமானது ஒரு புத்திரியாகவாவது, பல புத்திரிகளாகவாவது பிறந்தால் அப்போது பிதாவுக்கும், மாதாவுக்கும், பத்னிக்கும் கொடாமல் கர்ப்பத்துக்காகவென்று அமானமாகவைத்த பங்குகளாகிய பிதாவின் 4-ம், மாதாவின் 4-ம், பத்னியின் 3-ம், புத்திரியின் 13-ம், கர்ப்பத்தின் பாகமாகிய 104-உம் ஆகமொத்தம் 128 நூத்தியிருபத்தி எட்டை எல்லா புத்திரிகளுக்கும் சமபாகமாக பாகித்துக் கொடுக்கவேண்டும்.

13-வது கண்டம்.

குன்சாவின் பயான்.

குன்சாவில் 2 விதமுண்டு 1-வது குன்சாயே கைரேமுஷக்கல் 2-வது குன்சாயே முஷக்கல் என்றுமே. பின்னும் குன்சாயே கைரே முஷக்கல் என்பது எவன் என்றால் ஆண்குறியும் பெண்குறியும் 2-ம் உடைத்தாயிருக்கிறவன் தான். பின்னும் ஷெடி குறிகளில் எந்த குறி காலியாய்ப்போய்விடுமோ அக்குறியால் அவன் ஆண் என்றாவது பெண் என்றாவது அழைக்கப்படுவான். அதாவது பாலிகு ஆவதற்குமுன் புருஷர்களைப்போல் ஆண்குறியால் மாத்திரம் மோண்டுக்கொண்டிருந்தாலும், அல்லது 2 குறிகளாலும், மோண்டுக்கொண்டிருந்தால் அப்போது எந்த குறியால் முதலில் மூத்திரம் வருகிறதென்பதை பார்க்கவேண்டும். அப்படி பார்த்ததில் முதலில் ஆண்குறியால் மோண்டுக்கொண்டிருந்தாலும் பின்னும் பாலிகானதின் பின் தாடி வருவதினாலும், பின்னும் புருஷர்களைப்போல் ஸ்திரீயுடன் சைனித்தாலும், இப்பேர்ப்பட்டவனை ஆணென்று பாவிக்கவேண்டும். இப்படிக்கு இல்லாமல் ஸ்திரீகளைப்போல் பெண்குறியால் மாத்திரம் மோண்டுக்கொண்டிருந்தாலும், அல்லது 2 குறிகளாலும் மோண்டுக்கொண்டிருந்தால் அப்போது எந்த குறியால் மூத்திரம் வருகிறதென்பதைப் பார்க்கவேண்டும் அப்படி பார்த்ததில் முதலில் பெண் குறியால் மோண்டுக்கொண்டிருந்தாலும், பின்னும் பாலிகானதின்பின் ஸ்திரீகளைப்போல் புருஷர்களிடம் சைனித்திருந்தாலும், அல்லது கொங்

கைப்புரப்பட்டாலும், பின்னும் அக்கொங்கைகளில் பால் சுரந்தாலும் பின்னும் மாதவிடைக்கண்டாலும், பின்னும் கர்ப்பம் தரிக்கப்பட்டாலும், இப்பேர்ப்பட்டவனுக்கு பெண்ணென்று பாவிக்கவேண்டும். இப்பேர்ப்பட்டவனுக்கு குனசாயே கைரேமுஷக்கல் என்று பேர்.

பின்னும் குனசாயே முஷக்கல் என்பது எவன் என்றால் அவ்விரண்டு குறிகளால் சரியாய் மோண்டுக்கொண்டிருந்தாலும் பின்னும் இரண்டு குறிகளில் ஒரு குறியும் காலியாகாமல் போனாலும் பின்னும் ௸ குறிகளும் இல்லாதிருந்தொரு த்வாரம் மாத்திரம் இருந்தாலும் இப்பேர்ப்பட்டவனுக்கு குனசாயே முஷக்கல் என்று பேர்,

ஆண் என்றும் பெண்ணென்றும் தெரியாமலிருக்கும் குன்சாவின் பயான்.

இரண்டு குறிகளால் சரியாய் மோண்டுக் கொண்டிருந்தால் இவன் ஆண் என்றாவது பெண் என்றாவது அறிவது கூடாமை பின்னும் குன்சா ஆண் என்றும் பெண்ணென்றும் தெரியாமல் சந்தேகமாயிருந்தால் எவ்வளவு சந்தேகமாயிருக்குமோ அவ்வளவு பங்கை ௸ குன்சாவுடைய சங்கதி வெளியாகும்வரை கொடாமல் வைக்க வேண்டும் ஆகையால் இப்பேர்ப்பட்டவன் இறந்துபோனவனுடைய வாரிசாயிருந்து ஒருவேளை இவன் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, இப்படியிருப்பதினால் இவனுடைய பாகம் மாறிப் போகக்கூடாதென்கையில் இருக்குமாகில் அப்போது அவனுடைய பாகம் அவனுக்கு கொடுக்கப்படும் எப்படியென்றால் ௸ குன்சா பின்னபிதுருகன், அல்லது பின்னபிதுருகியாயாவது, அடிமையின் எஜமானன், அல்லது எஜமானிச்சியாயாவது இருந்து இவனுடைய சங்கதி அதாவது இவன் ஆண் அல்லது பெண் என்ற சங்கதி தெரியாமல் போனபோதிலும் இவனுடைய பாகம் இவனுக்கு கொடுத்து விடப்படும் ஏனெனில் புத்திரன், புத்திரிக்குள் இருக்கும் பேதகத்தைப் போல் பாகவிஷயத்தில் பின்னபிதுருகளுக்குள்ளும், பின்னபிதுருகிக்குள்ளும் ஆண் பெண்ணென்கிற பேதகமில்லாமல் சமமாகவேயிருக்கிறது ஆகையால் ௸ குன்சா ஆண் பெண் என்று தெரியாமல் போனபோதிலும் அவன் பின்னபிதுருகனாயாவது, எஜமானனாயாவது, இருந்து இறந்தவனுக்கு வாரிசானால் அவன் பாகம் அவனுக்கு கொடுக்கப்படும் அவனை ஆண் பெண்ணென்று அறியவேண்டியது அவசியமில்லை.

குன்சாயே கைரே முஷக்கலைப்பற்றிய பயான்.

பின்னும் ௸ குன்சாவுடைய பாகமானது அவன் ஆணாவாவது, பெண்ணாகவாவது, இருப்பதினால் அவனுடைய பாகம் மாறுகிறதாயிருந்தால் அப்போது எந்தபாகம் அவன் விஷயத்திலும் மற்ற வாரிசுகள் விஷயத்திலும் நிர்க்கமாய் தெரியவருமோ அதை அவனுக்கும் வாரிசுகளுக்கும் கொடுக்க வேணும். எப்படி என்றால் ஆண்குறிகாலியானால் அவனுக்கு ஆண் என்று தீர்மானித்து ஆண்களுக்கு உண்டானபாகமும் பெண்குறி காலியானால் அப்போது அவனுக்கு பெண்ணென்று தீர்மானித்து பெண்களுக்குண்டான பாகமும் கொடுக்கவேணும்.

குன்சாயே முஷக்கலைப்பற்றிய பயான்.

பின்னும் ஹனபியாக்காரர்களிடம் குன்சாயே முஷக்கலின் தாய பாக விஷயத்தில் பத்வா எப்படியிருக்கிறதென்றால் அதின் விபரமாவது எந்த வகையால் அவனுக்கு நஷ்டம் சேருமோ அந்த வகையை அவன் விஷயத்தில் தீர்மானிக்கவேண்டும், அதாவது அவனுக்கு ஆண் என்று தீர்மானிக்கும் விஷயத்தில் அவனுக்கு முற்றிலும் பாகம் கிடையாமற்போகிறதாயிருந்தாலும், அல்லது அப்படி கிடைத்தபோதிலும் அதிகபாகம் கிடையாமல் கொஞ்சபாகம் கிடைக்கிறதாயிருந்தாலும் அப்போது அவனை ஆண் என்று தீர்மானிக்க வேண்டும். அல்லது அவனுக்கு பெண்ணென்று தீர்மானிக்கும் விஷயத்தில் அவனுக்கு முற்றிலும் பாகம் கிடையாமற்போகிறதாயிருந்தாலும், அல்லது கிடைத்தபோதிலும் அதிகபாகம் கிடையாமற் கொஞ்சபாகம் கிடைக்கிறதாயிருந்தாலும்; அப்போது அவனை பெண்ணென்று தீர்மானிக்கவேண்டும்.

ஆணென்று தீர்மானிப்பதில் ஒன்றும் கிடையாமற்போவதின் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 2
பதி......சகோதரி....பின்னசோதரன
குன்சா ஆண்
½..........½..........மிகுதி
1 —— 1 —— மிச்சமில்லை

இந்த மஸ்அலாவில் குன்சாவை பெண்ணென்று தீர்மானித்தால் அப்போது இவன் பின்னோதரியாவான், இவ்விஷயத்தில் அவன் பொது அதாவது பங்குக்காரியாய்விடுவான், அதாவது 6-ல் 1 அடைவான், அப்போது மஸ்அலா 6-ஆல்செய்யப்பட்டு அவுல் 7 ஆய்விடும், ஆகையால் இவனுக்கு நஷ்டம் கொடுக்கவேண்டியதற்காக இந்த இடத்தில் அவனுக்கு ஆண் என்று தீர்மானிக்கப்பட்டது, இப்படி தீர்மானித்ததினால் அவன் மிகுதிக்காரனானான், பங்குக்காரர்களுக்கு பங்குபோய் மீதமிராததினால் அவன் மஹ்றூமாய்ப்போனான்.

பின்னும் குன்சாயே முஷக்கலை ஆணென்று தீர்மானிப்பதில் கொஞ்சபாகம் கிடைப்பதின் உதாரணம்.

மய்யத்து கைசறு,மஸ்அலா 6.
பதி...மாதா...பின்னயிறுருகி...பின்னோதரன்
½....6-ல் 1...6-ல் 1 குன்சா ஆண் மிகுதி
3 — 1 — — 1 — — 1

இந்த மஸ்அலாவில் குன்சாவை ஆணென்று தீர்மானிக்கப்பட்டது, ஆகையால் அவன் பின்னோதரனானான், பங்குக்காரர்களுக்கு பங்குபோய் மீதமிருந்த ஒன்றை அடைந்தான். இப்படி அவனை தீர்மானிக்காமல் பெண்ணென்று தீர்மானித்திருந்தால் அப்போது அவன் பின்னோதரியாய்விடுவான், அப்போது அவன் பங்குக்காரியான பின்னோதரியாய் ½ பாகத்துக்கு உடையவனாய்விடுவான், அப்போது மஸ்அலா 6-ஆல் செய்யப்பட்டு அவுல் 8-ஆய்விடும், ஷை குன்சாவுக்கு ½ பாகத்துக்கு 3 பங்கு கிடைத்துவிடும், ஆகையால் இவனுக்கு நஷ்டம் கொடுக்கவேண்டியதற்காக இந்த இடத்தில் அவனுக்கு ஆண் என்று தீர்மானிக்கப்பட்டது.

பின்னும் குன்சாயே முஷக்கலை பெண்ணென்று தீர்மானிப்பதில் ஒன்றும் கிடையாமற்போவதின் உதாரணம்.

மய்யத்து கைசறு,மஸ்அலா 1.
சகோதரன்மகன்...சகோதரன்மகள்
மிகுதிக்காரன்.....குன்சா பெண்
1 —— மஹ்றூம்

இந்த மஸ்அலாவில் குன்சாவை ஆணென்று தீர்மானித்தால் அவனும் சகோதரனாகிறான், அப்போது சகோதரன் மகனுக்கு ஒப்பாக இவனுக்கு சரிசமானமான பாகம் கிடைக்கும், இப்படி தீர்மானிக்காமல் இவனுக்கு நஷ்டம் கொடுக்கவேண்டியதற்காகவென்று பெண்ணென்று தீர்மானிக்கப்பட்டது, அப்போது இவன் சகோதரன் மகளாகிறான், சகோதரன்மகளோ பங்குக்காரியாகாமல் ஜவில்அர்ஹாமாகிறாள், ஆகையால் அவளுக்கு மிகுதிக்காரனான சகோதரன் மகனுடன் ஒன்றும் கிடையாது, ஆதலால் இந்த இடத்தில் குன்சாவை பெண்ணென்று தீர்மானிப்பார்கள்.

பின்னும் குன்சாயே முஷக்கலை பெண்ணென்று தீர்மானிப்பதில் கொஞ்சபாகம் கிடைக்கும் விஷயத்தின் உதாரணம்.

மய்யத்து கைசறு,மஸ்அலா 3.
புத்திரன்...புத்திரி
குன்சா
2 — 1

இந்த மஸ்அலாவில்குன்சாவைபெண்ணென்று தீர்மானித்தால் அப்போது 3ல் 1பங்கு கொடுக்கப்படும், இவனை ஆணென்றுபுத்திரனென்று தீர்மானித்தால் அப்போது அவன் அரைபாகத்துக்கு உடையவனாகிறான், ஆகையால் இவனை இந்தயிடத்தில் அவனுக்கு நஷ்டம கொடுக்கவேண்டியதற்காக பெண்ணென்று தீர்மானிக்கப்பட்டது.

பின்னும் இமாம் ஷாபியீ றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் அந்த 2 பங்குகளின் பாதி குன்சாவுடைய பாகமாயிருக்கிறது, அதாவது ஒரு ஆணுடையவும், ஒரு பெண்ணுடையவும் பாகத்தைச் சேர்த்து அதின் பாதி எவ்வளவு உண்டோ அதுதான் குன்சாவுடைய பாகமாயிருக்கிறது, எப்படியென்றால் இறந்தவனுக்கு ஒரு புத்திரனும், ஒரு புத்திரியும், ஒரு குன்சாவும் வாரிசாயிருந்தால் இறந்தவனுடைய சொத்தை 4 பாகங்களாக்கி புத்திரனுக்கு 2 பாகமும், புத்திரிக்கு ஒரு பாகமும், குன்சாவுக்கு ஒரு பாகமும் கொடுக்கப்படும். ஆனால் இமாம்ஷாபியீ றஹ்மத்துல்லாஹி அலைஹியுடைய கொள்கையின்படி அபூயூசுபு றஹ்மத்துல்லாஹி அலைஹி இறந்தவனுடைய சொத்தை 9 பாகங்களாக்கி 4 பாகம் புத்திரனுக்கும், 2 பாகம் புத்திரிக்கும், 3 பாகம் குன்சாவுக்குமாக பங்கிடுவார்கள்.

பின்னும் இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி சொல்லுகிறதாவது இறந்தவனுடைய சொத்தை 40 பங்காக்கி 18 பங்கு புத்திரனுக்கும், 9 பங்கு புத்திரிக்கும், 13 பங்கு குன்சாவுக்கும் கொடுக்கவேண்டுமென்கிறார்கள்.

குன்சா புத்திரனாகும் விஷையத்தின் பாகங்கள்.

இதின் மஸ்அலா 5-ஆக யிருக்கிறது, ஏனெனில் 5-ல், 3 பேர்களுக்கு பாகங்கள் பிரிக்கப்படுகின்றன.

மய்யத்து சைது, மஸ்அலா 5.

புத்திரன்	புத்திரி	குன்சா புத்திரன்
2	1	2

குன்சா புத்திரியாகும் விஷையத்தின் பாகங்கள்.

இதின் மஸ்அலா 4-ஆக யிருக்கிறது, ஏனெனில் இந்த நாலால் 3 பேர்களுக்கு பாகங்கள் பிரிக்கப்படுகின்றன.

மய்யத்து சைது, மஸ்அலா 4.

புத்திரன்	புத்திரி	குன்சா புத்திரி
2	1	1

இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹியுடைய கௌலின்படி சொத்தை 40-பாகமாக பாகிக்கும் விதம்.

குன்சா புத்திரனாகும் விஷையத்தின் மஸ்அலாவாகிய 5-ஐந்தையும் ௸ குன்சா புத்திரியாகும் விஷையத்தின் மஸ்அலாவாகிய 4 நாலையும் பெருக்கினால் 20 ஆகிறது. 4 × 5 = 20 இப்படி பெருக்கிவந்த தொகையாகிய இருபதை குன்சா புத்திரனாகும் என்று பாவித்துக்கொண்ட விஷையத்தில் புத்திரனுக்கு 2, புத்திரிக்கு ஒன்றாக பாகிக்கும் பாகங்கள்.

மய்யத்து சைது, மஸ்அலா 20.

புத்திரன்	புத்திரி	குன்சா புத்திரன்
8	4	8

௸ கௌலின்படி ௸ இருபதை குன்சா புத்திரியாகும் என்று பாவித்துக்கொண்ட விஷையத்தில் புத்திரனுக்கு 2, புத்திரிக்கு ஒன்றாக பாகிக்கும் பாகங்கள்.

மய்யத்து சைது, மஸ்அலா 20.

புத்திரன்	புத்திரி	குன்சா புத்திரி
10	5	5

பின்னும் ஆண் பெண்ணென்கிற இந்த இரண்டின் இஸ்திதியாகிய இரண்டை மேலே பெருக்கிவந்திருக்கிற தொகையாகிய 20 இருபதோடு பெருக்கினால் 40 என்ற தொகை வந்தது, 20 × 2 = 40. இதுதான் இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி கௌலின்படி பாகப்பிரிவினை மஸ்அலா. இந்த 40-ல் 18 புத்திரனுக்கும் இதின் பாதியாகிய 9 புத்திரிக்கும் இந்த இரண்டின் மொத்தமாகும் தொகையாகிய 27 இருபத்தியேழை பாதியாக்கி அதின் பாதியாகிய 13 குன்சாவுக்கும் கொடுக்கவேண்டும், இந்த 3 பாகங்களின் மொத்தம் 40-ம் சரி.

இந்த 40-நார்ப்பதை பிரித்த பாகங்கள்.	புத்திரன்	புத்திரி	குன்சா
	18	9	13
குன்சா புத்திரனாகும் விஷையத்தின் பாகம்.	புத்திரன்	புத்திரி	குன்சாபுத்திரன்
	2	1	2
	8	4	8
குன்சாபுத்திரியாகும் விஷையத்தின் பாகம்	புத்திரன்	புத்திரி	குன்சாபுத்திரி
	2	1	1
	10	5	5
ஆகமொத்தம்.	புத்திரனுக்கு	புத்திரிக்கு	குன்சாவுக்கு
	18	9	13

* * *

14-வது கண்டம்.

* * *

மப்கூத்தென்ற காணாமல் போனவனைப்பற்றிய பயான்.

எவன் காணாமல் போய்விட்டானோ அதாவது தன் தேசத்தை விட்டு வேறொரு தேசத்துக்குப்போயிருக்க அவனுடைய மரணஜீவ செய்தி ஒன்றும் தெரியாமல் போயிருக்குமாகில் அப்போது அவன் இறந்துபோனதாக சாக்ஷியம் வருங்காலம்வரை அல்லது அவன் பிறந்தது முதல் 90 வருடம்வரை அவனுடைய சொத்தை அமானத்தாக வைக்கப்படவேண்டும். பின்னும் அவனுடைய வாரிசுகள் அதுவரை பங்கிட்டுக்கொள்ளலாகாது. பின்னும் இந்த கெடுவாகிய 90 வருடத்துக்குள் ஒருவேளை அவன் வந்துவிட்டால் அமானமாக வைக்கப்பட்ட தன்னுடைய சொத்தை அவன் அனுபவித்துக்கொள்ளக்கடவன் இப்படிக்கு அந்த கெடுவில் வராமல் அது தப்பிபோகும் பக்ஷத்தில் அதாவது 90-வருடம் கிரமித்துப்போகும் பக்ஷத்தில் அப்போது அவன் இறந்துபோனானென்று அதிகாரியால் கட்டளையிடப்படும் இப்படி அவன் ௸ கட்டளையின்படி இறந்துபோனபடியால் அத்தருணத்தில் சாகாமல் உயிரோடு ஹாஜராயிருக்கிற வாரிசுகளின் பேரில் அவன் சொத்து ஷரூப்படி பாகிக்கப்படும் அல்லது இவன் இறந்துபோனதாக சாக்ஷியம் வந்தகாலத்தில் உயிரோடிருக்கிற வாரிசுகளின் பேரில் அவன் சொத்து ஷரூப்படி பாகிக்கப்படும். பின்னும் ௸ 90 வருடம் கிரமிக்கும்முன் ௸ காணாமல்போன வாரிசுகளில் எவனாவது ஒருவன் இறந்து போவானாகில் அப்போது ௸ காணாமல் போனவனுக்கும் வாரிசாகச்சேர்த்து அவனுக்கு ௸ இறந்து போனவனுடைய சொத்து கொடுக்கப்படவேண்டும் இப்படி இவன் பாகத்துக்கு வந்த இந்தபாகத்தையும் ௸ 90 வருடகெடு கிரமிக்கும்வரை அமானத்தாக வைக்கப்படவேண்டும். பின்னும் இப்படியே எத்தனை வாரிசுகள் இறந்துபோனபோதிலும் அத்தனை வாரிசுகளின் சொத்தில் இவன் பாகத்துக்கு வந்த பாகங்கள் ௸ கெடுவரை அமானத்தாக வைக்கப்படவேண்டும், இந்த கெடுவுக்குள் ஒருவேளை அவன் வந்துவிட்டால் தன் சொந்தச்சொத்தையும் இறந்துபோன வாரிசுகளால் தன்பாகத்துக்கு வந்த பாகங்களையும் பெற்றுக்கொள்ளக்கடவன் இப்படிக்கு ௸ 90 வருடகெடுவில் அவன் வராமல் ௸ கெடு தப்பிபோகுமாகில் அப்போது அவன் இறந்து

போனான் என்று இவன் விஷயத்தில் அதிகாரியால் கட்டளை இடப்படும். பின்னும் இப்படி கட்டளை பிறந்தமையால் இறந்துபோனவர்களுடைய சொத்துகளில் இவனுக்கு கிடைத்த பாகங்கள் அதாவது எவர்களுடைய சொத்துகளால் இவனுக்கு எந்தெந்தபாகங்கள் கிடைத்தனவோ அவைகள் அவரவர்களுடைய வாரிசுகளுக்கு மறுபடியும் திரும்ப கொடுத்துவிடவேண்டுமேயல்லாது இவனுடைய வாரிசுகளுக்கு கொடுக்கலாகாது. ஏனெனில் காணாமல் போனவன் தன்சொந்த சொத்து விஷயத்தில் ௸ கெடுவாகிய 90வருடம்வரை ஜீவந்தனாயிருக்கிறதுபோல் வாரிசுகளால் இவன்பாகத்துக்கு வந்த பாகங்களின் விஷயத்தில் இவன் அப்படிக்கு ஜீவந்தனாயிருந்திராமல் மரணமடைந்தவனைப்போல் இருக்கிறான். ஆகையால் காணாமல் போனவனுடைய வாரிசுகளுக்கு ௸ சொத்தில் ஒன்றும் கிடையாது ஆகலால் இவர்களுக்கு ஒன்றும் கொடாமலே அவரவர்களுக்கு ௸ சொத்துகள் திரும்பகொடுத்து விடப்படும். அதாவது எவரெவர்களுடைய பாகங்களில் குறைவுபட்டிருக்கின்றதோ அவரவர்களுக்கு ௸ சொத்துகள் திரும்பிக்கொடுத்து விடப்படும். பின்னும் அமானமாக வைக்கப்பட்ட இவனுடைய அதாவது காணாமல் போனவனுடைய சொந்த சொத்து இவனுடைய மரணகட்டளைபிறந்தகாலத்தில் ஹாஜராயிருக்கும் இவனுடைய வாரிசுகளுக்காவது அல்லது இவனுடைய சொத்து அமானத்தாக வைக்கப்பட்ட காலத்தில் உயிரோடிருந்த இவனுடைய வாரிசுகளுக்காவது அல்லது இவன் இறந்துபோனதாக சாக்ஷியம் ஒப்பேறும் காலத்தில் உயிரோடிருந்த இவனுடைய வாரிசுகளுக்காவது ஷரூப்படி பாகிக்கப்படவேண்டும். பின்னும் காணாமல் போனவனுடைய மரணகட்டளை பிறந்தகாலத்தில் இவனுடைய எந்தெந்த வாரிசுகள் உயிரோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு அவனுடைய சொந்த சொத்தில் மீறுசு கிடைக்குமே அல்லாது ௸ கட்டளை பிறக்குமுன் இறந்து போனவர்களுக்கு மீறுசு கிடைக்கவே கிடைக்கமாட்டாது ஏனெனில் காணாமல் போனவன் பிறந்தது முதல் 90 வருடம்வரை அவன் தன்சொந்த சொத்து விஷயத்தில் உயிரோடிருக்கிறான் என்ற பாவனையாயிருக்கிறது. ஆகையால் எவர்கள் இந்த காலத்திற்குள் இறந்துபோனார்களோ அவர்கள் அவனுடைய ஜீவதகாலத்தில் இறந்துபோனவர்களுக்கு சமானமானவர்களாயிருக்கிறார்கள்.

பின்னும் மேடி காணாமற்போன காரணத்தால் எவனாவது ஒருவன் முற்றிலும் மஹ்ஜூபாய் போகிறதாயிருந்தால் அப்பேர்ப்பட்டவனுக்கு ஒன்றும் கிடையாது, இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 4.

புத்திரன்...	புத்திரி...	புத்திரி
பகரு.......	குல்சும்...	ஹலீமா
2 —	1 —	1
அமானம் —	1 —	1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் சைது என்பவன் பகரு என்ற ஒரு புத்திரனையும், குல்சும், ஹலீமா, என்ற 2 புத்திரிகளையும் விட்டுவிட்டு இறந்துபோனான். இவர்களில் பகரு என்பவன் காணாமற்போனவனாயிருக்கிறான், இப்போது பாகம் பாகிக்கும்போது மேடி பகருஎன்ற புத்திரனுடைய சந்ததியாருக்கு மேடி புத்திரிகளுடன் ஒன்றும் கிடையாது ஏனெனில் பகருஎன்றவன் தன் சந்ததியாரின் தடங்கலாயிருக்கிறான். அதாவது தன் சந்ததியார்களுக்கு பாகம் சேரவொட்டாமல் தடங்கல் செய்கிறவனாயிருக்கிறான். ஆகையால் பகருடைய பாகம் 90 வருடம் கிரிமிக்கும்வரை அமானத்தாக வைக்கவேண்டும்.

பின்னும் ஒருவேளை காணாமற்போன காரணத்தைக்கொண்டு வேறொருவனுடைய பாகம் குறைந்துபோகிறதாயிருந்தால் அப்படி குறைந்துபோகிற வகைப்படி இவனுக்கு பாகத்தை கொடுத்துவிட்டு மீதமிருக்கும் பாகத்தை அமானத்தாய் வைக்கவேண்டும், இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6.

புத்திரி....	புத்திரி.......	மாதா
ஹிந்தா...	சுபேதா......	ஹலீமா
3-ல் 2		6-ல் 1
அமானம் 2 -	2 ——	1

வியாக்கியானம்.

சைது என்பவன், ஹிந்தா, சுபேதா என்ற 2 புத்திரிகளையும், பின்னும் சில வாரிசுகளையும் விட்டுவிட்டு இறந்துபோனான், இவர்களில் ஹிந்தாஎன்பவள் காணாமற்போனவளாயிருக்கிறாள், பின்னும் ஷறப்படி புத்திரிகளுக்கு இறந்தவன் சொத்தில் 3-ல் 2-பாகமுண்டென்ற வகைப்படி 3-ல் 2 பங்குகளில் மேல் 1 பங்கு புத்திரியாகிய சுபேதாவுக்கு கிடைக்கும். பின்னும் காணாமற்போன ஹிந்தா என்பவளுக்கு சேரவேண்டிய மற்ற 3-ல் 1 பங்கு அமானத்தாக வைக்கப்படும், பின்னும் இவ்விதமாய் அமானத்தாக வைக்கப்படுவதினால் சுபேதாவுக்கு பாகம் குறைந்துபோய்விட்டது, இப்படி அமானம் வைக்கப்படாமலிருந்தால் சுபேதாவுக்கு எல்லா சொத்தும் கிடைத்திருக்கும்.

பின்னும் மேடி 90 வருடம் கிரிமித்ததின்பின் காணாமற்போனவனுடைய பத்தினி இத்தத்தின் காலம் கிரிமித்ததின் பின் வேறே நிகாஹு செய்துக்கொள்ளத் தக்கவளாவாள், பின்னும் மேடி காணாமற்போனவனுடைய மேடி காலம் கிரிமித்ததின்பின் இவன் ஒருவேளை வந்துவிட்டால் அப்போது மௌஜூதாயிருக்கிற சொத்தை இவன் பெற்றுக்கொள்ளக்கூடும். பின்னும் இவனுடைய பத்தினி வேறொருவனுக்கு நிகாஹுவாய் போயிருந்தால் அப்போது அப்பத்தினியின்பேரில் இவனுடைய பாத்தியமில்லை. பின்னும் அவன் இறந்ததாக சாக்ஷியம் வரும்வரை அவனுடைய சொத்தை அமானமாக வைக்கவேண்டும், அல்லது வெகுகாலம் சென்றுபோனபடியால் ஷறாவின் அதிகாரிக்கு அதனால் பூர்த்தியான சந்தேகமுண்டாய் அவன் மரணத்தின் கட்டளை இடும்வரை அவனுடைய சொத்தை அப்படியே அமானத்தாக வைக்கவேண்டும்.

பின்னும் காணாமல் போனவனுடைய மரணசாக்ஷியம் ஒப்பேருமகைத்துக்குமுன் இவன்வாரிசுகளில்ஒருவன் இறந்துபோயிருப்பானால்அப்போது இவனுடைய பாகத்தை அமானத்தாகவைக்க வேணும் இவன்காணாமலேமரணமாய்ப்போனால் அல்லது 90 வருடம் கிரிமித்தாலேயானால் அப்போது எந்தவாரிசுகளுடைய பாகங்களைக் குறைதலேற்பட்டிருந்ததோ அப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்த அமானமான பாகங்களை வாபசுகொடுத்துவிடவேண்டும் எப்படியென்றால்இறந்துபோனவனுக்கு ஒரு புருஷனும் 2 சகோதரிகளும் வாரிசாயிருந்து இறந்தவனுடைய ஒருசகோதரன் காணாமலிருந்தால் அப்போது இந்த மஸ்அலாவின் தஸ்ஹீயானது சர்ப்பத்தின்மஸ்அலாவின் தஸ்ஹீயைப் போலாகியிருக்கிறது இவ்விதமாக எழுதி பாகங்கள் செய்யவேண்டும் அதாவது.

காணமற்போன சகோதரன் மரணமடைந்தானென்று பாவித்துக்கொள்ளும் விஷயம்
புருஷன்-சகோதரி-சகோதரி-சகோதரன் மரண
$\frac{1}{2}$ - 3-ல் 2

இதின் மஸ்அலா 6 ஆறுல் செய்யவேண்டும் இப்படி 6-ஆ செய்து பாதி பங்காகிய 3 புருஷனுக்கும் மூன்றில் இரண்டு பங் கிய 4 இரண்டு சகோதரிகளுக்கும் கொடுக்கவேண்டும் சகோதர இறந்துபோனபடியால் அவனுக்கு பாகம் எழுதவேண்டியதில் எப்படியென்றால்,

மய்யத்து ஜைது, மஸ்அலா 6 அவுல் 7
புருஷன்......சகோதரி......சகோதரி......சகோதரன் மரணம்
3 2 2

இதின் மஸ்அலா 6 ஆகவும் அவுல் 7 ஆகவும் இருக்கிறது.

காணமற்போன சகோதரன் ஜீவித்திருக்கிறானென்று பாவித்துக் கொள்ளும் விஷயம்
கரீமா, மஸ்அலா 2.
புருஷன்-சகோதரி-சகோதரி-சகோதர ஜீவன்
$\frac{1}{2}$ - இந்த 3 பேர்களும் மிருதிக்காரர்

இதின் மஸ்அலா 2-ஆல்செய்து புருஷனுக்கு 1-ம், மற்ற ஒன் 2சகோதரிகளுக்கும்ஒருசகோதரனுக்கும்கொடுக்கவேண்டும், இப்படி கொடுப்பதினால் ஷை 2 சகோதரிகளுக்கும், ஷை சகோதரனுக்கு பாகம் முறிப்படுகின்றது, ஆகையால் மஸ்அலா தஸ்ஹீ செய்யவேண்டும், அதாவது 2 சகோதரிகளின் தலை எண் 2-ம், சகோதரனுடைய தலை எண் 2-ம் ஆக தலை எண்கள் 4, இந்த நாலை மஸ்அலாவின் 2 இரண்டுடன் பெருக்கவேண்டும். 2×4=8. இந்த எட்டுதான் இந்த மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கிறது, இந்த 8-ன் பாதி பங்காகிய 4 புருஷனுக்கும், மீதமிருக்கும் 4 பங்கை ஒவ்வொரு சகோதரிக்கு ஒவ்வொரு பாகமாகவும் சகோதரனுக்கு 2 பாகமாகவும் பாகிக்கவேண்டும் எப்படியென்றால்,

மய்யத்து கரீமா, மஸ்அலா 6 தஸ்ஹீ 8.
புருஷன்......சகோதரி......சகோதரி......சகோதரன் ஜீவன்
1 1 2

2-வது தஸ்ஹீயின் விதம் சகோதரன் மரணமடைந்தானென்று பாவித்துக்கொண்ட விஷயத்தின் மஸ்அலாவின் எண்ணாகிய 7 ஏழை ஷை சகோதரன் ஜீவித்திருக்கிறானென்று பாவித்துக்கொண்ட விஷயத்தின் மஸ்அலாவின் எண்ணாகிய 8-ல் பெருக்கவேண்டும், ஏனெனில் 8-உம், 7-உம் தபாயுனிருக்கிறது, இப்படி பெருக்கினால் 56 வந்தது, இதுதான் தஸ்ஹீயே மஸ்அலாவாயிருக்கிறது, அதாவது 7×8=56. இந்த 56 ஐம்பத்திஆறை இறந்துபோனவனுடைய வாரிசுகளின் பேரில் பாகிக்கும் விதமாவது முதலில் இவ்விதமாக எழுதவேண்டும்.

காணமற்போனசகோதரன் மரணமடைந்தானென்று பாவித்துக்கொள்ளும் விஷயம்
புருஷன்-சகோதரி-சகோதரி-சகோதரன் மரணம்
$\frac{1}{2}$ - 3-ல் 2

இதின் தஸ்ஹீயே மஸ்அலாவானது 56-ஆக யிருக்கிறது, இந்த துகையை பேர்பாதியாக்கி புருஷனுக்கு கொடுக்கவேண்டும், அதாவது 28, பின்னும் இப்படி 28கொடுத்தால் பாகங்கள் கூட்டும்போது 4 ஜாஸ்தியாக இருக்கிறது, ஆகையால் 28-க்கு 24 என்று எழுதவேண்டும், பின்னும் இந்த 56-ன் மூன்றில் இரண்டு 32-ஆக இருக்கிறது, இதை ஒவ்வொரு சகோதரிக்கு 16, 16 கொடுக்கவேண்டும், பின்னும் சகோதரன் இறந்துபோனபடியால் அவனுக்கு பாகம் எழுதவேண்டியதில்லை எப்படியென்றால்,

காணமற்போன சகோதரன் மரணமடைந்தானென்று பாவித்துக் கொள்ளும் வகை.
மய்யத்து கரீமா, மஸ்அலா 36.
புருஷன், சகோதரி, சகோதரி, சகோதரன் மரணம்
24 - 16 - 16

காணமற்போன சகோதரன் ஜீவித்திருக்கிறானென்று பாவித்துக்கொள்ளும் விஷயம்.
புருஷன்-சகோதரி-சகோதரி-சகோதரன் ஜீவன்
$\frac{1}{2}$ - இந்த 3 பேர்களும் மிருதிக்காரர்.

மேற்கண்ட தஸ்ஹீயே மஸ்அலா இதற்கும் சம்மந்தப்பட்டிருக்கிறது, அதாவது 56 இந்த ஐம்பத்திஆறை பேர்பாதியாக்கி புருஷ

னுக்கு கொடுக்கவேண்டும் அதாவது 28. மீதமிருக்கும் இருபத்தி எட்டை 4 பாகம் செய்து இரண்டு பாகம் சகோதரனுக்கும் அதாவது 14 மற்ற இரண்டு பாகம் 2 சகோதரிகளுக்கும் கொடுக்கவேண்டும், அதாவது ஒவ்வொரு சகோதரிக்கு 7, 7, எப்படியென்றால்,

மய்யாத்து கரீமா, மஸ்அலா 56,

புருஷன்	சகோதரி	சகோதரி	ஜீவித்திருக்கும் சகோதரன்
28	7	7	14

இப்போது அமானத்தாக வைக்கவேண்டிய பங்குகள் எத்தனை என்றும் பாகிக்கவேண்டிய பங்குகள் எத்தனை என்றும் பார்க்கவேண்டும், அதற்காக புருஷனுக்கு வந்த பாகம் 28-ல் 24 இருபத்தினாலை கழித்தால் 4 மீதமிருக்கிறது, இதை அமானத்தாக வைக்கவேண்டும். பின்னும் ஒவ்வொரு சகோதரியின் பாகம் 16, 16, இதில் 7,7, கழித்தால் மீதம் 9, 9 இருக்கிறது, இதுவும் அமானத்தாக வைக்கவேண்டும், அமானத்தாக வைக்கவேண்டிய பாகத்தின் மொத்தம் 22, பாகித்துக் கொடுத்துவிடவேண்டிய பங்குகள் 38, எப்படியென்றால்,

	புருஷன்	சகோதரி	சகோதரி	சகோதரன்
பாகித்துக்கொடுத்துவிட வேண்டிய பாகங்களின் விபரம்.	24	7	7	
அமானத்தாக வைக்கவேண்டிய பாகங்களின் விபரம்.	4	9	9	
இந்த 2-ன் மொத்தம்.	28	16	16	

அமானத்தாக வைத்திருக்கிற தொகையாகிய 22 இருபத்திரெண்டை யாருக்கு பகர்ந்து கொடுக்கவேண்டுமென்பதின் பயான்.

ஒருவேளை சகோதரன் இறந்துப்போயிருப்பானாகில் மீதமிருக்கும் 9 பாகத்தை ஒரு சகோதரிக்கும் மற்ற 9 பாகத்தை மற்றொரு சகோதரிக்கும் ஆக 2 சகோதரிகளுக்கு 18 பாகத்தை வாபசுசெய்துவிடவேண்டும். ஒருவேளை அவனுடைய சகோதரன் ஜீவந்தனாயிருப்பானாகில் 4 பாகத்தை புருஷனுக்கு வாபசு செய்துவிடவேண்டும்.

பின்னும் இஸ்லாமானவர்களில் எவனாவது தாருல்ஹறபில் காபிர்களிடம் சிறைபாய்ப்போயிருந்து அவனுடைய மரணப்பிழைப்பு இதின் செய்தி ஒன்றும் தெரியாமற்போனால் அப்போது அவனுடைய சொத்து விஷயத்திலும் மேலே எழுதிவந்திருக்கிறபடி காணாமற்போனவனுடைய சங்கதியைப்போலவே அமல் செய்யவேண்டும், காபிருடைய இராஜதானிக்கு தாருல் ஹறபென்று பேர்.

15-வது கண்டம் முர்திதின் பயான்.

முர்தித்து எவனுக்கு சொல்லப்படுகிறதென்றால் எவன் ஒருவன் இஸ்லாமை விட்டு திரும்பிப்போனானோ அதாவது காபிர்களில் போய்ச் சேர்ந்து போனானோ அவனுக்கு முர்தித்து என்று பேர் இவன் ஒருவனுடையவும் வாரிசாக மாட்டான் அதாவது இவன் இஸ்லாமானவனுடையவும் வாரிசாக மாட்டான் பின்னும் வேறு முர்தித்துடையவும் வாரிசாக மாட்டான் பின்னும் காபிருடையவும் வாரிசாக மாட்டான் ஆனால்ஒருவேளை தேச முழுவதின் எல்லா ஜனங்களும் முர்தித்தாய் போனால் அப்போது ஒருவர் மற்றொருவருடைய வாரிசாவார்கள்.

பின்னும் ஒரு பெண்ணானவள் முர்தித்தாய் போனால் அப்போது அவளுடைய சொத்துமுழுவதும் அவள்மரணமானதின்பின் அவளுடைய வாரிசுகளாகிய இஸ்லாமானவர்களுக்கு சேரும் அதாவது அவள் இஸ்லாமில் இருந்தவரையில்சம்பாதித்தசொத்தும் இதின்பின் முர்தித்தாய்ப்போய் அவள் சாகும்காலம்வரையில் சம்பாதித்தசொத்தும் ஆக இருவகையான சொத்தும் அவள் இறந்ததின் பின் அவளுடைய வாரிசுகளாயிருக்கிற இஸ்லாமானவர்களுக்கு சேரும்.

பின்னும் ஆணானவன் அதாவது ஒருவன் முர்தித்தாய் போனால் அப்போது அவன்இஸ்லாமில் இருந்தவரையில்சம்பாதித்தசொத்து முழுவதும் இவனுடைய வாரிசுகளாகிய இஸ்லாமானவர்களுக்கு சேரும் பின்னும்முர்தித்தாய் போனதின் பின் சாகும்காலம்வரையில் சம்பாதித்த சொத்து முழுமையும் பைத்துல்மாலில் சேர்க்கப்படும் மிறாகல்முஸ்லிமீன் 3-வது பக்கம்.

பின்னும் ஷெடி முர்திக்தானவன் தாருல் இஸ்லாமை விட்டு தாருல் ஹறபில் போயிருந்து விடுவானுகில் அப்போது ஷெடி முர்தித்து தாருல் இஸ்லாமை விட்டு தாருல் ஹறபில் போய்ச் சேர்ந்து விட்டான் என்றும், அவன் இறந்துபோனவனுனென்றும் கட்டளையிட்டு அவனுடைய சொத்து முழுமையும் அவனுடைய வாரிசுகளாகிய இஸ்லாமானவர்களுக்கு ஷரியத்தின் பிரகாரம் பங்கிட வேண்டும்.

பின்னும் முர்தித்தானவனிலும், முர்தித்தானவளிலும் இருக்கும் வித்தியாசம் ஏதென்றால் முர்தித்தானவன் முர்தித்தானதின்பின் 3 நாள்வரை அவனை இஸ்லாமைப்பற்றி போதிக்கவேண்டும் இப்படிக்கு இஸ்லாமை ஒப்புக்கொண்டால் நலம், இப்படிக்கு இஸ்லாம் கொண்டு வராவிட்டால் அவனை கொன்றுவிடவேண்டும், இப்படி கொன்றுவிடுவதில் அவன் சொத்து சேகரிப்பது கூடாமை, பின்னும் முர்தித்தானவளை இஸ்லாமைப்பற்றி போதித்தும் அவள் திரும்பாவிட்டால் அதாவது இஸ்லாமாகாவிட்டால் அவளை கொல்லலாகாது, ஆனால் தோபா செய்யும் பொருட்டு அவளை சிறையாக்கவேண்டும், அல்லது அதில் சாகவேண்டும் ஒருவேளை இவள் தாருல் ஹறபுக்கு போய் விட்டால் அப்போது முர்தித்தானவன் விஷையத்தில் என்ன கட்டளை கொடுக்கப்படுமோ அதே கட்டளை இவள் விஷையத்திலும் கொடுக்கப்படும். பதாவியுல் மீறுக 83-வது பக்கம்

16-வது கண்டம்

சிறையாய்ப் போனவனுடைய பயான்.

ஒரு இஸ்லாமானவனை காபிர்கள் சிறைச்செய்து தாருல் ஹறபுக்கு கொண்டு போய் விட்டால் அப்போதவன் இஸ்லாமாகவே இருந்திருப்பானானால் அவனை இஸ்லாமானவனாகவே பாவிக்கவேண்டும்; அதாவது இவன் தன் வாரிசுகளின் வாரிசாகவும் இவனுடைய வாரிசுகள் இவனுடைய வாரிசுகளாகவும் இருப்பார்கள்.

ஒருவேளை இந்த சிறையாய்ப்போனவன் இஸ்லாமைவிட்டு திரும்பிப்போயிருந்தால் அப்போது இவன் முர்தித்தாய்ப்போய்விட்டான்,

ஆகையால் இவனுடைய விஷையம் முர்தித்தாய்ப்போனவனுடைய விஷையமாயிருக்கும் அதாவது முர்தித்தின் அஹ்காமைப் போல நடத்தப்படும்.

பின்னும் இந்த சிறையானவன் இஸ்லாமிலேயே இருப்பதும் அல்லது இதைவிட்டு திரும்பிப்போனதும் தெரியாமல் போனாலும் பின்னும் இவன் ஜீவித்திருப்பதும் அல்லது மரணமடைந்ததும் தெரியாமல் போனாலும் அப்போது இவன் காணாமல் போனவனுக்கு ஒப்பாயிருக்கிறான், ஆகையால் காணாமல் போனவனுடைய சொத்து எவ்விதமாய் வைக்கப்படுமோ அப்படியே இவனுடைய சொத்தும் வைக்கப்படும். பின்னும் காணாமற்போனவனுடைய பத்னி விஷையம் எவ்விதமாயிருக்குமோ அத்தன்மையாகவே இவனுடைய பத்னியின் விஷையமுமாயிருக்கும்.

17-வது கண்டம்.

——(*)——

தஸ்ஹீயுடையவும், கசர் என்ற பின்னமுடையவும், பயான்.

எச்சரிக்கை.

இதில் 12 சங்கதிகளை அறியவேண்டும்.

1-வது. இறந்துபோனவனுடைய வாரிசுகளின்பேரில் தாயபாகம் பிரிக்கும்போது கசர் நேரிட்டால் அதை தசஹீ செய்ய வேண்டும்.

2-வது. கசர் என்பது என்ன! கசர் என்பது வாரிசுகளுடைய பாகங்கள் பாகிக்கும்போது அவைகள் முறிப்படாமல் பாகிக்கப்பட வேண்டும், அப்படி பாகிக்கப்படாமல் அவைகள் முறிப்பட்டால் அவ்வேர்ப்பட்ட முறிதலுக்கு கசர் என்று பேர்.

3-வது. பின்னும் தஸ்ஹீ என்பது என்ன, தஸ்ஹீ என்பது வாரிசுகளுடையபாகங்கள் பாகிக்கும்போது அவைகள் முறிப்படுகிற

தாயிருந்தால் அவைகளை முறிதலிலிருந்து நீக்கி அவைகளை பூறுபூறுவாய் பாகிக்கும்படி சரி செய்வதற்கு தஸ்ஹீ என்றுபேர்.

4-வது. பின்னும் ஜின்சு என்பது என்ன! ஜின்சு என்பது ஒரேஒரு இனத்தாருக்கு ஜின்சு என்றுபேர், எப்படியென்றால் புத்திரி ஒருஜின்சுள்ளவளாயும், பத்னி வேறே ஒரு ஜின்சுள்ளவளாயும் சகோதரி வேறே ஜின்சுள்ளவளாயும், பவுத்திரி வேறே ஒரு ஜின்சுள்ளவளாயும் இருக்கிறார்கள், இப்படியே வாரிசுகளில் பலவகையான ஜின்சுள்ளவர்கள் இருக்கிறார்கள்.

5-வது. பின்னும் ரஊசு என்பது என்ன! ரஊசு என்பது தலைகளாம், தலைகள் என்பது என்ன! தலைகள் என்பது மேற்கண்ட ஒவ்வொரு ஜின்சில் பலர்கள் இருந்தால் அப்படியிருக்கும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தலை என்றுபேர், எப்படியென்றால் இறந்தவனுக்கு புத்திரி என்பது ஒரு ஜின்சுள்ளவள் இந்த ஜின்சில் பல புத்திரிகள் அதாவது 5 புத்திரிகள் இருந்தால் 5 தலை என்னும 10 புத்திரிகள் இருந்தால் 10 தலை என்னும் பேர், இப்படியே பத்னி என்பது ஒரு ஜின்சு, இந்த ஜின்சில் 2 பத்னிகள் இருந்தால் 2 தலை என்னும் 4 பத்னிகள் இருந்தால் 4 தலை என்னும் பேர். பின்னும் புத்திரன் என்பது ஒரு ஜின்சு, இந்த ஜின்சில் 2 புத்திரர்கள் இருந்தால் 2 தலை என்னும், 4 புத்திரர்களிருந்தால் 4 தலை என்னும் பேர். பின்னும் புத்திரனும், புத்திரியும் சேர்ந்துவந்தால் அப்போது ஒவ்வொரு புத்திரனுக்கு 2. 2 தலை என்னும், ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொருதலையென்னும் பேர், இவ்விதமாகவே சகோதரனும், சகோதரியும் சேர்ந்துவந்தாலும் பின்ஞேதானும், பின்ஞேதரியும் சேர்ந்து வந்தாலும் ஒவ்வொரு ஆணுக்கு 2, 2 தலை என்னும் ஒவ்வொவ்வொரு பெண்ணுக்கு ஒவ்வொரு தலை என்னும் பேர். பின்னும் கசர் என்ற முறிதலானது 1, 2, 3, 4 ஜின்சுவரைக்கும்தான் வரும் இதைவிட ஜாஸ்தியான ஜின்சுகளில் நேரிடமாட்டாது.

6-வது. பின்னும் கசர் என்ற முறிதல் நேரிட்டால் அப்போது கீழ் எழுதப்படும் 4 வகைகளில் எந்த வகை என்று பார்க்கவேண்டும். இது எப்படி பார்க்கவேண்டுமென்றால் எந்த ஜின்சில் கசர் நேரிடுகிறதோ அந்த ஜின்சின் பங்கிலும் அந்த ஜின்சின் தலைகளிலும் மேற்படி 4 வகைகளில் எந்தவகை யிருக்கிறதென்று பார்க்க வேண்டும்.

7-வது. பின்னும் தஸ்ஹீ செய்வது எத்தருணத்தில் நேரிடுகிறதென்றால் பங்குகளில் முறிதல் நேரிடும்போதுதான்.

8-வது. பின்னும் பாகங்கள் பாகிக்கும்போது முறிதல் நேரிட்டால் அவைகள் வாரிசுகளின்பேரில் பூறுபூறுவாய் பாகிக்கப்படும் பக்ஷத்தில் தஸ்ஹீ செய்யவேண்டியது அவசியமில்லை.

9-வது. பின்னும் தஸ்ஹீ செய்யாமலிருக்கும்படி நேரிடுவது, 2 சந்தர்ப்பங்களில்தான் 1-வது தலைகளிலும், பங்குகளிலும் கீழ் உதகரிக்கும் 4 வகைகளில் முதல் வகையாகிய தமாசல் இருந்தால் தஸ்ஹீ செய்யும்படி நேரிடமாட்டாது. 2-வது மேற்படி பங்குகளிலும் தலைகளிலும் கீழ் உதகரிக்கும் 4 வகைகளில் 2-வது வகையாகிய ததாகுல் இருந்தால் தஸ்ஹீ செய்யும்படி நேரிடமாட்டாது. 3-வது பங்குகள் தலைகளைப்பார்க்கிலும் பெரிதாயிருந்தால் அப்போதும் தஸ்ஹீ செய்யும்படி நேரிடமாட்டாது.

10-வது. பின்னும் தலை எண்ணில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருந்தால் அவைகளை விபகு செய்யவேண்டும்.

11-வது. பின்னும் தலை எண்களில் 4-வது வகையாகிய தபாயுன் இருந்தால் அவைகள் பாதியாகிறதில்லை, ஆகையால் அவைகளை பாதி செய்யக்கூடாது, அந்தன்மையாகவே அவைகளை அமானத்தாய வைக்கவேண்டும்.

12-வது. பின்னும் விப்கு என்பது என்ன! விப்கு என்பது பாதி, செய்வதற்கு, அல்லது அறிப்பதற்கு சொல்லப்படுகிறது, அதாவது 4-ன் விப்கு 2 ஆகவும், 6-ன் விப்கு 3 ஆகவும், 8-ன் விப்கு 4 ஆகவும், இருக்கிறது, இதுவுந்தவிர 3-ல் 1 செய்வதற்கும் விப்கு என்றுபேர், எப்படியென்றால் 6-ன் விப்கு 2 ஆகவும், $6 \div 3 = 2$. 9-ன் விப்கு 3 ஆகவும் $9 \div 3 = 3$ இருக்கிறது பின்னும் விப்கு என்பதுபொருப்பனையாயிருக்கிறது, எப்படியென்றால் 8.லும், 20.லும், 8-ன் 4-ல் ஒருபங்கு 2 ஆகவும், 20-ன் 4-ல் ஒருபங்கு 5 ஆகவும், இருக்கிறது, $8 \div 4 = 2$. $20 \div 4 = 5$. இந்த 8-ன் 4-ல் ஒரு பங்காகிய 2-ம், இந்த 20-ன் 4-ல் ஒரு பங்காகிய 5-ம் விப்காயிருக்கின்றன. இதற்கு தமிழில் பொருப்பனையென்று பேர், இவ்விதமாகவே 9.லும், 15.லும், 9.ன் 3-ல் ஒருபாகம் 3 ஆகவும், 15-ன் 3-ல் ஒரு பாகம் 5 ஆகவும்

இருக்கிறது, 9÷3=3. 15÷3=5. பின்னும் 6.னும், 10.னும், 6.ன் 2.ல் ஒரு பங்கு 3 ஆகவும், 10.ன் 2.ல் ஒருபங்கு 5 ஆகவும் இருக்கின்றது, 6÷2=3. 10÷2=5.

இதின் விபரமாவது வகுக்கும் எண்ணானது 2 ஆகயிருந்தால் அப்போது இதனால் வரும் பெருப்பனத்துக்கு வப்குபின்னிஸ்பி என்றுபேர். அதாவது பேர்பாதி பெருப்பனமாயிருக்கிறது, இதற்கு உதாரணம் 4÷2=2. இந்த உதாரணத்தில் வகுக்கும் எண்ணும் 2, வப்கு என்ற பெருப்பனமும் 2. பின்னும் வகுக்கும் எண்ணானது 3 ஆக இருந்தால் அப்போது அதனால் வரும் பெருப்பனத்துக்கு வப்கு பிஸ்ஸுலுதி என்றுபேர், இதற்கு உதாரணம். 9÷3=3, இந்த உதாரணத்தில் வகுத்தஎண்ணும் 3, இதின் வப்குஎன்றபெருப்பனமும் 3.

கசரின் பயான் இதில் 4 வகைகளை அறிய வேண்டும் முதலாவது தமாதுல் 2-வது ததாகுல் 3-வது தவாபுக்கு 4-வது தபாயுன் இவைகள் தான்.

1.வது வகை தமாதுலைப்பற்றி. இது எதற்குச் சொல்லப்படுகிறதென்றால் ஒரு எண் மற்றொரு எண்ணுடன் ஒத்திருக்கவேண்டும் அதாவது சரியாயிருக்கவேண்டும், எப்படி யென்றால் ஒரு எண் 5ம் மற்றொரு எண் 5 மாக இருக்கவேண்டும் இப்படியே 6.6, அல்லது 8.8. இதற்கு 1-வது உதாரணம்.

மய்யத்து கைசது, மஸ்அலா 6.
பிதா......மாதா......புத்திரன்
6.ல் 1......6.ல் 1......மிகுதி
1 — 1 — 4

இந்த உதாரணத்தில் இறந்தவனுக்கு ஒரு தகப்பன் இவன் பாகம் 6-ல் 1, ஒரு தாய் இவள் பாகம் 6ல் 1, ஒரு புத்திரன் இவன் மிகுதிக்காரன் மீதத்தை வாங்கப்பட்டவன், அதாவது தாய்க்கு 6ல் 1 தகப்பனுக்கு 6.ல் 1, இதில் முதல் எண்ணாகிய 6,ல் 1 னும், 2-வது எண்ணாகிய 6-ல் 1 னும் தமாதல இருக்கிறது அதாவது ஒற்றுமை இருக்கிறது பின்னும் இந்த உதாரணத்தில் ஒரு ஜின்சினும் தலைஎண்கள் இல்லவே இல்லை தமாதுலுக்கு 2,வது உதாரணம்,

மய்யத்து கைசது, மஸ்அலா 6,
பிதா......மாதா......புத்திரிகள் 4
6-ல் 1.....6-ல் 1..........[illegible]-ல் 2.
1 — 1 — 4

இந்த உதாரணத்தில் புத்திரிகளின் தலைகளிலும் இவர்களின் பங்குகளிலும் தமாதுல் இருக்கிறது அதாவது. தலைகளும் 4, பங்குகளும் 4, ஆகையால் தஸ்ஹீஹ் செய்யும்படி நேரிடவில்லை.

2,வதுவகை ததாகுலைப்பற்றி. இதுஎதற்குசொல்லப்படுகிறதென்றால் மேல்கண்டபடி 2 எண்கள் ஒன்றுக்கொன்று ஒத்திராமல் ஏற்றதாழ்ச்சியாயிருக்கவேண்டும் அதாவது ஒரு எண் பெரிதும் ஒரு எண் சிறிதுமாயிருக்க வேண்டும் அப்படியிருந்தும் சிறிய எண்ணால் பெரிய எண் வகுத்தலாய் போகவேண்டும் எப்படி யென்றால் ஒரு எண் 3-ம், மற்றொரு எண் 9 மாக இருக்கவேண்டும் இப்படியே 3, 9 அல்லது 4, 12 அல்லது 3, 15 இவைகளில் 9÷3=3. 9, 3 ஆல் வகுக்கப்பட்டது பின்னும் 12÷4=3. 12, 4 ஆல் வகுக்கப்பட்டது பின்னும் 15÷3=5. 15, 3 ஆல் வகுக்கப்பட்டது 1.வது உதாரணம்.

மய்யத்து கைசது. மஸ்அலா 6,
மாதா....புத்திரி.....சகோதரி
6-ல் 1......½........மிகுதி
1 — 3 — 2

வியாகியானம்

இந்த உதாரணத்தில் இறந்தவனுக்கு ஒரு தாயும் ஒரு சகோதரியும் ஒரு புத்திரியும் இருக்கிறபடியால் தாய்க்கு 6ல் 1 ம் புத்திரிக்கு 2ல் 1ம் சகோதரிக்கு மிகுதியும் கிடைத்தது. இதில் முதல் எண்ணாகிய 6 சிறிய எண்ணாகிய 2 ஆல் வகுக்கப்படுகிறது ஆகையால் இப்படிப்பட்ட எண்களுக்கு ததாகுல் என்று பேர் இந்த உதாரணத்தில் தலை எண்கள் இல்லை. ததாகுலுக்கு 2-வது உதாரணம்.

மய்யத்து கைசது, மஸ்அலா 6
பிதா...மாதா...புத்திரிகள் 2
6-ல் 1...6-ல் 1...3-ல் 2
1 — 1 — 4

இந்த உதாரணத்தில் புத்திரிகளின் தலை 2-ம் இவர்களின் பங்குகள் 4-ம் இருக்கின்றன் இதில் பெரிய எண்ணாகிய 4 சிறிய எண்ணாகிய 2 ஆல் வகுத்தலாய்ப் போய் விடுகிறது ஆகையால் தஸ்ஹீஹ் செய்யும் ௸ நேரிடவில்லை.

பின்னும் தலை எண்களில் தராகுலிருந்து அதில் கசர் என்ற முறிதல் நேரிடுகிறதின் பயான்.

ஒரு ஜின்ஸில் கசர் நேரிட்டால் தலை எண்களின் விப்கை மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 6, தஸ்ஹீஹ் 12 விப்கு 2.

	பிதா	மாதா	புத்திரிகள் 8
	6-ல் 1	6-ல் 1	3-ல் 2
மஸ்அலா	1	1	4
தஸ்ஹீஹ்	2	2	8

வியாகியானம்.

இந்த உதாரணத்தில் 8 புத்திரிகளுக்கு 4 பாகம் முறிப்படுகிறபடியால் இதின் தலை எண்ணாகிய 8 இம் இவர்களின் பாகங்களாகிய 4 இம், 2-வது வகையாகிய தராகுல் இருக்கிறபடியால் ௸ சிறிய எண்ணாகிய 4 ஆல் பெரிய எண்ணாகிய 8 எட்டை வகுத்தால் 8÷4=2, பேறுப்பணமென்ற, விப்கு 2 வந்தது இந்த 2இரண்டைக் கொண்டு மஸ்அலாவின் எண்ணாகிய 6 ஆல் பெருக்கவேண்டும் 6×2=12, இப்படி பெருக்கினால் 12 வந்தது இதுதான் தஸ்ஹீஹீய மஸ்அலா இந்த 12 பனிரெண்டை பிதாவின் 6 ஆல் வகுத்து பிதாவுக்கு 2 ம் இவ்விதமாகவே மாதாவின் 6ல் 1க்கு 2 ம் புத்திரிகளின் 3.ல் 2 ஆல் வகுத்து 8 புத்திரிகளுக்கு, 8 ம் கொடுத்து விடவேண்டும் அப்போது ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொன்று வரும் இதில் அவுல் இல்லை. கசர் 3 ஜின்ஸுகளின் பேரில் நேரிட்டால் அப்போது எத்தனை ஜின்ஸுகளின் பேரில் கசர் நேரிடுகிறதோ அவர்களின் பங்குகளிலும் அவர்களின் தலை எண்களிலும் ௸ 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும் அப்படி பார்த்ததில் 3 ஜின்ஸுகளின் தலை எண்களிலும் அவர்களின் பங்குகளிலும் 4.வது வகையாகிய தபாயுன் இருந்தால் அப்போது ௸ ஜின்ஸுகளின் தலை எண்களை அமானமாக வைக்கவேண்டும் ஏனெனில் இதில் விப்கு ஆகிறதில்லை இப்படி அமானமாக வைத்ததின்பின் ௸ 3 தலை எண்களில் ௸ 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும் அப்படி பார்த்ததில் அது2.வது வகையாகிய தராகுல் இருந்தால்இந்த 3 எண்களில் எந்த எண் பெரிதாயிருக்குமோ அந்த எண்ணை மஸ்அலாவின் எண்ணுடன்பெருக்கவேண்டும் இதில்அவுல்வராது உதாரணம்.

மய்யத்து ஸைது, மஸ்அலா 12 தஸ்ஹீஹ் 144 அமானத், தராகுல்4-3-12

	பத்னி 4	பாட்டிகள் 3	பிதாவின் சகோதரர் 12.
	$\frac{1}{4}$	6-ல் 1	மிகுதி
மஸ்அலா	3	2	7
தஸ்ஹீஹ்	36	24	84

வியாக்கியானம்.

இப்படி மஸ்அலா 12 ஆல்செய்து பத்னியின் 4.ல் 1க்கு 3பங்கும் பாட்டிகளின் 6-ல் 1க்கு 2 பங்குகளும் மீதமிருக்கும் 7 பங்குகள் பிதாவின்சகோதரர்களுக்கும்,கொடுக்கவேணும்,இப்படி கொடுப்பதினால் 4 பத்னிகளுக்கு 3 பங்குகள் முறிப்படுகின்றன,பின்னும் 3பாட்டிகளுக்கு 2 பங்குகள் முறிப்படுகின்றன, பின்னும் மிகுதியிருக்கும் 7 பங்குகள் பிதாவின் சகோதரர்கள, 12 பேர்களுக்கு கொடுத்தால் அதுவும் முறிப்படுகின்றன, ஆகையால் மஸ்அலாவை தஸ்ஹீஹ் செய்ய வேண்டும் இப்படி செய்வதற்காக ௸ 3 ஜின்ஸுகளின் தலை எண்களிலும் அவர்களின் பங்கு எண்களிலும் 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்த்ததில் ௸ 3 ஜின்ஸின் தலைகளிலும்தபாயுன் இருக்கிறதென்று தெரியவந்தது அதாவது பத்னிகளின் தலை எண்களாகிய 4இம் இவர்களின் பாகமாகிய 3இம் தபாயுன் இருக்கிறது, பின்னும், பாட்டிகளின் தலை எண்களாகிய 3இம் இவர்களின்பாகமாகிய 2இம் தபாயுன் இருக்கிறது பின்னும் பிதாவின் சகோதரர்களின் தலைஎண்களாகிய12இம்இவர்களின்பாகமாகிய 7இம் தபாயுன் இருக்கிறதுபின்னும் ௸3 ஜின்ஸுகளிலும் தபாயுன் வந்தபடியால் ௸ஒவ்வொரு ஜின்ஸின் தலை எண்களாகிய 4-3-12. இவைகளை அமானமாக வைக்கவேண்டும், பின்னும் ஞாபகத்திற்காக மஸ்அலாவின் மேல் இவைகளை எழுதவேண்டும். பின்னும் இப்படி எழுதின் ௸ 3, ஜின்ஸுகளின் தலை எண்களில் ௸ 4 வகைகளில் எந்த வகை யிருக்கிறதென்று பார்த்ததில் 2-வது வகையாகிய தராகுல் இருக்கிறதாக

தெரியவந்தது எப்படியென்றால் பிதாவின் சகோதரர்களின் தலைஎண்ணாகிய 12 ஆனது மற்ற தலை எண்களாகிய 3-4-எண்களை அடித்துவிடுகின்றதெப்படியென்றால் 12,ல் 3 ஆனதானால் 4 தடவை அடிப்படுகின்றது பின்னும் இப்படியே மேடி. 12ல் 4-ஆனது 3 தடவை அடிப்படுகின்றது. ஆகையால் மேடி. 12-ல் 3-ம் 4-ம் அடங்கியிருக்கின்றன. இப்படி இருப்பதினால் மேடி. 3 தலை எண்களில்பெரியஎண்ணானது 12, இருக்கிறது இந்த பெரியெண்ணை மஸ்அலாவின் எண்ணாகிய 12ஆல் பெருக்கவேண்டும் இப்படி பெருக்கினதினால் 12×12=144 வந்த தொகை 144 ஆகயிருக்கிறது இந்த நூற்றி நாற்பத்தி நாலை பத்னியின் 4ஆல் வகுத்து 4 பத்னிகளுக்கு 36 பங்குகளும் இப்படியே பாட்டிகளின் 6 ஆல் வகுத்து 3 பாட்டிகளுக்கு 24 பங்குகளும் கொடுத்துவிட்டு மீதமிருக்கும் 84 எண்பத்திநாலை பிதாவின் சகோதரர்கள் 12 பேர்களுக்கு கொடுத்துவிடவேணும் இப்படிதஸ்ஹீஹ்செய்ததினால்பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்பட்டன இதில் அவ்ல் இல்லை ஆனால் 3 ஜின்ஸில் கசர் வந்திருக்கிறது. 2-வது உதாரணம்.

மைய்யத்து கைது, மஸ்அலா 6 தஸ்ஹீஹ் 108 அமானத், ததாகுல் 18-9-3
பாட்டி 3......சகோதரி 9......பிதாவின் சகோதரன் 18
6-ல் 1.........3-ல் 2...........மிகுதி.
மஸ்அலா 1 — 4 — 1
தஸ்ஹீஹ் 18 — 72 — 18

மேல்கண்டபடியே அமல்செய்யவேண்டும் இதில் அவ்ல் இல்லை 3 ஜின்ஸில் கசர் வந்திருக்கிறது 3-வது அவ்ல் வரும் உதாரணம்.

மைய்யத்து கைது, மஸ்அலா 24 அவ்ல் 27, தஸ்ஹீஹ் 96, அவ்ல் 108, அமானத், ததாகுல் 4-2.
பத்னி 2......பாட்டி 16......புத்திரி 4......பிதா,
8-ல் 1.........6-ல் 1...........3-ல் 2..........6-ல் 1
மஸ்அலா 3 — 4 — 16 — 4
தஸ்ஹீஹ் 12 — 16 — 64 — 16

மஸ்அலா 24 ஆல் செய்து பத்னிகளின் 8-ல் 1க்கு 3 பங்குகளும் பாட்டிகளின் 6-ல் 1-க்கு 4 பங்குகளும் புத்திரிகளின் 3-ல் 2-க்கு 16 பங்குகளும் பிதாவின் 6-ல் 1-க்கு 4 பங்குகளும் கொடுக்கவேண்டும், இப்படி கொடுத்தால் 2 பத்னிகளுக்கு 3 பங்குகள் முறிப்படுகின்றன, பின்னும் 16 பாட்டிகளுக்கு 4

பங்குகள் கொடுத்தால் அதுவும் முறிப்படுகின்றன, பின்னும் 4 புத்திரிகளுக்கு 16, பங்குகள் கொடுத்தால் இது முறிப்படுகிறதில்லை. பின்னும் பிதாவுக்கு 4 பங்குகள் முறிப்படுகிறதில்லை, ஆனால் முறிப்படுகிற பாகங்கள் 2 தான், அதாவது பத்னிகளுக்கும் பாட்டிகளுக்குமே, ஆகையால் இந்த பங்குகள் முறிப்படாமல் பூரா பூராவாய் பங்கிடவேண்டியதற்காக தஸ்ஹீஹ் செய்யவேண்டும்; இது எப்படி செய்யவேணுமென்றால் பத்னிகளின் தலை எண்ணிலும் இவர்களின் பாகத்திலும் மேடி. 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாகத் தெரியவந்தது, ஆகையால் இதின் தலை எண்ணாகிய இரண்டை அமானமாக வைக்கவேண்டும், பின்னும் மேடி. பாட்டிகளின் தலை எண்ணாகிய 16-லும், இவர்களின் பாகமாகிய 4-லும், மேடி. 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 2-வது வகையாகிய பேர்பாறி ததாகுல் இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் மேடி. சிறிய எண்ணாகிய 4-ஆல் பெரிய எண்ணாகிய 16 பதினாறை வகுத்தால் 16÷4=4, பேறுபானமொன்று விட்கு 4 வந்தது, இந்த நாலையும் அமானமாக வைக்கவேண்டும், பின்னும் மேடி. அமானமாக வைத்த தலை எண்கள் எவையென்றால் 2, 4 இவைகள்தான் இந்த 2-லும், 4-லிலும் மேடி. 4வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று யோசிக்கவேண்டும், அப்படி யோசித்ததில் 2-வதுவகையாகியததாகுல்இருக்கிறதென்றுதெரியவந்தது, அதாவது பெரிய எண்ணுக்கு சிறிய எண் அடிப்பட்டுபோகிறது, பின்னும் மேடி. 4-ல் சிறிய எண்ணாகிய 2 அடங்கியிருக்கிறது. ஆகையால் இந்த 2 தலை எண்களில் 4 தான் பெரிய எண்ணாயிருக்கிறபடியால் இந்த 4 நாலை மஸ்அலாவின் எண்ணாகிய 24-வில் பெருக்கவேண்டும், இப்படி பெருக்கிவந்த தொகையானது 96 ஆகயிருக்கிறது, 24×4=96 இந்த தொண்ணூற்றியாறை பத்னியின் 8-ஆல் வகுத்து 2 பத்னிகளுக்கு 12-ம், இப்படியே பாட்டிகளின் 6-ஆல் வகுத்து 16 பாட்டிகளுக்கு 16-ம் இப்படியே புத்திரிகளின் 3-ல் 2ஆல் வகுத்து 4 புத்திரிகளுக்கு 64-ம் இப்படியே பிதாவின் 6-ஆல் வகுத்து பிதாவுக்கு 16-ம் கொடுக்கவேண்டும், இப்படி தஸ்ஹீஹ் செய்ததினால் பாகங்கள் பூராவாய் பாகிக்கப்பட்டன, இதில் அவ்ல் உண்டு, இதில் 2ஜின்ஸில் கசர் வந்திருக்கிறது. இதில் அவ்லின் உதாரணம்

சைது. மஸ்அலா 12, அவுல் 15, தஸ்ஹீ 96, அவுல் 120, அபானத்துதாருல் 8-2-2

மய்யத்து	பத்னி 2......	சகோதரி 2......	பின்னைப்புருஷர் 32.
	4-ல் 1........	3-ல் 2..............	3-ல் 1
மஸ்அலா	3 —	8 —	4
தஸ்ஹீ	24 —	64 —	32

இந்த மஸ்அலாவையும் மேற்கண்டபடியே அமல் செய்யவேண்டும், இதில் 2 ஜின்சுகளில் கசர் வந்திருக்கிறது.

3-வது வகை. தவாபுக் கைப்பற்றி இது எதற்கு சொல்லப்படுமென்றால் மேல்கண்ட தமாதலின்படி முதல் எண்ணும் 2-வது எண்ணும் ஒத்திராமல் இருக்கவேண்டும், பின்னும் மேற்கண்ட ததாகுலின்படி சிறிய எண்ணால் பெரிய எண் வகுக்கப்படாமல் இருக்கவேண்டும். பின்னும் முதல் எண்ணும் 2-வது எண்ணும் வேறொரு பிரத்தேகமான எண்ணால் வகுக்கப்படவேண்டும், எப்படியென்றால் முதல் எண் 8, 2-வது எண் 20, இந்த 2 எண்களும் வேறே ஒரு பிரத்தேகமான எண்ணாகிய 4-ஆல் வகுக்கப்படுகின்றது, இப்படி வகுக்கப்படுவதற்கு தவாபுக்கு என்றுபேர், இப்படியே 9-ம், 15-ம், 3-ஆலும் 9÷3=3. 15÷3=5. பின்னும் 6-ம், 10-ம், 2-ஆலும் 6÷2=3. 10÷2=5. பின்னும் 18-ம், 24-ம், 6-ஆலும், 18÷6=3. 24÷6=4. பின்னும் 20-ம், 30-ம், 1 -ஆலும், 20÷10=2. 30÷10=3. வகுக்கப்படுகின்றன, இப்படி வகுத்துவந்த பேருப்பனத்துக்கு விப்கு என்று பேர். பின்னும் கசர் என்ற முறிதல் தவாபுக்காயிருந்து அது ஒரே ஜின்சில் சேரிட்டால் அப்போது எந்தெந்த ஜின்சின் தலைகளில் கசர் சேருகிறதோ அந்த தலைகளை விப்குசெய்து இந்த விப்கின் எண்ணுடன் மஸ்அலாவின் எண்ணை பெருக்கவேண்டும்.

பின்னும் கசர் என்ற முறிதல் ஒரேஒரு ஜின்சில் சேரிட்டால் அப்போது மேல் எழுதிவந்த வகைகளில் இது எந்தவகை என்று பார்க்கவேண்டும், இது எப்படி பார்க்கவேண்டுமென்றால் கசர் சேரிட்ட ஷெடி ஜின்சின் பங்கிலும், அதின் தலைகளிலும் ஷெடி 4 வகைகளில் எந்த வகை என்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருந்தால் அப்போது மஸ்அலாவின் எண்ணுடன் கசர் சேரிட்ட ஜின்சின் எத்தனை தலைகள் உண்டோ அத்தனை தலைகளின எண்ணை பெருக்கவேண்டும், பின்னும் இதற்கு ஒரு ஜின்சில் கசர் சேரிட்டால் தலை எண்களின் விப்கை மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும்.

தவாபுக்கில்ஒருஜின்சில் சேரும் கசரின்உதாரணங்கள் 2
இதில் அவுல் இல்லை. 1-வது உதாரணம்.

சைது, மஸ்அலா 6 தஸ்ஹீ 30 விப்கு 5

மய்யத்து	பிதா......	மாதா......	புத்திரிகள் 10
	6-ல் 1......	6-ல் 1......	3-ல் 2
மஸ்அலா	1 —	1 —	4
தஸ்ஹீ	5 —	5 —	20

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 6 ஆல் செய்து பிதாவுக்கும், மாதாவுக்கும் பாகங்கள் முறிப்படாமல் செல்லாய் போய் ஒரே ஒரு ஜின்சாகிய புத்திரிகள் 10 பேர்களுக்கு வந்த4பங்குகள் பூறு பூறுவாய்பூரிக்கப்படாமல்பாகங்கள் முறிப்படுகிறபடியால்அதைதஸ்ஹீசெய்யும்படி சேருகிறது இப்படி தஸ்ஹீ செய்யும் விதமாவது புத்திரிகளின் தலை 10ஆம் ஷெடி. புத்திரிகளின் பாகங்களாகிய 4ஆம் ஷெடி. 4 வகைகளில் எவ்வகையிருக்கிறதென்று பார்த்ததில் இது தவாபுகின் வகைய் இருக்கிறதென்று தெரியவந்தது எனெனில் ஷெடி 10ம் 4ம் வேரே ஒரு பிரத்தேகமான எண்ணால் வகுக்கப்படுகிறது அதாவது வேறே பிரத்தேகமான எண்ணாகிய 2 ஆல் ஷெடி 10-ம் 4-ம் வகுக்கப்படுகிறது ஆகையால்இது தவாபுக்காயிருக்கிறது இப்படி இருக்கிறபடியால் ஷெடி 10த்தை விப்குசெய்து அதாவது பாதி செய்து ஷெடி மஸ்அலாவின் எண்ணாகிய 6 ஆல் பெருக்கவேண்டும் எப்படி. யென்றால் ஷெடி 10ன் பாதி 5 ஆக இருக்கிறது இந்த 5 ஐத்தை 6 ஆல் பெருக்கினால் 30 ஆகிறது 6×5=30 இதுதான் தஸ்ஹீயே மஸ்அலா, இந்த 30 முப்பதை பிதாவின் பாகமாகிய 6 ஆல் வகுத்து பிதாவின் பாகம் 6-ல் 1க்கு 5ம், இப்படியே வகுத்து மாதாவின் பாகம் 6-ல் 1க்கு 5ம் இப்படியே ஷெடி 30 முப்பதை 3-ல் 2ஆல் வகுத்து புத்திரிகளின் பாகம் 3-ல் 2க்கு 20ம், கொடுத்து விடவேண்டும் அப்போது புத்திரிகளுக்கு பாகங்கள் முறிப்படாமல் ஒவ்வொரு புத்திரிக்கு 2- 2-பாகங்கள் வந்தன. 2-வது உதாரணம்,

மய்யித்து: சைது, மஸ்அலா 6 தஸ்ஹீ 18 விப்கு 3
பாட்டி...புத்திரி 6...பிதாவின் சகோதரன்
6-ல் 1...3-ல் 2.....மிகுதி
மஸ்அலா 1 — 4 — 1
தஸ்ஹீ 3 — 12 — 3

மேல்கண்டபடியே அமல்செய்யவேண்டும்.

தவாபுக்கில் ஒரு ஜின்ஸில் நேரிடும் கசரின் உதாரணம்.
இதில் அவுல் உண்டு.

மய்யித்து: சைது, மஸ்அலா 12 அவுல் 15 தஸ்ஹீ 36 அவுல் 45 விப்கு 3
பதி.........பிதா.........மாதா.........புத்திரிகள் 5
$\frac{1}{4}$.........6-ல் 1.........6-ல் 1.........3-ல் 2
மஸ்அலா 3 — 2 — 2 — 8
தஸ்ஹீ 9 — 6 — 6 — 24

மேல்கண்டபடியே அமல்செய்யவேண்டும்.

தவாபுக்கில் 3 ஜின்ஸில் நேரிடும் கசரின் உதாரணம்
இதில் அவுல் இல்லை.

ஷை தவாபுக்கில் கசர் 3 ஜின்ஸில் நேரிட்டால் அப்போது மேல் எழுதிவந்த 4 வகைகளில் இது எந்தவகை என்று பார்க்கவேண்டும் இது எப்படி பார்க்கவேணுமென்றால் எத்தனை ஜின்சுகளின் பேரில் கசர் என்ற முறிதல் நேரிட்டிருக்கிறதோ அவர்களின் பங்குகளிலும் அவர்களின் தலைகளிலும் ஷை 4 வகைகளில் எந்த வகை என்று பார்க்கவேண்டும் அப்படி பார்த்ததில் ஒரு ஜின்ஸின் தலைகளிலும் அதின் பங்குகளிலும் 4-வது வகையாகிய தபாயுனும் மற்ற 2 ஜின்சுகளின் தலைகளிலும் அவர்களின் பங்குகளிலும் 3-வது வகையாகிய தவாபுக்கும் இருந்தால் அப்போது ஷை தவாபுக்குடைய தலையெண்ணை விப்கு என்றபேர்ப்பாதியாக்கி அதை அமானமாக ஷை மஸ்அலாவின் மேல் எழுதவேண்டும், பின்னும் ஷை 2 ஜின்ஸின் தலைகளிலும் பங்குகளிலும் தபாயுன் இருந்தால் அப்போது அவைகளையும் அமானமாகவைக்கவேண்டும் இப்படி அமானமாக வைத்த ஜின்சுகளின் தலைகளிலும் முதல்வகையாகிய தமாசுல் இருந்தால் அப்போது இந்த 3 எண்களில் 2 ஜின்சுகளின் தலை எண்களை விட்டுவிட்டு ஒரு ஜின்ஸின் தலையெண்ணோடு மஸ்அலாவின் எண்ணை பெருக்கவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யித்து: சைது, மஸ்அலா 6 தஸ்ஹீ 18 அமானம் 3-3-3
புத்திரி 6....பாட்டி 3....பிதாவின் சகோதரன் 3
3-ல் 2.........6-ல் 1......... மிகுதி
மஸ்அலா 4 — 1 — 1
தஸ்ஹீ 12 — 3 — 3

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 6-ஆல் செய்து புத்திரிகள் 3-ல் 2-க்கு 4 பாகங்களும் பாட்டிகளின் 6-ல் 1-க்கு ஒருபங்கும் பிதாவின் சகோதரர்களுக்கு மீதமிருக்கிற ஒருபங்கும் பாகித்துக்கொடுத்தால் 6 புத்திரிகளுக்கு 4 பங்குகள் முறிப்படுகின்றன. பின்னும் 3 பாட்டிகளுக்கு 1 பங்கும் முறிப்படுகின்றது, பின்னும் பிதாவின் சகோதரர்கள் 3 பேருக்கு 1 பங்கும் முறிப்படுகின்றது. ஆகையால இந்த பாகங்கள் முறிப்படாமல் பூறுபூறுவாய் பங்கிடவேண்டியதற்காக தஸ்ஹீ செய்யவேண்டும், இது எப்படி செய்யவேண்டுமென்றால் புத்திரிகளின் தலை எண்களாகிய 6-ஐயும் இவர்களின் பங்குகளாகிய 4-ஐயும் ஷை 4 வகைகளில் எந்தவகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறது, இப்படி தவாபுக்கு இருக்கிறபடியால் ஷை புத்திரிகளின் தலையெண்ணாகிய 6 ஆறைவிப்கு என்றபேர்ப்பாதியாக்கவேண்டும், இப்படி பேர்ப்பாதியாக்கினதில் விப்கு 3 இருக்கிறது. பின்னும் ஷை பாட்டிகளின் தலை எண்களாகிய 3-ஐயும் இவர்களின் பங்காகிய 1-ஐயும் ஷை வகைப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறது, அதாவது 3 இருக்கிறது. பின்னும் பிதாவின் சகோதரர்களின் தலை எண்களாகிய 3-ஐயும் இவர்களின் பாகமாகிய 1-ஐயும் ஷை 4 வகைகளில் எந்தவகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறது, ஆக இந்த 2 ஜின்சுகளிலும் தபாயுன் இருக்கிறது பின்னும் புத்திரிகளின் தலையெண்ணை விப்கு என்றபேர்ப்பாதி செய்துவந்தது 3, ஷை பாட்டிகளின் தலை எண் 3, பிதாவின் சகோதரர்களின் தலை எண் 3, ஆக இந்த 3 ஜின்சுகளில் 3, 3, 3 என்று வந்தபடியால் இப்போது இவைகளிலும் மேற்கண்ட 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படிப்பார்த்ததில் இவைகளோ தமாசலாயிருக்கிறது, ஆகையால் 2 ஜின்சுகளின் தலை எண்களை விட்டுவிட்டு ஒரேவொரு ஜின்ஸின் தலை எண்ணாகிய 3 மூன்றை மஸ்அலாவின் எண்ணாகிய 6-ல் [illegible]

ருக்கவேண்டும். இப்படி பெருக்கிவந்த தொகையானது 18 ஆக இருக்கிறது. 3×6=18. இந்த பதினெட்டை 3-ல் 2-ஆல் வகுத்து புத்திரிகள் 6 பேருக்கு 12-ம், இப்படியே 6 ஆல் வகுத்து பாட்டிகள் 3 பேருக்கு 3-ம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 3 மூன்றை பிதாவின் சகோதரர்கள் 3 பேர்களுக்கு 3-ம் கொடுத்துவிடவேண்டும், இப்படி தஸ்ஹீ செய்ததினால் பாகங்கள் பூறுபூறுவாய் பாகிக்கப்பட்டன.

தவாபுக்கில் 3 ஜின்ஸில் கெஸிறுகளின் உதாரணம். இதில் அவுல் உண்டு.

கைது, மஸ்அலா 24 அவுல் 27 தஸ்ஹீ 48 அவுல் 54
அமானம் 2-2-2.

2)32 * ()
2)16 2)8
2)8 2)4
2)4 2
2

மய்யத்து	பத்னி 2	புத்திரி 32	பாட்டி 8	பிதா
	8-ல் 1	3-ல் 2	6-ல் 1	6-ல 1
	3	16	4	4
	6	32	8	8

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 24-ஆல் செய்து பத்னிகளின் 8-ல் 1-க்கு 3 பங்குகளும் புத்திரிகளின் 3-ல் 2-க்கு 16 பங்குகளும் பாட்டிகளின் 6-ல் 1-க்கு 4 பங்குகளும், பிதாவின் 6-ல் 1-க்கு 4 பங்குகளும் கொடுத்தால் 2 பத்னிகளுக்கு 3 பங்குகள் முறிப்படுகின்றன, பின்னும் 32 புத்திரிகளுக்கு 16 பங்குகள் முறிப்படுகின்றன. பின்னும் 8 பாட்டிகளுக்கு 4 பங்குகள் முறிப்படுகின்றன, பின்னும் ஒரேயொரு பிதாவுக்கு 4 பங்குகள் முறிப்படுகிறதில்லை, பின்னும் இப்படி முறிப்படுகிற ஜின்ஸுகள் 3 ஜின்ஸுகளாயிருக்கின்றன, ஆகையால் இந்த பாகங்கள் முறிப்படாமல் பூறுபூறுவாய் பாகிக்கவேண்டியதற்காக தஸ்ஹீ செய்யவேண்டும், இது எப்படி செய்யவேண்டுமென்றால் பத்னிகளின் தலை எண்களினாலும் இவர்களின் பாகங்களினாலும் ஷெடி 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் 2-ஆம், 3-ஆம் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறது, ஆகையால் இந்த 2 இரண்டை அமானமாக மஸ்அலாவின்மேல் எழுதிவைக்கவேண்டும். பின்னும் ஷெடி புத்திரிகளின் தலை எண்ணாகிய 32-ஆம் இவர்களின் பாகங்களாகிய 16-ஆம் அப்படியே பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறது, ஆகையால் ஷெடி தலை

எண்ணாகிய 32 முப்பத்திரண்டை 2 ஆல் 4 தடவை வகுத்தால் மீதம் 2 வருகிறது இந்த இரண்டுதான் 32-ன் வபிக்காயிருக்கிறது, ஆகையால் இந்த 2 இரண்டை அமானமாக மஸ்அலாவின்மேல் எழுதிவைக்கவேண்டும்.பின்னும் ஷெடி பாட்டிகளின் தலைஎண்களாகிய 8-ஆம், இவர்களின் பங்குகளாகிய 4-ஆம் அப்படியே பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறது, ஆகையால் ஷெடி தலை எண்ணாகிய 8 எட்டை 2 ஆல் 2 தடவை வகுத்தால் மீதம் 2 வருகிறது. () இந்த 2 தான் 8-ன் வபிக்காயிருக்கிறது, ஆகையால் இந்த 2 இரண்டையும் அமானமாக மஸ்அலாவின்மேல் எழுதிவைக்கவேண்டும். பின்னும் இப்படி அமானமாக வைத்த 3 தலைகளின் எண்களாகிய 2, 2, 2 இந்த 3 எண்களிலும் ஷெடி 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று யோசித்ததில் இவைகளிலே முதல்வகையாகிய தமாசல் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால ஷெடி 2 ஜின்சுகளின் தலைகளை விட்டுவிட்டு ஒரே ஜின்சின் தலை எண்ணாகிய 2 இரண்டை மஸ்அலாவின் எண்ணாகிய 24-ல் பெருக்கவேண்டும், இப்படி பெருக்கிவந்த தொகையானது 48 ஆக இருக்கிறது. 24×2=48. இந்த நாற்பத்தெட்டை 8 ஆல் வகுத்து பத்னிகள் 2 பேருக்கு 6-ம் இப்படியே 3-ல் 2 ஆல் வகுத்து புத்திரிகள் 32 பேருக்கு 32-ம் இப்படியே 6 ஆல் வகுத்து பாட்டிகள் 8 பேருக்கு 8-ம் இப்படியே 6 ஆல் வகுத்து பிதாவுக்கு 8-ம் கொடுத்துவிடவேண்டும், இப்படி தஸ்ஹீ செய்ததினால் பாகங்கள் பூறுவாய் பாகிக்கப்பட்டன.

அறிக்கை.

இந்த இடத்தில் 8 பாட்டிகளும் தாயைப்பற்றிய பாட்டிகளாயிருக்கிறார்கள் அதாவது மாதாமஹிகளாக இருக்கிறார்கள். பின்னும் இவர்கள் சமவரிசையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் இப்படிக்கு இவர்கள் சமவரிசையில் அல்லாமலிருந்து சமீபமுள்ளவர்களும் தூரமுள்ளவர்களுமாயிருந்திருப்பார்களானால் அப்போது சமீபமுள்ளவர்களின் நிமித்தியமாய் தூரமுள்ளவர்கள் மஹ்றூமாயிருப்பார்கள்.

பின்னும் சமீபவரிசையிலுள்ள பாட்டிகளில் 2 பாட்டிகளுக்குமேல் வாரக்கூடியதில்லையென்று அனேகர்கள் சந்தேகப்படுகிறதுண்டு அப்பேர்ப்பட்டவர்களுடைய திருப்திக்காக அடியில் ஒரு உதாரணத்தை எழுதுகிறேன் அதனால் அவர்களின் சந்தேகம் நிவர்த்தியாகும். பாட்டிகளைக்கண்டு பிடிக்கவேண்டியதற்காக இப்படி எழுதவேண்டும் அதாவது.

1. மாதாவின்	1. பிதாவின்
2. மாதாவின்	2. மாதாவின்
3. மாதாவின்	3. மாதாவின்
4. மாதாவின்	4. மாதாவின்
5. மாதாவின்	5. மாதாவின்
6. மாதா	6. மாதா
அதாவது மாதாமகியுடைய மாதாமகியின், மாதாமகி, இப்படி எழுதி 1-வது ஸ்தானத்தில் எழுதப்பட்டிருக்கிறமாதாவுக்குபதிலில்பிதாவென்று எழுதி மற்றவர்களை நிலையாகவைக்க வேண்டும் எப்படியென்றால்.	அதாவது பிதாமகியுடையமாதாமகியின், மாதாமகி, பின்னும் 1-வது 2-வது ஸ்தானத்தில் எழுதப்பட்டிருக்கிற மாதாவுக்கு பதிலில் பிதாவென்று எழுதி மற்றவர்களை நிலையாகவைக்கவேண்டும் எப்படி என்றால்

1. பிதாவின்	1. பிதாவின்
2. பிதாவின்	2. பிதாவின்
3. மாதாவின்	3. பிதாவின்
4. மாதாவின்	4. மாதாவின்
5. மாதாவின்	5. மாதாவின்
6. மாதா	6. மாதா
அதாவது பிதாமகனுடைய மாதாமகியின் மாதாமகி, பின்னும் 1-வது 2-வது 3-வது ஸ்தானத்தில் எழுதப்பட்டிருக்கிற மாதாவுக்கு பதிலில் பிதாவென்று எழுதிமற்றவர்களை நிலையாகவைக்க வேண்டும் எப்படி என்றால்.	அதாவது பிரப்பிதாமகனுடைய மாதாவின், மாதாமகி, பின்னும் 1-வது 2-வது 3-வது 4-வது ஸ்தானத்தில் எழுதப்பட்டிருக்கிற மாதாவுக்கு பதிலில் பிதாவென்றெழுதி மற்றவர்களை நிலையாகவைக்கவேண்டும் எப்படியென்றால்.

1. பிதாவின்	1. மாதாவின்
2. பிதாவின்	2. பிதாவின்
3. பிதாவின்	3. பிதாவின்
4. பிதாவின்	4. பிதாவின்
5. மாதாவின்	5. பிதாவின்
6. மாதா	6. மாதா
அதாவது பிரப்பிதாமகனுடைய பிதாவின், மாதாமகி, பின்னும் 1-வது 2-வது 3-வது 4-வது 5-வது ஸ்தானத்தில் எழுதப்பட்டிருக்கிற மாதாவுக்கு பதிலில் பிதாவென்று எழுதி மற்றவர்களைநிலையாக வைக்கவேண்டும் எப்படி என்றால்.	அதாவது பிரப்பிதாமகனுடைய பிதாமகனின், மாதா, இவர்கள் எல்லோரும் சமகாரிகையுள்ள 6-பாட்டிகளாக இருக்கிறார்கள்.

பின்னும் பாட்டிகளுடைய பயான்,

இவர்களில் 4-வகையுண்டு.

1-வது பிதாவின் சஹீயுள்ள பாட்டிகள்.

1. பிதாவின், மாதாவின், மாதா
2. பிதாவின், பிதாவின், மாதா
3. பிதாவின், மாதாவின், மாதாவின், மாதா
4. பிதாவின். பிதாவின், மாதாவின், மாதா
5. பிதாவின், பிதாவின், பிதாவின், மாதா
6. பிதாவின், மாதாவின், மாதாவின், மாதாவின், மாதா
7. பிதாவின், பிதாவின், மாதாவின், மாதாவின், மாதா
8. பிதாவின், பிதாவின், பிதாவின் மாதாவின், மாதா
9. பிதாவின், பிதாவின், பிதாவின், பிதாவின், மாதா

2-வது மாதாவின் சஹீயுள்ள பாட்டிகள்.

1. மாதாவின், மாதாவின், மாதா
2. மாதாவின், மாதாவின், மாதாவின், மாதா
3. மாதாவின், மாதாவின், மாதாவின், மாதாவின், மாதா

3-வது பிதாவைப்பற்றிய பாசிதுள்ள பாட்டிகள்.

1. பிதாவின், மாதாவின், பிதாவின், மாதா
2. பிதாவின், மாதாவின், பிதாவின், மாதாவின், மாதா
3. பிதாவின், பிதாவின், மாதாவின், பிதாவின், மாதா
4. பிதாவின், மாதாவின், மாதாவின், பிதாவின், மாதா
5. பிதாவின், மாதாவின், பிதாவின், பிதாவின், மாதா

4.வது மாதாவைப்பற்றிய பாசிதுள்ளபாட்டிகள்.

1- மாதாவின், பிதாவின், மாதா
2. மாதாவின், பிதாவின், பிதாவின், மாதா
3. மாதாவின், மாதாவின், பிதாவின், மாதா
4. மாதாவின், பிதாவின், மாதாவின், மாதா
5. மாதாவின், பிதாவின், மாதாவின், மாதாவின், மாதா
6. மாதாவின், பிதாவின், பிதாவின், மாதாவின், மாதா

7. மாதாவின், பிதாவின், பிதாவின், பிதாவின், மாதா
8. மாதாவின், பிதாவின், மாதாவின், பிதாவின், மாதா
9. மாதாவின், பிதாவின், பிதாவின், மாதாவின், மாதா
10 மாதாவின், மாதாவின், மாதாவின், பிதாவின், மாதா
11 மாதாவின், மாதாவின், பிதாவின், பிதாவின், மாதா

4.வது வகை தபாயுனைப்பற்றி இது எதற்கு சொல்லப்படுகிறதென்றால் இதோ மேல்கண்ட தமாதுலின்படி முதல்எண்ணும் 2.வது எண்ணும் ஒத்திராமலும் பின்னும் மேல்கண்ட ததாகுலின்படி சிறு எண்ணால் பெரிய எண் வகுக்கப்படாமலும் பின்னும் மேல்கண்ட தவாபுக்கின்படி முதல் எண்ணும் 2-வது எண்ணும் பிர்த்தியமான வேறே ஒரு எண்ணால் வகுக்கப்படாமலும் இருந்தால் அதற்கு தபாயுன் என்று பேர் எப்படியென்றால் இந்த 2 லெக்கங்களும் ஏக லெக்கத்தால் வகுக்கப்படுகிறதில்லை அப்படி வகுக்கப்பட்டாலும் ஒன்று மீதம் வரும் $10 \div 3 = 3\frac{1}{3}$

பின்னும் தவாபுக்கும் தபாயுனும் அறியும் வேறேவிதம்.

இது எப்படி அறியவேண்டுமென்றால் 2 எண்களில் எந்த எண் பெரிதாயிருக்குமோ அதில் சிறிய எண்ணை கழிக்கவேண்டும். பின்னும் அதில் இருக்கும் மீதியில் 2-வது சிறிய எண்ணைக் கழிக்கவேண்டும், இவ்விதமாகவே கழித்துக்கொண்டு வந்து கடைசியில மீதமிருக்கும் மிகுதி 2 எண்களிலும் சரியாயிருக்கவேண்டும், இப்படி சரியாயிருப்பதில் ஒவ்வொரு எண்ணிலும் ஒவ்வொரு லெக்கம் மீதமாயிருந்தால் அப்போது 2 எண்களிலும் தபாயுன் இருக்கிறதென்று அறியவேண்டும், இப்படி ஷெடி 2 எண்களிலும் ஒவ்வொன்று மீதமிருந்திராமல் ஒன்றுக்குமேலுள்ள லெக்கம் ஷெடி 2 எண்களிலும் சரிசமானமான லெக்கங்களாயிருந்தால் அப்போது அவ்விரண்டிலும் தவாபுக்கு இருக்கிறதென்று அறியவேண்டும்.

தபாயுன் அறியும் விதம்.

முதல் எண் 10. 2-வது எண் 7. இதில் முதல் எண்ணாகிய 10-ல் 2-வது எண்ணாகிய 7 ஐ கழித்தால் 3 மீதமிருக்கின்றது. மறுபடியும் மீதமிருக்கும் ஷெடி 3 மூன்றை 2-வது எண்ணாகிய 7-ல் 2 தரம் கழித்தால் ஒன்று மீதமிருக்கிறது, மறுபடியும் இந்த மீதமாகிய ஒன்றை 2தரம் ஷெடி 3-ல் கழித்தால் மீதம் 1 இருக்கின்றது. X இவ்விரண்டிலும் அதாவது 10-லும், 7-லும் மீதம் ஒன்று இருப்பதால் இதற்கு தபாயுன் என்றுபேர்.

தவாபுக்கு அறியும் விதம்.

18	8	10	7
8	2	7	3
10	6	3	4
8	2	1	3
2	4	2	1
	2	1	
	2	1	

முதல்எண் 18. 2-வதுஎண் 8. இதில் X முதல்வது எண்ணாகிய 18-ல் 2-வது எண்ணாகிய எட்டை 2தரம் கழித்தால் மீதம் 2 இருக்கிறது. மறுபடியும் 2-வது எண்ணாகிய 8-ல் மீதமிருக்கும் 2 இரண்டை 3தரம் கழித்தால் மீதம் 2 இருக்கிறது. X இப்படி 2 எண்ணிலும் 2, 2, மீதமிருந்தால் இதற்கு தவாபுக்கு என்றுபேர். பின்னும் 18-ன் 2-வது பங்காகிய 9-ம், 8-ன் 2-வது பங்காகிய 4-ம், ஜுவக்கேசிப்பாக இருக்கும் இந்த 9 ஆனது 18-ன் பெருப்பனையாயும் இந்த 4 ஆனது 8-ன் பெருப்பனையாயும் இருக்கிறது.

தபாயுன்—ஒரு ஜின்ஸின் தலைகளின் தபாயுனும் அவர்களின் பாகங்களில் கசரும் இருப்பதின் உதாரணங்கள்.

கசர் என்ற முறிதல் ஒரு ஜின்ஸில் நேரிட்டால் அப்போது மேல் எழுதிவந்த 4 வகைகளில் இது எந்தவகையென்று பார்க்கவேண்டும். இது எப்படி பார்க்கவேண்டுமென்றால் கசர் நேரிட்ட ஷெடி ஜின்ஸின் பங்கிலும் அதின் தலைகளிலும் ஷெடி 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருந்தால் மஸ்அலாவின் எண்ணுடன் கசர் நேரிட்ட ஜின்ஸின் எத்தனை தலைகள் உண்டோ அத்தனை தலைகளின் எண்ணை பெருக்கவேண்டும். ஒரு தபாயுனுடைய 1-வது உதாரணம். இதில் அவுல் இல்லை.

மய்யத்து சைது, மஸ்அலா 6 தஸ்ஹீ 30
பிதா......மாதா......புத்திரிகள் 5
6-ல் 1......6-ல் 1......3-ல் 2
மஸ்அலா 1 — 1 — 4
தஸ்ஹீ 5 — 5 — 20

இந்த உதாரணத்தில் மஸ்அலா 6-ஆல் செய்து பிதாவுக்கும் மாதாவுக்கும் பாகங்கள் முறிபடாமல் செல்லாய்ப்போய் ஒரே ஒரு ஜின்ஸாகிய புத்திரிகள் 5 பேருக்குவந்த 4 பங்குகள் பூறுபூறுவாய் பாகிக்கப்படாமல் பாகங்கள் முறிபடுகிறபடியால் இதை தஸ்ஹீஹ் செய்யும்படி நேரிடுகிறது, தஸ்ஹீஹ் செய்யும் விதமாவது புத்திரிகளின் தலைகளாகிய 5-உம் ௸ புத்திரிகளின் பாகங்களாகிய 4-உம், ௸ 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்த்ததில் இது தபாயுனுடைய விதமிருக்கிறதென்று தெரியவந்தது, எனெனில் ௸ 5-ம், 4-ம் எவ்வித எண்ணாலும் வகுக்கப்படுகிறதில்லை, அப்படி வகுக்கப்பட்டாலும் மீதம் ஒன்று இருந்துவிடுகிறது, ஆகையால் ௸ புத்திரிகளின் தலை எண்ணாகிய 5 ஐக்கொண்டு மஸ்அலாவின் எண்ணாகிய 6 ஆல் பெருக்கப்பட்டது. 6 × 5 = 30. இப்படி பெருக்கினதினால் வந்த தொகை 30 இதுதான் தஸ்ஹீஹேயான மஸ்அலா, இந்த முப்பதை 6-ஆல் வகுத்து பிதாவின் 6-ல் 1-க்கு 5 பங்குகளும் இப்படியே மாதாவின் 6-ல் 1-க்கு 5 பங்குகளும் இப்படியே ௸ 30 முப்பதை 3-ல் 2-ஆல் வகுத்து புத்திரிகளின் பாகமாகிய 3-ல் 2-க்கு 20 பங்குகளும் கொடுக்கவேண்டும், அப்போது புத்திரிகளுக்கு பாகங்கள் முறிபடாமல் ஒவ்வொருத்திக்கு 4, 4 பாகங்கள் வந்தன, இதில் அவுல் வரவில்லை.

2-வது உதாரணம் இதில் அவுல் உண்டு.

மய்யத்து ஜைனபு, மஸ்அலா 6 அவுல் 7, தஸ்ஹீஹ் 30 அவுல் 35

	பதி	சகோதரிகள் 5
	½	3-ல் 2
மஸ்அலா	3	4
தஸ்ஹீஹ்	15	20

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 6-ஆல் செய்து பதிக்கு பாகம் முறிபடாமல் சென்றுபோய் ஒரேவொரு ஜின்ஸாகிய சகோதரிகள் 5 பேருக்கு வந்த 4 பங்குகள் பூறுபூறுவாய் பாகிக்கப்படாமல் பாகங்கள் முறிபடுகிறபடியால் இதை தஸ்ஹீஹ் செய்யும்படி நேரிட்டது, தஸ்ஹீஹ் செய்யும் விதமாவது சகோதரிகளின் தலையாகிய 5-உம் இவர்களின் பாகங்களாகிய 4-உம் ௸ 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்த்ததில் இது தபாயுனுடைய வகை என்று தெரியவந்தது, எனெனில் 5-ம், 4-ம் எவ்வித எண்ணாலும் வகுக்கப்படுகிறதில்லை, அப்படி வகுக்கப்பட்டாலும் மீதம் ஒன்று இருந்துவிடுகிறது, ஆகையால் ௸ சகோதரிகளின் தலை எண்ணாகிய 5 ஐக்கொண்டு மஸ்அலாவின் எண்ணாகிய 6-ல் பெருக்கப்பட்டது. 6 × 5 = 30. இப்படி பெருக்கினதினால் வந்த தொகை 30. இந்த முப்பதை பதியின் பாகமாகிய 2 ஆல் வகுத்து அவனுக்கு 15 கொடுக்கவேண்டும். பின்னும் ௸ 30 முப்பதை 3-ல் 2-ஆல் வகுத்து இதினால் வந்த 20 இருபதை 5 சகோதரிகளுக்கு கொடுக்கவேண்டும், இப்படி பாகித்து கொடுத்த தொகையை கூட்டினால் 35 ஆகிறது. 15 + 20 = 35. பின்னும் ௸ மஸ்அலாவின் அவுலாகிய 7-க்கும் சகோதரிகளின் தலையாகிய 5-க்கும் பெருக்கினால் 7 × 5 = 35 ஆகிறது. இதை தஸ்ஹீஹ் மஸ்அலாவின் அவுல் என்று சொல்லப்படும். இதில் அவுல் உண்டு.

தபாயுன் எல்லா ஜின்ஸுகளின் தலைகளிலும் அவர்களின் பங்குகளிலும் இருப்பதுமன்றி அடானம் வைத்த எல்லா தலைகளிலும் தபாயுனும் கசரும் இருப்பதின் பயான்.

இதில் அவுல் இல்லை.

கசர் 4 ஜின்ஸுகளின் பேரில் நேரிட்டால் அப்போது மேல் எழுதிவந்த 4 வகைகளில் இது எந்த வகை என்று பார்க்கவேண்டும். இது எப்படி பார்க்கவேண்டுமென்றால் எந்தெந்த ஜின்ஸுகளின்பேரில் கசர் என்ற முறிதல் நேரிடுகிறதோ அவர்களின் பங்குகளிலும் அவர்களின் தலை எண்களிலும் ௸ 4 வகைகளில் எந்த வகையென்று பார்க்கவேண்டும். அப்படி பார்த்ததில் 4 ஜின்ஸுகளின் தலைகளிலும், அவர்களின் பங்குகளிலும் 4-வது வகையாகிய தபாயுன் இருந்தால் அப்போது ஒரு தலை எண்ணை மற்றொரு தலையின் எண்ணுடன் பெருக்கவேண்டும், இப்படி பெருக்கிவந்த தொகையை 3-வது தலையின் எண்ணுடன் பெருக்கவேண்டும். பின்னும் இப்படி பெருக்கிவந்த எண்ணுடன் 4-வது தலையின் எண்ணை பெருக்கவேண்டும். பின்னும் இப்படி பெருக்கிவந்த மொத்தத்தை மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். உதாரணம்.

மைய்யத்து ஜைது, மஸ்அலா 24 தஸ்ஹீஹ் 11088 அமானாத், 2-11-7-3

	பத்னி 2...	புத்திரி 11...	பாட்டி 7...	பிதாவின்சகோதரன் 3
	8-ல் 1......	3-ல் 2.........	6-ல் 1.......	மிகுதி
மஸ்அலா	3 —	16 —	4 —	1
தஸ்ஹீஹ்	1386	7392	1848	462
பாகஞ் 1-கு	693	672	264	154

2×11=22×7=154×3=462×24=11088.

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 24 ஆகும் செய்து பத்னியின் 8-ல் 1க்கு 3 பங்கும், புத்திரிகளின் 3-ல் 2க்கு 16 பங்கும் பாட்டிகளின் 6-ல் 1க்கு 4 பங்கும் மீதமிருக்கும் ஒன்றை பிதாவின் சகோதரர்களுக்கும் கொடுத்தால் 2 பத்னிகளுக்கு 3 பங்குகள் முறிப்படுகின்றன. பின்னும் 11 புத்திரிகளுக்கு 16 பங்குகள் முறிப்படுகின்றன, பின்னும் 7 பாட்டிகளுக்கு 4 பங்குகள் முறிப்படுகின்றன, பிதாவின் சகோதரர்கள் 3 பேர்களுக்கு ஒரு பங்கு முறிப்படுகின்றது, ஆகையால் மேற்படி பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்படவேண்டியதற்காக தஸ்ஹீஹ் செய்யவேண்டும், அது எப்படி செய்யவேண்டுமென்றால் பத்னிகளின் தலை எண்ணிலும் இவர்களின் பாகத்திலும் மேற்படி 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை எண்ணாகிய 2 இரண்டை அமானமாக மஸ்அலாவின்மேல் எழுதிவைக்கவேண்டும், பின்னும் இவ்விதமாகவே புத்திரிகளின் தலை எண்ணிலும் இவர்களின் பாகத்திலும் பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை எண்ணாகிய 11 பதினொன்றையும் மஸ்அலாவின் மேல் அமானமாக எழுதிவைக்கவேண்டும், பின்னும் இவ்விதமாகவே பாட்டிகளின் தலை எண்ணிலும் இவர்களின் பங்கிலும் பார்த்ததில் இதுவும் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை எண்ணாகிய 7 ஏழையும் மஸ்அலாவின்மேல் அமானமாக எழுதிவைக்கவேண்டும், பின்னும் இவ்விதமாகவே பிதாவின் சகோதரர்களின் தலை எண்ணிலும் இவர்களின் பாகத்திலும் பார்த்ததில் இதுவும் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை எண்ணையும் மஸ்அலாவின்மேல் அமானமாக வைக்கவேண்டும், இப்படி அமானமாக வைத்த எண்களை யென்றால் 2, 11, 7, 3 இந்த 4 தலை எண்களிலும் மேற்படி 4 வகைகளில் எந்தவகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் இந்த 4 தலை எண்களிலும் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது. ஏனெனில் இந்த 4 எண்களும் எந்த இலக்கத்தாலும் அடிப்படுகிறதில்லை. அதாவது பாகிக்கப்படுகிறதில்லை. ஆகையால் முதல் தலைஎண்ணாகிய 2 இரண்டை 2-வது தலை எண்ணாகிய 11-ல் பெருக்கவேண்டும். 2×11=22. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய இருபத்திரண்டை 3-வது தலை எண்ணாகிய 7-ல் பெருக்கவேண்டும். 22×7=154. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய நூற்றி ஐம்பத்திநாலை 4-வது தலை எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 154×3=462. இப்படி பெருக்கிவந்த மொத்த தொகையாகிய நானூற்றி அறுபத்திரண்டை மஸ்அலாவின் எண்ணாகிய 24-ல் பெருக்கவேண்டும், 462×24=11088. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 11088 தஸ்ஹீஹிய மஸ்அலாவாக இருக்கிறது, இதை 8-ஆல் வகுத்து பத்னிகள் 2 பேர்களுக்கு 1386-ம், பின்னும் இவ்விதமாகவே 3-ல் 2-ஆல் வகுத்து 11 புத்திரிகளுக்கு 7392-ம் பின்னும் இவ்விதமாகவே 6-ஆல் வகுத்து 7 பாட்டிகளுக்கு 1848-ம் மீதமிருக்கும் 462 பிதாவின் சகோதரர்கள் 3 பேருக்கும் கொடுத்துவிட்டால் பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்படும், எப்படியென்றால் 2 பத்னிகளுக்கு 1386 வந்தால் ஒரு பத்னிக்கு 693 வந்தது, பின்னும் 11 புத்திரிகளுக்கு 7392 வந்தால் ஒவ்வொரு புத்திரிக்கு 672 வந்தது, பின்னும் 7 பாட்டிகளுக்கு 1848 வந்தால் ஒவ்வொரு பாட்டிக்கு 264 வந்தது, பின்னும் 3 பிதாவின் சகோதரர்களுக்கு 462 வந்தால் ஒவ்வொருவனுக்கு 154 வந்தது.

2 ஜின்சின் தலைகளிலும் பங்குகளிலும் தபாயுனும் 2 ஜின்சின் தலைகளிலும் பங்குகளிலும் தவாபுக்கும், பின்னும் அமானமாக வைத்த எல்லா தலைகளில் தபாயுனும் இருக்கும் சங்கதியின் பயான்.

இதில் அவுல் இல்லை.

மய்யத்து சைது, மஸ்அலா 24 தஸ்ஹீ 5040 அமானம் 7-3-5-2

	பத்னி 2	புத்திரி 10	பாட்டி 6	பிதாவின் சகோதரர் 7	
	8-ல் 1	3-ல் 2	6-ல் 1	மீதி	
மஸ்அலா	3	16	4	1	2)2,10,6,7
தஸ்ஹீ	630	3360	840	210	1, 5, 3, 7
பாகம் 1-கு	315	336	140	30	

$$7 \times 3 = 21 \times 5 = 105 \times 2 = 210 \times 24 = 5040.$$

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 24.ஆல் செய்து பத்னியின் 8-ல் 1-க்கு வந்த 3 பங்குகள் 2 பத்னிகளுக்கும், பின்னும் புத்திரிகளின் 3-ல் 2-க்கு வந்த 16 பங்குகள் 10 புத்திரிகளுக்கும், பின்னும் பாட்டிகளின் 6-ல் 1-க்கு வந்த 4 பங்குகள் 6 பாட்டிகளுக்கும், பின்னும் மீதமிருக்கும் ஒரு பங்கு பிதாவின் சகோதரர்கள் 7 பேர்களுக்கும் கொடுத்தால் அப்போது இந்த 4 பேர்களுக்கும் பங்குகள் முறிப்படுகின்றன, ஆகையால் மேற்படி பங்குகள் முறிப்படாமல் பாகிக்கப்பட வேண்டியதற்காக தஸ்ஹீ செய்யவேண்டும், இது எப்படி செய்ய வேண்டுமென்றால் பத்னிகளின் தலையெண்ணாகிய 2-ஆம் இவர்களின் பாகமாகிய 3-ஆம் மேற்படி 4 வகைகளில் எந்தவகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் இதில் 4.வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை யெண்ணாகிய 2 இரண்டை அமானமாக மஸ்அலாவின்மேல் எழுதிவைக்க வேண்டும். பின்னும் இவ்விதமாகவே புத்திரிகளின் தலை யெண்ணாகிய 10.ஆம் இவர்களின் பாகமாகிய 16.ஆம், எந்தவகை யிருக்கிறதென்று பார்த்ததில் இதில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் மேற்படி தலை யெண்ணாகிய 10 பத்தை வப்குஎன்ற பேர்ப்பாதியாக்கி அதாவது 5ஆக்கி இதையும்மேற்படி மஸ்அலாவின்மேல் அமானமாக எழுதிவைக்கவேண்டும், பின்னும் இவ்விதமாகவே பாட்டிகளின் தலை யெண்ணாகிய 6.ஆம் இவர்களின் பங்காகிய 4.ஆம் பார்த்ததில் 3 வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இதின் தலையெண்ணாகிய 6.யை வப்கு என்ற பேர்ப்பாதியாக்கி அதாவது மூன்றாக்கி இதையும் மேற்படி மஸ்அலாவின்மேல் அமானமாக எழுதிவைக்கவேண்டும். பின்னும் இவ்விதமாகவே பிதாவின் சகோதரர்களின் தலை யெண்ணாகிய 7.ஆம், இவர்களின் பங்காகிய 1 ஆம் பார்த்ததில் 4.வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இதின் தலை யெண்ணாகிய ஏழை மேற்படி மஸ்அலாவின்மேல் அமானமாக எழுதிவைக்க வேண்டும். இப்படி அமானமாக வைத்த தலையெண்கள் ஆவையென்றால் 7, 3, 5, 2 இவைகள்தான். பின்னும் இப்போது மேற்படி 4 தலை எண்களிலும் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், இப்படி பார்த்ததில் இந்த 4 தலை எண்களிலும் 4.வது வகையாகிய தபாயுனு யிருக்கின்றன, ஆகையால் முதல் தலை எண்ணாகிய 7 ஏழை 2.வது தலை எண்ணாகிய 3.ல் பெருக்கவேண்டும். 7 × 3 = 21. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய இருபத்தியொன்றை 3.வது தலை எண்ணாகிய 5.ஆல் பெருக்கவேண்டும். 21 × 5 = 105. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய நூற்றிஐந்தை 4.வது தலை எண்ணாகிய 2.ஆல் பெருக்க வேண்டும். 105 × 2 = 210. இப்படி பெருக்கிவந்த இருநூற்றிபத்தை மஸ்அலாவின் எண்ணாகிய 24.ஆல் பெருக்கவேண்டும். 210 × 24 = 5040. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 5040 தஸ்ஹீயே மஸ்அலாவாயிருக்கிறது, இதை பத்னியின் 8.ஆல் வகுத்து 2 பத்னிகளுக்கு 630.ம் இப்படியே புத்திரிகளின் 3.ல் 2.ஆல் வகுத்து 10 புத்திரிகளுக்கு 3360-ம் இப்படியே பாட்டிகளின் 6..ஆல் வகுத்து 6 பாட்டிகளுக்கு 840.ம் மீதமிருக்கிற 210 இருநூற்றிபத்தை பிதாவின் சகோதரர்கள் 7 பேருக்கு கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்தால் பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்படும், எப்படியென்றால் 2 பத்னிகளுக்கு 630 வந்தால் ஒவ்வொரு பத்னிக்கு 315 வந்தது, பின்னும் 10 புத்திரிகளுக்கு 3360 வந்தால் ஒவ்வொரு புத்திரிக்கு 336 வந்தது, பின்னும் 6 பாட்டிகளுக்கு 840 வந்தால் ஒவ்வொரு பாட்டிக்கு 140 வந்தது, பின்னும் பிதாவின் சகோதரர்கள் 7 பேருக்கு 210 வந்தால் ஒவ்வொருவருக்கு 30, 30 வந்தது.

2 ஜின்சின் தலைகளிலும் இவர்களின் பங்குகளிலும் தவாபுக்கும் ஒரு ஜின்சின் தலைகளிலும் இவர்களின் பாகங்களிலும் தபாயுனு மிருக்கும் சங்கதியின் பயான்.

மய்யத்து சைது, மஸ்அலா 24 இதின் அவுல் 27 தஸ்ஹீ 720 இதின் அவுல் 810 அமானம் 2-5-3

	பத்னி 2	புத்திரி 10	பாட்டி 6	பிதா	
	8-ல் 1	3-ல் 2	6-ல் 1	6-ல் 1	
மஸ்அலா	3	16	4	4	2)2,10,6
தஸ்ஹீ	90	480	120	120	1, 5, 3
பாகம் 1-கு	45	48	20	120	

$$2 \times 5 = 10 \times 3 = 30 \times 24 = 720.$$

இதையும் இதற்கு மேற்கண்ட மஸ்அலாவின்படியே மஸ்அலா செய்து தஸ்ஹீஹும் செய்து பாகிக்கவேண்டும், மேற்கண்ட உதாரணத்திலும் இந்த உதாரணத்திலும் வித்தியாசம் ஒன்றுமில்லை, ஆனால் முந்திய உதாரணத்தில் அவுல் இல்லை, இதில் அவுல் இருக்கின்றது, இதுவே வித்தியாசமேயன்றி வேறில்லை.

சங்கதி.

அமானமாக வைக்கப்படும் எல்லா ஜின்சுகளின் தலை எண்களின் விப்கில் தவாபுக்கு இருந்தால் அப்போது முதல் ஜின்சின் தலை எண்ணை விப்கு என்ற பேர்ப்பாதியாக்கி அல்லது 3-ல் 1 ஒன்றாக்கிக் கொள்ளவேண்டும், அப்படியாக்கிக்கொண்ட தொகையை 2-வது ஜின்சின் எண்ணோடு பெருக்கவேண்டும், பின்னும் 3-வது ஜின்சின் தலை எண்ணிலும் தவாபுக்கு இருந்தால் அப்போது மேலே பெருக்கிவந்த தொகையை பேர்ப்பாதி அல்லது 3-ல் 1 ஆக்கி இதையும் மேற்படி 3-வது ஜின்சின் தலை எண்ணில் பெருக்கவேண்டும்.

பின்னும் அமானமாக வைக்கப்படும் ஜின்சுகளின் தலையெண்கள் எல்லாம் தபாயுனாயிருக்குமாகில் அப்போது ஒரு ஜின்சின் தலையெண்ணோடு மற்றொரு ஜின்சின் தலையெண்ணை பெருக்கவேண்டும், இப்படி பெருக்கிவந்த தொகையை மற்றொரு ஜின்சின் தலையெண்ணோடு பெருக்கவேண்டும், பின்னும் இப்படி பெருக்கிவந்த மொத்தத்தொகையை மஸ்அலாவின் எண்ணோடு பெருக்கவேண்டும், இப்படி அமல் செய்தால் மஸ்அலா தஸ்ஹீஹாகும்.

எல்லா ஜின்சுகளின் தலை எண்களின் விப்கில் தவாபுக்கு இருக்கும் சங்கதியின் உதாரணம்.

மய்யத்து	ஸைது, மஸ்அலா 24 தஸ்ஹீஹ் 4320 அமானம் 6-15-9-4				
	பத்னி 4...	புத்திரி 18...	பாட்டி 15...	பிதாவின் சகோதரர் 6	
	8-ல் 1....	3-ல் 2.......	6-ல் 1.......	மிகுதி	2)4, 18, 15, 6
மஸ்அலா	3 —	16 —	4 —	1	3)2, 9, 15, 3
தஸ்ஹீஹ்	540	2880	720	180	2, 3, 5, 1
பாகம் 1-கு	135	160	48	30	

2 × 3 = 6 × 2 = 12 × 3 = 36 × 5 = 180 × 24 = 4320.

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 24-ஆல் செய்து பத்னிகளின் 8-ல் 1-க்குவந்த 3-றை 4 பத்னிகளுக்கும் பின்னும் புத்திரிகளின் 3-ல் 2-க்குவந்த 16-றை 18 புத்திரிகளுக்கும், பின்னும் பாட்டிகளின் 6-ல் 1-க்கு வந்த 4-ஐ 15 பாட்டிகளுக்கும், பின்னும் மீதமிருக்கும் ஒன்றை பிதாவின் சகோதரர்கள் 6 பேர்களுக்கும் கொடுத்தால் பாகங்கள் முறிப்படுகின்றன, ஆகையால் பாகங்கள் அவரவர்களுக்கு முழுமுழுவாய் பாகிக்கப்படவேண்டியதற்காக தஸ்ஹீஹ் செய்யவேண்டும், இது எப்படி செய்யவேண்டுமென்றால் பத்னிகளின் தலை எண்களாகிய 4.உம் அவர்களின் பாகங்களாகிய 3.உம் மேற்படி 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும், அப்படி பார்த்ததில் 4.வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த தலை எண்ணாகிய 4 நாலை அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும், பின்னும் புத்திரிகளின் தலை எண்களாகிய 18.உம், இவர்களின் பாகங்களாகிய 16.உம் மேற்படி வகைப்படி பார்த்ததில் 3.வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் இந்த 18 பதினெட்டை விப்கு என்ற பேர்ப்பாதியாக்கி அதாவது 9 ஆக்கி அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும். பின்னும் பாட்டிகளின் தலை எண்களாகிய 15.உம் இவர்களின் பங்குகளாகிய 4.உம் மேற்படி வகைப்படி பார்த்ததில் 4.வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த 15 பதினைந்தை அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும், பின்னும் இப்படியே பிதாவின் சகோதரர்களின் தலை எண்களாகிய 6.உம் இவர்களின் பாகமாகிய 1.உம் மேற்படி வகைப்படி பார்த்ததில் 4.வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் இந்த 6 ஆறை அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும். இப்படி அமானமாக எழுதிவைத்திருக்கிற தலையெண்கள் எவையென்றால் 6, 15, 9, 4 இவைதான் இப்போது இந்த 4 தலை எண்களின் விப்கில் மேற்படி 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்த்ததில் 3.வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது, இதோ எப்படிப்பட்ட தவாபுக்கு என்றால் 3.ல் 1 மூன்றில் ஒன்றான தவாபுக்காயிருக்கிறது, அதாவது 6 மூன்றாலும், 15 மூன்றாலும் பாகிக்கப்பட்டுபோகின்றது, 6÷3=2, 15÷3=5. ஆகையால் 6 ஆறை மூன்றால் பாகித்து அதனால் வந்த பேறுபணம் 2. இந்த இரண்டை 15-ஆல் பெருக்கவேண்டும். 15×2=30 இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 30-ஐயும் அமானத்

தாக வைக்கப்பட்ட ஷெ 9-னும் மேல் கண்டபடி யெந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இது 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது. இதோ? எப்படிப்பட்ட தவாபுக்கு என்றால், 3ல் 1-மூன்றில் ஒன்றான தவாபுக்காயிருக்கிறது. அதாவது 30-மூன்றாலும் 9-மூன்றாலும் பாகிக்கப்பட்டு போகிறது 30÷3=10 9÷3=3 ஆகையால் 30-ன் மூன்றில் ஒன்றான பாகமாகிய 10-பத்தை 9-ஆல் பெருக்கவேண்டும். 10+9=90 இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 90-னும் அமானத்தாக வைக்கப்பட்ட ஷெ 4-நாலினும் மேலே கண்டபடி எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்குஇருக்கிறதாகதெரியவந்தது.இதோ? எப்படிப்பட்டதவாபுக்கு என்றால்பேர்பாதியாகத்தக்கதவாபுக்காயிருக்கிறது. அதாவது 90 இது 2-ஆலும் ஷெ 4 இரண்டாலும் பாகிக்கப்படுகிறது. 90÷2=45 4÷2=2 ஆகையால் 90-ன் அரை பாகமாகிய 45-நாற்பத்திஐந்தை ஷெ 4-ஆல் பெருக்கவேண்டும். 45×4=180 இப்படி பெருக்கிவந்த தொகையானது 180-நூற்றிஎண்பதாக இருக்கிறதுஇதைமஸ்அலாவின்தொகையாகிய 24-ஆல் பெருக்கவேண்டும். 180×24=4320 இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 4320-ஆனது மஸ்அலாவின் தஸ்ஹீயாயிருக்கிறது. இதை பத்னியின் 3-ஆல் வகுத்து 4-பத்னிகளுக்கு 540-ம் இப்படியே அதை புத்திரிகளின் 3-ல்2ஆல்வகுத்து 18-புத்திரிகளுக்கு 2880ம்,இப்படியேஅதைபாட்டிகளின்6ஆல்வகுத்து15-பாட்டிகளுக்கு 720-ம் மீதமிருக்கிற 180-நூற்றிஎண்பதை பிதாவின் சகோதரர்கள் 6-பேர்களுக்கும் கொடுக்கவேணும். பின்னும் 4-பத்னிகளுக்கு 540-வந்தால் அப்போது ஒவ்வொரு பத்னிக்கு 135-வந்தது. பின்னும் புத்திரிகள் 18-பேருக்கு 2880-வந்தால் அப்போது ஒவ்வொரு புத்திரிக்கு 160-வந்தது பின்னும் பாட்டிகள் 15-பேருக்கு 720-வந்தால் அப்போதுஒவ்வொருபாட்டிக்கு48-வந்ததுபின்னும் பிதாவின சகோதரர்கள் 6-பேருக்கு 180-வந்தால் அப்போது ஒவ்வொருவருக்கு 30-வந்தது இப்படி தஸ்ஹீசெய்தால் பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்படும்.

சிலஜின்சுகளின் தலை எண்களின் விட்கில் தபாயுனும் சிலஜின்சுகளின் தலை எண்களின் விட்கில் தவாபுக்கும் இருக்கும் சங்கதியின் உதாரணம்.

சைது, மஸ்அலா 24, இதின் அவுல் 27 தஸ்ஹீ
மய்யத்து 4320 இதின் அவுல் 4860 அரானம் 15, 9 4.

	பத்னி 4	புத்திரி 18	பாட்டி 15	பிதா
2)4-18-15	$\frac{1}{8}$	3-ல் 2	$\frac{1}{6}$	$\frac{1}{6}$
3)2-9-15	3	16	4	4 மஸ்அலா
2-3-5	540	2880	720	720 தஸ்ஹீ
	135	160	48	720 பாகம் 1

2×3=6×2=12×3=36×5=180×24=4320.

இந்த உதாரணத்தில் மஸ்அலா 24-ஆல் செய்து பத்னியின் $\frac{1}{8}$க்கு வந்த 3ஐ 4-பத்னிகளுக்கும். புத்திரிகளின் 3-ல்2க்கு வந்த 16-ஐ 18-புத்திரிகளுக்கும். பாட்டிகளின் $\frac{1}{6}$க்கு வந்த 4-ஐ 15-பாட்டிகளுக்கும். பிதாவின் $\frac{1}{6}$க்கு வந்த4-ஐ பிதாவுக்கும்கொடுத்து விட்டால், பிதாவுக்கு மாத்திரம் கிடைத்த 4-பங்கு முறிப்படாமல் செல்லப்போகிறது. ஆனால் 4-பத்னிகளுக்கு 3-பாகம் முறிப்படுகின்றது பின்னும் 18-புத்திரிகளுக்கு 16-பாகம் முறிப்படுகின்றது பின்னும்15பாட்டிகளுக்கு4பாகமமுறிப்படுகின்றது.ஆகையால்இவர்களுக்கு பூருபூருவாய் பாகங்கள் பாகிக்கப்படவேண்டியதற்காக மஸ்அலாவை தஸ்ஹீசெய்யவேண்டும். பின்னும்இதில்2தபாயுனும் ஒரு தவாபுக்கும் இருக்கிறது. மஸ்அலாவை தஸ்ஹீ செய்யவேண்டியதற்காக பத்னிகளின் தலைஎண்ணிலும் இவர்களின் பாகத்திலும் எவ்வகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். அப்படி பார்த்ததில் பத்னிகளின் தலைஎண்ணாகிய 4-ஆம் இவர்களின் பாகமாகிய 3-ஆம் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதென்று தெரியவந்தது ஆகையால் ஷெ தலைஎண்ணாகிய 4-நாலை மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதி வைக்கவேண்டும். பின்னும் இவ்விதமாகவே புத்திரிகளின் தலைஎண்களிலும் இவர்களின் பாகத்திலும், பார்த்ததில் புத்திரிகளின் தலைஎண் 18-ம் இவர்களின் பாகங்கள் 16-ம் இருக்கிறபடியால் இது 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது ஆகையால் ஷெ தலைஎண்ணாகிய 18-பதி

ணெட்டை விப்கு என்ற பேர்பாதி செய்யப்பட்டது அதாவது 9 இந்த ஒன்பதையும் மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதிவைக்கவேண்டும். பின்னும் இவ்விதமாகவே பாட்டிகளின் தலை எண்களிலும் இவர்களின் பாகங்களிலும் பார்த்ததில் பாட்டிகளின் தலை எண் 15-ம் இவர்களின் பாகங்கள் 4-ம் இருக்கிறபடியால் இது 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது ஆகையால் ஷை தலை எண்ணாகிய 15 பதினைந்தையும் மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதிவைக்கவேண்டும். இப்படி எழுதிவைத்த எண்கள் எவையென்றால் 15, 9, 4, இந்த நிலைஎண்களின் விப்குகளில் எவ்வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும் இப்படிபார்த்ததில் 15-லும் 9-லும் ⅓ ஒன்றுள்ள விப்கு இருக்கிறதாக தெரியவந்தது அதாவது 15 பதினைந்தை 3-ஆல் வகுத்தால் இதின் விப்கு என்ற பேருபணம் 5 வருகிறது இப்படியே 9 ஒன்பதை 3-ஆல் வகுத்தால் இதின்விப்கு என்ற பேருப்பணம் 3 வருகிறது, ஆகையால் தலை எண்ணாகிய 15-ன் விப்கும் 5-ஆக யிருக்கிறது. இந்த ஐந்தை அமானத்தாக வைக்கப்பட்ட 9-இல் பெருக்கவேண்டும். 9×5=45. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 45-ஐயும், அமானத்தாக வைக்கப்பட்ட 4-ஐயும் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இதில் தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் ஷை பெருக்கின தொகையாகிய 45 நாற்பத்தைந்தை ஷை 4-ஆல் பெருக்கவேண்டும். 45×4=180. இப்படி பெருக்கிவந்த மொத்தத்தொகை 180 ஆக இருக்கிறது. இதை மஸ்அலாவின் எண்ணாகிய 24-ல் பெருக்கவேண்டும். 180×24=4320. இப்படி பெருக்கிவந்த தொகையானது 4320ஆக இருக்கிறது. இதுதான் தஸ்ஹீஹிய மஸ்அலாவாயிருக்கிறது. இதை பத்னியின் 8ஆல் வகுத்து இதினால் வந்த தொகையாகிய 540 ஐநூற்றி நாற்பதை 4 பத்னிகளுக்கு கொடுக்கவேண்டும். பின்னும் 4320 நாலாயிரத்தி முன்னூற்றி இருபதை 3-ல் 2ஆல் வகுத்து இதினால் வந்த தொகையாகிய 2880 இரண்டாயிரத்தி எண்ணூற்றி எண்பதை 18 புத்திரிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். பின்னும் ஷை தஸ்ஹீஹிய மஸ்அலாவின் தொகையை பாட்டிகளின் 6 ஆல்வகுத்து அதினால் வந்த தொகையாகிய 720 எழுநூற்றி இருபதை 15 பாட்டிகளுக்கு கொடுக்கவேண்டும். பின்னும் ஷை தஸ்ஹீஹிய மஸ்அலாவின் தொகையை பிதாவின் 6ஆல் வகுத்து இதினால்வந்த தொகையாகிய 720எழுநூற்றி இருபதை பிதாவுக்கு கொடுக்கவேண்டும்.

அறிக்கை.

4 வகைகளாகிய தமாசுல், ததாகுல், தவாபுகு, தபாயுன் இவை
களில் சிலவேளை தமாசுல் மாத்திரம் வரும்எப்படியென்றால் } 2-2 பின்னும்சிலவேளை தமாசுலும் ததாகு
லும்சேர்ந்துவரும் எப்படியென்றால் 4-2-2 பின்னும்சிலவேளை தமாசுலும்தவா
புகும் சேர்ந்துவரும் ,, 6-4-4 பின்னும்சிலவேளை தமாசுலும் தபா
யுனும் சேர்ந்துவரும் ,, 5-4-4 பின்னும்சிலவேளை ததாகுலும்தபா
யுனும் சேர்ந்துவரும் ,, 5-4-2 பின்னும்சிலவேளை ததாகுலும்தவா
புகும் சேர்ந்துவரும் ,, 6-4-2 பின்னும்சிலவேளை தவாபுகும் தபா
யுனும் சேர்ந்துவரும் ,, 7-6-4

பின்னும் சிலவேளை ஷை 4வகைகளில் 3, 3-வகைகள் சேர்ந்துவரும் எப்படியென்றால் தமாசுலும், ததாகுலும், தபாயுனுமாக சேர்ந்துவரும் உதாரணம்5-4-3-2 பின்னும் சிலவேளை தமாசுலும், ததாகுலும், தவாபுகுமாக சேர்ந்துவரும் உதாரணம். 6-4-2-2 பின்னும் சிலவேளை தமாசுலும், தபாயுனும், தவாபுகுமாக சேர்ந்துவரும். உதாரணம்7-6-4-4. பின்னும்சிலவேளை ததாகுலும், தபாயுனும் தவாபுகுமாக சேர்ந்துவரும். உதாரணம். 5-6-4-2. இப்படிவரும் வகைகளில் எந்தவகையில்பல தமாசுல்கள் இருக்குமோ அப்போது அந்த தமாசுல்களிலிருந்து ஒரு தமாசுல்மாத்திரம் எடுத்துக்கொண்டு மற்ற தமாசுல்களை விட்டுவிடவேண்டும். பின்னும் எடுத்துக்கொண்ட தமாசுல்களிலும், மற்ற எண்களிலும் எந்த வகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்து மேலே விவரித்து வந்திருக்கிற காயிதாவின்படி தஸ்ஹீஹ் செய்யவேண்டும். பின்னும் பல ததாகுல்கள் இருந்தால் அப்போது ஷை ததாகுல்களில் எந்த எண் பெரிதாயிருக்குமோ அதை யெடுத்துக்கொண்டு மற்ற ததாகுல்களை விட்டுவிடவேண்டும். பின்னும் இப்படி யெடுத்துக்கொண்ட ததாகுலிலும், மற்ற எண்களிலும் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படிப் பார்த்து மேலே விவரித்து வாயிருக்கிற காயிதாவின்படி அமல் செய்யவேண்டும். பின்னும் தமாசுலும், ததாகுலுமாக சேர்ந்துவந்தால் அப்போது தமாசுல்களிலிருந்து ஒரு எண்ணையும் ததாகுல்களில் எந்தஎண் பெரிதாயிருக்

ருமோ அதையும் யெடுத்துக்கொண்டு இவைகளிலும் மற்ற எண்களிலும் எந்தவகை இருக்கிறதென்று யோசித்து காயிதாப்படி அமல் செய்யவேண்டும். பின்னும் 4,4ஆக சேர்ந்துவரமாட்டாது. அதாவது ஷை 4-வகைகளும் சேர்ந்துவரமாட்டாது.

18-வது கண்டம்.

இறந்தவனுடைய வாரிசுகளின் தாயபாகம் பிரிக்கும் மகரஜூகளின் பயானும், மஸ்அலாக்களின் பயானும்.

எச்சரிக்கை.

சைது என்பவன் மரணமடையும்போது தன் சகோதரிக்கு தன் சொத்தில் ஒன்றும் கிடைக்கக்கூடாதென்றும் தன் சகோதரனுக்கு கிடைக்கவேணுமென்றும் விரும்புகிறான். இப்படி விரும்பினபோதிலும் சைதுடைய மரணத்துக்குப்பின் அவனுடைய சகோதரிக்கு பாகம் கிடைக்கும். ஒருவேளை இப்படிக்கு விரும்பாமல் சகோதரிக்கு கிடைக்கக்கூடாதென்ற எண்ணத்தோடு தன் சகோதரனுக்கு தன் ஜீவகாலத்தில் தான் சிஹத்தாயிருக்கும்போது எல்லா சொத்தையும் ஹிபத்தாக, அதாவது தானமாக கொடுத்துவிடக்கூடும். இவ்விஷயத்தில் சகோதரி மஹ்ரூமாய் போய்விடுகிறாள். ஏனெனில் சைதுடைய மரணத்துக்குப்பின் பங்கிட்டுக்கொள்ள சொத்து இருந்திருக்கவேயில்லை. பின்னும் அகாரணமாய் ஷரியத்துக்கு விரோதமாக இவ்விதமாய் செய்தால் பாவியாவான்.

பின்னும் ஒரு தகப்பன் தன்னுடைய ஜீவகாலத்தில் தான் சிஹத்தாயிருக்கும்போது தன்னுடைய பல புத்திரர்களில், அல்லது புத்திரிகளில் எவனுக்காவது ஒருவனுக்கு, அல்லது ஒருவளுக்கு தன் சொத்தில் ஏதேனும் ஹிபத்தாக கொடுத்துவிட்டால் அது சஹியாக இருக்கும், அதாவது அது செல்லும். பின்னும் மற்ற சொத்தை ஷை தகப்பனுடைய மரணத்துக்குப்பின் ஷருப்படி பங்கிட்டுக்கொள்ளும்போது ஹிபத்து மூலமாய் சில சொத்து முன் பெற்றுக்கொண்ட புத்திரன், அல்லது புத்திரிக்கு பாகம் கிடைப்பதில் யாதொரு தடையில்லை, பாகம் கிடைக்கும். தன் சகோதரர்களுக்கு சரியாய் ஷருப்படி பூறுபாகம் பெற்றுக்கொள்வான், அல்லது பெற்றுக்கொள்வாள். பின்னும் ஷை தகப்பன் இப்படிப்பட்ட ஹிபத்து செய்த செயலானது ஷருப்படி மக்ரூஹே தஹ்ரீமாவாயிருக்கிறது. பின்னும் சைதானவன் தன் ஜீவகாலத்தில் தான் சிஹத்தாயிருக்கும்போது தன்னுடைய எல்லா சொத்தையும் புத்திரனுக்காவது, மற்ற வாரிசுக்காவது ஹிபத்து செய்து அவன் அனுபோகத்தில் கொடுத்துவிடக்கூடும். இது ஜாயசாயிருக்கும். ஆனால் மற்ற வாரிசுகள் மஹ்ரூமாய் போய்விடுகிறபடியால் இந்த செயல் வெகு மக்ரூஹ்வான செயலாயிருக்கிறது. பின்னும் எவன் ஒருவன் தன் வாரிசுகளுக்கு மஹ்ரூம் செய்துவிடுவானோ அப்பேர்ப்பட்டவனுடைய ஜன்னத்தில் இருக்கும் ஹக்கை, அல்லாஹுத் தஆலா அறுத்து விடுவான் என்று ஹசரத்து ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானதாக இப்னே மாஜாவும் பைஹகியும் ரிவாயத்து செய்கிறார்கள். மீருசல் முஸ்லிமீன் 11-பக்கம்.

பின்னும் சைதுடைய 3 புத்திரர்களில் 2பேர் பாசிக்காயும், ஒருவன் சாலிஹாவாயும் இருந்தால் அப்போது சைது சாலிஹாவாயிருக்கும் புத்திரனுக்கு தன் ஜீவகாலத்தில் ஏதேனும் கொடுப்பது மக்ரூஹ்வாகாது.

பின்னும் சைதுடைய புத்திரர்களில் ஒருவன் அதிக ஏழையாயும், அதிக பிள்ளை குட்டிக்காரனாயும் மற்ற புத்திரர்கள் பணக்காரர்களாயும், ஐசுவரியமுள்ளவர்களாயும் இருக்கும் பக்ஷத்தில் ஷை ஏழையாயிருக்கிறவனுக்கு தன் ஜீவகாலத்தில் ஏதேனும் கொடுத்துவிட்டால் அப்போது அச்செயல் மக்ரூஹ்வாகாது.

பின்னும் தன்னுடைய புத்திரர்கள் அநியாயக்காரர்களாயும் கொடுமைக்காரர்களாயும் இருக்கிறபடியால் தன் பெண்சாதிக்கு ஒன்றும் கொடுக்கமாட்டார்கள் என்று எண்ணும் பக்ஷத்தில் தன் பெண்சாதிக்கு தன் ஜீவகாலத்தில் ஏதேனும் கொடுத்தால் அப்போது அவனுடைய அச்செயல் மக்ரூஹ்வாகாது.

எச்சரிக்கை.

ஒருவன் தன் ஸ்திரீக்கு தல்லாக்கோஷீ கொடுத்து அவள் இத்தத்தில் இருக்கும்போது புருஷன் இறந்துபோவானாகில் அப்போது புருஷன் சொத்தில் ஸ்திரீக்கு ஷருப்படி பாகம் கிடைக்கும்.

எச்சரிக்கை.

எல்லா புருலு அதாவது பங்குகள் 6 இருக்கின்றன. அவையெதென்றால் $\frac{1}{2}$.பின்னும் $\frac{1}{4}$.பின்னும் $\frac{1}{8}$.பின்னும் $\frac{1}{3}$.பின்னும் $\frac{1}{6}$.பின்னும் 3-ல்2 இவைகள்தான். பின்னும் $\frac{1}{2}$-ன் பாதி $\frac{1}{4}$ ஆகவும், $\frac{1}{4}$-ன் பாதி $\frac{1}{8}$ ஆகவும், இருக்கின்றன. பின்னும் 3-ல் 2-ன் பாதி $\frac{1}{3}$ ஆகவும், 3-ல் 1-ன் பாதி $\frac{1}{6}$ ஆகவும் இருக்கின்றன. பின்னும் மொத்த ஜவில்புருது என்ற பாகஸ்தர்கள் 12 பேர்களாக இருக்கிறார்கள். இவர்களில் புருஷாள் 4 பேர்களாக யிருக்கிறார்கள். 1-வது பிதா 2-வது கிரமமான பாட்டன் என்ற பிதாமகன், அதாவது பிதாவின் பிதா. பின்னும் பிரப்பிதாமகன், அதாவது பிதாவின் பிதாவின் பிதா. பின்னும் பிரப்பிரப்பிதாமகன், அதாவது பிதாவின் பிதாவின் பிதாவின் பிதா. இவ்விதமாகவே மேல்மேல் போகும் பிதாக்களாம். 3-வது பின்னபிதுருகன், அதாவது ஒரே தாயாலும், 2 பிதாக்களாலும் பிறந்தவர்களுக்குள்ள இருக்கும் பந்தத்துவம். 4-வது பதி, அதாவது புருஷன். பின்னும் பெண்களில் 8 பேர்களாக இருக்கிறார்கள். 1-வது பத்னி, அதாவது பெண்சாதி, 2-வது புத்திரி, 3-வது பவுத்திரி, அதாவது புத்திரனுடைய புத்திரி, 4-வது சகோதரி, அதாவது ஒரே தகப்பனாலும், ஒரே தாயாலும் பிறந்தவர்கள் 5-வது பின்னேதரி, அதாவது ஒரே தகப்பனாலும், 2 தாய்களாலும் பிறந்தவர்கள், 6-வது பின்னபிதுருகை, அதாவது ஒரே தாயாலும், 2 பிதாக்களாலும் பிறந்தவர்கள், 7-வது மாதா, அதாவது தாய், 8-வது பிதாமகி, மாதாமகி என்ற பாட்டிகள்.

எச்சரிக்கை.

இந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் வாரிசுகளின் உறமுறைகளெல்லாம் இறந்தவனுடைய வாரிசுகளின் உறமுறைகளாகவே இறக்கின்றன. பின்னும் அந்த முறைகள் இறந்தவனுக்கே சம்மந்தப்பட்டவைகளாயிருக்கின்றன. பின்னும் இந்த வாரிசுகள் இறந்தவனுடைய வாரிசுகளாகவே இருக்கிறார்கள். எப்படியென்றால், பிதாவென்று சொல்லும்போது இறந்தவனுடைய பிதா என்றும், மாதா என்று சொல்லும்போது இறந்தவனுடையமாதா என்றும் புத்திரி என்று சொல்லும்போது இறந்தவனுடைய புத்திரி என்றும் இவ்விதமாகவே அர்த்தம் செய்யவேண்டும்.

எச்சரிக்கை.

பங்குக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய பாகங்கள் மொத்த சொத்தில் கொடுக்கவேண்டும். எப்படியென்றால் பிதாவுக்கு $\frac{1}{6}$ என்றால் மொத்த சொத்தில் $\frac{1}{6}$. பின்னும் புத்திரிக்கு $\frac{1}{2}$ என்றால் மொத்த சொத்தில் $\frac{1}{2}$. பின்னும் சகோதரிக்கு $\frac{1}{2}$ என்றால் மொத்த சொத்தில் $\frac{1}{2}$, இவ்விதமாக கொடுக்கவேணும். ஆனால் சிலவேளைகளில் மாதாவுக்கு மீதசொத்தில் $\frac{1}{3}$ உண்டு.

எச்சரிக்கை.

இறந்தவனுக்கு பங்குக்காரர்களாவது, மிகுதிக்காரர்களாவது இல்லாதிருந்து பதி, அல்லது பத்னி மாத்திரமிருந்தால் அப்போது பதி, அல்லது பத்னிக்கு கொடுக்கவேண்டிய பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கும் பாகம் தாயபக்அக்கு சேரும்.

எச்சரிக்கை.

மக்ரஜு எதற்கு சொல்லப்படுகிறதென்றால் மஸ்அலாவின் மூலம் எதனால் எற்படுகின்றதோ அதற்கு மக்ரஜுஎன்றுபேர்.

எச்சரிக்கை.

ஹாஜ்பே நுக்ஸானுடைய பயான்.

தன் சொந்த பாகங்களில் சேதமடைகிறவர்கள் 5 பேர்களாக இருக்கிறார்கள். 1-வது பதி, இவனுடைய பாகம் $\frac{1}{2}$ இறந்தவனுக்கு சந்ததியிருந்தால் அப்போது இவன் பாகம்குறைந்துபோகும் அதாவது $\frac{1}{4}$ அவனுக்கு கிடைக்கும். 2-வது பத்னி இவள் பாகம் $\frac{1}{4}$ இறந்தவனுக்கு சந்ததியிருந்தால் அப்போது இவள் பாகம் குறைந்துபோகும். அதாவது $\frac{1}{8}$ இவளுக்கு கிடைக்கும். 3-வது மாதா இவளுடைய பாகம் $\frac{1}{3}$ இறந்தவனுக்கு சந்ததியிருந்தால் அப்போது இவள் பாகம் குறைந்துபோகும். அதாவது $\frac{1}{6}$ இவளுக்கு கிடைக்கும். 4-வது பவுத்திரி இவளுடைய பாகம் $\frac{1}{2}$ இறந்தவனுக்கு புத்திரியிருந்தால் அப்போது இவள் பாகம் குறைந்துபோகும். அதாவது $\frac{1}{6}$ இவளுக்கு கிடைக்கும். 5-வது பின்னேதரி இவளுடைய பாகம் $\frac{1}{2}$ இறந்தவனுக்கு சகோதரியிருந்தால் அப்போது இவள் பாகம் குறைந்துபோகும். அதாவது $\frac{1}{6}$

இவனுக்கு கிடைக்கும். இப்படிக்கு ஒரு வாரிசு வருவதினல் மற்ற வாரிசுடைய அசல் பாகத்தில் குறைவு நேரிட்டால் இதற்கு ஹாஜ்பெநுக்சான் என்று பேர்.

எச்சரிக்கை.

தன்சொத்துபாகங்களை இழந்து போகாதவர்கள் 6-பேர்களாக இருக்கிறார்கள். 1-வது புத்திரன், 2-வது புத்திரி, 3-வது பதி. 4-வது பத்னி, 5-வது பிதா, 6-வது மாதா.

எச்சரிக்கை.

ஹாஜ்பே ஹிர்மானுடைய பயான்:

சொத்த பாகங்கள் இழந்து போகப்பட்டவர்கள். இவர்கள் யாரென்றால் 1-வது புத்திரன் இருக்க பவுத்திரனும், 2-வது பிதா இருக்க பிதாமகனும், 3-வது பிதா இருக்க சகோதரர்களும், சகோதரிகளும், பின்னும் இவ்விதமாகவே அநேகர்கள் இருக்கிறார்கள். பின்னும் ஒரு வாரிசு வருவதினல் மற்ற வாரிசுக்கு பாகம் கிடையாமலே போனல் அதற்கு ஹாஜ்பேஹிர்மானென்று பேர். இப்புத்தகத்தின் 4-வது கண்டத்தை பார்க்க.

எச்சரிக்கை.

எவன் ஒருவன் ஹறாமில் பிறந்திருக்கிறானே அவனுக்கு அவன் பிதாவின் சொத்தில் பாகம் கிடையாது, ஆனல் தாய் சொத்தில் பாகம்கிடைக்கும்.

½ பாகம் பெற்றுக்கொள்ளத் தக்கவர்கள்.			¼ பாகம் பெற்றுக்கொள்ளத் தக்கவர்கள்.		
நெ.	பேர்.	ஷர்த்துகள்.	நெ.	பேர்.	ஷர்த்துகள்.
1	சகோதரி	ஏக சகோதரி இருந்தால்	1	பதி	இறந்தவளுக்குபிள்ளையிருந்தால்
2	பின்சோதரி	ஏகபின்சோதரி இருந்தால்	2	பத்னி	இறந்தவனுக்கு சந்ததி இல்லாதிருந்தால்
3	பதி	இறந்தவளுக்கு பிள்ளை இல்லாதிருந்தால்			
4	புத்திரி	இவளுக்கு சகோதரன் இல்லாதிருந்து ஒண்டியாயிருந்தால்			
5	பவுத்திரி	ஷை			

⅛ பாகம் பெற்றுக்கொள்ளத்தக்கவர்கள்.			3-ல் 2 பாகம் பெற்றுக் கொள்ளத்தக்கவர்கள்.		
நெ.	பேர்.	ஷர்த்துகள்.	நெ.	பேர்.	ஷர்த்துகள்.
1	பத்னி	இறந்தவனுக்கு சந்ததி இருந்தால்	1	புத்திரிகள்	பலபுத்திரிகளானல்
			2	பவுத்திரிகள்	பலபவுத்திரிகளானல்
			3	சகோதரிகள்	பலசகோதரிகளானல்
			4	பின்சோதரிகள்	பல பின்சோதரிகளானல்.

⅓ பாகம் பெற்றுக்கொள்ளத் தக்கவர்கள்.			⅙ பாகம் பெற்றுக்கொள்ளத்தக்கவர்கள்.		
நெ.	பேர்.	ஷர்த்துகள்.	நெ.	பேர்.	ஷர்த்துகள்.
1	மாதா	புத்திரன் பவுத்திரன் 2-சகோதரன் 2சகோதரி இல்லாதபோது.	1	மாதா	புத்திரன், புத்திரி, வகைரா இருக்கும்போது
2	புத்திரி	புத்திரன் இருக்கும்போது மிகுதியில்	2	பிதாமகி	இறந்தவனுக்கு தாயில்லாதபோது
3	சகோதரி	சகோதரன் இருக்கும்போது மிகுதியில்	3	மாதாமகி	ஷை.
4	பின்சோதரி	பின்சோதரன் இருக்கும்போது மிகுதியில்	4	பின்னபிதுருகன்	இப்புத்தகத்தின் 224-வது பக்கத்தில்பின்ன பிதுருகன் சங்கதி பார்க்க.
5	பின்னபிதுருகிகள்	பல பின்னபிதுருகிகள் இருந்தால்	5	பிதா	இறந்தவனுக்கு சந்ததியிருந்தபோது
			6	பிதாமகன்	ஷை.
			7	பின்சோதரி	இறந்தவனுக்கு ஏகசகோதரியிருந்தால்

மஹ்றூமாகத் தக்கவர்கள்.			வாரிசிலிருந்து நீங்கி போகதகாதவர்கள்.		
நெ.	பேர்.	ஷர்த்துகள்.	நெ.	பேர்.	ஷர்த்துகள்.
1	அடிமை	... ...	1	பதி	
2	முதபிர்	எஜமானன்தன் மரணத்தின் பேரில் அடிமையின் விடுதலையை தீர்மானித்திருக்கவேண்டும்.	2	பத்னி	
			3	பிதா	

நெ.	பேர்.	ஷர்த்துகள்.	நெ.	பேர்.	ஷர்த்துகள்.
3	மகாதிபு	அடிமையின் விடுதலை அவன் பணம் கொடுத்து விடுவதின்பேரில் எஜமான் தீர்மானித்திருக்கவேண்டும்.	4	மாதா	
			5	புத்திரன்	
4	உம்மேவலது	தன் எஜமானல் பிள்ளை பெற்றஅடிமைபெண்ணவளுக்கு சொல்லப்படும்.	6	புத்திரி	
5	கொலைசெய்தவன்	... ...			
6	முர்தித்து	இஸ்லாமை விட்டு திரும்பினவன்.			
7	அஹ்லுல்மில்லத்தைன்.	இரு ஜாதியார் அதாவது ஸ்லாம்காபிருடையவும், காபிர், ஸ்லாமுடையவும், வாரிசாகமாட்டான்.			

* * *

வாரிசுகளின் சொந்த பாகங்கள் இன்னதென்றும் மற்றவாரிசுகளுடன் சேர்ந்துவந்தால் அப்போது அவர்களுக்கு கிடைக்கும் பாகங்கள் இன்னதென்றுமுள்ள பயான்.

(*)

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினல்.	மாறிப்போகும் பாகம்	[illegible]
1	பிதா	$\frac{1}{6}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், இருந்தால்	$\frac{1}{6}$	
2	ஷை	$\frac{1}{6}$	புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி இருந்தால் ...	$\frac{1}{6}$-ம் மிகுதியும்.	
3	ஷை	$\frac{1}{6}$	புத்திரி, புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பவுத்திரி, பிரபவுத்திரி இல்லாமற்போனல் ...	மிகுதி	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினல்.	மாறிப்போகும் பாகம்.	[illegible]
4	பிதா மகன்	$\frac{1}{6}$	பிதா இல்லாமற்போனல ...	$\frac{1}{6}$	
5	ஷை	$\frac{1}{6}$	பிதாமகன் இருந்தால் ...	மஹ்றூம்	
6	ஷை	$\frac{1}{6}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், இருந்தால்	$\frac{1}{6}$	
7	ஷை	$\frac{1}{6}$	புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி, இருந்தால ...	$\frac{1}{6}$-ம் மிகுதியும்.	
8	ஷை	$\frac{1}{6}$	புத்திரி, புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி இல்லாமற்போனல்	மிகுதி	
9	ஷை	$\frac{1}{6}$	சகோதரன், சகோதரி, பின்னோதரன், பின்னோதரி இருந்தால் ...	கூட்டு	
10	மாதா	$\frac{1}{3}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி, பல சகோதரர்கள், பலசகோதரிகள், பலபின்னோதரர்கள், பலபின்னோதரிகள், பல பின்னாபிதுருகாள் இருந்தாலும் சகோதரனும், சகோதரியும், சகோதரனும், பின்னோதரனும், சகோதரனும், பின்னோதரியும், சகோதரனும், பின்னாபிதுருகனும், சகோதரியும், பின்னோதரனும், சகோதரியும், பின்னோதரியும், சகோதரியும், பின்னாபிதுருகியும், பின்னோதரனும், பின்னோதரியும், பின்னோதரனும், பின்னாபிதுருகனும், பின்னோதரியும், பின்னாபிதுருகனும் இருந்தாலும்.	$\frac{1}{6}$	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.
11	ஷை	$\frac{1}{3}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி இல்லாமல் இருந்தால்...	மொத்தத்தில் $\frac{1}{3}$
12	ஷை	$\frac{1}{3}$	1சகோதரன், 1சகோதரி, 1பின்னோதரன், 1பின்னோதரி, 1பின்னரிதுருகள் இருந்தால் ...	ஷை
13	ஷை	$\frac{1}{3}$	பிதா, பதி, பத்னிஇருந்தால்...	மிகுதியில் $\frac{1}{3}$
14	மாதாமகி	$\frac{1}{6}$	மாதா இருந்தாலும், சமீப மாதாமகி இருந்தாலும் ...	மற்றும்
15	ஷை	$\frac{1}{6}$	பல மாதாமகி யிருந்தால் ...	கூட்டு
16	ஷை	$\frac{1}{6}$	மற்ற எல்லாவிதவாரிசுகள் இருந்தபோதிலும். ...	$\frac{1}{6}$
17	பிதாமகி	$\frac{1}{6}$	பிதா, அல்லது மாதா இருந்தாலும், சமீப மாதாமகிகள் இருந்தாலும்.	மற்றும்
18	ஷை	$\frac{1}{6}$	பல பிதாமகிகள் இருந்தால் ...	கூட்டு
19	ஷை	$\frac{1}{6}$	மற்ற எவ்வித வாரிசுகள் இருந்தபோதிலும்.	$\frac{1}{6}$
20	புத்திரன்	மிகுதி	எவ்விதவாரிசுஇருந்தபோதிலும்	மிகுதி
21	ஷை	மிகுதி	பல புத்திரர்கள் இருந்தால் ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்
22	ஷை	மிகுதி	புத்திரர்களும், புத்திரிகளுமிருந்தால்.	மிகுதியில் 3-ல் 2.
23	புத்திரி	$\frac{1}{2}$	புத்திரன் இருந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது $\frac{1}{3}$
24	ஷை	$\frac{1}{2}$	பலபுத்திரிகள் இருந்தால் ...	மொத்தத்தில் 3ல் 2ல் சமபாகம்
25	ஷை	$\frac{1}{2}$	புத்திரன், புத்திரிகள் இல்லாமல் ஏகபுத்திரி இருந்தால் ...	$\frac{1}{2}$

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.
26	பவுத்திரன்	மிகுதி	புத்திரன் இல்லாதிருந்தால். ...	மிகுதி
27	ஷை	மிகுதி	புத்திரன் இருந்தால். ...	மற்றும்
28	ஷை	மிகுதி	பல பவுத்திரர்கள் இருந்தால்...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்
29	ஷை	மிகுதி	பவுத்திரனும், பவுத்திரியும் இருந்தால்.	மிகுதியில் 3-ல் 2
30	பவுத்திரி	$\frac{1}{2}$	புத்திரனும், பவுத்திரனும், இல்லாதிருந்து ஏகபவுத்திரி இருந்தால்.	மொத்தத்தில் $\frac{1}{2}$
31	ஷை	$\frac{1}{2}$	பவுத்திரன் இருந்தால் சிலவேளை பிரபவுத்திரன் இருந்தால். ...	மிகுதியில் $\frac{1}{3}$
32	ஷை	$\frac{1}{2}$	பலபவுத்திரிகள் இருந்தால். ...	மொத்தத்தில் 3-ல்2ல்சமபாகம்
33	ஷை	$\frac{1}{2}$	ஒரு புத்திரி இருந்தால். ...	மொத்தத்தில் $\frac{1}{6}$
34	ஷை	$\frac{1}{2}$	2 அல்லது பலபுத்திரிகளாவது, புத்திரனாவது இருந்தால். ...	மற்றும்
35	பிரபவுத்திரன்	மிகுதி	புத்திரனாவது, பவுத்திரனாவது, இல்லாதிருந்தால். ...	மிகுதி
36	ஷை	மிகுதி	புத்திரனாவது, பவுத்திரனாவது, இருந்தால்.	மற்றும்
37	ஷை	மிகுதி	பலபிரபவுத்திரர்கள் இருந்தால்.	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்.
38	ஷை	மிகுதி	பிரபவுத்திரனும், பிரபவுத்திரியும் இருந்தால், சிலவேளை பவுத்திரி யிருந்தால்.	மிகுதியில் 3-ல் 2

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.
39	பிரபவுத்திரி	½	புத்திரியாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பவுத்திரியாவது பிரபவுத்திரனாவது இல்லாதிருந்து ஏகபிரபவுத்திரி யிருந்தால். ...	மொத்தத்தில் ½
40	ஷை	½	பிரபவுத்திரன இருந்தால். ...	மிகுதியில் ⅓
41	ஷை	½	பல பிரபவுத்திரிகள் இருந்தால்.	மொத்தத்தில் 3-ல் 2ல் சமபாகம்.
42	ஷை	½	ஒரு புத்திரியாவது, அல்லது ஒரு பவுத்திரியாவது யிருந்தால் அப்போது ஏக பிரபவுத்திரிக்கு.	மொத்தத்தில் ⅙
43	ஷை	½	2 புத்திரிகளாவது, அல்லது 2 பிரபவுத்திரிகளாவது, அல்லது ஒரு புத்திரியும் ஒரு பவுத்திரியுமாவது, அல்லது புத்திரனாவது, அல்லது பவுத்திரனாவது இருந்தால். ...	மஹ்ரூம்
44	சகோதரன்	மிகுதி	பிதாவாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது இருந்தால் ...	மஹ்ரூம்
45	ஷை	மிகுதி	இவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதி முழுமை
46	ஷை	மிகுதி	பல சகோதரர்கள் வந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்.
47	ஷை	மிகுதி	சகோதரர்களும், சகோதரிகளும் வந்தால. ...	மிகுதியில் 3-ல் 2
48	ஷை	மிகுதி	பிதாமகன் வந்தால். ...	கூட்டில் ½

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.
49	சகோதரி	½	பிதாவாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சில சந்தர்ப்பங்களில் சகோதரனாவது இருந்தால். ...	மஹ்ரூம்
50	ஷை	½	புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி இவர்களில் ஒன்றுக்கு மேல் பலர்களும், பின்னும் மேலே கண்டவர்களும் இல்லாதிருந்து ஏகசகோதரி யிருந்தால். ...	½
51	ஷை	½	பலசகோதரிகளிருந்தால். ...	மொத்தத்தில் 3-ல் 2ல் சமபாகம்.
52	ஷை	½	சகோதரர்களும், சகோதரிகளும் சேர்ந்திருந்தால். ...	மிகுதியில் ⅓
53	ஷை	½	பிதாமகன் இருந்தால். ...	கூட்டில் ½
54	ஷை	½	புத்திரி, அல்லது பவுத்திரி, அல்லது பிரபவுத்திரி இவர்களில் ஒருத்தி, அல்லது பலர்களிருந்தால்.	மிகுதிக்காரி.
55	பின்னோதரன்	மிகுதி	பிதாவாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, சகோதரனாவது இருந்தால்.	மஹ்ரூம்
56	ஷை	மிகுதி	இவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுழுமை
57	ஷை	மிகுதி	பின்னோதரர்கள் பலர்கள் இருந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்.
58	ஷை	மிகுதி	பின்னோதரர்களும், பின்னோதரிகளும் இருந்தால். ...	மிகுதியில் 3-ல் 2
59	ஷை	மிகுதி	பிதாமகன் வந்தால். ...	கூட்டில் ½

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.	[illegible]
60	பின்னோதரி	½	பிதாவாவது, புத்திரனாவது, பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது, பிரபிரபவுத்திரனாவது, சில சந்தர்ப்பங்களில் பின்னோதரனாவது வந்தால்.	மஹ்றூம்	
61	ஷை	½	புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பின்னோதரி இவர்களில்யாராவது ஒன்றுக்குமேல் பலர்களும், பின்னும் பின்னோதாரும் சகோதரியும் மேற்கண்டவர்களும் இல்லாதிருந்து பின்னோதரி யிருந்தால்	½	
62	ஷை	½	பல பின்னோதரிகள் இருந்தால்.	மொத்தத்தில் 3-ல் 2ல்சம பாகம்.	
63	ஷை	½	பின்னோதார்களும், பின்னோதரிகளும் இருந்தால். ...	மிகுதியில் ⅓	
64	ஷை	½	பிதாமகன் இருந்தால். ...	கூட்டில் ⅓	
65	ஷை	½	புத்திரி, அல்லது பவுத்திரி, அல்லது பிரபவுத்திரி இவர்களில் ஒருத்தி, அல்லது பலர்கள் இருந்தால்.	மிகுதி	
66	பின்ன பிதுருகன்	⅙	பிதா, பிதாமகன, புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன். புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி இருந்தால். ...	மஹ்றூம்	
67	ஷை	⅙	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்தால் அப்போது ஏகபின்னபிதுருகன், அல்லது ஏகபின்னபிதுருகிக்கு.	மொத்த சொத்தில் ⅙	
68	ஷை	⅙	பலபின்னபிதுருகளாவது, பல பின்ன பிதுருகிகளாவது இருந்தால்.	மொத்த சொத்தில் ⅓	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.	[illegible]
69	சகோதரன் மகன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன் இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும் இருந்தாலும், பின்னும், பவுத்திரியும், சகோதரியும் வந்தாலும், பின்னும பிரபவுத்திரியும், சகோதரியும் வந்தாலும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும் வந்தாலும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும் வந்தாலும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும்வந்தாலும்.	மஹ்றூம்	
70	ஷை	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து இவன் ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுழுமையும்	
71	ஷை	மிகுதி	சகோதர ஆண்மக்கள்கள் பலர் இருந்தால்.	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	
72	பின்னோதரன் மகன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன் இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும், பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும், பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும். ...	மஹ்றூம்	
73	ஷை	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுழுமையும்	
74	ஷை	மிகுதி	பின்னோதர ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால. ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்.	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.	நீ
75	சிற்றப்பன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன் இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும், பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும். ...	மற்றும்	
76	ஷை.	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுறைமையும்	
77	ஷை.	மிகுதி	சிற்றப்பமார்கள் பலர்களாயிருந்தால்.	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	
78	பின்னோதர சிற்றப்பன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன் இருந்தாலும், பின்னும் புத்திரியும்; சகோதரியும், பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும். ...	மற்றும்	
79	ஷை.	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுறைமையும்	
80	ஷை.	மிகுதி	பின்னோதர சிற்றப்பமார்கள் பலர்களாயிருந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாறிப் போகும் பாகம்.	நீ
81	சிற்றப்பன் மகன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன், பின்னோதர சிற்றப்பன் இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும். பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும். ...	மற்றும்	
82	ஷை.	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து சிற்றப்பன்மகன் ஏகனாயிருந்தால்.	மிகுதிமுறைமையும்	
83	ஷை.	மிகுதி	சிற்றப்பன் ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால்.	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	
84	பின்னோதரசிற்றப்பன் மகன்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன். பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன், பின்னோதரசிற்றப்பன். சிற்றப்பன்மகன், இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும், பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பின்னும் பவுத்திரியும், பின்னோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும்.	மற்றும்	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாரிப் போகும் பாகம்.	தீ
85	ஷை	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால். ...	மிகுதிமுழுமையும்	
86	ஷை	மிகுதி	பின்னோதர சிற்றப்ப ஆண்மக்கள்கள் பலர்களாயிருந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	
87	எஜமான்	மிகுதி	பிதா, பிதாமகன், புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், சகோதரன், பின்னோதரன், சகோதரன்மகன், பின்னோதரன்மகன், சிற்றப்பன், பின்னோதரசிற்றப்பன், சிறறப்பன்மகன், பின்னோதரசிற்றப்பன்மகன் இருந்தாலும், பின்னும் புத்திரியும், சகோதரியும், பின்னும் பவுத்திரியும், சகோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், சகோதரியும், பின்னும் புத்திரியும், பின்னோதரியும், பவுத்திரியும், பின்னோதரியும், பின்னும் பிரபவுத்திரியும், பின்னோதரியும் இருந்தாலும். ...	மஹ்ரூம்	
88	ஷை	மிகுதி	மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து ஏகனாயிருந்தால், ...	மிகுதிமுழுமையும்	
89	ஷை	மிகுதி	பல எஜமான்களாவது, பல எஜமானிச்சிகளாவது இருந்தால். ...	மிகுதியில் கூட்டு அதாவது சமபாகம்	
90	ஷை.	மிகுதி	அடிமை அரைக்குறைவாக மீட்டப்பட்டால் எஜமானனுக்கு ...	அரைக்குறைபாகம்	
91	ஷை	மிகுதி	மாதா, மாதாமகி, பிதாமகி. புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, சகோதரி, பின்னோதரி, பின்னபிதாருகன் இருந்தால். ...	மிகுதி	

நெ.	பேர்.	அசல் பாகம்.	மற்ற வாரிசுகள் வருவதினால்.	மாரிப் போகும் பாகம்.	தீ
92	பதி	$\frac{1}{2}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன். புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி, பிரபிரபவுத்திரி, இவர்கள் இல்லாதிருந்தால்.	$\frac{1}{2}$	
93	ஷை	$\frac{1}{2}$	இவர்கள் இருந்தால். ...	$\frac{1}{4}$	
94	பத்னி	$\frac{1}{4}$	புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன், பிரபிரபவுத்திரன், புத்திரி, பவுத்திரி, பிரபவுத்திரி. பிரபிரபவுத்திரி, இவர்கள் இல்லாதிருந்தால்.	$\frac{1}{4}$	
95	ஷை.	$\frac{1}{4}$	இவர்ள் இருந்தால். ...	$\frac{1}{8}$	

மக்ரஜின் பயான்.

மக்ராஜு எதற்கு சொல்லப்படுகிறதென்றால் இதோ. ஒரு லெக்கமாயிருக்கிறது. இதனால் வாரிசுகளின் பாகங்கள் முறிப்படாமல் பூறுபூறுவாய் பாகிக்கப்பட்டு போகின்றன. அதாவது $\frac{1}{2}$, $\frac{1}{4}$. $\frac{1}{3}$-ஆக இருக்கின்றன. இதனால் பாகங்கள் முறிப்படாமல் பூறுபூறுவாய் பாகிக்கபட்டு போகின்றன. பின்னும் $\frac{1}{2}$ன் மக்ராஜு, 2-ஆகவும், $\frac{1}{4}$-ன் மகாஜு, 4-ஆகவும், $\frac{1}{8}$-ன் மகாஜு, 8-ஆகவும், 3-ல்2, $\frac{1}{3}$, இதுகளின் மக்ராஜு, 3-ஆகவும், $\frac{1}{6}$-ன் மக்ராஜு 6-ஆகவும், இருக்கின்றன. பின்னும் எல்லா பங்குகள் ஒரேஒரு வகுப்பானவைகளாயிருந்தால் அப்போது இதற்கு முதல் விதமென்று பேர். எப்படியென்றால் $\frac{1}{2}$.யும் $\frac{1}{4}$-னும் அதாவது அரையும்காலும் அல்லது $\frac{1}{4}$-னும் $\frac{1}{8}$.னும் அதாவது காலும் அரைக்காலும் இப்படி வந்தால் இதற்கு முதல்வகை என்று பேர். பின்னும் எல்லா பங்குகள் ஒரே ஒரு வகுப்பானவைகளாக இருந்தால் அப்போது இதற்கு 2-வது விதம் என்று பேர். எப்படியென்றால் 3-ல்2-ம் $\frac{1}{3}$-ம் அல்லது $\frac{1}{3}$-ம் $\frac{1}{6}$-ம் இவ்விதமாக வந்தால் இதற்கு 2-வது வகையென்று பேர். பின்னும் $\frac{1}{2}$.யினும் $\frac{1}{4}$.வினும் சிறியபாகம் எதென்றால் $\frac{1}{4}$ அதாவது 4-ஆக இருக்கிறது. பின்னும் $\frac{1}{2}$.யினும் $\frac{1}{8}$.வினும் சிறியபாகம் எதென்றால் $\frac{1}{8}$-அதாவது 8-ஆக இருக்கிறது. பின்னும் $\frac{1}{3}$ னும் $\frac{1}{6}$-

னும் சிறியபாகம் எதென்றால் $\frac{1}{6}$-அதாவது 6-ஆக இருக்கிறது. பின்னும் எல்லா மக்ரஜுகள் 7-ஆக இருக்கின்றன. அதாவது 2-3-4-6-8-12-24-இந்த ஏழைத்தவிர வேறே மக்ரஜுகள் இல்லை. இந்த 7-மக்ரஜுகளாலேயே மஸ்அலாக்கள் செய்யப்படுகின்றன. பின்னும் பாகங்களும் 6-ஆக இருக்கின்றன. அதாவது $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, 3-ல்2, $\frac{1}{3}$, $\frac{1}{6}$, இந்த 6-பாகங்களைத் தவிர வேறே பாகங்களுமில்லை. பின்னும் இந்த மக்ரஜுகளால் செய்யப்படும். மஸ்அலாக்களின் பயான.

மக்ரஜு 2-ன் உதாரணம்.

மய்யத்து ஹிந்தா, மஸ்அலா 2
பதி......சகோதரி
$\frac{1}{2}$......$\frac{1}{2}$
1 — 1

மொத்த சொத்தை 2-பாகமாக்கி பதியின் $\frac{1}{2}$-பாகத்துக்கு 1-ம் சகோதரியின் $\frac{1}{2}$-பாகத்துக்கு 1-பாக கொடுத்துவிடவேணும்.

மக்ரஜு 3-ன் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3
பிதா......மாதா
மிகுதி.....
2 — 1

மொத்த சொத்தை 3-பாகமாக்கி மாதாவின் $\frac{1}{3}$-க்கு 1பாகமும் மீதமிருக்கும், 2-பிதாவுக்குமாக கொடுத்துவிடவேணும்.

மக்ரஜு 4-ன் உதாரணம்.

மய்யத்து ரஷீதா, மஸ்அலா 4
பதி......புத்திரன
$\frac{1}{4}$.......மிகுதி
1 — 3

மொத்த சொத்தை 4-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{4}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 3-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

ஷை 6-ன் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6
மாதா.....புத்திரன்
$\frac{1}{6}$.......மிகுதி
1 — 5

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 5-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

ஷை 8-ன் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 8
பத்னி....புத்திரன
$\frac{1}{8}$.......மிகுதி
1 — 7

மொத்த சொத்தை 8-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு 1-பாகமும் மீதமிருக்கும், 7-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

ஷை 12-ன் உதாரணம்,

மய்யத்து ஹலீமா, மஸ்அலா 12
பதி...மாதா...புத்திரன்
$\frac{1}{4}$......$\frac{1}{6}$......மிகுதி
3 — 2 — 7

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு 2 பாகமும் மீதமிருக்கிற. 7-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

ஷை 24-ன் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 24
பத்னி...மாதா..புத்திரன்
$\frac{1}{8}$......$\frac{1}{6}$.....மிகுதி
3 — 4 — 17

மொத்த சொத்தை 24-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு 3-பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு 4-பாகமும் மீதமிருக்கிற. 17-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

மஸ்அலாக்களை கண்டுபிடிக்கும் விதங்கள் 6-ஆக இருக்கின்றன.

1,வது விதம்.

$\frac{1}{4}$-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 4-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 4-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சயிதா, மஸ்அலா 4
பதி......புத்திரன்
$\frac{1}{4}$.......மிகுதி
1 — 3

மொத்த சொத்தை 4-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{4}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 3-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{2}$-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 2-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 2-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து ஹலீமா, மஸ்அலா 2
பதி......சகோதரி
$\frac{1}{2}$........ $\frac{1}{2}$
1 — 1

மொத்த சொத்தை 2-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{2}$-பாகத்துக்கு 1-ம் சகோதரியின் $\frac{1}{2}$-பாகத்துக்கு 1-ம் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{8}$-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 8-ஆக இருக்கிற படியால் மஸ்அலாவும், 8-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 8
பத்னி......புத்திரன்
$\frac{1}{8}$.........மிகுதி
1 — 7

மொத்த சொத்தை 8-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 7-புத்திரனுக்கும்கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{3}$-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 3-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 3-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3
பிதா.........மாதா
மிகுதி......$\frac{1}{3}$
2 — 1

மொத்த சொத்தை 3-பாகமாக்கி மாதாவின் $\frac{1}{3}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 2-பிதாவுக்கும் கொடுத்துவிடவேணும்.

3-ல்2-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 3-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 3-ஆல செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3
புத்திரி-2...பிதாவின் சகோதரன்
3-ல் 2......மிகுதி
2 — 1

மொத்த சொத்தை 3-பாகமாக்கி புத்திரியின் 3-ல்2-பாகத்துக்கு 2-பாகமும் மீதமிருக்கும், 1-பிதாவின் சகோதரனுக்கு கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{6}$-பாகம் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 6-ஆல் செய்யவேணும். இதற்குஉதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6
மாதா......புத்திரன்
$\frac{1}{6}$.........மிகுதி
1 — 5

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 5-புத்திரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

2-வது விதம்.

$\frac{1}{2}$, $\frac{1}{4}$-அதாவது அரையும் காலும் பங்குகள் வந்தால் இதின் மக்ரஜு 4-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 4-ஆல் செய்யவேண்டும், இதற்கு உதாரணம்.

மய்யத்து ஹலீமா, மஸ்அலா 4
பதி...புத்திரி...பிதாவின் சகோதரன்
$\frac{1}{4}$......$\frac{1}{2}$........மிகுதி
1 — 2 — 1

மொத்த சொத்தை 4-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{4}$-க்கு ஒரு பாகமும் புத்திரியின் $\frac{1}{2}$-க்கு 2-பாகமும் மீதமிருக்கும். ஒன்றை பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{2}$, $\frac{1}{8}$-அதாவது. அரையும் அரைக்காலும் பங்குகள் வந்தால், இதின் மக்ரஜு 8-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 8-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 8
பத்னி...புத்திரி...பிதாவின் சகோதரன்
$\frac{1}{8}$...... $\frac{1}{2}$......மிகுதி
1 — 4 — 3

மொத்த சொத்தை 8-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-பாகத்துக்கு ஒன்றும் புத்திரியின் $\frac{1}{2}$-பாகத்துக்கு 4-உம் மீதமிருக்கும், 3-மூன்றை சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{4}$, $\frac{1}{8}$-அதாவது. காலும் அரைக்காலும், பாகங்கள் சேர்ந்து வரமாட்டாது.

$\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$-அதாவது. அரையும் காலும் அரைக்காலும், பாகங்கள் சேர்ந்து வரமாட்டாது.

3-ல்2, $\frac{1}{3}$-அதாவது. மூன்றில் இரண்டும் மூன்றில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 3-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 3-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 3, தஸ்ஹீ 6.
சகோதரிகள் 2...பின்னபிதுருகி2
3-ல் 2.......... $\frac{1}{3}$
மஸ்அலா 2 —— 1
தஸ்ஹீ 4 —— 2

மொத்தசொத்தை மக்ரஜின்படி 3-பாகமாக்கி சகோதரிகளின் 3-ல் 2-க்கு 2 பாகமும் பின்னபிதுருகிகளின் $\frac{1}{3}$-க்கு ஒருபாகமும் கொடுக்கவேணும். பின்னும் 2-பின்னபிதுருகிகளுக்கு ஒருபாகம் பாகிக்கப்படமாட்டாதாகையால் மஸ்அலாவை தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேணுமென்றால். பின்னபிதுருகிகளின் தலைகளாகிய 2 இரண்டை இந்த மஸ்அலாவின் 3-ஆல் பெருக்கினால் தஸ்ஹீ 6-வருகிறது. 2 × 3 = 6. இந்த 6 ஆறை 3-ஆல் வகுத்து பின்னபிதுருகிகள் 2-பேர்களுக்கு 2 கொடுக்கவேணும். பின்னும் இந்த 6 ஆறை 3-ல் 2-ஆல் வகுத்து சகோதரிகள் 2-பேருக்கு 4 கொடுக்கவேண்டும்.

3-ல்2, $\frac{1}{6}$-அதாவது. மூன்றில் இரண்டு ஆறில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 6-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6
சகோதரி 2...மாதா...பிதாவின் சகோதரன்
3-ல் 2...... $\frac{1}{6}$......மிகுதி
4 —— 1 — 1

மொத்த சொத்தை மக்ரஜின்படி 6-பாகங்களாக்கி சகோதரிகளின் 3-ல்2-க்கு 4-பாகங்களும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும். ஒன்றை பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{3}$, $\frac{1}{6}$-அதாவது. மூன்றில் ஒன்றும் ஆறில் ஒன்றும் பங்குகள் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 6-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6
பின்னபிதுருகிகள் 2...மாதா...பிதாவின்சகோதரன்
$\frac{1}{3}$.................$\frac{1}{6}$.................மிகுதி.
2 —— 1 —— 3.

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி பின்னபிதுருகிகளுக்கு சேரவேண்டிய $\frac{1}{3}$-க்கு 2,பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும், 3-மூன்றை பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

3-ல்2, $\frac{1}{3}$, $\frac{1}{6}$-அதாவது. மூன்றில் இரண்டும் மூன்றில் ஒன்றும் ஆறில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 6-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6 அவுல் 7

சகோதரி 2	பின்னபிறருகி 2	மாதா
3-ல் 2	$\frac{1}{3}$	$\frac{1}{6}$
4	2	1

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி சகோதரிகளின் 3-ல்2-க்கு 4-பாகங்களும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் பின்னபிறருகிகளின் $\frac{1}{3}$-க்கு 2-பாகங்களும் கொடுக்கவேணும்.

3-வது விதம்.

$\frac{1}{2}$, $\frac{1}{6}$ அதாவது அரையும் ஆறில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 6-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6

புத்திரி	மாதா	பிதாவின் சகோதரன்
$\frac{1}{2}$	$\frac{1}{6}$	மிகுதி
3	1	2

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி புத்திரியின் $\frac{1}{2}$-க்கு 3-பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கும். 2-இரண்டை பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{2}$, 3-ல்2- அதாவது. அரையும் மூன்றில் இரண்டும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 6-ஆல் செய்யவேணும். இதற்கு உதாரணம்.

மய்யத்து கரீமா, மஸ்அலா 6 அவுல் 8

பதி	சகோதரி 2	மாதா
$\frac{1}{2}$	3-ல் 2	$\frac{1}{6}$
3	4	1

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{2}$-க்கு 3-பங்குகளும் சகோதரிகளின் 3-ல் 2-க்கு 4-பங்குகளும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பங்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{2}$, 3-ல்2, $\frac{1}{3}$, $\frac{1}{6}$- அதாவது. அரையும் மூன்றில் இரண்டும் மூன்றில் ஒன்றும் ஆறில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு

6-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 6-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து ரஹீமா, மஸ்அலா 6 அவுல் 10

பதி	சகோதரி	பின்னபிறருகி 2	மாதா
$\frac{1}{2}$	3-ல் 2	$\frac{1}{3}$	$\frac{1}{6}$
3	4	2	1

மொத்த சொத்தை 6-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{2}$-க்கு 3-பாகமும் சகோதரிகளின் 3-ல்2-க்கு 4-பாகங்களும் பின்னபிறருகிகளின் $\frac{1}{3}$-க்கு 2-பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும் கொடுத்துவிடவேணும்.

4-வது விதம்.

$\frac{1}{4}$, $\frac{1}{3}$- அதாவது நாலில்ஒன்றும், மூன்றில் ஒன்றும், பாகங்கள்வந்தால் இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 12-ஆல் செய்யவேண்டும் இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 12,

பத்னி	மாதா	பிதாவின் சகோதரன்
$\frac{1}{4}$	$\frac{1}{3}$	மிகுதி
3	4	5

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகங்களும் மாதாவின் $\frac{1}{3}$-க்கு 4-பாகங்களும், மீதமிருக்கும். 5-பங்குகள் பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{4}$, $\frac{1}{3}$, $\frac{1}{6}$- அதாவது. நாலில் ஒன்றும் மூன்றில் ஒன்றும் ஆறில் ஒன்றும் பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 12-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 12

பத்னி	பின்னபிறருகிகள் 2	மாதா	பிதாவின் சகோதரன
$\frac{1}{4}$	$\frac{1}{3}$	$\frac{1}{6}$	மிகுதி
3	4	2	3

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகமும், பின்னபிறருகிகளின் $\frac{1}{3}$-க்கு 4-பாகங்களும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு

2-பாகங்களும், மீதமிருக்கும். மூன்றை பிதாவின் சகோதரனுக்கும், கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{4}$, 3-ல்2, $\frac{1}{3}$, $\frac{1}{6}$-அதாவது நாலில் ஒன்றும், மூன்றில் இரண்டும், மூன்றில் ஒன்றும், ஆறில் ஒன்றும், பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறபடியால், மஸ்அலாவும். 12-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 12 அவ்ல் 17

பத்னி	சகோதரி-4	பின்னபிதுருகி 2	மாதா
$\frac{1}{4}$	3-ல் 2	$\frac{1}{3}$	$\frac{1}{6}$
3	8	4	2

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகங்களும், சகோதரிகளின் 3-ல்2-க்கு 8-பாகங்களும், பின்னபிதுருகளின் $\frac{1}{3}$-க்கு 4-பாகங்களும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு 2-பாகங்களும், கொடுக்கவேணும்.

5-வது விதம்.

$\frac{1}{8}$, 3-ல்2-அதாவது எட்டில் ஒன்றும், மூன்றில் இரண்டு, பாகங்கள் வந்தால், இதின் மக்ரஜு 24-ஆக இருக்கிறபடியால், மஸ்அலாவும், 24-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 24

பத்னி	புத்திரி 2	பிதாவின்சகோதரன்
$\frac{1}{8}$	3-ல் 2	மிகுதி
3	16	5

மொத்த சொத்தை 24-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு 3-பாகங்களும், புத்திரிகளின் 3-ல்2-க்கு 16-பாகங்களும், மீதமிருக்கும். 5-ஐந்தை பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{8}$, 3-ல்2, $\frac{1}{6}$-அதாவது எட்டில் ஒன்றும், மூன்றில் இரண்டும், ஆறில் ஒன்றும், பாகங்கள் வந்தால் இதின் மக்ரஜு 24-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 24-ஆல் செய்யவேண்டும். இதற்கு உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 24

பத்னி	புத்திரிகள்-2	மாதா	பிதாவின்சகோதரன்
$\frac{1}{8}$	3-ல் 2	$\frac{1}{6}$	மிகுதி
3	16	4	1

மொத்த சொத்தை 24-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு 3-பாகங்களும், புத்திரியின் 3-ல்2-க்கு 16 பாகங்களும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு 4-பாகங்களும், மீதமிருக்கும். ஒன்றை பிதாவின் சகோதரனுக்கும், கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{8}$, $\frac{1}{6}$, 3-ல்2, $\frac{1}{3}$, அதாவது எட்டில் ஒன்றும், ஆறில் ஒன்றும், மூன்றில் இரண்டும், மூன்றில் ஒன்றும் பாகங்கள் வந்தால இதின் மக்ரஜு 24 ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும், 24 ஆல் செய்யவேண்டும இதற்கு உதாரணம்.

மய்யத்து — சைது, மஸ்அலா 24 அவ்ல் 31

பத்னி	மாதா	சகோதரிகள 2	பின்னபிதுருகி 2	கொலைசெய்த புத்திரன்
$\frac{1}{8}$	$\frac{1}{6}$	3-ல் 2	$\frac{1}{3}$	மஹ்றூம்
3	4	16	8	மஹ்றூம்

புத்திரன் தன் தகப்பனாகிய இறந்துபோனவனை கொலைசெய்துவிட்டபடியால் இவன் மஹ்றூமாயிருக்கிறான். இப்படி மஹ்றூமாய் போகும்பக்ஷத்தில் இறந்தவனுடைய பத்னிக்கு $\frac{1}{4}$ கிடைக்கவேண்டியது நீதி, இப்படியிருக்க ஷை பத்னிக்கு $\frac{1}{4}$ கொடாமல் $\frac{1}{8}$ கொடுக்கப்பட்டது. எனெனில் புத்திரன் கொலைபாதகனும் மஹ்றூமாயிருந்தபோதிலும் பத்னியின் $\frac{1}{4}$ பாகத்தை கொடுத்து $\frac{1}{8}$ஆக்க காரணனாயிருக்கிறான். ஆகையால் அவளுக்கு $\frac{1}{8}$ கொடுக்கப்பட்டது. மொத்த சொத்தை 24 பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$க்கு 3 பாகங்களும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு 4-பாகங்களும், சகோதரிகளின் 3-ல்2-க்கு 16-பாகங்களும், பின்னபிதுருகியின $\frac{1}{3}$-க்கு 8-பாகங்களும், கொடுக்கப்படும். இந்த மஸ்அலாவை இப்னேமஸ்ஊது றலி அல்லாஹு அன்ஹு அவர்களின் அபிப்பிராயத்தைக்கொண்டு இருக்கிறது. பின்னும் ஷை. புத்திரன் ஹனபிமஸ்ஹபுபடி ஷை பத்னியின் பாகத்தை கெடுக்கத்தக்கவனாகமாட்டான். இக்காரணத்தைக்கொண்டு ஷை பத்னிக்கு $\frac{1}{4}$-கிடைக்கும் அப்போது மேல்கண்ட 4-வது விதத்தின்படி மஸ்அலா

12-ஆல் செய்யப்படும் அப்போது இதின் அவ்ல் 17-ஆக இருக்கும். உதாரணம்.

மய்யத்து ஸைனு, மஸ்அலா 12 அவ்ல் 17
பத்னி. மாதா. சகோதரிகள் 2. பின்னபிதுருகி 2. கொலைசெய்த புத்திரன்.
$\frac{1}{4}$……$\frac{1}{6}$……3-ல் 2……$\frac{1}{3}$……மஹ்றூம்.
3 — 2 — 8 —— 4 —— மஹ்றூம்.

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகங்களும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு 2-பாகங்களும், சகோதரிகளின் 3-ல்2-க்கு 8-பாகங்களும், பின்னபிதுருகிகளின் $\frac{1}{3}$-க்கு 4-பாகங்களும், கொடுத்துவிடவேணும்.

6-வது விதம்.

$\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{6}$-அதாவது கால் அரை ஆறில் ஒன்று, பாகங்கள் வந்தால் இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 12-ஆல் செய்யவேண்டும் இதற்கு உதாரணம்.

மய்யத்து கரீமா, மஸ்அலா 12.
பதி…புத்திரி…மாதா…பிதாவின் சகோதரன்
$\frac{1}{4}$……$\frac{1}{2}$……$\frac{1}{6}$……மிகுதி
3 — 6 — 2 —— 1

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பதியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகங்களும், புத்திரியில் $\frac{1}{2}$-க்கு 6-பாகங்களும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு 2-பாகங்களும், மீதயிருக்கும். ஒன்றை பிதாவின் சகோதரனுக்கும், கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{4}$, $\frac{1}{2}$, 3-ல்1, $\frac{1}{6}$ அதாவது கால் அரை மூன்றில் ஒன்று, ஆறில் ஒன்று, பாகங்கள் வந்தால் இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறபடியால் மஸ்அலாவும் 12-ஆல் செய்யவேண்டும் இதற்கு உதாரணம்.

மய்யத்து ஸைனு, மஸ்அலா 12 அவ்ல் 15
பத்னி…சகோதரி…பின்னபிதுருகி 2…மாதா
$\frac{1}{4}$……$\frac{1}{2}$……$\frac{1}{3}$……$\frac{1}{6}$
3 — 6 —— 4 —— 2

மொத்த சொத்தை 12-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{4}$-க்கு 3-பாகங்களும், சகோதரியின் $\frac{1}{2}$-க்கு 6-பங்குகளும்; பின்னபிதுருகிகளின் $\frac{1}{3}$-க்கு 4-பாகங்களும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு 2-பாகங்களும், கொடுத்துவிடவேணும்.

$\frac{1}{8}$, $\frac{1}{2}$, $\frac{1}{6}$-அதாவது அரைக்கால் அரை ஆறில் ஒன்று, பாகங்கள் வந்தால இதின் மக்ரஜு 12-ஆக இருக்கிறது. ஆகையால் மஸ்அலாவும், 12-ஆல் செய்யவேணும் இதற்கு உதாரணம்.

மய்யத்து ஸைனு, மஸ்அலா 24
பத்னி…புத்திரி…மாதா…பிதாவின்சகோதரன்
$\frac{1}{8}$……$\frac{1}{2}$……$\frac{1}{6}$……மிகுதி
3 — 12 — 4 —— 5

மொத்த சொத்தை 24-பாகங்களாக்கி பத்னியின் $\frac{1}{8}$-க்கு 3பாகங்களும், புத்திரியின் $\frac{1}{2}$-க்கு 12-பாகங்களும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு 4-பாகங்களும், மீதமிருக்கும். 5-பிதாவின் சகோதரனுக்கும், கொடுத்துவிடவேணும்.

மஸ்அலாக்களை கண்டுபிடிக்கும் இலேசான வகை.

௸ முதல் விதத்தில் கண்டபடி $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{8}$, $\frac{1}{3}$, 3-ல்2, $\frac{1}{6}$-இவைகள் தனித்தனியாய் வந்தால் அப்போது அவைகளே மஸ்அலாகளாயிருக்கின்றன. அதாவது $\frac{1}{4}$-க்கு 4-ம் $\frac{1}{2}$-க்கு 2-ம் $\frac{1}{8}$-க்கு 8-ம் 3-ல்2-க்கு 3-ம் $\frac{1}{3}$-க்கு 3-ம் $\frac{1}{6}$-க்கு 6-ம் மஸ்அலாகளாயிருக்கின்றன.

பின்னும் ௸ 2-வது 3-வது 4-வது 5-வது 6-வது விதங்களில் கண்டபடி பாகங்கள் வந்தால அதற்கு மஸ்அலா கண்டுபிடிக்கவேண்டிய விதம் எப்படியென்றால் மேல் கண்டபடி பாகங்கள் தனிமையாக வராமல் $\frac{1}{2}$. $\frac{1}{4}$-இவ்விதமாக சேர்ந்து வந்தால் அப்போது அவைகளை 2-4-என்று எழுதி எந்த எண்ணால் ௸ 2-ம் 4-ம் அடிபடுகின்றனவென்று பார்த்து அந்த எண்ணால் வகுக்கவேணும். இதோ 2-ஆல் 2-ம் 4-ம் அடிபடுகின்றன. எப்படியென்றால்
2)2—4
1—2
இப்படி வகுத்த பின்பு வந்த 2, 1, 2-இவைகளை ஒன்றோடொன்று பெருக்கவேண்டும். அதாவது, 2 × 2 = 4 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்தது. ஈதே 4-மஸ்அலாவாயிருக்கிறது.

பின்னும் $\frac{1}{2}$, $\frac{1}{8}$-வந்தால் 2-8-என்று எழுதி இவ்விதமாக பாகித்து இந்த வகுத்தலால் வந்த 2, 1, 4, இவைகளை ஒன்றோடு ஒன்றை பெருக்கவேண்டும். 2×4=8 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்த தொகையாகிய 8-மஸ்அலாவாயிருக்கிறது.

2)2—8
1—4

பின்னும் 3-ல்2, $\frac{1}{3}$-வந்தால்அப்போது 3, 3-என்று எழுதி இவ்விதமாக பாகிக்கவேண்டும். இந்த வகுத்தலால் வந்த 3, 1, 1, இவைகளை ஒன்றோடு ஒன்றை பெருக்கவேண்டும். 3×1=3×1=3 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்த தொகையாகிய 3-மஸ்அலாவாயிருக்கிறது.

3)3—3
1—1

பின்னும் 3-ல்2, $\frac{1}{6}$-வந்தால்அப்போது 3,6, என்று எழுதி இவ்விதமாக பாகிக்கவேண்டும். இந்த வகுத்தலால் வந்த 3, 1, 2, இவைகளை ஒன்றோடு ஒன்றை பெருக்கவேண்டும்- 3×2=6 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்த தொகையாகிய 6-மஸ்அலாவாயிருக்கிறது.

3)3—6
1—2

பின்னும் $\frac{1}{3}$, $\frac{1}{6}$-இதையும் மேல்கண்டப்படியே வகுத்து பெருக்கி மஸ்அலாவைக் கண்டுபிடிக்கவேண்டும்.

பின்னும் 3-ல்2, $\frac{1}{3}$, $\frac{1}{6}$-வந்தால் 3, 3, 6, என்று எழுதி இவ்விதமாகபாகித்து இந்தவகுத்தலால் வந்த3,1,1.2.இவைகளைஒன்றோடுஒன்றைபெருக்கவேணும்.3×2=6 இப்படிப்பட்டபெருக்கலால் வந்த தொகையாகிய 6-மஸ்அலாவாயிருக்கிறது.

3)3-3-6
1-1-2

பின்னும் $\frac{1}{2}$,3-ல்2,$\frac{1}{3}$,$\frac{1}{6}$-வந்தால்2, 3, 3, 6,என்றுஎழுதி இவ்விதமாக பாகித்து இந்தவகுத்தலால்வந்த3,2,1,1,1.1 இவைகளைஒன்றோடொன்றுபெருக்கவேண்டும்3×2=6இப்படிப்பட்டபெருக்கலால்வந்த தொகையாகிய 6-மஸ்அலாவாயிருக்கிறது.

3)2-3-3-6
2)2-1-1-2
1-1-1-1

பின்னும் $\frac{1}{4}$, 3-ல்2,$\frac{1}{3}$, $\frac{1}{6}$-வந்தால் 4,3,3,6,என்றுஎழுதி இவ்விதமாய் பாகித்து இந்த வகுத்தலால் வந்த 3, 2, 2, 1,1, 1இவைகளை ஒன்றோடு ஒன்றுபெருக்கவேண்டும். 3×2=6×2=12 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்த தொகையாகிய 12-மஸ்அலாவாயிருக்கிறது.

3)4-3-3-6
2)1-1-1-2
2-1-1-1

பின்னும்$\frac{1}{8}$, $\frac{1}{6}$, 3-ல்2. $\frac{1}{3}$-வந்தால்8,6,3,3, என்றுஎழுதி இவ்விதமாக பாகித்து இந்த வகுத்தலால் வந்த 3, 2, 4, 1, 1, 1, இவைகளை ஒன்றோடு ஒன்று பெருக்கவேண்டும் 3×2=6×4=24 இப்படிப்பட்ட பெருக்கலால் வந்த தொகையாகிய 24-மஸ்அலாவாயிருக்கிறது.

3)8-6-3-3
2)8-2-1-1
4-1-1-1

பின்னும் இப்படியே மஸ்அலாக்களை தேடி கண்டுபிடித்து மேல் எழுதி வந்திருக்கிறபடி ஒவ்வொருவரின் பங்குகளை இதனால் வகுத்து கொடுக்கவேணும்.

இதுவும் மஸ்அலாகளை கண்டுபிடிக்கும் நக்ஷா.

பக்ஜூ	$\frac{1}{2}$	$\frac{1}{4}$	$\frac{1}{8}$	$\frac{1}{3}$	3-ல்2	$\frac{1}{6}$
$\frac{1}{2}$	2	4	8	6	6	6
$\frac{1}{4}$	4	4	8	12	12	12
$\frac{1}{8}$	8	8	8	24	24	24
$\frac{1}{3}$	6	12	24	3	3	6
3-ல்2	6	12	24	3	3	6
$\frac{1}{6}$	6	12	24	6	6	6

19-வது கண்டம்.

ரத்து என்ற தாயத் திரும்பலின் பயான்.

ரத்து என்பது என்ன? ரத்து என்பது அவுலின் எதிரிடையாயிருக்கிறது. பின்னும் மஸ்அலாவைக்கொண்டு வாரிசுகளுக்கு தாயபாகம் பிரித்துக் கொடுத்துவிட்டதின்பின் அப்படி கொடுத்துவிட்ட தொகையை மொத்தம் கூட்டும்போது மஸ்அலாவின்எண்ணைவிட அது குறைந்திருந்தால் அப்போது எத்தனை இலக்கங்கள் குறைந்திருக்குமோ அதை ஜவில்புறூலென்ற பங்குக்காரர்களின்பேரில் மறுபடியும் தாமாஷாப்படி விலாடித்துக் கொடுத்துவிடுவதற்கு ரத்துவென்று பேர். அதாவது, தாயத் திருப்பி கொடுத்தல். பின்னும் அவுல் என்பது என்ன. அவுல் என்பது மஸ்அலாவைக்கொண்டு வாரிசுகளுக்கு தாயம் பிரித்துக் கொடுத்துவிட்டதின்பின் அப்படி கொடுத்துவிட்ட தொகையை மொத்தம் கூட்டும்போது மஸ்அலாவின் எண்

ணைவிட அது அதிகமாயிருந்தால் எவ்வளவு அதிகமாயிருக்குமோ அந்த இலக்கந்தான் அவுல் என்னப்படும்.

பின்னும் மக்ரஜின் எண்ணானது அவுலின் அசையைவிட குறைந்திருக்கிறது. ஆகையால் அவுலின் எண்ணுக்கு சரியாக மக்ரஜின் எண்ணையும் அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்விதமாகவே பாகஸ்தர்களின் பாகங்களை கூட்டின அசையானது மக்ரஜின் அசையைவிட குறைந்திருக்கிறது. ஆகையால் மேடி கூட்டின அசைக்கு சரியாக மக்ரஜின் எண்ணையும் குறைத்துக்கொள்ளவேண்டும். இக்காரணத்தாலேயே ரத்தானது அவுலுக்கு எதிரிடையாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

பின்னும் இப்படி ரத்து யார்பேரில் செய்யவேண்டுமென்றால் அசபத்துக்காரர்களென்ற மிகுதிக்காரர்கள் இல்லாதிருந்து ஜவில்புருலு என்ற பங்குக்காரர்கள் மாத்திரம் இருந்தால் அப்போது அவர்களின்பேரில் ரத்துசெய்யவேண்டும். ஏனெனில் சொத்தில் மீதமிருக்கும் மீதத்தை மிகுதிக்காரர்கள் பெற்றுக்கொள்ளுகிறபடியால் சொத்தில் மீதம் ஒன்றுமே இருந்திருக்க மாட்டாது. ஆகையால் இவர்களின்பேரில் ரத்துஇல்லை. ஆனால் பங்குக்காரர்களோ பங்கு மாத்திரம் பெற்றுக்கொள்ளுகிறவர்களாயிருக்கிறபடியால் சொத்தில் மீதமிருந்துவிடுகிறது. ஆகையால் இந்த மீதத்தை இவர்களின்பேரிலேயே ரத்து செய்யவேண்டும். மேடி ஜவில்புருலு என்ற பங்குக்காரர்கள் 12 பேர்களாக இருக்கிறார்கள். இவர்களில 8 பேர்களின்பேரில் மாத்திரம் ரத்து செய்யப்படும். பாக்கியிருக்கிற 4 பேர்களின்பேரில் ரத்து செய்யப்படமாட்டாது. பின்னும் ரத்து பெற்றுக்கொள்ளும் 8 பேர்கள் யாரென்றால், 1-வது மாதா. 2-வது புத்திரி. 3-வது பவுத்திரி. 4-வது பிதாவைப்பற்றிய பாட்டிகளும், மாதாவைப்பற்றிய பாட்டிகளும். 5-வது சகோதரி 6-வது பின்ஸோதரி. 7-வது பின்னபிதுருகன். 8-வது பின்னபிதுருகி. இந்த 8 பேர்கள்தான் ரத்தை பெற்றுக்கொள்ளத்தக்கவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு (மன்யுரத்து அலைஹி) என்றுசொல்லப்படும். பின்னும் ரத்தை அடையத்தகாதவர்கள் 4 பேர்கள் யாரென்றால், 1-வது பிதா. 2-வது பிதாமகன். 3-வது பதி. 4-வது பத்னி இவர்கள்தான். பின்னும் இவர்களில் பிதாவும், பிதாமகனும் மிகுதிக்காரராயிருக்கிறபடியால் இவர்களின்பேரில் ரத்தில்லை. பின்னும் பதியும், பத்னியும் இவ்விருவர்கள் பந்தத்துவத்தைப்பற்றியவர்களாயிருந்திராமல் நிக்காஹ்வின் காரணத்தைப் பற்றியவர்களாயிருக்கிறபடியால் இவர்களின்பேரில் ரதில்லை. இந்த இருவர்களுக்கு (மன்லாயருத்து அலைஹி) என்று சொல்லப்படும். ரத்தின் மஸ்அலாவில் இவர்கள் சேர்ந்திருந்தால் அப்போது இவர்களின் பாகம் கொடுத்துவிட்டு ரத்து செய்யும்போது இவர்களை நீக்கிவிட வேண்டும்.

பின்னும் தாயம் திரும்புதலில் கசர் என்ற முறிதல் நேரிட்டால் தஸ்ஹீ செய்யும்படி சொல்லிவந்திருக்கிற வகையின்படி தஸ்ஹீ செய்துக்கொள்ளவேண்டும். பின்னும் ரத்து என்ற தாயம் திரும்புதலின் காயிதாக்கள் 4-ஆக யிருக்கின்றன.

1—வது காயிதா.

மஸ்அலாவில் ரத்துப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் 2, 3 ஜின்சுள்ளவர்களாயிருந்திராமல் ஒரே ஜின்சுள்ளவர்களாயிருந்திருப்பார்களானால் அப்போது மஸ்அலா அவர்களின் தலை எண்களால் செய்யப்படும். இதற்கு உதாரணங்கள் 3.

1-வது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 2
புத்திரி...புத்திரி
1 — 1

இதில் ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க ஜின்சு ஒரேஒன்றாயிருந்து இவர்களின் தலை 2 இரண்டாயிருப்பதால் மஸ்அலா 2-ஆல் செய்யப்பட்டு, ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொன்று கொடுக்கப்பட்டது.

2-வது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 4
புத்திரி...புத்திரி...புத்திரி...புத்திரி
1 — 1 — 1 — 1

இதிலும் ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க ஜின்சு ஒரேஒன்றும் இவர்களின் தலை 4 ஆகவும் இருப்பதால் மஸ்அலா 4 ஆல் செய்

யப்பட்டு ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொரு பாகம் கொடுக்கப்பட்டது.

3-வது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 5
பாட்டி...பாட்டி...பாட்டி...பாட்டி...பாட்டி.
1 — 1 — 1 — 1 — 1

இதிலும் ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க ஜின்ஸ ஒரேஒன்றும் இவர்களின் தலை 5 ஆகவும் இருப்பதால் மஸ்அலா 5-ஆல் செய்யப்பட்டு ஒவ்வொரு பாட்டிக்கு ஒவ்வொரு பாகம் கொடுக்கப்பட்டது.

2-வது காயிதா.

மஸ்அலாவில் ரத்து பெற்றுக்கொள்ளத்தக்க ஜின்ஸுகள் 2, அல்லது 3 இருந்தால் அப்போது மஸ்அலா இவர்களின் பங்குகளாலாகும், மேற்கண்டபடி தலை எண்களால் ஆகாது. எப்படியென்றால் மஸ்அலாவில் $\frac{1}{6}$, $\frac{1}{6}$ என்று 2 தடவை வந்தால் அப்போது மஸ்அலா 2-ஆல் செய்யப்படும்.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{3}$-ம், $\frac{1}{6}$-ம் வந்தால் அப்போது மஸ்அலா 3-ஆல் செய்யப்படும்.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{2}$-யும், $\frac{1}{6}$-ம் வந்தால் அப்போது மஸ்அலா 4-ஆல் செய்யப்படும்.

பின்னும் மஸ்அலாவில் 3-ல்2-ம், $\frac{1}{6}$-ம் வந்தாலும், பின்னும் $\frac{1}{2}$-ம், $\frac{1}{6}$-ம், $\frac{1}{6}$-ம் வந்தாலும் பின்னும் $\frac{1}{2}$-ம், $\frac{1}{3}$-ம் வந்தாலும் அப்போது மஸ்அலா 5-ஆல் செய்யப்படும். இதற்கு உதாரணங்கள்.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{6}$-ம், $\frac{1}{6}$-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து	சைது, மஸ்அலா 6=2 குறைந்த மஸ்அலா	
	பின்னபிதுருகி	...பாட்டி
	$\frac{1}{6}$ ...	... ... $\frac{1}{6}$
குறைந்த மஸ்அலா.	1 ——	1
ரத்தின மஸ்அலா	3 ——	3

இப்படி வந்தால் மஸ்அலா 2-ஆல் செய்து பின்னபிதுருகியின் $\frac{1}{6}$-க்கு 1பாகமும் பாட்டியின் $\frac{1}{6}$-க்கு 1-பாகமுமாக கொடுக்கவேண்டும். பின்னும் மீதமிருக்கும் 4 நாலையும் இந்த இருவருக்கு ரத்து செய்யவேண்டும். ஷை இருபேரும் சமபாகஸ்தரா யிருக்கிறபடியால் ஷை 4 நாலை இருபாகம் செய்து பின்னபிதுருகிக்கு 2-ம் பாட்டிக்கு 2-ம் கொடுக்கப்பட்டது. பின்னும் பின்னபிதுருகிக்கு பாகப்படி வந்த 1-ம் தாயத் திரும்புதல்படி வந்த பங்கு 2-ம் ஆக பங்குகள் 3-வந்தன, இப்படியே பாட்டிக்கும் 3-வந்தன. இப்படி பாகம் செய்து 3, 3, கொடுப்பதைவிட சுருக்கமாய் கொடுத்துவிடுவது நன்மையாகையால் மஸ்அலா 2-ஆல் செய்து பின்னபிதுருகிக்கு ஒரு பாகமும் பாட்டிக்கு ஒரு பாகமுமாக கொடுக்கப்பட்டது. இதுவே ரத்தின் மஸ்அலா.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{3}$-ம், $\frac{1}{6}$-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து	சைது, மஸ்அலா 6=3 குறைந்த மஸ்அலா	
	பின்னபிதுருகி 2..............	மாதா
	$\frac{1}{3}$ ...	... ... $\frac{1}{6}$
குறைந்த மஸ்அலா	2 ——	1
ரத்தின் மஸ்அலா	4 ——	2

வியாக்கியானம்.

இப்படி வந்தால் மஸ்அலா 6-ஆல் செய்து 2 பின்னபிதுருகிகளின் $\frac{1}{3}$-க்கு 2 பாகமும் மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒருபாகமும் கொடுக்கப்படும். இப்படி கொடுப்பதினால்ஷை மூவர்களும் சமபாகஸ்தர்களாயிலிகிறார்கள். பின்னும் மீதமிருக்கும் இந்த மூன்றையும் இந்த மூன்றுபேர்களுக்கே ரத்து செய்யவேண்டும். எப்படியென்றால் பின்னபிதுருகிகள் 2 பேருக்கு 2 பாகமும், மாதாவுக்கு 1 பாகமும் கொடுக்கவேண்டும். அதாவது ஒவ்வொருத்திக்கு ஒவ்வொன்று. பின்னும் பின்னபிதுருகிகள் 2 பேருக்கு வந்த பங்குகள் 2-ம் தாயத் திரும்புதல்படி வந்த பங்குகள் 2-ம் ஆக வகை 2-க்கு பங்குகள் 4 வந்தன. இப்படியே மாதாவுக்கும் பாகப்படி வந்த பங்கு 1-ம் தாயத் திரும்புதல்படி வந்த பங்கு 1-ம் ஆக வகை 2-க்கு பங்குகள் 2 வந்தன. இப்படி பாகம் செய்து கொடுப்பதைவிட சுருக்கமாய் கொடுத்துவிடுவது நன்மையாகையால் மஸ்அலா 3-ஆல்செய்து பின்னபிதுருகிகள் ஒவ்வொருத்திக்கு ஒவ்வொரு பாகமும், மாதாவுக்கு ஒரு பாகமுமாக கொடுத்துவிடப்பட்டது. பின்னும் மஸ்அலா 6-ஆல் செய்து பாகங்களை பாகித்துவிட்டு இப்படி பாகித்துவிட்ட பாகங்களை கூட்டினால் மொத்தம் என்ன தொகை வரு

கின்றதோ அந்த துகையே ரத்தின் மஸ்அலாவா யிருக்கிறது.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{2}$-ம், $\frac{1}{6}$-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6=4 குறைந்த மஸ்அலா

புத்திரி	மாதா
$\frac{1}{2}$	$\frac{1}{6}$
3	1

வியாக்கியானம்.

இப்படி வந்ததினால் மஸ்அலா 6-ஆல் செய்து மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒருபாகமும், புத்திரியின் $\frac{1}{2}$-க்கு 3 பாகமும் கொடுக்கப்பட்டது. இப்படி பாகித்து கொடுத்த துகையின் மொத்தமானது 4-ஆக யிருக்கிறது. மஸ்அலாவின் 6-ல் 4 நாலை கழித்தால் மீதம் 2 இருக்கிறது, இந்த 2 இரண்டை மறுபடியும் புத்திரிக்கும் மாதாவுக்கும் அவரவர்களின் பாகப்படி ரத்து செய்யவேண்டும். இப்படி ரத்து செய்வதைவிட மஸ்அலா 4-ஆல் செய்து 3 பாகம் புத்திரிக்கும், ஒரு பாகம் மாதாவுக்கும் கொடுத்துவிடவேண்டியது நலம். இதுவே ரத்தின மஸ்அலா. அதாவது மஸ்அலா 6-ஆல் செய்து பாகங்களை பாகித்துவிட்டு இப்படி பாகித்துவிட்ட பாகங்களை கூட்டினால் மொத்தம் என்னதுகை வருகின்றதோ அந்த துகையே ரத்தின் மஸ்அலாவா யிருக்கிறது.

பின்னும் மஸ்அலாவில் 3-ல்2-ம், $\frac{1}{6}$-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6=5 குறைந்த மஸ்அலா

புத்திரிகள்2	மாதா
3-ல் 2	$\frac{1}{6}$
4	1

வியாக்கியானம்.

இப்படி வந்ததினால் மஸ்அலா 6-ஆல் செய்து 2 புத்திரிகளின் 3-ல் 2-க்கு 4 பாகமும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு 1 பாகமும் கொடுக்கப்பட்டது. இப்படி பாகித்துக்கொடுத்த துகையின் மொத்தமானது 5-ஆக இருக்கிறது, மஸ்அலாவின் 6-ல் 5 ஐந்தை கழித்தால் மீதம் 1 ஒன்று இருக்கிறது. இந்த ஒன்றை மறுபடியும் 2 புத்திரிகளுக்கும், மாதாவுக்கும் அவரவர்களின் பாகப்படி ரத்து செய்யவேணும். இப்படி செய்வதைவிட மஸ்அலா 5-ஆல் செய்து 2 புத்திரிகளுக்கு 4-ம், மாதாவுக்கு 1-ம் கொடுத்துவிடவேண்டியது நலம். பின்னும் மஸ்அலா 6-ஆல் செய்து பாகங்களை பாகித்துவிட்டு இப்படி பாகித்துவிட்ட பாகங்களை கூட்டினால் மொத்தம் என்ன துகை வருகின்றதோ அதுவே ரத்தின் மஸ்அலாவா யிருக்கிறது.

பின்னும் மஸ்அலாவில் $\frac{1}{2}$-ம் $\frac{1}{6}$-ம் $\frac{1}{6}$-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6=5 குறைந்த மஸ்அலா

	புத்திரி	பவுத்திரி	மாதா
	$\frac{1}{2}$	$\frac{1}{6}$	$\frac{1}{6}$
குறைந்த மஸ்அலா	3	1	1
ரத்தின் மஸ்அலா	18	6	6

வியாக்கியானம்.

இப்படி வந்ததினால் மஸ்அலா 6-ஆல் செய்து புத்திரியின் $\frac{1}{2}$-க்கு 3 பாகமும், பவுத்திரியின் $\frac{1}{6}$-க்கு ஒரு பாகமும், மாதாவின் $\frac{1}{6}$-க்கு ஒருபாகமும் கொடுக்கப்பட்டது. இப்படி பாகித்து கொடுத்த துகையின் மொத்தமானது 5-ஆகயிருக்கிறது மஸ்அலாவின் 6-ல் 5 ஐந்தை கழித்தால் மீதம் 1 இருக்கிறது. இந்த ஒன்றை மறுபடியும் புத்திரிக்கும், பவுத்திரிக்கும், மாதாவுக்கும் அவரவர்களின் பாகப்படி ரத்துசெய்யவேண்டும். இப்படி செய்வதற்காக மஸ்அலாவை தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேண்டுமென்றால் மஸ்அலா 6-ஆல் செய்து பாகித்து கொடுத்துவிட்டதின்பின் இப்படி கொடுத்துவிட்ட பாகங்களை கூட்டினால் 5 வந்தது. இந்த 5 ஐந்தை மஸ்அலாவின் 6-ஆல் பெருக்கவேண்டும். 6×5=30. இப்படி பெருக்கிவந்த துகையானது 30-ஆக இருக்கிறது. இதை புத்திரியின் 2-ஆல் பாகித்து அதினால்வந்த பேருப்பணமாகிய 15 பதினைந்தை புத்திரிக்கும், பின்னும் ஷை பெருக்கிவந்த துகையாகிய 30-முப்பதை பவுத்திரியின் 6-ஆல் பாகித்து அதனால் வந்த பேருப்பணமாகிய 5 ஐந்தை பவுத்திரிக்கும், பின்னும் ஷை பெருக்கிவந்த துகையாகிய 30 முப்பதை மாதாவின் 6-ஆல் பாகித்து அதினால் வந்த பேருப்பணமாகிய 5 ஐந்தை மாதாவுக்குமாக கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின் மொத்த துகை 15+5+5=25. ஆக இருக்கிறது. இந்த இருபத்தைந்தை 30-ல் கழித்தால் மீதம் 5 இருக்கிறது. இந்த 5 ஐந்தை புத்திரி, பவுத்திரி, மாதா இவர்களுக்கு அவரவர்களின் பாகப்படி விலாடித்துக் கொடுக்கவேண்டும. இப்படி ரத்தின்படி விலாடித்து கொடுத்ததினால் புத்திரிக்கு வந்த பங்கு 3-ம்,

பின்னும் பாகப்படி இவளுக்கு வந்த பங்கு 15-ம்ஆக வகை 2-க்கு புத்திரிக்கு வந்த தொகை மொத்தம் 18. பின்னும் இப்படியே ரத்தின்படி விலாடித்துக் கொடுத்ததினால் பவுத்திரிக்கு வந்த பங்கு 1-ம், பின்னும் பாகப்படிக்குஇவளுக்குவந்த பங்கு 5ம்-ஆக வகை 2-க்கு பவுத்திரிக்கு வந்த தொகை மொத்தம் 6. பின்னும் இப்படியே ரத்தின்படி விலாடித்துக் கொடுத்ததினால் மாதாவுக்கு வந்த பங்கு 1-ம், பின்னும் பாகப்படி இவளுக்கு வந்த பங்கு 5-ம் ஆக வகை 2-க்கு மாதாவுக்கு வந்த தொகை மொத்தம் 6. பின்னும் புத்திரிக்கு பவுத்திரியையும், மாதாவையும்விட 3 பங்கு ஜாஸ்தியாயிருக்கிறது. இப்படி மஸ்அலா செய்வதைவிட சுருக்கமாக மஸ்அலா செய்வது நன்மையாகையால் மேல்கண்டபடி மஸ்அலா 5-ஆல் செய்து 3, புத்திரிக்கும், ஒன்று, பவுத்திரிக்கும், ஒன்று மாதாவுக்கும் கொடுத்துவிடவேண்டும்.

பின்னும் மஸ்அலாவில் ½-ம், ⅓-ம் வந்தால் இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 6=5 குறைந்தமஸ்அலா
சகோதரி........................மாதா
½...   ... ⅓
3 ——— 2

வியாக்கியானம்.

இதற்கும் மேல்கண்டபடியே அமல்செய்யவேண்டும். அதாவது மஸ்அலா 5-ஆல்செய்து 3பாகம்,புத்திரிக்கும் 2பாகம்,மாதாவுக்கும் கொடுத்துவிடவேண்டும்.

எச்சரிப்பு.

பதியின் பாகங்கள் 2 இருக்கின்றன. இதில் ஒன்று பெரியதும், 2-வது சிறியதுமாயிருக்கிறது. பெரிய பாகம் என்பது ½-யும், சிறிய பாகம் என்பது ¼-மாக இருக்கிறது. இவ்விதமாகவே பத்னியின் பாகங்களும் 2 இருக்கின்றன. இதில் ஒன்று பெரியதும், 2-வது சிறியதுமாயிருக்கிறது. பெறிய பாகம் என்பது ¼-ம், சிறிய பாகமென்பது ⅛-மாக இருக்கிறது.

தாயத் திரும்பல் அடையப்பட்டவர்கள் ஓரோரு ஜின்சுள்ளவர்களாயிருந்து இவர்களுடன் தாயத் திரும்பல் அடையக்கூடாதவர்களாகிய பதியாவது பத்னியாவது இருந்தால் அப்போது பதி அல்லது பத்னியின் சிறிய பாகத்தால் மஸ்அலா செய்து பதி, அல்லது பத்னியின் பாகத்தை கொடுத்துவிட்டு மீதமிருப்பதை ஷெடி ஓரொரு ஜின்சுள்ளவர்களுக்கு கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்ட தொகையானது ஷெடி ஜின்சுள்ளவர்களுக்கு முறிப்படாமல் பாகிக்கப்பட்டால் அப்போது தஸ்ஹீ செய்யவேண்டியது அவசியமில்லை. ஒருவேளை அப்படி பாகிக்கப்படாமல் முறிப்பட்டால் அப்போது தஸ்ஹீயின் காயிதாப்படி அமல் செய்ய வேண்டும்.

பின்னும் பதி; அல்லது பத்னிக்கு தாயம் கொடுத்துவிட்டதின் பின் மீதமிருக்கும். தொகை முறிப்படாமல் பாகிக்கப்படும் மஸ்அலாக்களின் உதாரணங்கள்.

1-வது உதாரணம்.

மய்யத்து ஹனீபா, மஸ்அலா 4
பதி...புத்திரிகள்-3
¼.........3-ல் 2
1 ——— 3

வியாக்கியானம்.

பதியின் சிறிய பாகமாகிய 4-ஆல் மஸ்அலா செய்து பதி,யின் ¼-க்கு ஒரு பாகமும், புத்திரிகள் 3 பேர்களுக்கு 3 பாகமும், கொடுக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொன்று வந்தது பாகம் முறிப்படவில்லை.

பின்னும் பதி, அல்லது பத்னிக்கு பாகம் கொடுத்துவிட்டு மீதமிருப்பதை பாகிக்கும்போது பாகம் முறிப்பட்டால அப்போது மஸ்அலாவை தஸ்ஹீ செய்துக்கொள்ளவேண்டியது இதற்குஉதாரணம்.

மய்யத்து ஹதீக்கா, மஸ்அலா 4 தஸ்ஹீ 20
பதி..............புத்திரிகள் 5
¼.....................3-ல் 2
மஸ்அலா 1 ——— 3
தஸ்ஹீ 5 ——— 15

வியாக்கியானம்.

பதியின் சிறிய பாகமாகிய 4-ஆல் மஸ்அலா செய்து பதியின் ¼-க்கு ஒரு பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 3 மூன்றை புத்திரிகள் 5 பேருக்கு சரியாய் பாகிக்கப்படாமல் பாகங்கள் முறிப்படுகிறபடியால் மஸ்அலாவை தஸ்ஹீ செய்து கொள்ளப்பட்டது.

இதுஎப்படியென்றால்புத்திரிகளின்தலைஎண்களாகிய5ஐந்திலும் இவர்களின் பாகமாகிய 3-லும்4-வது வகையாகியதபாயுன்இருக்கிறப்படியால் புத்திரிகளின் தலை எண்களாகிய 5 ஐந்தை மஸ்அலாவின் எண்ணாகிய 4-ஆல் பெருக்கப்பட்டது இப்படி பெருக்கினதினால் வந்த தொகையானது 4×5=20. இருபது இந்த இருபதை பதியின் பாகமாகிய 4-ஆல் வகுத்து பதிக்கு 5 ஐந்து பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 15 பதினைந்தை 5 புத்திரிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்ததினால் பாகம் முறிப்படாமல் ஒவ்வொரு புத்திரிகு 3-3 பாகங்கள் வந்தன.

2-வது உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 8 தஸ்ஹீ-120 அமானம் 3-5.
பத்னி 3.........புத்திரிகள் 5
$\frac{1}{8}$ ....3-ல் 2
மஸ்அலா 1 —— 7
தஸ்ஹீ 15 —— 105

வியாக்கியானம்.

பத்னியின் சிறிய பாகமாகிய 8-ஆல் மஸ்அலா செய்து பத்னியின் $\frac{1}{8}$-க்கு ஒரு பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 7 ஏழை புத்திரிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதினால் பத்னி 3 பேருக்கு ஒரு பாகம் முறிப்படுகிறதும், தவிர புத்திரிகள் 5 பேருக்கும், 7 பாகங்கள் முறிப்படுகின்றன. ஆகையால் மஸ்அலாவை தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேணுமென்றால் பத்னிகளின் தலை எண்களாகிய 3-லும் இவர்கள் பாகமாகிய ஒன்றிலும், தபாயுன் இருக்கிறப்படியால் ஷை மூன்றை அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதி வைக்கவேண்டும். பின்னும் புத்திரிகளின் தலைஎண்களாகிய 5-லும் இவர்களின் பாகமாகிய 7-லும், தபாயுன் இருக்கிறப்படியால் ஷை 5 ஐந்தையும் மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக அமானமாக எழுதி வைக்கவேண்டும். இப்படி அமானமாக எழுதி வைத்திருக்கிற 3-5 இதிலும் எந்த வகை இருக்கிறதென்று பார்த்ததில் இதிலும் தபாயுன் இருக்கிறபடியால் 3 மூன்றையும் 5 ஐந்தையும் பெருக்கவேண்டும் 5×3=15. இப்படி பெருக்கி வந்த தொகையானது 15 பதினைந்தாயிருக்கிறது. இதை மஸ்அலாவின் 8-ஆல் பெருக்கவேண்டும்.

8×15=120. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 120 நூத்தியிருபதை பத்னியின் 8-ஆல் வகுத்து பத்னிகள் 3 பேருக்கு 15-ம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 105 நூத்திஐந்தை 5-ஆல் வகுத்து 105÷5=21. ஒவ்வொரு புத்திரிக்கு 21, 21-ஆக கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுப்பதினால் பாகங்கள் முறிப்படாமல் சரியாய் பாகிக்கப்பட்டு போகின்றன.

3-வது உதாரணம்.

மய்யத்து ரஹீமா, மஸ்அலா 4 தஸ்ஹீ 8
பதி.............புத்திரி 6
$\frac{1}{4}$ ....3-ல் 2
மஸ்அலா 1 —— 3
தஸ்ஹீ 2 —— 6

வியாக்கியானம்.

பதியின் சிறியபாகமாகிய 4-ஆல் மஸ்அலாசெய்து பதியின் $\frac{1}{4}$-க்கு ஒரு பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 3 மூன்றை 6 புத்திரிகளுக்கு கொடுத்துவிட்டால் அப்போது இவர்களுக்கு பாகங்கள் முறிப்படுகின்றன. ஆகையால் மஸ்அலா தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேணுமென்றால் புத்திரிகளின் தலை எண்களாகிய 6-லும், இவர்களின் பாகமாகிய 3-லும் எவ்வகையிருக்கிறதென்று பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் விப்கு செய்யவேண்டும். அதாவதுபுத்திரியின்தலைஎண்களாகிய6ஆறை 3பாகமாக்கவேண்டும். அப்படி 3 பாகமாக்கினதில் பாகம்1-க்கு 2வந்தது. இதுதான் விப்காயிருக்கிறது. இந்த 2 இரண்டை மஸ்அலாவின் எண்ணாகிய 4.ல் பெருக்கவேண்டும். 4×2=8. இப்படி பெருக்கிவந்த தொகையானது 8-ஆக இருக்கிறது. இதை பதியின் 4-ஆல் வகுத்து பதிக்கு 2 கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 6ஆறை புத்திரிகள் 6 பேருக்கு கொடுத்துவிடவேண்டும். அதாவது ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொன்று கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுப்பதினால் பாகங்கள் முறிப்படாமல் சரியாய் வகுக்கப்பட்டு போகின்றன. ஷை 2-வது உதாரணத்திலும், 3-வது உதாரணத்திலும் வித்தியாசமில்லை. ஆனால் 2-வது உதாரணத்தில் தபாயுன்

இருக்கிறது. 3-வது உதாரணத்தில் தவாபுக்கு இருக்கிறது. இதுவே வித்தியாசம்.

4-வது காயிதா.

பாகம் முறிப்படாமலிருக்கும் விஷையத்தின் சங்கதி.

தாயத்திரும்பல் அடையப்பட்டவர்கள் 2 ஜின்சுள்ளவர்களாயிருந்துஇவர்களுடன்தாயத்திரும்பல் அடையக்கூடாதவர்களாகிய பதியாவது, பத்னியாவது இருந்தால் அப்போது பதி, அல்லது பத்னியின் பாகம் அவர்களின் சிறியபாகத்தால் மஸ்அலா செய்து கொடுத்துவிட்டு மீதமிருப்பதை தாயத் திரும்பல் அடையப்பட்ட 2 ஜின்சுள்ளவர்களுக்கு பாகித்துவிடவேண்டும். இப்படி பாகித்துவிடுவதில் பாகங்கள் முறிப்படாமல் சரியாய் பாகிக்கப்பட்டு போகுமாகில் அப்போது தஸ்ஹீ செய்யவேண்டியது அவசியமில்லை. இது எப்பேர்ப்பட்ட சமயத்தில் ஆருமென்றால் பத்னிக்கு $\frac{1}{4}$ கிடைக்கும் தருணத்தில்தான் இப்படி சம்பவிக்கும். பின்னும் பாக்கியிருக்கும் 3 மற்ற வாரிசுகளுக்குகிடைக்கும்.

பின்னும் பதி, அல்லது பத்னிக்கு தாயம் கொடுத்துவிட்டதின்பின் மீதமிருக்கும் துகை முறிப்படாமல் 2 ஜின்சுள்ளவர்களுக்கு பாகிக்கப்படும். மஸ்அலாக்களின் உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 4

பத்னி	பாட்டி	பின்னபிதுருக 2
$\frac{1}{4}$	$\frac{1}{6}$	$\frac{1}{3}$
1	1	2

வியாக்கியானம்.

மஸ்அலா பத்னியின் 4-ஆல் செய்து அவளுடைய பாகமாகிய $\frac{1}{4}$ ஒன்று கொடுத்துவிட்டு இவளை மஸ்அலாவிலிருந்து நீக்கிவிட்டு மீதமிருக்கும் 3 பாகம் பாட்டிக்கும், பின்னபிதுருகிகளுக்கும் பாகிக்கக்கூடாதிருக்கிறபடியால் மஸ்அலா 6-ஆல் செய்து பாட்டியின் $\frac{1}{6}$-க்கு ஒருபாகமும், 2 பின்னபிதுருகிகளின் $\frac{1}{3}$-க்கு 2 பாகமும் கொடுத்துவிடவேண்டும். பின்னும் மஸ்அலா 6-ஆல் செய்து அதனால் தாயத் திரும்பல் அடையத்தக்கவர்களுக்கு வந்த பங்குகள் மொத்தம் 3-தான். பின்னும் பத்னியின் 4-ஆல் மஸ்அலா செய்து பத்னியின் பாகம் கொடுத்துவிட்டு மீதமிருந்ததும் 3 தான்.

பாகம் முறிப்படும் விஷயத்தின் சங்கதி.

தாயத்திரும்பல் அடையப்பட்டவர்கள் 2 ஜின்சுள்ளவர்களாயிருந்து இவர்களுடன் பதியாவது, பத்னியாவது இருந்து இவர்களின் பாகம் பாகிப்பதில் முறிப்பட்டால் அப்போது தாயத் திரும்பல் அடைகிறவர்களின் பாகங்களை கூட்டி அதின் துகையுடன் பதி, அல்லது பத்னியின் கடைசியான மக்ரஜை பெருக்கவேண்டும். இது தஸ்ஹீயாக இருக்கும். பின்னும் பதி, அல்லது பத்னிக்கு வந்த பாகத்தை தாயத்திரும்பல் அடைகிறவர்களின் பாகங்களை கூட்டி அதின் துகையுடன் பெருக்கவேண்டும். இதுவே பதி அல்லது பத்னியின் பாகமாயிருக்கும்; பின்னும் தாயத் திரும்பல் அடைகிறவர்களின் பாகத்தை மீதத்துகையுடன் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கிவந்த துகையானது தாயத்திரும்பல் அடைகிறவர்களுடைய பாகமாயிருக்கும் இதற்கு உதாரணம்.

சைது, மஸ்அலா 8, 2-வது மஸ்அலா 6, தஸ்ஹீ 40
2-வது தஸ்ஹீ 2400 அமானம் 4-5-6
மய்பத்து

	பத்னி 4	புத்திரிகள் 5	பாட்டிகள் 6
	$\frac{1}{8}$	3-ல் 2	$\frac{1}{6}$
மஸ்அலா	1	7	
2-வது மஸ்அலா	0	4	1
தஸ்ஹீ	5	28	7
2-வது தஸ்ஹீ	300	1680	420

வியாக்கியானம்.

பத்னிக்கு இவளுடைய கடைசியான பாகமாகிய 8-ஆல் மஸ்அலா செய்து அவளுக்கு சேரவேண்டிய $\frac{1}{8}$-க்கு 1 பாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 7 ஏழை அமானத்தாக எழுதவேண்டும். பின்பு பத்னிக்கு பங்கிலிருந்து நீக்கிவிட்டு தாயத்திரும்பல் அடைகிற 5 புத்திரிகளுடையவும், 6 பாட்டிகளுடையவும் மஸ்அலை பிரத்தியேகமாக செய்யவேண்டும். அது எப்படியென்றால் மஸ்அலா 6-ஆல் செய்து புத்திரிகளுடைய 3-ல் 2-க்கு 4-ம், பாட்டிகளுடைய $\frac{1}{6}$-க்கு ஒன்றும் கொடுக்கவேண்டும். பின்னும் மேற்படி புத்திரிகளுக்கு வந்த பாகம் 4-ம் பாட்டிகளுக்கு வந்த பாகம் ஒன்றும் கூட்டினால் அப்போது தாயத் திரும்பல் அடைகிறவர்களின் பா

கம் 5-ஆக இருக்கின்றது. பின்னும் பத்னிக்கு ஒருபாகம் கொடுத்துவிட்டு மீதம் அமானமாக வைத்திருக்கிற 7 பங்குகள் இந்த 5 ஐந்தின்பேரில் பூறுவாய் பாகிக்கப்படவில்லை. ஆகையால் தாயத் திரும்பல் அடைகிறவர்களின் பாகங்களாகிய இந்த 5 ஐந்தை பத்னியின் கடையியான மக்ரஜாகிய 8-ஆல் பெருக்கவேண்டும். 8×5=40. இப்படி பெருக்கினதினால் 40 வந்தது. பின்னும் இதுவே அசல் மஸ்அலாவுக்கு ஒப்பாக தஸ்ஹீயாக இருக்கிறது. பின்னும் தாயத்திரும்பல் அடையக்கூடாதவர்களாகிய பத்னியின் ஒரு பாகத்தை தாயபாகத் திரும்பல் அடைகிறவர்களின் பாகங்களாகியஷை5-ல்பெருக்கவேண்டும். 1×5=5இப்படிபெருக்கிவந்த தொகையானது 5, இதுவே தாயத் திரும்பல் அடையக்கூடாதவளாகிய பத்னியின் பங்காயிருக்கிறது. பின்னும் புத்திரிகளின் 4 நாலை மேல்கண்ட மீத தொகையாகிய 7-ல் பெருக்கவேண்டும். 4×7=28. இப்படி பெருக்கிவந்த தொகையானது 28-ஆக இருக்கிறது. இதுவே புத்திரிகளின் பங்குகளாயிருக்கிறது. பின்னும் ஷை பாட்டிகளின் ஒன்றை மேல்கண்ட மீததொகையாகிய 7-ல் பெருக்கவேண்டும். 7×1=7.இப்படி பெருக்கிவந்த தொகையானது 7 ஆக இருக்கிறது. இதுவேபாட்டிகளின்பங்குகளாயிருக்கிறது.பின்னும்5 புத்திரிகளுக்கு28பாகங்கள்பூறுவாய்பாகிக்கப்படுகிறதில்லை. பின்னும் 6 பாட்டிகளுக்கு 7 பங்குகள் பூறுவாய் பாகிக்கப்படுகிறதில்லை. பின்னும் 5 பாகங்கள் 4 பத்னிகளுக்கு பூறுவாய் பாகிக்கப்படுகிறதில்லை. இவர்கள் எல்லோருக்கும் பாகங்கள் முறிப்படுகின்றன. ஆகையால் பாகங்கள் முறிப்படாமல் பூறுவாய் பாகிக்கப்படவேண்டியதற்காக தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேண்டுமென்றால் பத்னியின் தலைஎண்களாகிய 4 நாலையும் இவளுடைய பங்காகிய 5-ஐயும் 4 வகைகளில் எந்த வகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் இந்த 4 நாலை அமானமாக மஸ்அலையின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும். பின்னும் புத்திரிகளின் தலை எண்களாகிய 5-ஐயும் இவர்களின் பாகமாகிய 28-ஐயும் ஷைவகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். அப்படி பார்த்ததில் இதுவும் 4-வதுவகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் இந்த 5 ஐந்தையும் அமானமாக மஸ்அலையின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும். பின்னும் பாட்டிகளின் தலை எண்களாகிய 6-ஐயும் இவர்களின் பங்குகளாகிய 7-ஐயும் ஷை வகைகளில் எந்த வகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இதுவும் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது. ஆகையால் இந்த 6-யும், அமானமாக மஸ்அலாவின்மேல் ஞாபகத்திற்காக எழுதவேண்டும். இப்படி அமானமாய் ஞாபகத்திற்காக வைக்கப்பட்ட எண்கள் எதென்றால் 4, 5, 6 இவைகள்தான். பின்னும் இந்த 3 எண்களிலும், ஷை4 வகைகளில் எந்த வகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இந்த 3 லெக்கங்களிலும் தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது, ஆகையால் 4 நாலையும், ஐந்தையும் பெருக்கவேண்டும். 5×4=20. இப்படி பெருக்கிவந்ததொகையாகிய 20-ஐயும், 6-ஐயும் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இது 3-வது வகையாகிய தவாபுக்கு இருக்கிறதாக தெரிய வந்தது, ஆகையால் விப்கு செய்துகொள்ளவேண்டும். அதாவது 6 ஆறை பேர்பாதியாக்கிக் கொள்ளவேண்டும். 6÷2=3. இப்படி பேர்பாதியாக்கிக்கொண்ட தொகையானது 3-ஆக இருக்கிறது. இதை ஷை 20-ல் பெருக்கவேண்டும். 3×20=60. இப்படி பெருக்கிவந்த தொகையானது அறுபதாக இருக்கிறது, இந்த 60 அறுபதை மேல்கண்ட தஸ்ஹீயாகிய 40 நாற்பதுடன் பெருக்கவேண்டும். 40×60=2400. இப்படி பெருக்கி வந்த தொகையானது 2400-ஆக இருக்கிறது இதுதான் தஸ்ஹீயே மஸ்அலாவாயிருக்கிறது. இதை பத்னியின் 8-ஆல் வகுத்து 4 பத்னிகளுக்கு 300-ம் பின்னும் ஷை 2400 இரண்டாயிரத்திநானூறை புத்திரிகளின் 3-ல்2-ஆல் வகுத்து 5 புத்திரிகளுக்கு 1680-ம், பின்னும் 2400 இரண்டாயிரத்திநானூறை பாட்டிகளின் பாகமாகிய 6-ஆல் வகுத்து 6 பாட்டிகளுக்கு 420 கொடுத்துவிடவேணும். இப்படி கொடுப்பதினால் பாகங்கள் முறிப்படாமல் பூறுபூறுவாய் பாகிக்கப்படும்.

20-வது கண்டம்.

முஸாகாவின் பயான்.

மனப்பாடம் செய்யும் விஷயங்கள்.

முனாசகா என்பது என்ன.

(முனாசகா) என்பதுமுன் இறந்துபோனவனுடைய சொத்து பாகிக்கப்படுவதற்குமுன்னதாகவே இவன்வாரிசுகளில் எவனாவது ஒருவன் இறந்துபோயிருந்து இப்படி பின் இறந்தவனுடைய வாரிசுகளின் பக்கம் இவனுடைய பங்குசேருதலுக்கு (முனாசகா) என்று பேர்.

மாபில்னத் என்பது என்ன.

(மாபில்னத்) என்பது கைக்கு வந்த தொகை என்பதேயாம். எப்படியென்றால் இறந்தவனுக்கு முன் இறந்துபோனவனுடைய சொத்தால் கிடைத்த தொகைக்கு (மாபில்னது) என்று சொல்லப்படும். பின்னும் பாகப்பிரிவினையன்றி பின் இறந்தவனுக்கு முன் இறந்துபோன பல மய்யத்துகளின் சொத்தால் கிடைத்த பாகங்களுக்குங்கூட (மாபில்னத்) என்று பேர். அதாவது கைக்கு வந்த தொகையாம்.

விப்கு என்பது என்ன.

(விப்கு)என்றசங்கதிஇந்தக்கித்தாபின் 289பக்கம்17-வதுகண்டத்தின் எச்சரிக்கையின் 12-வது சங்கதியைப் பார்த்துக்கொள்ள.

ஹச்சாஎன்பது என்ன.

(ஹச்சா) என்பது(லிஜ்ஜக்ரிமிஸ்லி ஹச்சில்உன்சயைனி) என்ற வாக்கியத்தின் சுருக்கமாயிருக்கிறது. அதாவது ஆண்பிள்ளைக்கு 2பங்கும், பெண்பிள்ளைக்கு ஒருபங்கும் கொடுக்கப்படுவதற்கு (ஹச்சா)என்றுசொல்லப்படும்.

கத்தே கௌசு என்பது என்ன.

(கத்தே கௌசு) என்பது புரையைப்போல் ஒருகோடு வரிவதற்கு சொல்லப்படும். இது எப்படியென்றால் ◡ இவ்விதமாகத்தான்.

அல்இஹ்யா என்பது என்ன.

(அல்இஹ்யா) என்பது உயிரோடிருக்கிறவர்கள் என்பதேயாம். இது ஒரு கோட்டின் நாமமாயிருக்கிறது. எப்படியென்றால் 1, 2 மய்யத்துகளின், அல்லது பல மய்யத்துகளின் மஸ்அலாக்களை தஸ்ஹீ செய்து அவரவர்களின் வாரிசுகளுக்கு பாகங்கள்கொடுத்துவிட்டதின்பின் இறந்துபோனவர்களை நீக்கி உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களை எழுதவேண்டியதற்காக வரியப்படும் கோட்டின் நாமமாயிருக்கிறது. இந்த கோட்டின்கீழ் ஷெடி உயிரோடிருக்கிறவர்களின் நாமங்கள் எழுதப்படவேண்டும்.

முப்லிகு என்பது என்ன.

(முப்லிகு) என்பது தொகையாம். இது எப்பேர்ப்பட்ட தொகை என்றால் இதுவோ மூவ்வகையான தொகையாயிருக்கிறது. 1-வது வகை கைக்கு வந்த தொகையின் எண்ணிலும், 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் தபாயுன் இருந்தால் அப்போது கைக்கு வந்த தொகையின் எண்ணை 2-வது மஸ்அலாவின் எண்ணோடு பெருக்கவேண்டும். இப்படி பெருக்கினதினால் கூடிவரும் தொகைக்கு (முப்லிகு) என்று பேர். 2-வது வகை ஷெடி கைக்கு வந்த தொகையின் எண்ணிலும் 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் தவாபுக்கு இருந்தால் அப்போது கைக்கு வந்த தொகையின் எண்ணையும் 2-வது மஸ்அலாவின் எண்ணையும் ஆக இந்த 2 எண்களையும் விப்கு செய்யவேண்டும். இப்படி விப்கு செய்து ஷெடி 2-வது மஸ்அலாவின் விப்கின் எண்ணை முதல் மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கினதினால் கூடிவரும் தொகைக்கும்(முப்லிகு)என்று பேர். 3-வது வகை ஷெடி கைக்கு வந்த தொகையின் எண்ணிலும் ஷெடி 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் தமாதுல் இருந்து ஷெடி கைக்குவந்த தொகையின் எண்ணால் 2-வது மஸ்அலாவின் வாரிசுகளுடைய பாகங்கள் பூராவாய் பாகிக்கப்பட்டு போகும்பக்ஷத்தில் முதல் மஸ்அலாவின் தொகையே முப்லிகாயிருக்கிறது. பின்னும் இப்படி 3 வகைகளால் வரும் தொகைகளுக்கு (முப்லிகு) என்று பேர்.

கஅன்லம்யகுன் என்பது என்ன.

(கஅன்லம்யகுன்) என்பது ஒருபோதும் இருந்திருக்கவேயில்லை என்பதேயாம். பின்னும் இது எத்தருணத்தில் எழுதப்படுகிறதென்றால் முதல் இறந்தவனுடைய வாரிசுகளில் எவனாவது ஒருவன் பின் இறந்துபோயிருந்து முதல் இறந்தவனுடையவும், பின் இறந்துபோனவனுடையவும் வாரிசுகள் மாறிப்போகாமல்

அவர்களாகவே இருந்திருப்பார்களானால் அப்போது பாக பிரிவினையில் பின் இறந்துபோனவனுடைய நாமத்தை மற்ற வாரிசுகளுடைய நாமங்களுடன் சேர்த்து மஸ்அலாவின் கீழ் எழுதப்படவேண்டும். இப்படி எழுதின பின் ஷை. 2-வது இறந்துபோனவனுடைய நாமத்தின் கீழ் (கஅன்லம்யகுன்) என்ற வார்த்தையும் எழுதப்படவேண்டும். அதாவது இவன் ஒருபோதும் இருந்திருக்கவேயில்லை என்பதுதான்.

இஸ்திகாமத்து என்பது என்ன.

(இஸ்திகாமத்து) என்பது நிலையாயிருக்கிறது என்பதேயாம். அதாவது கைக்கு வந்த தொகையின் எண்ணால் 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளின் பாகங்கள் முறிப்படாமல் பாகிக்கப்பட்டு போகும் பக்ஷத்தில் அப்படி பாகிக்கப்பட்டு போகிறதென்பதற்கு அடையாளமாக (இஸ்திகாமத்து) என்ற வார்த்தை எழுதப்படுகிறது இதுவோ. 2-வது மஸ்அலாவின் மேல் எழுதப்படுகின்றது இதின் அர்த்தமானது நிலையாயிருக்கிறது, என்பதேயாம். அதாவது வேறே மஸ்அலா செய்யாமலே கைக்கு வந்த தொகையாலேயே 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளின் பாக பிரிவின் நிலையாயிருக்கிறது என்பதேயாம்.

தமாசுல்.

இதில் 2 மஸ்அலாகள் செய்யப்படும். கைக்கு வந்த தொகை இருக்கும். (இஸ்திகாமத்து) இருக்கும்(அல்இஹ்றயா) என்றகோடியிருக்கும்.—2-வது மஸ்அலாவின் எண்ணிலும் இதின் கைக்குவந்த தொகையிலும், தமாசுல் இருந்தால் அப்போது கைக்கு வந்த தொகையின் எண்ணாலேயே 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளின் பாகங்களை பாகித்து கொடுத்துவிடவேணடும்.—ததாகுலிலும, தவாபுகிலும், தபாயுனிலும், பெருக்கல் நேரிடுவதுபோல் இதில பெருக்கல் நேரிடுகிறதில்லை. பின்னும் முதல் மஸ்அலாவின் எண்ணே அல்இஹ்றயாவுல் (முப்லிகு) உடைய எண்ணாக இருக்கும்.

ததாகுலின் முதல்வகை.

2-வது மஸ்அலாவின் எண் பெரிதாயும் கைக்கு வந்த தொகையின் எண் சிறியதாயும் இருந்தால் அப்போது 2-வது மஸ்அலாவின் எண்ணை விப்கு செய்து முதல் மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கினதின் பின் முதல் இறந்துபோனவனுடைய ஒவ்வொரு வாரிசுகளின் பாகங்களை மேற்கண்டபடி பெருக்கி வந்த தொகையுடன் மறுபடியும் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். இவ்வித ததாகுலில் ஒரேஒரு மஸ்அலாவின் எண்ணின் விப்கு இருக்கிறதே ஒழிய தவாபுகில் 2 விப்கு இருக்கிறதுபோல் இதில் 2 விப்கு ஆகிறதில்லை. இதோ மஸ்அலாவின் எண்ணின் விப்காயிருக்கிறது இதில் 2 மஸ்அலாகள் செய்யப்படும் இதில் ஒரேஒரு விப்கு இருக்கும். கைக்கு வந்த தொகையிருக்கும் (அல்இஹ்றயா) என்ற கோடுமிருக்கும். (முப்லிகு) என்ற தொகையுமிருக்கும். (இஸ்திகாமத்து) இருக்கமாட்டாது.

ததாகுலின் 2-வது வகை.

இதில்.2 மஸ்அலாக்கள் செய்யப்படும். இதில் ஒரேவொரு (விப்கு) இருக்கும், கைக்கு வந்த தொகையிருக்கும், (அல்இஹ்றபா) என்ற கோடிருக்கும், (முப்லிகு) என்ற தொகையுமிருக்கும், (இஸ்திக்காமத்து) இருக்கும்.

2-வது மஸ்அலாவின் எண் சிறியதாயும். கைக்கு வந்த தொகையின் எண் பெரியதாயும் இருந்தால் அப்போது தபாயுனிலும், தவாபுகிலும், பெருக்கல் நேரிடுகிறதுபோல் இதில் நேரிடுகிறதில்லை. அதாவது 2-வது மஸ்அலாவின் எண்ணை முதலாவது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டியது அவசியமில்லை. ஆனால் ஷை. கைக்குவந்த தொகையை மாத்திரம் விப்கு செய்ய வேண்டும். பின்னும் இப்படி விப்கு செய்து 2-வது இறந்துபோனவனுடைய ஒவ்வொரு வாரிசுகளின் பாகங்களை ஷை. விபகில் பெருக்கி 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுத்துவிடவேண்டும். இவ்வித ததாகுலில் ஒரேவொரு கைக்கு வந்த தொகையின் விப்கு இருக்கிறதேயொழிய தவாபுகில் 2 விப்கு இருக்கிறதுபோல் இதில் 2 விப்கு ஆகிறதில்லை. இதோ கைக்கு வந்த தொகையின் விப்காயிருக்கிறது.

தவாபுக்கு.

இதில் 2மஸ்அலா செய்யப்படும். இதில் 2 விப்குகளிருக்கும். கைக்கு வந்த தொகையிருக்கும், (அல்இஹ்றயா) என்ற கோடுமிருக்

கும், (முப்லிகு) என்ற துகையுமிருக்கும், (இஸ்திக்காமத்து) இருக்க மாட்டாது. இதில் கைக்குவந்த துகையின் விப்கும் மஸ்அலாவின் துகையின் விப்கும் செய்யப்படவேண்டும்.

2-வது மஸ்அலாவின் எண்ணிலும், கைக்கு வந்த துகையின் எண்ணிலும் தவாபுக்கு இருந்தால் அப்போது 2-வது மஸ்அலாவின் விப்கை 1-வது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கினதின்பின் முதல் இறந்துபோனவனுடைய ஒவ்வொரு வாரிசின் பாகங்களை 2-வது இறந்துபோனவனுடைய மஸ்அலாவின் விப்குடன் அதாவது பேர்ப்பாதியான விப்கு, அல்லது ⅓ ஆன விப்குடன் பெருக்கி முதலாவது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு கொடுத்துவிடவேண்டும்.

பின்னும் 2-வது இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின் பங்குகளை கைக்குவந்த துகையின் விப்குடன் பெருக்கி 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் இதில் கைக்கு வந்த துகையின் விப்கும், மஸ்அலாவின் எண்ணின் விப்குமாக 2 விப்குகள் இருக்கின்றன.

தபாயுன்.

இதில் 2 மஸ்அலா செய்யப்படும். இதில் விப்கு இல்லை. இதில் கைக்கு வந்த துகையிருக்கும். (அல்இஹ்றபா) என்ற கோடிருக்கும் (முப்லிகு) என்ற துகையுமிருக்கும்.—2-வது மஸ்அலாவின் எண்ணிலும் கைக்கு வந்த துகையின் எண்ணிலும் தபாயுன் இருந்தால் அப்போது முதல் மஸ்அலாவின் எண்ணுடன் 2-வது மஸ்அலாவின் எண்ணை பெருக்கவேண்டும். இப்படி பெருக்கினதின் பின் முதல் இறந்துபோனவனுடைய ஒவ்வொரு வாரிசின் பங்குகளை 2-வது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கி முதலாவது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் 2-வது இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின் பங்குகளை கைக்கு வந்த துகையுடன் பெருக்கி 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும்.

1-வது மஸ்அலாவின்மேல் எழுதப்படவேண்டியவைகள்.

முதல் மஸ்அலா தஸ்ஹீ செய்யும்போது இதின் வாரிசுகளின் நாமங்கள் வரிசையாயெழுதவேணும் பின்னும் இந்த மஸ்அலாவின்மேல் மய்யத்தின் பேரும் மஸ்அலாவின் துகையும் எழுதவேண்டும். பின்னும் 2-வது இறந்துபோனவனுக்கு முதல் இறந்துபோனவனுடைய சொத்தால் கிடைத்த துகையின் கீழ் (கத்தே சௌக) என்ற புரையைப்போலொத்த ஒரு கோடு வரையவேண்டும். ⌣ ஏனெனில் பெருக்கும்போது பிசகு வாராமல் இருக்க வேண்டியதற்காகவே அப்படி வரையவேண்டும்.

2-வது மஸ்அலாவின்மேல் எழுதப்படவேண்டியவைகள்.

2-வது இறந்துபோன அதாவது பின் இறந்துபோனவனுடைய மஸ்அலா தஸ்ஹீ செய்யும்போது இதின் வாரிசுகளின் நாமங்கள் வரிசையாக எழுதவேண்டும். பின்னும் அந்த மஸ்அலாவின்மேல் பின் இறந்துபோனவனுடைய பேர் எழுதவேண்டும். பின்னும் இதின் பக்கத்தில் பின் இறந்துபோனவனுக்கு முன் இறந்துபோனவனால் கிடைத்த பாகத் துகையின் இலக்கத்தையும், எழுதவேண்டும். பின்னும் ஷெடி கைக்கு வந்த துகையின் எண்ணிலும், 2-வது மஸ்அலாவின் எண்ணிலும், 4 வகைகளில் முதல் வகையாகிய தமாசுல் இருந்தால் அப்போது கைக்கு வந்த துகையின் எண்ணுக்கும் 2-வது மஸ்அலாவின் துகைக்கும், மத்தியில் (இஸ்திகாமத்து) என்ற வார்த்தையை எழுதவேண்டும். ஏனெனில் இதுவோ கைக்கு வந்த துகையின் எண்ணிலேயே பாகம் முறிப்படாமல்சரியாய்ப்பாகிக்கப்பட்டன என்பதாகும். மேற்கண்ட இந்த மஸ்அலாவில் தமாசுல் இருக்கிறதென்பதற்கும் அடையாளமாயிருக்கும்.—பின்னும் இப்படிக்கு தமாசுல் இல்லாதிருந்து ஷெடி கைக்கு வந்த துகையின் எண்ணிலும், 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் 4-வது வகையாகிய தபாயுன் இருந்தால் அப்போது கைக்கு வந்த துகையின் எண்ணுக்கும், 2-வது மஸ்அலாவின் துகைக்கும் மத்தியில் தபாயுன் என்ற வார்த்தையை எழுதவேண்டும். இவை எல்லாம் 2-வது மஸ்அலாவுக்கு மேல் எழுதவேண்டும்.

அறிக்கை.

1-வது 2-வது மய்யத்துகளின் மஸ்அலாகளை சேர்த்து தஸ்ஹீ செய்யும்போது முதல் மய்யத்தின் மஸ்அலாவில் வந்தவர்கள் 2-வது மய்யத்தின் மஸ்அலாவிலும் வந்திருந்தால் அப்போது இவர்களுக்கு 2 மய்யத்துகளின் மூலமாய் 2-வித பாகம் கிடைக்கும். இந்த இரண்டையும் சேர்த்து கூட்டி இவர்களின்நாமத்துடன் (அல்இஹ்றபா)

என்ற கோட்டின் கீழ் எழுதவேண்டும். பின்னும் இப்படிக்கு முதல் மய்யத்தின் மஸ்அலாவில் வந்தவர்கள் 2-வது மய்யத்தின் மஸ்அலாவில் வந்திருவிட்டால், அப்போது இவர்களுக்கு ஒரேவித பாகம் கிடைக்கும். இந்த ஒரே ஒருவித பாகத்தை இவர்களின் நாமத்துடன் (அல்இஹ்யா) என்ற கோட்டின் கீழெழுதவேண்டும். பின்னும் எவன் ஒருவன் முதல் மய்யத்துடையவும், 2-வது மய்யத்துடையவும், வாரிசாயிருந்து ஷை 2 மஸ்அலாக்கள் மூலமாய் பாகத்தையும் அடைந்திருந்து இவன் 3-வது மய்யத்தாய்விட்டால் அப்போது இவனுக்கு 2-விதமாக கிடைத்த பாகத் தொகைகள் எவைகளோ அவைகளை மொத்தம் கூட்டி இந்த மொத்த தொகையை ஷை. மய்யத்தின் கோட்டின்மேல் கைக்கு வந்த தொகை என்று எழுதவேண்டும். பின்னும் இப்படியே எவன் ஒருவன் 1, 2, 3 மய்யத்துகளின் சொத்துகளை அடைந்து இவன் 4-வது மய்யத்தாயிருந்தால் இவனுக்கு மூன்று மய்யத்துகளாலும், கிடைத்த பாகங்களை கூட்டி கைக்கு வந்த தொகையென்று இவனுடைய கோட்டின்மேல் எழுதவேண்டும்.

முனாசிகாவின் காயிதாக்கள் 10 இருக்கின்றன.

1-வது காயிதா.

தாயபாகம் அடைவதற்குமுன் இறந்துபோனவனுடைய வாரிசுகள் எவர்களோ அவர்களே முதல் இறந்துபோனவர்களின் வாரிசுகளாயிருந்து பின் இறந்துபோனவனுடைய மரணத்தால் ஷை வாரிசுகளின் தாய பாகத்துக்கு யாதொரு விதமான குறைவுதலாவது யாதொரு விதமான பேதகமாவது நேரிடாமலிருந்தால் அப்போது ஒரேஒரு பாக பிரிவினை போதுமானதாயிருக்கும். அதாவது முன் இறந்துபோனவனுடைய தாயபாக பிரிவினை மாத்திரம் செய்தால் போதுமானதாயிருக்கும். 2-வது பிரிவினை மஸ்அலா செய்யவேண்டியதில்லை. இதற்கு உதாரணம்.

மய்யத்து சைது. மஸ்அலா 4	புத்திரன்	புத்திரன்	புத்திரி	புத்திரி
	ரஹீம்	கரீம்	ரஹீமா	கரீமா
	கஅன்லம்யகுன அதாவது இருந்திருக்கவேயில்லை	2	1	1

இந்த உதாரணத்தில் முதல் இறந்துபோனசைது என்பவனுக்கு ரஹீம் என்ற ஒரு புத்திரனும கரீம் என்ற ஒரு புத்திரனும் ரஹீமா என்ற ஒரு புத்திரியும். கரீமா என்ற ஒரு புத்திரியும், இருந்தார்கள். இப்படி இருக்கும்போது ஷை சைது என்பவனுடைய சொத்து பிரிவினையாவதற்கு முன்னமே ரஹீம என்ற புத்திரன் இறந்துபோய்விட்டான். இவனுக்கு வேறே வாரிசுகள் இல்லாமல் மேல் கண்டவர்களே வாரிசுகளாயிருக்கிறார்கள். எப்படி என்றால் இதற்கு உதாரணம்.

மய்யத்து ரஹீம், மஸ்அலா 4	சகோதரன்	சகோதரி	சகோதரி
	கரீம்	ரஹீமா	கரீமா
	2	1	1

வியாக்கியானம்.

பின் இறந்துபோன ஷை ரஹீம் என்பவனுக்கு கரீம் என்ற ஒருவன் சகோதரனும் ஷை ரஹீமா, கரீமா என்ற 2 சகோதரிகளாயும் இருக்கிறார்கள். ஷை முன் இறந்துபோன சைது என்பவனுடைய சொத்து பாக பிரிவினையிலும் பின் இறந்துபோன ரஹீமுடைய சொத்து பாக பிரிவினையிலும் ஆக இந்த 2 பிரிவினைகளிலும் ஷை கரீம் என்பவனுக்கும் ரஹீமா என்பவளுக்கும் கரீமா என்பளுக்கும் ஒருப்படி பேதகமில்லை, அதாவது பெண்பிள்ளைக்கு கிடைக்கும் பாகத்துக்கு இரட்டிப்பு ஒரு ஆண்பிள்ளைக்கு உண்டென்ற வகைப்படி 2 மஸ்அலாக்களிலும் ஏற்றத்தாழ்சி இல்லாமல் ஷை வாரிசுகளுக்குகிடைக்கிறபடியால் ஷை முன் இறந்துபோன சைது என்பவனுடைய வகைப்படியே ஒரேயொரு மஸ்அலா செய்து பாகிப்பது போதுமானதாயிருக்கிறது. 2-வது மஸ்அலா செய்யவேண்டியது அவசியமில்லை, பின்னும் இப்படி ஒரேயொரு மஸ்அலா செய்யும்போது இறந்துபோன புத்திரனாகிய ரஹீமுடைய நாமமும், மற்ற வாரிசுகளின் நாமங்களோடே சேர்த்து மஸ்அலாவின்கீழ் எழுதி ஷை ரஹீமுடைய நாமத்தின் கீழ் இருந்திருக்கவில்லை என்ற வார்த்தையையும் எழுதவேண்டும். பின்னும் மஸ்அலா 4-ஆல் செய்து உயிரோடிருக்கிற புத்திரனாகிய கரீம் என்பவனுக்கு 2 பாகமும், உயிரோடிருக்கிற புத்திரியாகிய ரஹீமா

என்பவளுக்கு ஒரு பாகமும், பின்னும் உயிரோடிருக்கிற புத்திரியாகிய கரீமா என்பவளுக்கு ஒரு பாகமும் பாகித்து கொடுத்துவிட்டு இந்த பாகங்களை அவரவர்களின் நாமங்களின் கீழ் எழுத வேண்டும்.

2-வது காயிதா.

பின் இறந்துபோனவனுடைய வாரிசுகள் எவர்களோ அவர்கள் முன் இறந்துபோனவனுடைய வாரிசுகளாகவே இருந்து பின் இறந்தவனுடைய மரணத்தால் வாரிசுகளின் பாகப்பிரிவினை இதின் 1-வது காயிதாப்படி இருந்திராமல் மாறிப்போகிறதாயிருந்தால் அப்போது ஒரேவொரு மஸ்அலா தஸ்ஹீசெய்வது போதாது. 2 மய்யத்தின் மஸ்அலாக்களை தஸ்ஹீசெய்யவேண்டும். அதாவது முன் இறந்துபோனவனுடைய மஸ்அலாவை தஸ்ஹீசெய்து அவனுடைய வாரிசுகளுக்கும், 2-வது மய்யத்தின் மஸ்அலாவை தஸ்ஹீ செய்து இவனுடைய வாரிசுகளுக்குமாக பாகித்துக் கொடுத்துவிடவேண்டும். உதாரணம்.

1-வது மய்யத்து.

மய்யத்து சைது, மஸ்அலா 5
புத்திரன்....புத்திரி..புத்திரி...புத்திரி
சயீது.......சயீதா,.ஹமீதா...மஜீதா
முதல்பத்னியால..............2-வது பத்னியால
2 —— 1 —— 1. —— 1

2-வது மய்யத்து.

மய்யத்து சயீதா, மஸ்அலா 3
சகோதரி....சகோதரி....பின்னோதரன்
ஹமீதா......மஜீதா......சயீது
3-ல்2 மிகுதி
1 —— 1 —— 1

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் சயீது என்பவன் முதல் ஸ்திரி புத்திரனையும், சயீதா, ஹமீதா, மஜீதா 2-வது ஸ்திரி புத்திரிகளாயுமிருக்கிறார்கள். பின்னும் பின் இறந்து போனவளுடைய வாரிசுகளே முன் இறந்துபோனவனுடைய வாரிசுகளாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களின் பாகங்களை மாத்திரம் ஏற்றத்தாழ்ச்சியாய்விட்டது. அதாவது மாறிப்போய்விட்டது. இது எப்படி மாறிப்போய்விட்டதென்றால் முதல் மஸ்அலாவில் சயீது என்பவன் முன் இறந்துபோன தன் தகப்பனாகிய சைது என்பவனுக்கு புத்திரனும் மற்ற புத்திரிகளுடன் சேர்ந்து (ஹச்சா) பெற்றுக்கொள்ளத் தக்கவனுமாயிருந்தான். ஆனால் 2-வது மஸ்அலாவிலோ இவன் அதாவது சயீது என்பவன் அப்படிக்கு (ஹச்சா) பெற்றுக்கொள்ளத் தக்கவனாயிருந்திராமல் இறந்தவளுடைய சகோதரிகளுக்கு சேரவேண்டியபாகமாகிய 3-ல்2 போக மீதியிருப்பதை பெற்றுக்கொள்ளத்தக்க மிகுதிக்காரனாய்போனான். ஏனெனில் இவன் இறந்தவளாகிய சயீதாவுக்கு சகோதரனாயிருந்திராமல் பின்னோதரனாயிருக்கிறான். இவன் சகோதரனாயிருந்திருப்பானானால் அப்போது (ஹச்சா) பெற்றுக்கொள்ளத்தக்கவனாயிருந்திருப்பான். இப்படி சகோதரனாயிருந்திராமல் பின்னோதரனாயிருக்கிறான். ஆகையால் முன் இறந்துபோன சைது என்பவனுடைய மஸ்அலாவின் பாகப்பிரிவினை பிரத்தியேகமாகவும், 2-வது இறந்துபோன சயீதா என்பவளுடைய மஸ்அலாவின் பாகப்பிரிவினை பிரத்தியேகமாகவும் போய்விட்டது. ஆதலால் முதல் இறந்தவனுடைய மஸ்அலா வேறாகவும், 2-வது இறந்தவளுடைய மஸ்அலா வேறாகவும் செய்யப்பட்டு அவரவர்களுடைய வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது முதல் இறந்துபோன சைது என்பவனுடைய மஸ்அலா 5-ஆல் செய்து அவனுடைய முதல் ஸ்திரீ புத்திரனாகிய சயீது என்பவனுக்கு 2 பாகமும், 2-வது ஸ்திரீ புத்திரிகளாகிய சயீதா என்பவளுக்கு 1 பாகமும், 2-வது புத்திரியாகிய ஹமீதா என்பவளுக்கு ஒரு பாகமும், 3-வது புத்திரியாகிய மஜீதா என்பவளுக்கு ஒரு பாகமும் கொடுக்கப்பட்டன.

பின்னும் முதல் மஸ்அலாவின்மேல் முதல் இறந்தவனுடைய நாமம் சைது என்றும், மஸ்அலாவின் எண் 5 என்றும் எழுத வேண்டும். பின்னும் ஷை மஸ்அலாவின்கீழ் முதல் இறந்தவனுடைய புத்திரன் சயீது என்றும், புத்திரி சயீதா என்றும், பின்னும் புத்திரி ஹமீதா என்றும், பின்னும் புத்திரி மஜீதா என்றும் எழுதி இவர்களின் நாமங்களின்கீழ் இவர்களின் பாகங்களை எழுத

வேண்டும். அதாவது சயீது என்பவனுக்கு 2, சயீதா என்பவளுக்கு 1, ஹமீதா என்பவளுக்கு 1, மஜீதா என்பவளுக்கு 1. என்று எழுதவேண்டும்.

பின்னும் 2-வது மஸ்அலாவின்மேல் 2-வது இறந்துபோனவளுடைய நாமம் சயீதா என்றும், மஸ்அலாவின் எண் 3 என்றும் எழுதவேண்டும். பின்னும் ஷை மஸ்அலாவின்கீழ் 2-வது இறந்துபோனவளுடைய சகோதரி ஹமீதா என்றும், பின்னும் சகோதரி மஜீதா என்றும், பின்னும் பின்னோதரன் சயீது என்றும் எழுதி இவர்களின் நாமங்களின்கீழ் இவர்களின் பாகங்களை எழுதவேண்டும். அதாவது ஹமீதாவுக்கு 1, மஜீதாவுக்கு 1, சயீது என்பவனுக்கு 1. என்று எழுதவேண்டும். பின்னும் இதில் (இஸ்திக்காமத்து) என்ற சொல்லாவது கைக்குவந்த துகை என்றாவது (அல்இஹ்யா வல்முப்லிகு) என்றாவது எழுதவேண்டியதில்லை.

பின்னும் 2-வது இறந்துபோன சயீதா என்பவளுடைய மஸ்அலா பிரத்தியேகமாக 3-ஆல் செய்யப்பட்டது. ஏனெனில் இவள் சகோதரிகளாகிய ஹமீதா என்பவளுக்கும், மஜீதா என்பவளுக்கும் ஷறுப்படி சேரவேண்டிய பாகமானது மொத்தசொத்தில் 3-ல் 2-ஆக இருக்கிறபடியால் மஸ்அலா 3-ல் செய்து ஹமீதா என்பவளுக்கு ஒருபாகமும், மஜீதா என்பவளுக்கு ஒரு பாகமும் பின்னோதரனாகிய சயீது என்பவனுக்கு மீதமிருக்கும் ஒன்றும் கொடுக்கப்பட்டது.

அறிக்கை.

பின் இறந்துபோனவனுடைய வாரிசுகள் மூன் இறந்துபோனவனுடைய வாரிசுகளாகவேயிருந்து இவர்களின் பாகப்பிரிவினையில் ஏதேனும் ஏற்றத்தாழ்ச்சி இருந்தாலும் சரி. அல்லது பின் இறந்தவனுடைய வாரிசுகள் முன் இறந்துபோனவனுடைய வாரிசுகளாயிருந்திராமல் பாகப்பிரிவினையில் வேறுபாடாயிருந்தாலும் சரி. இந்த 2வகையிலும் முதல் மஸ்அலாவை தஸ்ஹீசெய்து முதல் இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிட்டு பின் இறந்தவனுடைய மஸ்அலாவையும் தஸ்ஹீசெய்து 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை பிரித்து கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின்பின் (மாயின்னத்) என்று சொல்லப்படும். கைக்குவந்த துகையின் எண்ணானது 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளுக்கு சரியாய் பாகிக்கப்பட்டுபோகிறதா, இல்லையா என்று பார்க்கவேண்டும். இப்படி பார்ப்பதில் சரியாய் பாகிக்கப்பட்டுபோகிறதாயிருந்தால் அப்படி பாகித்துவிட்டு (இஸ்திக்காமத்து) என்றவாக்கியத்தை ஷை 2-வது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். பின்னும் இப்படி சரியாய் பாகிக்கப்பட்டுபோவது 2 சங்கதிகளில் மாத்திரம்தான் சம்பவிக்கும். 1-வது சங்கதி, கைக்குவந்த துகையின் எண்ணிலும் 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் தமாசுல் இருக்கவேண்டும். 2-வது சங்கதி, ஷை 2 எண்களிலும் ததாகுலிருந்து ஷை கைக்குவந்த துகையின் எண்ணானது ஷை 2-வது மஸ்அலாவின் எண்ணைவிட பெரிதாயிருக்கவேண்டும்.

பின்னும் 2-வது இறந்தவனுக்கு முதல் இறந்தவனால் வந்த துகையிலும், 2-வது மஸ்அலாவின் துகையிலும் தமாசுலாவது, ததாகுலாவது, தவாபுகாவது, தபாயுனாவது இருக்கவேணும். இப்படிக்கு யிருந்தால் அப்போது (அல்இஹ்யாவல்முப்லிகு) என்ற கோடு வரியப்படும்.

எச்சரிக்கை.

(அல்இஹ்யாவல்முப்லிகு) என்ற கோடு எத்தருணத்தில் வரியப்படுகிறதென்றால் 2 மஸ்அலாக்கள் பிரத்தேகமாக செய்யப்படவேண்டும். பின்னும் முதல் இறந்தவனுடைய வாரிசுகளும் பின் இறந்தவனுடைய வாரிசுகளும் ஆக இருமஸ்அலாக்களின் வாரிசுகளும் இருந்திருக்கவேண்டும். பின்னும் இக்கோட்டின் கீழ் ஷை இரு மஸ்அலாக்களிலும் உயிரோடிருக்கிற வாரிசுகளின் நாமங்கள் எழுதப்படவேண்டும். இந்த நாமங்களின்கீழ் அந்தந்த வாரிசுகளின் பங்குகள் எழுதப்படவேண்டும்.

(இஸ்திக்காமத்து) என்ற சொல்லெத்தருணத்தில் எழுதப்படுகிறதென்றால் 2 மஸ்அலாக்கள் பிரத்தேகமாக செய்யப்படவேண்டும். பின்னும் 2-வது இறந்துபோனவனுக்கு முன் இறந்துபோனவனுடைய சொத்தால் பாகம் கிடைத்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட பாகத் துகைக்கு கைக்குவந்த துகை என்று பேர். இத்துகையின் எண்ணால் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளின் பாகங்கள் பாகிக்

சப்பட்டிருக்கவேண்டும். அதகருணத்தில் 2-வது மஸ்அலாவின் மேல் (இஸ்திக்காமத்து) என்றசொல் எழுதப்படவேண்டும்.

கைக்குவந்த துகை என்ற சொல் எத்தருணத்தில் எழுதப்படுகிறதென்றால் 2 மஸ்அலாக்கள் பிரத்தேகமாக செய்யப்பட்டிருக்க வேண்டும். பின்னும் முதல இறந்தவனுடைய சொத்தால் 2-வது இறந்தவனுக்கு பாகம் கிடைத்திருக்கவேண்டும். இப்படி கிடைத்த பாகத்துக்குதான் கைக்குவந்த துகை என்று பேர். இந்த சொல்லை 2-வது மஸ்அலாவின்மேல் எழுதி இதின் எண்ணையும் எழுத வேண்டும்.

தவாபுக்கு என்றாவது, தபாயுன் என்றாவது, விப்கு என்றாவது இவைகள் எத்தருணத்தில் எழுதப்படுகின்றன என்றால் 2 மஸ்அலாக்கள் பிரத்தேகமாக செய்யப்படவேண்டும். பின்னும் இப்படி மஸ்அலா செய்யப்பட்டு முதல் இறந்துபோனவனுடைய சொத்தால் 2-வது இறந்துபோனவனுக்கு பாகம் கிடைத்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட துகைக்கு கைக்குவந்த துகை என்று பேர். இந்த துகையிலும், 2 வது இறந்தவனுடைய மஸ்அலாவின் எண்ணிலும் எந்தவகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படிப் பார்ப்பதில் தபாயுன் என்றாவது, தவாபுக்கு என்றாவது, விப்கு என்றாவது காணப்பட்டால் எந்த வகைக் காணப்பட்டதோ அந்த வகையை 2-வது மஸ்அலாவின் மேல் எழுதவேண்டும்.

ஷெ அறிக்கையில்கண்ட 2 சங்கதிகளில்தான் கைக்குவந்த துகையின் எண் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்கள் முறிப்படாமல் சரியாய்பாகிக்கப்பட்டுபோகும். பின்னும் இந்த 2 விஷயங்களில் தபாயுனிலும், தவாபுகிலும் பெருக்கல் சேரிடுகிறதுபோல் பெருக்கல் சம்பவிக்கிறதில்லை, பெருக்கவேண்டியதில்லை. பின்னும் கைக்குவந்ததுகையின் எண்ணானது பின் இறந்துபோனவனுடைய வாரிசுகளின்பேரில் பாகிக்கப்படாமல் போகும்பக்ஷத்தில் 2-வது மஸ்அலாவின் தஸ்ஹீயின் துகையிலும், கைக்குவந்த துகையின் எண்ணிலும் 4 வகைகளில் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படிப் பார்த்ததில் 4 வகைகளில் எந்தவகையாவது இருந்திராமல் போகாது ஒரு வகையாவது இருந்திருக்கும். அதாவது தமாசலாவது, தவாபுக்காவது, தபாயுனாவது இருந்திருக்கும். ஒருவேளை

தமாசுல் இருந்தால் மேலே எழுதிவந்திருக்கிற தமாசுலின் வகைப்படி அமல் செய்யவேண்டும். ஒருவேளை ததாகுல் இருந்தால் மேலே எழுதிவந்திருக்கிற ததாகுலின் வகைப்படி அமல் செய்யவேண்டும். பின்னும் ஒருவேளை தவாபுக்கு இருந்தால் மேலே எழுதிவந்திருக்கிற தவாபுக்கின வகைப்படி அமல் செய்யவேண்டும். பின்னும் ஒருவேளை தபாயுன் இருந்தால் மேலே எழுதிவந்திருக்கிற தபாயுன் வகைப்படி அமல் செய்யவேண்டும்.

3-வது காயிதா. தமாசுல்.

பின் இறந்துபோனவனுடைய வாரிசுகள் எவர்களோ அவர்கள் முன் இறந்துபோனவனுடைய வாரிசுகளாக இருந்திராமற் போனால் அப்போது 2 மஸ்அலாக்கள் செய்து அவரவர்களுடைய வாரிசுகளின் பாகங்களை கொடுத்துவிட்டு அப்பால் 2-வது இறந்தவனுக்கு முதல் இறந்தவனால் கிடைத்த துகை என்று சொல்லப்படும். கைக்குவந்த துகையின் எண்ணிலும், 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவின் எண்ணிலும் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். அப்படி பார்ப்பதில் தமாசுல் இருந்தால் அப்போது இதற்கு முன் எழுதிவந்திருக்கிற தமாசுலின் வகைப்படி கைக்குவந்த துகையின் எண்ணால் 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளின் பாகங்கள் பாகிக்கப்பட்டு போகும், இவ்விஷயத்தில் அப்படிக்கு பாகித்துவிட்டு (இஸ்திக்காமத்து) என்ற சொல்லையும், கைக்கு வந்த துகையையும், மஸ்அலாவின் துகையையும், இறந்தவனுடைய நாமத்தையும் 2-வது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும்.

தமாசுலின் உதாரணம்.

மய்யத்து சைதா, மஸ்அலா 4

பத்னி.....	பிதாவின் சகோதரன்
ஹலீமா....	கரீம்
$\frac{1}{4}$	மிகுதி
1 ——	3

மய்யத்து கரீம், மஸ்அலா 3. இஸ்திகாமத்து, கைக்குவந்த துகை 3

புத்திரன்........	புத்திரி
ரஹீம்..........	ரஹீமா
2 ——	1

(அல்இஹ்யாஉல்முப்லிகு) அதாவது உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களும் பாகங்களும }
முப்லிகு 4
ஹலீமா...ரஹீம்...ரஹீமா
1 2 1

இதில் 2 மஸ்அலாக்கள் செய்யப்படும். கைக்கு வந்த தொகையிருக்கும், (இஸ்திக்காமத்து) இருக்கும், (அல்இஹ்யாவுல்முப்லிகு) என்ற கோடிருக்கும். (முப்லிகு) என்ற தொகையுமிருக்கும். முதல் மஸ்அலாவின் எண்ணும் 4, முப்லிகின் எண்ணும் 4.

வியாக்கியானம்.

முதல்இறந்துபோனசைது என்பவனுக்கு ஹலீமாஎன்றஒருபத்னியும், கரீம் என்ற ஒரு சிற்றப்பனுமிருந்தான். இவர்களில் ௸ பத்னிக்கு $\frac{1}{4}$-ம், சிற்றப்பனுக்கு மிகுதியும் ஷறுப்படி கிடைக்கும். ஆகையால் மஸ்அலா பத்னியின் பாகமாகிய 4-ஆல் செய்து பத்னிக்கு $\frac{1}{4}$-க்கு ஒருபாகம் கொடுத்துவிட்டு மீதமிருக்கிற 3 பிதாவின் சகோதரனாகிய கரீம் என்பவனுக்கு கொடுக்கப்பட்டது. இவ்விருவர்களின் பாகங்கள் இவ்விருவர்களின்நாமங்களின்கீழ் எழுதவேண்டும், மஸ்அலாவின்மேல் மரணமடைந்தவனுடைய நாமத்தையும் அதின் பக்கத்தில் மஸ்அலாவின் எண்ணாகிய நாலையும் எழுதவேண்டும். பின்னும் பின் இறந்துபோனவனாகிய ௸ கரீம் என்பவனுக்கு ரஹீம் என்ற ஒரு புத்திரனும், ரஹீமா என்ற ஒரு புத்திரியுமிருக்கிறார்கள். பின்னும் கரீம் என்பவனுக்கு முன் இறந்துபோனவனால் கிடைத்த பாகமென்று சொல்லப்படும் கைக்குவந்த தொகையின் எண்ணாகிய 3-உம், 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 3-உம் தமாசல் இருக்கிறபடியால் ௸ 3 முரிப்படாமல் 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளாகிய ரஹீம் என்ற புத்திரனுக்கும், ரஹீமா என்ற புத்திரிக்கும் பாகிக்கப்பட்டு போகிறது. ஆகையால் 1-வது மஸ்அலாவின் எண்ணை 2-வது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்காமலே ௸ கைக்குவந்ததொகையின் எண்ணாகியமூன்றை3பாகமாக்கி புத்திரனுக்கு 2 பாகமும், புத்திரிக்கு ஒரு பாகமும் கொடுத்துவிடப்பட்டது. இந்த 2-வது மஸ்அலாவின்மேல் 2-வது இறந்தவனுடைய பேர் கரீம் என்றும், 2-வது மஸ்அலாவின் தொகை 3 என்றும் கைக்குவந்த தொகை 3 என்றும் எழுதவேண்டும். பின்னும் கைக்குவந்த தொகையால் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளின் பாகங்கள் பாகிக்கப்பட்டுபோய்விட்டதென்பதற்கு அடையாளமாக(இஸ்திக்காமத்து) என்ற சொல்லையும்எழுதவேண்டும். பின்னும் (அல்இஹ்யாவுல்முப்லிகு) என்ற கோடும் எழுதப்பட்டது.

4வது காயிதா ததாகுலில் 1-விதம்.

2-வது இறந்தவனுக்கு முதல் இறந்தவனால் கிடைத்த தொகையின் எண்ணினும், 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவின எண்ணினும், 2-வது வகையாகிய ததாகுலாயிருந்து ௸ கைக்கு வந்த தொகையின் எண்ணானது 2-வது மஸ்அலாவின் எண்ணைவிட பெரிதாயிருக்கவேணும். அப்போது ௸ கைக்குவந்த பெரியஎண்ணால் 2-வது மய்யத்துடைய வாரிசுகளின் பாகங்கள் பாகிக்கப்பட்டுபோகும். பின்னும் முதலாவது மஸ்அலாவை தஸ்ஹீ செய்து முதல் இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகித்து விடவேண்டும். அப்பால் 2-வது மஸ்அலாவையும் தஸ்ஹீ செய்து 2-வது இறந்தவனுடைய பாகங்களையும் பாகித்து கொடுத்துவிடவேண்டும். ஆனால் கைக்குவந்த தொகையின் எண்ணானது 2-வது மஸ்அலாவின் எண்ணைவிட பெரிதாயும் வாரிசுகளின்பேரில் இது சரியாய் பாகிக்கப்பட்டுபோகிறதென்பதற்கு அடையாளமாக (இஸ்திக்காமத்து) என்ற சொல்லையும், கைக்குவந்த தொகையின் எண் இன்னதென்றும் 2-வது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். ௸ கைக்குவந்த தொகையினும், 2-வது மஸ்அலாவின் எண்ணினும் ததாகுல் இருக்கிறபடியால் இதற்குமுன் எழுதிவந்திருக்கிற ததாகுல காயிதாப்படி அமல் செய்யவேண்டும். உதாரணம்.

மய்யத்து சைது, மஸ்அலா 24
பத்னி......புத்திரி......புத்திரி......பிதாவின் சகோதரன்
ரஷீதா......ஹமீதா......மஜீதா........ரஹீம்
$\frac{1}{8}$ 3-க்2 மிகுதி
3 — 8 — 8 — 5

மய்யத்து ஹமீதா, மஸ்அலா 4 இஸ்திகாமத்து, கைக்கு வந்த தொகை 8 இதின் விப்கு 2
பதி..........புத்திரன்
காலித்.........உமரு
$\frac{1}{4}$.............மிகுதி
மஸ்அலாபடி 1 — 3
விப்கின்படி 2 — 6

அல்இஹ்பாவுல் முப்லிக அதாவது உயிரோடிருக்கிறவர்களின்நாமங்களும் பாகங்களும்	முப்லிகு 24				
	ரஷீதா	மஜீதா	காலிது	உமரு	ரஹீம்
	3	8	2	6	5

முதல் மஸ்அலாவின் எண்ணும் 24, முப்லிகின் எண்ணும் 24,

வியாக்கியானம்.

முதல் இறந்துபோனவனுடைய மஸ்அலா 24-ஆல் செய்து அவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடப்பட்டது. எப்படியென்றால் 24 இருபத்திநாலை பதியின் பாகமாகிய 8-ஆல வகுத்து அவளுக்கு 3 பாகம் கொடுக்கப்பட்டது. பின்னும் 2 புத்திரிகளுக்கு ஷரூப்படி மொத்த சொத்தில் 3-ல் 2 இருக்கிறபடியால் ஷை 24 இருபத்திநாலை 3-ல் 2 பாகமாக்கினதில் 16 வந்தது. ஒவ்வொரு புத்திரிக்கு 8, 8 கொடுக்கப்பட்டது. பின்னும் பாக்கியிருக்கிற 5 சிற்றப்பனுக்கு கொடுக்கப்பட்டது.

பின்னும் 2-வது இறந்தவனுடைய கைக்குவந்த தொகையை விப்கு செய்யவேண்டும். பின்னும் இவனுடைய ஒவ்வொரு வாரிசின் பாகத்தை மேற்கண்ட கைக்குவந்த தொகையின் எண்ணுடைய விப்கில் பெருக்கி அவரவர்களுக்கு அவரவர்களின் பாகங்களை கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் 2-வது இறந்துபோனவனுடைய மஸ்அலாவின் எண்ணானது 4 ஆகவும், இவனுக்கு கைக்கு வந்த தொகையின் எண்ணானது 8-ஆகவுமிருக்கிறது. ஆகையால் இந்த 8-உம், 4-உம், 2-வது வகையாகிய ததாகுல் இருக்கிறபடியால் 8-ன் விப்கு 2-ஆக யிருக்கிறது. 8÷4=2. இப்படி கைக்கு வந்த தொகையின் விப்கு 2 இந்த இரண்டை 2-வது இறந்துபோனவனுடைய பதியாகிய காலிது என்பவனுக்கு 2-வது மஸ்அலாப்படி வந்த பாகமாகிய ஒன்றில் பெருக்கவேண்டும். 2×1=2. இப்படி பெருக்கிவந்த தொகையானது 2-ஆக யிருக்கிறது. இந்த 2தான் ஷை காலிது என்பவனுடைய பாகம் இந்த இரண்டை அவனுடைய நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் இப்படியே 2-வது இறந்துபோனவனுடைய புத்திரனாகிய உமரு என்பவனுக்கு கிடைத்த பாகம்3 இந்தமூன்றைஷை கைக்குவந்த தொகையின் எண்ணுடைய விப்காகிய 2-ல் பெருக்கவேண்டும். 3×2=6. இப்படி பெருக்கிவந்த தொகையானது 6-ஆகயிருக்கிறது. இதுதான் ஷை உமரு என்பவனுடைய பாகம் இந்தஆறை இவன்நாமத்தின்கீழ் எழுதவேண்டும்.

பின்னும் இந்த மஸ்அலாவில் ததாகுல் வந்திருக்கிறபடியால் ஒரேவொரு விப்கு ஆகிறதேயொழிய, தவாபுகில் 2 விப்கு ஆகிறதுபோல் இதில் 2 விப்கு ஆகிறதில்லை. இந்த விப்கோ 2-வது மஸ்அலாவின் கைக்குவந்த தொகையின் விப்காயிருக்கிறது. பின்னும் இது 2-வது மஸ்அலாவின் எண்ணுடைய விப்காயிருப்பதில்லை. ஆகையால் இந்த விப்கின் எண்ணாகிய 2-ஆல் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளின் ஒவ்வொரு பங்குகள் பாகிக்கப்பட்டன. பின்னும் இதில் 2-வது மஸ்அலாவின் எண்ணின் விப்கு இல்லாததினால் முதலாவது மஸ்அலாவின் வாரிசுகளுக்கு பாகங்கள் பிரித்து கொடுக்கப்படவில்லை. ஆனால் முதல் மஸ்அலாவின் எண்ணின்படி முதல் மஸ்அலாவின் வாரிசுகளுக்கு பாகிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட பாகங்களே சரி.

ஷை பாகப்பிரிவினையின் 2-வது வகை.

முதல் மஸ்அலாவில் இறந்துபோன சைது என்பவனுக்கு ஒரு பத்னியும், 2 புத்திரிகளும் ஒரு சிற்றப்பனும் இருக்கிறபடியால் மஸ்அலா 24-ஆல் செய்து இந்த இருபத்திநாலை முதலாவது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். பின்னும் பத்னியாகிய ரஷீதா என்பவளுக்கு அவள் பாகமாகிய $\frac{1}{8}$-க்கு 3 பாகம் கொடுக்கவேண்டும். பின்னும் இந்த மூன்றை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் 2 புத்திரிகளின் பாகமாகிய 3-ல் 2-க்கு 16 வந்தது. இதை ஹமீதாவுக்கு 8 பாகமும், மஜீதாவுக்கு 8 பாகமும் கொடுக்கவேண்டும். பின்னும் இவர்களின் நாமங்களின்கீழ் இவர்களின் பாகங்களாகிய 8, 8 எழுதவேண்டும், மீதமிருக்கிற 5 சிற்றப்பனாகிய ரஹீம் என்பவனுக்கு கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின் பின் இந்த ஐந்தை இவன் நாமத்தின்கீழ் எழுதவேண்டும்.

பின்னும் 2-வது இறந்துபோன ஹமீதா என்பவளுக்கு காலிது என்ற ஒரு பதியும், உமரு என்ற ஒரு புத்திரனும் இருக்கிறபடியால் 2-வது மஸ்அலா பதியின் மக்ரஜின்படி 4-ஆல் செய்து இந்த நாலை 2-வது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். பின்னும் பதியாகிய காலிது என்பவனுக்கு அவன் பாகமாகிய $\frac{1}{4}$-க்கு ஒரு பாகம் கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்து இந்த ஒன்றை அவன் நாமத்தின் கீழ் எழுதவேணும். பின்னும் புத்திரனாகிய உமரு என்பவ

னுக்கு மீதமிருக்கிற 3-பாகமும், கொடுத்துவிடவேணும். இப்படி கொடுத்துவிட்டு இந்த மூன்றை இவன் நாமத்தின் கீழ் எழுதவேண்டும். பின்னும் 2-வது இறந்துபோன ஹமீதா என்பவளுக்கு முதல் இறந்துபோனவனால் வந்த பாகமென்று சொல்லப்படும். கைக்கு வந்த துகையின் எண்ணானது 8-ஆக இருக்கிறது இந்த எட்டை 2-வது மஸ்அலாவின் மேல் எழுதவேணும் பின்னும் இந்த 8 இவளுடைய வாரிசுகளுக்கு பாகம் முறிபடாமல் சரியாய் பாகிக்கப்பட்டு போகிறப்படியால் இந்த எட்டை இவளுடைய வாரிசுகளாகிய காலிது என்பவனுக்கு 2 பாகமும், உமரு என்பவனுக்கு மீதமிருக்கிற 6 பாகமும், கொடுக்கவேண்டும். பின்னும் இந்த பாகங்களை அவரவர்களின் நாமங்களின் கீழ் எழுதவேண்டும். பின்னும் இப்படி 2 மஸ்அலாக்களும் செய்துவிட்டு அப்பால் முதலாவது மஸ்அலாவின் மேல் இறந்தவன் ஸைதென்றும் மஸ்அலாவின் எண் 24 என்றும் எழுதவேண்டும். பின்னும் 2-வது மஸ்அலாவின் மேல் இறந்தவள் ஹமீதா என்றும் மஸ்அலா 4 என்றும் கைக்கு வந்த துகை 8 என்றும் இதின் விப்கு 2 என்றும் (இஸ்திகாமத்து) என்றும் எழுதவேண்டும். (அல்இஹ்யா வுல்முப்லிகு) என்று ஒருகோடு வரிந்து இதின்மேல் முப்லிகு 24 என்று எழுதவேண்டும். பின்னும் ஷை கோட்டின் கீழ் உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களை எழுதி அவரவர்களின் பாகங்களையும், எழுதவேண்டும். எப்படியென்றால் ரஷீதா என்பவளுக்கு 3 பாகமென்றும் மஜீதா என்பவளுக்கு 8 பாகமென்றும் காலிது என்பவனுக்கு 2 பாகமென்றும் உமரு என்பவனுக்கு 6 பாகமென்றும், ரஹீம் என்பவனுக்கு 5 பாகமென்றும் எழுதவேண்டும்.

5-வது காயிதா ததாகுலின் 2-விதம்.

2-வது இறந்தவனுக்கு முதல் இறந்தவனால் கிடைத்த துகையின் எண்ணிலும் 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவின் எண்ணிலும் 2-வது வகையாகிய ததாகுல் இருந்து ஷை கைக்கு வந்த துகையின் எண்ணானது 2-வது மஸ்அலாவின் எண்ணைவிட சிறியதாயிருந்தால் அதாவது ஷை. மஸ்அலாவின் எண் பெரியதாயும் கைக்கு வந்த துகையின் எண் சிறியதாயுமிருந்தால் அப்போது இதற்குமுன் எழுதி வந்திருக்கிற 2-வது தவாபுகின் காயிதாப்படி அமல் செய்ய வேண்டும். அதாவது 2 மஸ்அலாக்கள் செய்து அவரவர்களின் பாகங்களை கொடுத்துவிட்டு 2-வது மஸ்அலாவின் விப்கு செய்து இதை முதலாவது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். அப்போது மஸ்அலா தஸ்ஹீயாகும். பின்னும் இந்த விப்கை முதல் மஸ்அலாவின் ஒவ்வொரு வாரிசுகளுடைய பாகங்களால் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் கைக்கு வந்த துகையின் விப்கு செய்து 2-வது மஸ்அலாவின் ஒவ்வொரு வாரிசுகளுடைய பாகங்களால பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். இதற்கு உதாரணம்.

1-வது மய்யத்து.

மய்யத்து	ஹிந்தா மஸ்அலா 4 தஸ்ஹீ 24		
	பதி	புத்திரி	சகோதரன்
	கரீம்	ரஹீமா	பாகில்
	$\frac{1}{4}$	$\frac{1}{2}$	மிகுதி
மஸ்அலாவின்படி	1	2	1
மஸ்அலாவின் விப்குபடி	6	12	6

2-வது மய்யத்து.

மய்யத்து	ரஹீமா மஸ்அலா 12, விப்கு 6, கை துகை 2		
	பிதா	பதி	புத்திரி
	கரீம்	ரஹீம்	ஹலீமா
	$\frac{1}{6}$	$\frac{1}{4}$	$\frac{1}{2}$
மஸ்அலாவின்படி	2	3	6
ரத்தின்படி	1	0	0
மொத்தம்	3	3	6

அல்இஹ்யாவுல் முப்லிகு 24				
	கரீம்	பாகில்	ரஹீம்	ஹலீமா
	9	6	3	6

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 2 மஸ்அலாக்கள் செய்யப்பட்டன பின்னும் முதல் மஸ்அலா 4-ஆல் செய்து இதில் கண்ட கரீமுக்கு 1-பாகமும், ரஹீமாவுக்கு 2-பாகமும், பாசில் என்பவனுக்கு மீதமிருந்த ஒன்றும் கொடுக்கப்பட்டன. பின்னும் 2-வது மஸ்அலா 12-ஆல் செய்து கரீம் என்பவனுக்கு 2-ம் ரஹீம் என்பவனுக்கு 3-ம் ஹலீமா என்பவளுக்கு 6-ம் கொடுக்கப்பட்டன இதின் மொத்தம் 11 ஆகிறது ஷெ 12-ல் 11 போக மீதம் ஒன்று இருக்கிறது. இந்த ஒன்று மிகுதிக்காரனாகிய கரீம் என்பவனுக்கு கொடுக்கப்பட்டது. பின்னும் முதலாவது மஸ்அலாவில் கண்ட பாசில் என்பவன் 2-வது மஸ்அலாவில் வரவேண்டியதாயிருந்தது. ஆனால் வரவில்லை ஏனெனில் 2-வது இறந்துபோன ரஹீமா என்பவளுக்கு ஷெ பாசில் என்பவன் தாய்மாமாவாயிருக்கிறப்படியால் இவன் தூரபந்துவாய்ப்போனான். ஆகையால் இவனுக்கு 2-வது மஸ்அலாவில் சேர்க்கவில்லை. பின்னும் மஸ்அலா தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேணுமென்றால், கைக்கு வந்த தொகை 2-ம், 2-வது மஸ்அலாவின் எண் 12-மாக இருக்கிறப்படியால் இது தகாருலாயிருக்கிறது. ஆகையால் இதின் விப்கு கண்டுபிடிக்க வேண்டியதற்காக ஷெ 12 பனிரெண்டை ஷெ 2-ஆல் வகுக்கவேண்டும். 12÷2=6. இப்படி வகுத்ததினால் வந்த பேருபணம் என்ற விப்கு 6-ஆக இருக்கிறது. இந்த 6-ஆனது 2-வது மஸ்அலாவின் விப்காயிருக்கிறது. ஆகையால் கைக்கு வந்த தொகைக்கு விப்கு இல்லை. இல்லவே இல்லை. பின்னும் ஷெ விப்கின் தொகையாகிய 6-ஆல் முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 4 நாலை பெருக்கவேண்டும். 4×6=24. இப்படி பெருக்கி வந்த தொகையானது 24-ஆக இருக்கிறது இதுவே மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கிறது. பின்னும் முதல் இறந்தவனுடைய வாரிசுகளின் பாகங்களை ஷெ விப்கின் தொகையாகிய 6-ஆல் பெருக்கி கொடுக்கப்படவேண்டும். எப்படியென்றால் முதல் மஸ்அலாவின் வாரிசுகளில் ஒருவனாகிய கரீம் என்பவனுடைய பாகமாகிய ஒன்றை ஷெ விப்காகிய 6-ல் பெருக்கவேண்டும். 6×1=6. இந்த பெருக்கலால் வந்த தொகையாகிய 6 கரீமுடைய பாகமாயிருக்கிறது. பினனும் ரஹீமா என்பவள் இறந்துபோனபடியால் அவளுடைய பாகம் செய்யவேண்டியதில்லை. பின்னும் பாசில் என்பவனுடைய பாகமாகிய ஒன்றை ஷெ விப்காகிய 6-ல் பெருக்கவேண்டும். 6×1=6. இப்படி பெருக்கி வந்ததொகையானது 6-ஆக இருக்கிறது. இந்த 6 பாசில் என்பவனுடைய

பாகமாயிருக்கிறது. பின்னும் இந்த மஸ்அலாவில் தகாருல் இருக்கிறபடியால் ஒரே ஒரு விப்கு ஆகிறதே ஒழிய தவாபுகில் 2 விப்குகள் ஆகிறதுபோல் இதில் ஆகிறதில்லை. இந்த விப்கே 2-வது மஸ்அலாவின் விப்காயிருக்கிறது. பின்னும் இது கைக்கு வந்த தொகையின் விப்காயிருப்பதில்லை. ஆகையால் 2-வது மஸ்அலாவின் விப்கின் எண்ணாகிய 6-ஆல் முதல் இறந்தவனுடைய வாரிசுகளின் ஒவ்வொரு பாகங்கள் பாகிக்கப்பட்டன. பின்னும் இதில் கைக்கு வந்த தொகையின் விப்கு இல்லாததினால் 2-வது மஸ்அலாவின் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால் 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 12-ஆல் இதே மஸ்அலாவில்கண்ட வாரிசுகளுக்கு பாகங்கள் பாகித்து கொடுக்கப்பட்டதே சரி.—பின்னும் (அல்இஹ்யா) என்ற கோடு வரிந்து இதின் கீழ் ஜீவந்தராயிருக்கும். வாரிசுகளின் நாமங்கள் வரிசையாய் எழுதி இதின் கீழ் அவரவர்களின் பாகங்களும் எழுதப்பட்டன எப்படியென்றால் கரீம் என்பவனுக்கு முதல் மஸ்அலாவின்படி 6-ம் 2-வது மஸ்அலாவின்படி 2-ம் ரத்தின் வகைப்படி 1-ம் ஆக வகை 3-க்கு கூடிய தொகை 9 என்றும், பாசில் என்பவனுக்கு 6-ம், ரஹீம்என்பவனுக்கு 3-ம், ஹலீமா என்பவளுக்கு 6-ம் என்றும் எழுதப்பட்டன. பின்னும் ஷெ கோட்டின்மேல் (முப்லிகு) 24 என்று எழுதபபட்டன இதோ மஸ்அலாக்களை தஸ்ஹீ செய்த தொகையாயிருக்கிறது. பின்னும் ஷெ கோட்டின் கீழ் எழுதப்பட்ட ஷெ பாகங்களை கூட்டினாலும், 6+3+6+9=24. 24 வந்தது ஒருவேளை இப்படி 2 தொகையும் சரியாய் வராமல் வித்தியாசப்பட்டால் அப்போது பாகங்களில் பிசகு வந்திருக்கும். ஆகையால் நன்றாக ஆலோசித்து இந்த பிசகை கண்டுபிடிக்கவேண்டும்.

6-வது காயிதா. தவாபுக்கு பிஸ்சுல்சி.

பின் இறந்துபோனவனுக்கு முன் இறந்துபோனவனால் கிடைத்த தொகையிலும் 2-வது மஸ்அலாவின் தொகையிலும் எந்தவகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படிப் பார்த்ததில் இது தவாபுக்கு இருந்தால் அப்போது 2-வது மஸ்அலாவின் தொகையை (விப்கு) செய்ய இதை 3-ல் 1 பாகமாக்கிக்கொள்ளவேண்டும். இப்படி 3-பாகமாக்கின விப்குக்கு (விப்குபிஸ்சுல்சி) என்று பேர். இந்த விப்கை முதல் மஸ்அலாவினுடன் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கிவந்த தொகைக்கு தஸ்ஹீ என்றும் (முப்லிகு) என்றும் பேர். இதை முதல்மஸ்அலா

வின்மேல் எழுதவேண்டும். பின்னும் கைக்குவந்த தொகைக்கும் 2-வது மஸ்அலாவின் தொகைக்கும் மத்தியில் தவாபுக்கு என்ற வார்த்தையையும் எழுதவேண்டும். 3-ல் 1-ன் தவாபுகின் உதாரணம்.

1-வது மய்யத்து.

மய்யத்து	சைது, மஸ்அலா 4, தஸ்ஹீ 8	
	பத்னி	சிற்றப்பன்
	ஜாஹிதா	சாபிர்
	¼	மிருதி
மஸ்அலாப்படி	1	3
தஸ்ஹீயின்படி விப்கின்படி	2	6

2-வது மய்யத்து.

மய்யத்து	சாபிர், மஸ்அலா 6, 2-வது மஸ்அலாவின் விப்கு 2, கைதுகை 3, தவாபுக்கு			
	புத்திரன்	புத்திரன்	புத்திரி	புத்திரி
	ரஹீம்	கரீம்	ரஹீமா	கரீமா
மஸ்அலாப்படி	2	2	1	1
விப்கின்படி	2	2	1	1

அல்இஹ்யாவுல்	முப்லிகு 8				
	ஜாஹிதா	ரஹீம்	கரீம்	ரஹீமா	கரீமா
	2	2	2	1	1

எச்சரிக்கை.

தவாபுகின் இந்த உதாரணமோ ததாகுலுக்கு சமமாக காணப்பட்டிருக்கிறது. ஏனெனில் எவ்விதமாக தவாபுகில் 2-வது இறந்துபோனவனுடைய கைக்குவந்த தொகையில் விப்கு இருந்திறாமல் இருக்கிறதோ அத்தன்மையாகவே இந்த தவாபுகின் உதாரணத்திலும், 2-வது இறந்தவனுடைய கைக்கு வந்த தொகையில் விப்கு இருந்திறாமல் இருக்கிறது. ததாகுலின் உதாரணத்தை பூறாவாக படித்துப் பார்த்தால் சந்தேகம் நிவர்த்தியாகும்.

வியாக்கியானம்.

சைது என்பவன் ஜாஹிதா என்ற பத்னியையும் சாபிர் என்ற சிற்றப்பனையும் விட்டுவிட்டு இறந்துபோனான். இவன் சொத்துபிரிவினையாவதற்கு முன்னமே இவன் வாரிசுகளில் ஒருவனாகிய சாபிர் என்பவன் கரீம் என்ற ஒரு புத்திரனையும், ரஹீம் என்ற ஒரு புத்திரனையும் ரஹீமா, கரீமா என்ற 2 புத்திரிகளையும் விட்டுவிட்டு இறந்துபோனான். ஆகையால் முதல் இறந்துபோன சைதுடைய சொத்தின் மஸ்அலா பத்னியின் மக்ரஜாகிய 4-ஆல் செய்து அவனுடைய பத்னிக்கு ¼-க்கு ஒரு பாகமும், மீதமிருக்கும் 3 அவன் பிதாவின் சகோதரனுக்கும் கொடுத்துவிடப்பட்டது. தவிர 2-வது இறந்துபோன பிதாவின் சகோதரனாகிய சாபிர் என்பவனுடைய சொத்தின் மஸ்அலா 6-ஆல் செய்து மேற்படி 2 புத்திரர்களுக்கு 4-ம், 2 புத்திரிகளுக்கு 2-மாக பாகித்துக் கொடுக்கப்பட்டன. இப்படி பாகித்ததின்பின் மேற்படி கைக்கு வந்த தொகையாகிய 3-ம், 2-வது மஸ்அலாவின் தொகையாகிய 6-ம் எந்தவகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் 3-வது வகையாகிய தவாபுகு இருக்கிறதென்று தெரியவந்தது. பின்னும் மேற்படி 2-வது மஸ்அலாவின் தொகையாகிய 6 ஆறை 3-ஆல் வகுத்தால் 2 பேறுப்பணம் வந்தது. 6÷3=2. இந்த இரண்டோ 2-வது மஸ்அலாவின் தொகையின் பேறுப்பணமென்ற விப்காயிருக்கிறது. பின்னும் இப்படியே 2-வது இறந்தவனுடைய கைக்குவந்த தொகையாகிய 3 மூன்றை 3-ஆல் வகுத்தால் 3÷3=1. பேறுப்பணம் ஒன்று வந்தது. இந்த ஒன்றே கைக்குவந்த தொகையின் விப்காயிருக்கிறது. ஆகையால் 2-வது மஸ்அலாவின் விப்காகிய 2 உடன் முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 4 நாலை பெருக்கவேண்டும். 4×2=8. இப்படி பெருக்கினதினால் வந்த தொகையானது 8-ஆகயிருக்கிறது. இப்படிப்பட்ட தொகைக்கு முப்லிகு என்று பேர். இது தஸ்ஹீயாக இருக்கிறது. இந்த 8 எட்டை முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 4-வின் பக்கத்தில் எழுதவேண்டும்.

பின்னும் முதல் இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின் பாகங்களை 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவின் விப்குடன் பெருக்கி முதல் இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை பாகித்து கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் ஜாஹிதா என்பவளுடைய பாகமாகிய ஒன்றை மேற்படி மஸ்அலாவின் விப்காகிய 2-ல் பெருக்கினதினால் 1×2=2. வந்த தொகையானது 2-ஆக இருக்கிறது. இது தான் மேற்படி ஜாஹிதாவின் பாகமாயிருக்கிறது. பின்னும் சாபிர் இறந்துபோனபடியால் அவனுடைய பாகம் செய்யவேண்டியதில்லை.

பின்னும் 2-வது இறந்துபோனவனுடைய ஒவ்வொரு வாரிசுகளின் பாகங்களை முதல் இறந்தவனால் இவனுக்கு கிடைத்த தொகையின் விப்குடன் அதாவது கைக்குவந்த தொகையின் விப்குடன் பெருக்கி இவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை பாகித்துவிடவேண்டும். எப்படியென்றால் ரஹீம் என்பவனுடைய பாகமாகிய இரண்டை கைக்கு வந்த தொகையின் விப்காகிய ஒன்றுடன் பெருக்கினதினால் $2 \times 1 = 2$. வந்த தொகையானது 2-ஆக இருக்கிறது, இதுதான் ரஹீமுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் இவ்விதமாகவே கரீம் என்பவனுடைய பாகமாகிய இரண்டை ஷை கைக்கு வந்த தொகையின் விப்காகிய ஒன்றுடன் பெருக்கினதினால் $2 \times 1 = 2$. வந்த தொகையானது 2-ஆக இருக்கிறது. இதுதான் கரீம் என்பவனுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் இவ்விதமாகவே ரஹீமா என்பவளுடைய பாகமாகிய ஒன்றை ஷை கைக்கு வந்த தொகையின் விப்காகிய ஒன்றுடன் பெருக்கினதினால் $1 \times 1 = 1$. வந்த தொகை 1-ஆக இருக்கிறது இதுதான், ரஹீமாஎன்பவளுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் இவ்விதமாகவே, கரீமாஎன்பவளுடையபாகமாகிய ஒன்றைஷைகைக்குவந்த தொகையின் விப்காகிய ஒன்றுடன் பெருக்கினதினால் $1 \times 1 = 1$. வந்த தொகை 1-ஆக இருக்கிறது, இதுதான். கரீமா என்பவளுடைய பாகமாயிருக்கிறது.—பின்னும் (அல்இஹ்யா) என்ற ஒரு கோடு வரிந்து இதின்மேல் (முப்லிகு) என்று பேர்கொண்ட இலக்கமாகிய 8 எழுதப்பட்டன. பின்னும் ஷை கோட்டின் கீழ் உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களை எழுதி அவரவர்களின் பாகங்களும் எழுதப்பட்டன. எப்படியென்றால் ஜாஹிதா என்பவளுக்கு 2-ம் ரஹீம் என்பவனுக்கு 2-ம் கரீம் என்பவனுக்கு 2-ம் ரஹீமா என்பவளுக்கு 1-ம் கரீமா என்பவளுக்கு 1-மாக எழுதப்பட்டன. பின்னும் ஷை கோட்டின் கீழ் எழுதப்பட்ட பாகங்களை கூட்டினாலும், $1 + 1 + 2 + 2 + 2 = 8$. வந்த தொகை 8-ஆக இருக்கிறது. முப்லிகும் 8-ஆக இருக்கிறது. ஒருவேளை இப்படிக்கு 2 தொகையும் ஒத்திராமல் வித்தியாசப்பட்டால் அப்போது பாகங்களில் பிசகு வந்திருக்கும், ஆகையால் நன்றாகஆலோசித்து இந்த பிசகை கண்டுபிடிக்கவேண்டும்.—பின்னும் இந்த தவாபுகின் உதாரணத்தில் 2-வது இறந்துபோனவனுடைய கைக்கு வந்த தொகையில் ததாகுனுக்கு ஒப்பாக விப்கு இல்லாமலிருக்கிறது. இப்படி இருந்தபோதிலும், தவாபுகின் காயிதா நிறைவேற்ற 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு ஷை கைக்கு

வந்த தொகையின் விப்கு ஒன்றென்று பாவித்துக்கொண்டு பாகங்களை பாகித்து கொடுத்திருக்கிறேன். இப்படி கொடுப்பதும், கொடாமலிருப்பதும், ஒன்றே ஏனெனில் ஷை 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு இவனுடைய மஸ்அலாவின்படி கொடுக்கப்பட்ட பாகங்கள் எவைகளோ அவைகளே ஷை விப்குஒன்றென்று பாவித்து கொடுத்தபோதிலும், அதே பாகங்கள் வந்திருக்கின்றன, ஆகையால் ஒன்றைக்கொண்டு பாகங்கள் செய்தாலும், செய்யாமற்போனாலும் சரியே.

பாக பிரிவினையின் வேறு வகை.

மஸ்அலா தஸ்ஹீ செய்து வந்த எண்ணாகிய 8 எட்டை முதல் இறந்தவனுடைய வாரிசுகளில் ஜாஹிதா என்பவளின் மக்ரஜாகிய 4-ஆல் வகுத்து $8 \div 4 = 2$. அதனால் வந்த பேறு பணமாகிய 2 இரண்டை பத்னிக்கு கொடுத்துவிடவேண்டும் பின்னும் ஷை 8-ல் 2 போக மீதமிருக்கும். 6 ஆறை 2-வது இறந்தவனை. சாபிருடைய வாரிசுகளாகிய 2 புத்திரர்களுக்கு 4-பாகங்களும் 2 புத்திரிகளுக்கு 2-பாகங்களுமாக கொடுத்துவிடவேண்டும். ஆக இதின் மொத்தம் 8-ஆகஇருக்கிறது.

7-வது காயிதா தபாயுன்.

2-வது இறந்துபோனவனுக்கு முதல் இறந்துபோனவனால் கிடைத்த பாகமென்று செல்லப்படும், கைக்கு வந்த தொகையின் எண்ணிலும், 2-வது மஸ்அலாவின் எண்ணிலும் 4-வது வகையாகிய(தபாயுன்) இருந்தால அப்போது 2 மஸ்அலாக்கள் செய்யவேண்டும். முதல் மஸ்அலாவின் எண்ணால் இதின் வாரிசுகளின் பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் 2.வது மஸ்அலாவின் எண்ணால் இதின் வாரிசுகளின் பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் மஸ்அலா தஸ்ஹீ செய்யவேண்டும், இது எப்படியென்றால் முதலாவது மஸ்அலாவின் எண்ணுடன் 2-வது மஸ்அலாவின் எண்ணை பெருக்கவேண்டும். பின்னும் முதல் இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின் பாகங்களை 2-வது மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கி முதல் இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். பின்னும் 2-வது இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின்

பாகங்களை கைக்கு வந்த தொகையுடன் பெருக்கி 2-வது-இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். இதற்கு உதாரணம்.

1-வது மய்யத்து.

மய்யத்து	ஸைது, மஸ்அலா 4, தஸ்ஹீ 8	
	பத்னி	சிற்றப்பன்
	ஆபிதா	ஷாகிர்
	¼	மிகுதி
மஸ்அலாப்படி	1	3
தஸ்ஹீயின்படி	2	6

2-வது மய்யத்து.

மய்யத்து	ஷாகிர் மஸ்அலா 2 தபாயுன் கைதொகை 3	
	புத்திரன்	புத்திரன்
	கரீம்	ரஹீம்
	½	½
மஸ்அலாவின்படி	1	1
கைக்குவந்த தொகையின்படி	3	3

(அல்இஹ்யா) அதாவது உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களும், பாகங்களும்	முப்லிகு 8		
	ஆபிதா	ரஹீம்	கரீம்
	2	3	3

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் ஸைது என்பவன் ஆபிதா என்ற பத்னியையும் ஷாகிர் என்ற ஒரு சிற்றப்பனையும் விட்டுவிட்டு இறந்துபோனான். பின்னும் இந்த பாக பிரிவினை ஆவதற்கு முன்னமே ஷை ஷாகிர் என்பவனும் கரீம் என்ற ஒரு புத்திரனையும் ரஹீம் என்ற ஒரு புத்திரனையும் விட்டுவிட்டு இறந்துபோனான். ஆகையால் மஸ்அலாக்கள் 2 செய்யவேணும். எப்படியென்றால் முன் இறந்தவனுடைய மஸ்அலா பத்னியின் மக்ரஜாகிய 4-ஆல் செய்து இந்த நாலை முதல் மஸ்அலாவின் மேல் எழுதவேண்டும். பின்னும் ஷை ஆபிதா என்பவளுக்கு இவள் பாகமாகிய ¼-க்கு ஒரு பாகமும் மீதமிருக்கிற 3 சிற்றப்பனாகிய ஷாகிர் என்பவனுக்கும் கொடுத்துவிடவேண்டும். இப்போது ஷாகிர் என்பவனுக்கு முன் இறந்துபோனவனால் கிடைத்த பாகம் என்ற கைக்கு வந்த தொகையின் எண்ணானது 3-ஆக இருக்கிறது. பின்னும் 2-வது இறந்துபோன ஷை ஷாகிருடைய வாரிசுகளுக்கு பாகம் கொடுக்க மஸ்அலா 2-ஆல் செய்து இந்த இரண்டை 2-வது மஸ்அலாவின் மேல் எழுதவேண்டும். பின்னும் ஷை 2-ல் கரீம் என்ற புத்திரனுக்கு ஒருபாகமும், ரஹீம்என்ற புத்திரனுக்கு ஒரு பாகமும், கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்து அவரவர்களின் நாமங்களின் கீழ் அவரவர்களின் பாகங்களை எழுதவேண்டும். பின்னும் ஷை கைக்கு வந்த தொகையின் எண்ணானது 3-ஆக இருக்கிறது. இந்த மூன்றை 2-வது மஸ்அலாவின்மேல் கைக்கு வந்த தொகையென்று எழுதவேண்டும். பின்னும் இந்த 3 ஷை புத்திரர்களுக்கு பாகிக்க கூடாதிருக்கிறப்படியால் ஷை முதல் மஸ்அலாவை தஸ்ஹீ செய்யவேண்டும். இது எப்படி செய்யவேணுமென்றால் ஷை கைக்கு வந்த தொகையின் எண்ணிலும் 2-வது மஸ்அலாவிலும், அதாவது 3-லும், 2-லும், 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இதில் 4-வது வகையாகிய தபாயுன் இருக்கிறதாக தெரியவந்தது ஆகையால் 2-வது மஸ்அலாவின்மேல் தபாயுன் என்ற வார்த்தையை எழுதவேண்டும். இப்படி தபாயுன் இருக்கிறப்படியால் 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய இரண்டை முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 4-லில் பெருக்கவேண்டும். 4 × 2 = 8. இப்படி பெருக்கினதினால் 8 வந்தது இப்படிப்பட்ட தொகையாகிய 8-க்கு தஸ்ஹீ என்றும் முப்லிகு என்றும் பேர் இதை முதல் மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். பின்னும்—முதல் இறந்துபோனவனுடைய வாரிசுகளில் ஆபிதா என்றவளுக்குவந்தபாகமாகிய ஒன்றை 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 2-ல் பெருக்கவேண்டும். 2 × 1 = 2. இப்படி பெருக்கினதினால்வந்த தொகையானது 2-ஆக இருக்கிறது இந்த 2 இரண்டை ஆபிதாவின் நாமத்தின் கீழ் எழுதவேண்டும். பின்னும் ஷாகிர் என்பவனுக்கு வந்த பாகமாகிய 3 மூன்றை 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 2-ல் பெருக்கவேண்டும். 2 × 3 = 6. இப்படி பெருக்கி வந்த தொகையானது 6-ஆக இருக்கிறது. இந்த 6 ஆறை இவன் நாமத்தின் கீழ் எழுதவேண்டும்.—பின்னும் 2-வது இறந்துபோனவனுடைய வாரிசுகளான ரஹீமுடைய பாகமாகிய ஒன்றை கைக்கு வந்த தொகையின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3 × 1 = 3. இப்படி பெருக்கி வந்த தொகையாகிய 3 மூன்றை இவனுடைய நாமத்துக்கு கீழ்

எழுதவேண்டும். பின்னும் இப்படியே கரீமுடைய பாகமாகிய ஒன்றை கைக்கு வந்த தொகையின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3 × 1 = 3. இப்படி பெருக்கி வந்த தொகையானது 3-ஆக இருக்கிறது. இதையும இவனுடைய நாமத்துக்கு கீழ் எழுதவேண்டும்.

இதற்கு வேறு விதமான பிரிவினையின் வகை

(முப்லிகு) என்ற எட்டை முதல் இறந்துபோன சைது என்பவனுடைய பத்னியான ஆபிதாவின் பாகமாகிய 4-ஆல் வகுத்து அதனால் வந்த 8 ÷ 4 = 2. பேறுபனமாகிய 2 இரண்டை ஷை. பத்னிக்கு கொடுக்கவேண்டும். பின்னும் ஷை. 8-ல் 2 பாகம் போக 8 — 2 = 6. மீதமிருக்கிற 6 ஆறை பிதாவின் சகோதரனாகிய ஷாகிர் என்பவனுக்கு கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின் பின் 2-வது இறந்துபோனவனாகிய ஷை. ஷாகிர் என்பவனுக்கு முதல் இறந்துபோனவனால் கிடைத்த பாகமாகிய 6 ஆறை 2 பாகமாக்கி இவனுடைய வாரிசுகளான 2 புத்திரர்களாகிய கரீம் என்பவனுக்கு 3-ம், ரஹீம் என்பவனுக்கு 3-மாக பாகித்து கொடுக்கவேணும்.—பின்பு (அல் இஹ்றயா) என்ற ஒரு கோடு வரிந்து இதின் மேல் (முப்லிகு) என்று பேர்க்கொண்ட இலக்கமாகிய 8 எட்டு எழுதப்பட்டன. பின்னும் இதின் கீழ் உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களும் இதின்கீழ் அவரவர்களின் பாகங்களும் எழுதப்பட்டன. எப்படியென்றால் ஆபிதா என்பவளுக்கு 2, பாகமும் ரஹீம் என்பவனுக்கு 3 பாகமும் கரீம் என்பவனுக்கு 3, பாகமும் இவ்விதமாக எழுதப்படவேண்டும். பின்னும் ஷை. கோட்டின்கீழ் எழுதப்பட்ட ஷை. பாகங்களை கூட்டினாலும் 2 + 3 + 3 = 8. 8 வந்தது. பின்னும் ஷை. (முப்லிகு) என்ற தொகையும் ஷை. பாகங்களை கூட்டின தொகையும் ஒன்றாகவே இருக்கவேண்டும். ஒரு வேளை இப்படிக்கு சரியாய் இருந்திராமல் வித்தியாசமாயிருந்தால் அப்போது பாகங்களில் பிசகு வந்திருக்கும். ஆகையால் நன்றாக ஆலோசித்து இந்த பிசகை கண்டுபிடிக்கவேண்டும்.

8-வது காயிதா. தவாபுக்கு பின்னிஸ்பி.

அதாவது சுத்த தவாபுக்கு.

பின் இறந்துபோனவனுக்கு முன் இறந்துபோனவனால் கிடைத்த தொகையிலும், 2-வது மஸ்அலாவின் தொகையிலும், எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் சுத்த தவாபுக்கு இருந்தால் அப்போது 2-வது மஸ்அலாவின் தொகையை விப்கு செய்ய இதை பேர்ப்பாதியாக்கிக்கொள்ளவேண்டும். இப்படி பேர்ப்பாதியாக்கின விப்குக்கு (விப்கு பின்னிஸ்பி) என்று சொல்லப்படும். இந்த விப்கை முதல் மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கவேண்டும். இப்படிபெருக்கி வந்த தொகைக்கு தஸ்ஹீ என்றும் (முப்லிகு) என்றும் பேர். இதை முதல்மஸ்அலாவின் மேல் எழுதவேண்டும். பின்னும் கைக்குவந்த தொகைக்கும். 2-வது மஸ்அலாவின் தொகைக்கும், மத்தியில் விப்கு என்ற வார்த்தையை எழுதவேண்டும். 2-ல் 1-ன் தவாபுகின் உதாரணம்.

1-வது மய்யத்து.

மய்யத்து சைது, மஸ்அலா 24. தஸ்ஹீ 72

	பத்னி	பிதா	புத்திரன்
	கரீமா	ரஹீம்	கரீம்
	$\frac{1}{8}$	$\frac{1}{6}$	மிகுதி
மஸ்அலாப்படி	3	4	17
தஸ்ஹீயின்படி	9	12	15
விப்கின்படி			

2-வது மய்யத்து.

மய்யத்து ரஹீம் மஸ்அலா 6, இது சுத்த தவாபுக்கு, இதின் விப்கு 3 கையின் தொகை 4, இதின் விப்கு 2

	புத்திரன்	புத்திரன்	புத்திரி	புத்திரி
	ஹைதர்	சப்தர்	சோதா	சல்மா
மஸ்அலாப்படி	2	2	1	1
கையின் விப்கின்படி	4	4	2	2

அல்இஹ்றபாவுல்முப்லிகு 72

கரீமா	கரீம்	ஹைதர்	சப்தர்	சோதா	சல்மா
9	51	4	4	2	2

வியாக்கியானம்.

இந்த உதாரணத்தில் 2 மஸ்அலாக்கள் செய்யப்படவேண்டும். பின்னும் முதல் இறந்தவனாகிய சைது என்பவன் ஒரு பத்னியாகிய கரீமா என்றவளையும், ரஹீம் என்ற ஒரு பிதாவையும்,

கரீம் என்ற ஒரு புத்திரனையும் விட்டுவிட்டு இறந்துபோனான். ஆகையால் முதல் மஸ்அலா 24-ஆல் செய்து பத்னியாகிய கரீமாவுக்கு $\frac{1}{8}$-க்கு 3-பாகமும், பிதாவின் $\frac{1}{6}$-க்கு 4-பாகமும், மீதமிருக்கிற 17 புத்திரனுக்குமாக கொடுத்துவிடவேண்டும். பின்னும் பாக பிரிவினையாவதற்கு முன்னமே பிதாவாகிய ரஹீம் என்பவன் ஹைதர், சப்தர் என்ற 2 புத்திரர்களையும், சோதா, சல்மா என்ற 2 புத்திரிகளையும் விட்டுவிட்டு இறந்துபோனான். ஆகையால் இவனுடைய மஸ்அலா 6-ஆல் செய்து ஹைதர் என்பவனுக்கு 2-ம் சப்தர் என்பவனுக்கு 2-ம் சோதா என்பவளுக்கு 1-ம் சல்மா என்பவளுக்கு 1-ம் கொடுத்துவிடவேண்டும். பின்னும் இப்படி பாகித்ததின் பின் ஷை கைக்கு வந்த தொகையாகிய 4 நாலை 2-வது மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். பின்னும் 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 6 ஆறையும் அதின் பக்கத்தில் எழுதவேண்டும். பின்னும் ஷை கைக்கு வந்த தொகையாகிய 4-யினும், 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 6-னும், 4 வகைகளில் எந்த வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் இது சுத்த தவாபுக்காயிருக்கிறதென்று தெரியவந்தது, பின்னும் தவாபுக்கு என்ற வார்த்தையை 2-வது மஸ்அலாவின்மேல் ஷை 6-க்கும், 4-க்கும், மத்தியில் எழுதவேண்டும். இப்படி தவாபுக்கு இருக்கிறப்படியால் 2-வது மஸ்அலாவின் தொகையாகிய 6 ஆறை பேர்ப்பாதி 6÷2=3. யாக்கிக்கொள்ளவேண்டும். இப்படி பேர்ப்பாதியான தொகையானது 3-ஆக இருக்கிறது. இப்படிப்பட்ட தொகைக்கு (விப்கு பின்னிஸ்பி) என்று பேர் இந்த மூன்றே, 2-வது மஸ்அலாவின் தொகையின் பேருபணமென்ற விப்காயிருக்கிறது. பின்னும் இப்படியே 2-வது இறந்தவனுடைய கைக்கு வந்த தொகையாகிய 4 நாலை பேர்ப்பாதியாக்கிக் கொள்ளவேண்டும். இப்படி பேர்ப்பாதியானது 2-ஆக இருக்கிறது. இந்த இரண்டோ, கைக்கு வந்த தொகையின் விப்காயிருக்கிறது. ஆகையால் 2-வது மஸ்அலாவின் விப்காகிய 3 உடன் முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 24 இருபத்திநாலை பெருக்கவேண்டும். 24×3=72. இப்படி பெருக்கினதினால் வந்த தொகையானது 72-ஆக இருக்கிறது. இந்த தொகைக்கு (முப்லிகு) என்றுபேர். இது தஸ்ஹீயாயிருக்கிறது. இந்த 72 எழுபத்திரண்டை முதல் மஸ்அலாவின்மேல் 24-ன் பக்கத்தில் எழுதவேண்டும், பின்னும் முதல் இறந்தவனுடைய ஒவ்வொரு வாரி

சின் பாகங்களை 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவின் விப்காகிய 3-உடன் பெருக்கி முதல் இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்களைப் பிரித்துக் கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் பத்னியின் பாகமாகிய 3 மூன்றை 2-வது மஸ்அலாவின் விப்காகிய 3 மூன்றோடு பெருக்கினதினால் 3×3=9. 9 வந்தது, இது பத்னியின் பாகமாயிருக்கிறது. பின்னும் பிதாவின் பாகமாகிய 4 நாலை 2-வது மஸ்அலாவின் விப்கு என்ற 3 மூன்றோடு பெருக்கினதினால் 4×3=12. 12 வந்தது, இது பிதாவின் பாகமாயிருக்கிறது. பின்னும் கரீம் என்ற புத்திரனுக்கு வந்த 17 பதினேழை 2-வது மஸ்அலாவின் விப்கு என்ற ஷை 3 மூன்றோடு பெருக்கினதினால் 17×3=51. 51 வந்தது. இது கரீம் என்ற புத்திரனுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் பின் இறந்துபோன ரஹீம் என்பவனுடைய புத்திரனான ஹைதருடைய பங்காகிய 2 இரண்டை கைக்குவந்த தொகையின் விப்கு என்ற பேர்ப்பாதியாகிய 2 இரண்டுடன் பெருக்கினால் 2×2=4. 4 வந்தது, இந்த 4 ஷை புத்திரனுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் 2-வது புத்திரனான சப்தருடைய பங்காகிய 2 இரண்டை கைக்குவந்த தொகையின் விப்கு என்ற பாதியாகிய 2 இரண்டுடன் பெருக்கினால் 2×2=4. 4 வந்தது. இந்த 4, 2-வது புத்திரனுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் 2-வது இறந்தவனுடைய புத்திரியான சோதா என்பவளுடைய பங்காகிய ஒன்றை கைக்குவந்த தொகையின் விப்கு என்ற பாதியாகிய 2 இரண்டுடன் பெருக்கினால் 2×1=2. 2 வந்தது. இந்த 2 ஷை புத்திரியின் பாகமாயிருக்கிறது. பின்னும் இப்படியே 2-வது புத்திரியான சல்மா என்பவளுடைய பங்காகிய ஒன்றை கைக்குவந்த விப்கு என்ற பாதியாகிய 2 இரண்டுடன் பெருக்கினால் 2×1=2. 2 வந்தது. இந்த 2, 2-வது புத்திரியின் பாகமாயிருக்கிறது. பின்னும் இவர்கள் ஒவ்வொருவருடைய பங்குகளை அவரவர்களின் நாமங்களின்கீழ் எழுதவேண்டும்.

இதற்கு வேறுவிதமான பிரிவினை.

ஷை முப்லிகின் எண்ணாகிய 72 எழுபத்திரண்டை முதல் இறந்துபோனவனுடைய பத்னி கரீமாவின் பாகமாகிய 8-ஆல் வகுக்கவேண்டும். இப்படி வகுத்து வந்த 72÷8=9. பேருப்பணமாகிய 9 ஷை பத்னியின் பாகமாயிருக்கிறது. இதை இவன்

நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் ஷை ஜைதுடைய பிதா ரஹீம் என்பவன்பாகமாகிய 6-ஆல் ஷை 72 எழுபத்திரெண்டை வகுக்கவேண்டும். 72÷6=12. இப்படி வகுத்துவந்தபேறுப்பணமாகிய 12 ஷை பிதாவின் பாகமாயிருக்கிறது. இப்படி பாகித்து வந்த 2பாகங்களின் மொத்த தொகையானது 12+9=21. 21-ஆக இருக்கிறது, இதை ஷை 72-ல் கழிக்கவேண்டும். 72—21=51. இப்படி கழித்துவந்த தொகையானது 51-ஆகயிருக்கிறது, இந்த 51 புத்திரனாகிய கரீம் என்பவனுடைய பாகமாயிருக்கிறது.

பின்னும் 2-வது இறந்துபோனவனாகிய ரஹீமுக்கு முதல் இறந்துபோனவனால் கிடைத்த பாகமாகிய 12 பனிரெண்டை இவனுடைய வாரிசுகளாகிய 2 புத்திரர்களுக்கு 8-ம், 2புத்திரிகளுக்கு 4-மாக பாகித்துவிடவேண்டும்.

பின்னும் (அல்இஹ்யா) என்றஒருகோடு வரிந்து இதின்மேல் (முப்லிகு) என்ற தொகையாகிய 72 எழுதவேண்டும், பின்னும் ஷை கோட்டின்கீழ் உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களை எழுதி அவரவர்களின் பாகங்களை எழுதவேண்டும், எப்படியென்றால் கரீமா என்பவளுக்கு 9, கரீம் என்பவனுக்கு 51, அக்தர் என்பவனுக்கு 4, சப்தர் என்பவனுக்கு 4, சோரா என்பவளுக்கு 2, சல்மா என்பவளுக்கு 2. இவ்விதமாக எழுதிவிடவேண்டும். பின்னும் ஷை கோட்டின்கீழ் எழுதப்பட்ட பாகங்களை கூட்டினாலும் 9+51+4+4+2+2=72. வந்தமொத்த தொகை 72-ஆக இருக்கிறது, முப்லிகும் 72-ஆக இருக்கிறது. ஒருவேளை இப்படிக்கு 2 வகையான தொகையும் ஒத்திராமல் வித்தியாசப்பட்டால் அப்போது பாகங்களில் பிசகு வந்திருக்கும். ஆகையால் நன்றாக ஆலோசித்து பிசகை கண்டுபிடிக்கவேண்டும்.

(*)

பின்னும் மேல் எழுதிவந்ததெல்லாம் 2 மய்யத்துகளின் சங்கதிகளாயிருந்தன. இப்போது 3 மய்யத்துகள் ஒன்றின்பின் ஒன்றாக பாகப்பிரிவினைக்குமுன்னமே இறந்துபோனவர்களின் பயான்.

9-வது காயிதா.

1, 2, 3 மய்யத்துகளின் உதாரணங்கள்.

முதல் மய்யத்தின் மஸ்அலா.

மய்யத்து ஜைது, மஸ்அலா 8	பத்னி	புத்திரன்	புத்திரன்	புத்திரன்	புத்திரி
	ஹிந்தா	காஸிது	பகர்	வஸீது	சல்மா
		முதல்பத்னியால்	2-வது பத்னியால்		
	$\frac{1}{8}$	மிகுதி	மிகுதி	மிகுதி	மிகுதி
மஸ்அலாப்படி	1	2	2	2	1

வியாக்கியானம்.

முதல் இறந்துபோனவன் யாரென்றால் ஜைது என்பவன் தான் இவனுக்கு ஹிந்தா என்ற ஒரு ஸ்திரியும், பின்னும் இவனுக்கு ஷை ஹிந்தா என்ற முதல்ஸ்திரியால் காஸிது என்ற ஒரு புத்திரனும், 2-வது ஸ்திரியால் பகர் என்ற ஒருபுத்திரனும், பின்னும் ஷை 2-வது ஸ்திரியால் வஸீது என்ற ஒரு புத்திரனும், பின்னும் ஷை 2-வது ஸ்திரியால் சல்மா என்ற ஒரு புத்திரியுமாக 5 வாரிசுகள் இருக்கிறார்கள். இவர்களுடைய பாகங்கள் கொடுக்கவேண்டியதற்காக பத்னியின் மக்ரஜாகிய 8-ஆல் மஸ்அலா செய்யவேண்டும். அதாவது மஸ்அலா 8-ஆல் செய்து பத்னியின் $\frac{1}{8}$-க்கு ஒரு பாகமும் கொடுத்துவிட்டு மிகுதியிருக்கும் 7-ல் 2 பாகம் காஸிது என்பவனுக்கும், பின்னும் 2 பாகம் பகர் என்பவனுக்கும் பின்னும் 2பாகம் வஸீது என்பவனுக்கும், பின்னும் ஒருபாகம் சல்மா என்பவளுக்குமாக கொடுக்கவேண்டும். இப்படிக்கு முதல் இறந்தவனுடைய மஸ்அலா முதலில் செய்துவிட்டு அப்பால் 2-வது இறந்துபோனவனுடைய மஸ்அலா செய்யவேண்டும்.

2-வது மய்யத்தின் மஸ்அலா.

மய்யத்து பகர், மஸ்அலா 3		கைக்குவந்த தொகை 2
	சகோதரன்	சகோதரி
	வஸீது	சல்மா
மஸ்அலாவின்படி	2	1

வியாக்கியானம்.

2-வது இறந்துபோனவன் யாரென்றால் பகர் என்பவன்தான் இவனே முதல் இறந்துபோனவனுடைய 2-வது ஸ்திரீயால் பிறந்தவன், இவனுக்கு 4 பேர்கள் இருக்கிறார்கள். அதாவது மாற்றான தாய் ஒருவளும், பின்னேதானாகிய காலிது என்பவனும், சகோதரனாகிய வலீது என்பவனும், சகோதரியாகிய சல்மா என்பவளும் தான் இருக்கிறார்கள். இவர்களில் ஷெ. காலிது என்பவனே சகோதரனிருக்க பின்னேதான் மஹ்றூமாய்விடுகிறானென்ற விதியின்படி மஹ்றூமாய் வாரிசிலிருந்து நீங்கிவிட்டான். பின்னும் மாற்றான் தாய் வாரிசாகமாட்டாள் என்ற விதியின்படி அவள் வாரிசிலிருந்து நீங்கிவிட்டாள். பின்னும் பாக்கியிருக்கிறவர்கள் யாரென்றால் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமே. ஆகையால் மஸ்அலா 3-ஆல் செய்து சகோதரனாகிய வலீது என்பவனுக்கு 2-ம், சகோதரியாகிய சல்மா என்பவளுக்கு 1-மாக கொடுக்கப்பட்டது. பின்னும் முதல் இறந்தவனால் 2-வது இறந்தவனுக்கு கிடைத்த துகை, அதாவது கைக்குவந்த துகையாகிய 2-ஆல் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளுக்கு பாகங்கள் பாகிக்கப்படவில்லை. பின்னும் இப்படிக்கு 1-வது இறந்தவனுடையவும், 2-வது இறந்தவனுடையவும் மஸ்அலாக்கள் வெவ்வேறாக செய்துவிட்டதின்பின் இவ்விரண்டையும் சேர்த்து மஸ்அலா தஸ்ஹீஹ் செய்யவேண்டும். எப்படியென்றால்.

ஷெ. 1-வது மய்யத்து.

சைது, மஸ்அலா 8, 1, 2, மய்யத்தின் தஸ்ஹீஹ்
மய்யத்து அதாவது முதல் தஸ்ஹீஹ் 24

	பத்னி	புத்திரன்	புத்திரன்	புத்திரன்	புத்திரி
	ஹிந்தா	காலிது	பகர்	வலீது	சல்மா
		முதல் பத்னியால்	2-வது பத்னியால்		
	$\frac{1}{8}$	பிதுகி	பிதுகி	பிதுகி	பிதுகி
மஸ்அலாப்படி	1	2	2	2	1
முதல் தஸ்ஹீஹ்படி	3	6	6	6	3

ஷெ. 2-வது மய்யத்து.

மய்யத்து பகர், மஸ்அலா 3 தபாயுன் கைக்குவந்த துகை 2

சகோதரன்	சகோதரி	
வலீது	சல்மா	
2	1	மஸ்அலாவின்படி
4	2	1, 2மய்யத்தின் தஸ்ஹீஹின் மூலமாய் பின்னும் 2-வது மய்யத்தின் கைதுகையின்படி

வியாக்கியானம்.

1, 2 மய்யத்துகளின் தஸ்ஹீஹ் செய்யவேண்டியதற்காக 2-வது இறந்துபோனவனுடைய (மாபில்யத்து) என்ற கைக்குவந்த துகையின் எண்ணிலும், இவனுடைய மஸ்அலாவின் எண்ணிலும் 4 வகைகளில் எவ்வகையிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் ஷெ. கைக்கு வந்த துகையாகிய 2-ஆம் ஷெ. மஸ்அலாவின் எண்ணாகிய 3-ஆம் தபாயுன் இருக்கிறதென்று தெரியவந்தது. ஆகையால் தபாயுனுடைய காயிதாப்படி 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய மூன்றை 1-வது மஸ்அலாவின் எண்ணாகிய 8 எட்டால் பெருக்கவேண்டும். 8 × 3 = 24. இப்படி பெருக்கி வந்த துகையானது 24-ஆக இருக்கிறது. இந்த துகையே 1, 2 மய்யத்தின் மஸ்அலாவின் தஸ்ஹீஹாக இருக்கிறது. பின்னும் இந்த 24-க்கு (முப்லிகு) என்றும் சொல்லப்படும். பின்னும் தபாயுனுடைய காயிதாப்படி முதல்இறந்தவனுடையஒவ்வொருவாரிசின் பாகத்தை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும், எப்படி என்றால்.

முதல் இறந்தவனுடைய வாரிசுகளில்ஒருவளான ஹிந்தா என்பவளுக்குமஸ்அலாப்படிகிடைத்தபாகமாகியஒன்றை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3 × 1 = 3. இப்படி பெருக்கி வந்த துகையானது 3-ஆக இருக்கிறது. இது பத்னியாகிய ஹிந்தா என்பவளின் பாகமாயிருக்கிறது. பின்னும் இவளுக்கு கிடைத்த இந்த மூன்றே 1-வது 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் தஸ்ஹீஹின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது. பின்னும் காலிது என்ற புத்திரனுக்கு

மஸ்அலாப்படி கிடைத்த பாகமாகிய 2 இரண்டை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×2=6. இப்படி பெருக்கி வந்த தொகையானது 6-ஆக இருக்கிறது. இது புத்திரனாகிய காலிது என்பவனுடைய பாகமாயிருக்கிறது, பின்னும் இவனுக்கு கிடைத்த இந்த 6 ஆறும் 1—2 மய்யத்துடைய மஸ்அலாவின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது. பின்னும் பகர் என்ற புத்திரனுக்கு மஸ்அலாப்படி கிடைத்த பாகமாகிய 2 இரண்டை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3+2=6. இப்படிப் பெருக்கி வந்த தொகையானது 6-ஆக இருக்கிறது. இது புத்திரனாகிய பகர் என்பவனுடைய பாகமாயிருக்கிறது. பின்னும் இவனுக்கு கிடைத்த இந்த ஆறும் 1, 2 மய்யத்துடைய மஸ்அலாவின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது. பின்னும் வலீது என்ற புத்திரனுக்கு கிடைத்த மஸ்அலாப்படி பாகமாகிய 2 இரண்டை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணாகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×2=6. இப்படி பெருக்கி வந்த தொகையானது 6-ஆக இருக்கிறது. இது புத்திரனாகிய வலீது என்பவனுடைய பாகமாயிருக்கிறது, பின்னும் இவனுக்கு கிடைத்த இந்த ஆறும் 1, 2 மய்யத்துடைய மஸ்அலாவின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது. பின்னும் புத்திரியாகிய, சல்மா என்பவளுக்கு மஸ்அலாப்படி கிடைத்த பாகமாகிய 1 ஒன்றை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணாகிய 3 மூன்றில் பெருக்கவேண்டும். 3×1=3. இப்படி பெருக்கி வந்த தொகையானது 3-ஆக இருக்கிறது. இது புத்திரியாகிய சல்மா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இவளுக்கு கிடைத்த இந்த மூன்றும் 1, 2 மய்யத்துடைய மஸ்அலாவின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது.

பின்னும் ஷை தபாயுனுடைய காயிதாப்படி 2-வது இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின் பாகங்களை கைக்கு வந்த தொகையின் எண்ணுடன் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் 2-வது இறந்தவனுடைய வாரிசுகளில் ஒருவனான வலீது என்ற சகோதரனுடைய மஸ்அலாப்படி கிடைத்த பாகமாகிய 2 இரண்டை கைக்கு வந்த தொகையின் எண்ணாகிய 2-ல் பெருக்கவேண்டும். 2×2=4. இப்படி பெருக்கி வந்த தொகையானது 4-ஆக இருக்கிறது. இது வலீதென்பவனுடைய பாகமாக இருக்கிறது பின்னும் இந்த பாகமோ 1-வது 2-வது மய்யத்தின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்தபாகமாக இருக்கிறது. பின்னும் சல்மா என்ற சகோதரிக்கு மஸ்அலாப்படி கிடைத்த பாகமாகிய ஒன்றை கைக்கு வந்த தொகையின் எண்ணாகிய 2-ல் பெருக்கவேண்டும். 2×1=2. இப்படி பெருக்கிவந்த தொகையானது 2ஆக இருக்கிறது இது சல்மா என்பவளுடைய பாகமாகயிருக்கிறது—பின்னும் இந்தபாகமோ 1-வது, 2-வது மய்யத்தின் தஸ்ஹீயின் மூலமாய் கிடைத்த பாகமாயிருக்கிறது. பின்னும் (அல்இஹ்யா) என்ற கோடுவரியவேண்டும் எப்படியென்றால் இதற்கு உதாரணம்.

அல்இஹ்யாவல் என்பது ஜீவந்தராயிருக்கிறவர்கள்.

முப்லிகு 24.

ஹிந்தா..காலிது..வலீது.சல்மா

3......6.........6.....3

1, 2-வது மய்யத்தின் தஸ்ஹீயின் மூலமாய் முதல் மய்யத்தால் கிடைத்த பாகங்கள்.

0 — 0 — 4 — 2

1, 2-வது மய்யத்தின் தஸ்ஹீயின் மூலமாய் 2-வது மய்யத்தால் கிடைத்த பாகங்கள்.

3 — 6 — 10 — 5 மொத்தம்

வியாக்கியானம்.

முதல் மய்யத்தின் மஸ்அலாவும் 2-வது மய்யத்தின் மஸ்அலாவும் 1, 2 மய்யத்துகளின் தஸ்ஹீயும் செய்துவிட்டதின் பின் (அல்இஹ்யா) என்ற கோடு வரிந்து உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களும் இதின்கீழ் அவரவர்களின் பாகங்களும் எழுதவேண்டும். எப்படியென்றால் ஹிந்தாவுக்கு 3 என்றும் காலிதென்பவனுக்கு 6 என்றும், வலீது என்பவனுக்கு 10 என்றும், சல்மா என்பவளுக்கு 5 என்றும் எழுதவேண்டும். பின்னும் ஷை பாகங்களை கூட்டினால் இதின் மொத்தம் (முப்லிகு) என்ற தொகைக்கு சரியாக வரவேண்டும். 3+6+10+5=24. அதாவது 1, 2 மய்யத்துடைய மஸ்அலாக்களின் தஸ்ஹீயின் எண்ணுக்கு சரியாக இருக்கவேண்டும். ஷை தஸ்ஹீயின் எண்ணோ 24தான். இப்படிக்கு

2 எண்களும் சரியாயிருந்திராமல்வித்தியாசப்பட்டால் அப்போது பாகங்களில் வித்தியாசம் இருந்திருக்கும். ஆகையால் நன்றாக ஆராய்ந்து அந்த பிசகை கண்டுபிடிக்கவேண்டும். பின்னும் இந்த தஸ்ஹீஹில் வலீது என்பவனும், சல்மா என்பவளும் முதல் மய்யத்தின் மஸ்அலாவிலும், 3-வது மய்யத்தின் மஸ்அலாவிலும் வாரிசுகளாயிருந்து இருவித பாகங்களை பெற்றிருக்கிறார்கள். எப்படியென்றால்வலீது என்பவனுக்கு1, 2மய்யத்தின்தஸ்ஹீஹின் மூலமாய் முதல் மய்யத்தால் 6-ம்,பின்னும் 1,2மய்யத்தின் தஸ்ஹீஹின் மூலமாய்2-வதுமய்யத்தால்4-ம், ஆகமொத்தம் 10 கிடைத்தது.இந்ததுகை இவன் நாமத்துடன் (அல்இஹ்யா) என்ற கோட்டின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சல்மா என்பவளுக்கு ஷெடீ 1, 2 மய்யத்தின்தஸ்ஹீஹின்மூலமாய்முதல்மய்யத்தால்3-ம்,பின்னும்1,2மய்யத்தின்தஸ்ஹீஹின்மூலமாய்2-வதுமய்யத்தால்2-ம்,ஆகமொத்தம் 5 கிடைத்தது, இந்த துகையின் நாமத்துடன் அல்இஹ்யா என்ற கோட்டின்கீழ்எழுதவேண்டும். ஹமீதாவுக்கும் காலிதுக்கும் 2-வது மய்யத்தால் பாகம் கிடைக்கவில்லை.

3-வது மய்யத்தின் மஸ்அலா.

மய்யத்து	வலீது,மஸ்அலா 6								
	புத்திரி		புத்திரி		புத்திரி		புத்திரி		சகோதரி
	ஹமீதா		சயீதா		மஜீதா		சாலிஹா		சல்மா
			3-ல்2						மிகுதி
மஸ்அலாப்படி	1	—	1	—	1	—	1	—	2

வியாக்கியானம்.

3-வது இறந்துபோனவன் யாரென்றால் வலீது என்பவன்தான் இவனுக்கு ஹமீதா, சயீதா, மஜீதா, சாலிஹா என்று 4 புத்திரிகளும் ஒரு சகோதரியாகிய சல்மா என்பவளும்தான் வாரிசுகளாயிருக்கிறார்கள். இவர்களுடைய பாகங்கள் கொடுக்கவேண்டியதற்காக மஸ்அலா 6-ஆல் செய்து ஒவ்வொரு புத்திரிக்கு ஒவ்வொன்றாக 4 புத்திரிகளுக்கு 4-ம், மீதயிருக்கும் 2 சகோதரியாகிய சல்மா என்பவளுக்கும் கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின்பின் 1, 2, 3 மய்யத்துகளின் மஸ்அலாக்களை சேர்த்துதஸ்ஹீஹ் செய்யவேண்டும். எப்படியென்றால்.

ஷெடீ 1-வது மய்யத்து.

மய்யத்து	சைது, மஸ்அலா 8. 1, 2 மய்யத்தின் தஸ்ஹீஹ் அதாவது முதல் தஸ்ஹீஹ் 24. 1, 2, 3, மய்யத்தின் தஸ்ஹீஹ் அதாவது 2-வது தஸ்ஹீஹ் 72								
	பத்னி		புத்திரன்		புத்திரன்		புத்திரன்		புத்திரி
	ஹமீதா		காலிது		பகர்		வலீது		சல்மா
	1/8		முதல் பத்னியால்		2-வது பத்னியால்				
மஸ்அலாப்படி	1	—	2	—	2	—	2	—	1
1தஸ்ஹீஹின்படி	3	—	6	—	6	—	6	—	3
2தஸ்ஹீஹின்படி	9	—	18	—	18	—	18	—	9

ஷெடீ 2-வது மய்யத்து.

மய்யத்து	பகர், மஸ்அலா 3, தபாயன். சாக்ருவக்கதுகை 2			
	சகோதரன்		சகோதரி	
	வலீது		சல்மா	
	2	—	1	மஸ்அலாப்படி
	4	—	2	1, 2மய்யத்தின்தஸ்ஹீஹின்படி
	12	—	6	1,2,3மய்யத்தின் தஸ்ஹீஹின்படி

ஷெடீ 3-வது மய்யத்து.

மய்யத்து	வலீது, மஸ்அலா 6 இதின் ஸிப்கு 3 தவாபுக்கு பின்னிக்ரிகை சகுவக்கதுகை 10 இதின் ஸிப்கு 5								
	புத்திரி		புத்திரி		புத்திரி		புத்திரி		சகோதரி
	ஹமீதா		சயீதா		மஜீதா		சாலிஹா		சல்மா
			3-ல்2						மிகுதி
மஸ்அலாப்படி	1	—	1	—	1	—	1	—	2
ஸிப்கின்படி	5	—	5	—	5	—	5	—	10

வியாக்கியானம்.

மேல்கண்டபடி 3-வது மய்யத்தின் மஸ்அலா செய்துவிட்ட இன்பின் 1, 2, 3 மய்யத்துகளின் மஸ்அலாவின் தஸ்ஹீஹ் செய்ய வேண்டியதற்காக 3-வது மய்யத்தின்(மாபின்னத்)என்ற கைக்குவந்த

தொகையின் எண்ணிறும் இவனுடைய மஸ்அலாவின் எண்ணிறும் 4 வகைகளில் எவ்வகை இருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் ஷெடி கைக்கு வந்த தொகையாகிய 10-ஆம் ஷெடி மஸ்அலாவின் எண்ணாகிய 6-ஆம் தவாபுக்கு (பின்னிஸ்பி) இருக்கிறதாக தெரியவந்தது ஆகையால் தவாபுகின் காயிதாப்படி மஸ்அலாவின் தொகையின் விப்குடும் கைக்கு வந்த தொகையின் விப்குடும் செய்யவேண்டும். எப்படியென்றால் கைக்கு வந்த தொகையாகிய 10 பத்தை 2-ஆலும் மஸ்அலாவின் தொகையாகிய 6 ஆறை 2-ஆலும் வகுக்கவேண்டும். 10÷2=5. 6÷2=3. இப்படி வகுத்ததினால் கைக்கு வந்த தொகையின் விப்கு, 5-ஆகவும், மஸ்அலாவின் விப்கு 3-ஆகவும், இருக்கிறது. பின்னும் மஸ்அலாவின் விப்காகிய 3 மூன்றை 1-வது 2-வது மய்யத்தின் தஸ்ஹீ என்ற 1-வது தஸ்ஹீயின் எண்ணாகிய 24-ல் பெருக்கவேண்டும். 3×24=72. இப்படி பெருக்கிவந்த தொகையாகிய 72-ஆனது 1, 2, 3 மய்யத்துகளின் மஸ்அலாவின் தஸ்ஹீயாக இருக்கிறது, இதற்கு 2-வது தஸ்ஹீ என்று பேர். இதை முதல் மய்யத்தின் மஸ்அலாவின்மேல் எழுதவேண்டும். இப்படி தஸ்ஹீ செய்ததின்பின் 1, 2 மய்யத்துகளுடைய ஒவ்வொரு வாரிசின் பாகங்களை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்குடன் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் முதல் மய்யத்தின் வாரிசுகளில் ஹிந்தா என்பவளுக்கு முதல் தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 3 மூன்றை 2-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×3=9. இப்படி பெருக்கிவந்த தொகையானது 9-ஆக இருக்கிறது. இது ஹிந்தா என்பவளின் பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின் கீழ் எழுதவேண்டும். பின்னும் காலிது என்பவனுக்கு முதல் தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 6 ஆறை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×6=18. இப்படி பெருக்கிவந்த தொகையானது 18-ஆக இருக்கிறது. இது காலிது என்பவனுடைய பாகமாயிருக்கிறது. இதை இவன் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் பகர் என்பவனுக்கு முதல் தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 6 ஆறை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும், 3×6=18. இப்படி பெருக்கிவந்த தொகையானது 18-ஆக இருக்கிறது. இது பகர் என்பவனுடைய பாகமாயிருக்கிறது. இதை இவன் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் வலீது என்பவனுக்கு முதலாவது தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 6 ஆறை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×6=18. இப்படி பெருக்கிவந்த தொகையானது 18-ஆக இருக்கிறது. இது வலீது என்பவனுடைய பாகமாயிருக்கிறது. இதை இவன் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சல்மா என்பவளுக்கு முதலாவது தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 3 மூன்றை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். இப்படி பெருக்கிவந்த தொகையானது 9-ஆக இருக்கிறது. இது சல்மா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். இப்படி முதல் மய்யத்துடைய வாரிசுகளின் பாகங்களை கொடுத்துவிட்டதின்பின் 2-வது மய்யத்துடைய வாரிசுகளுக்கும் மேல்கண்டபடியே பாகத்துக் கொடுத்துவிடவேண்டும். எப்படியென்றால் 2-வது மய்யத்தின் வாரிசுகளில் சகோதரனாகிய வலீது என்பவனுக்கு முதல் தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 4 நாலை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×4=12. இப்படி பெருக்கிவந்த தொகையானது 12-ஆக இருக்கிறது இது வலீது என்பவனுடைய பாகமாயிருக்கிறது. இதை இவனுடைய நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சகோதரியாகிய சல்மா என்பவளுக்கு முதல் தஸ்ஹீயின்படி கிடைத்த பாகமாகிய 2 இரண்டை 3-வது மய்யத்தின் மஸ்அலாவின் விப்காகிய 3-ல் பெருக்கவேண்டும். 3×2=6. இப்படி பெருக்கிவந்த தொகையானது 6-ஆக இருக்கிறது. இது சல்மா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். இப்படி 1, 2 மய்யத்துகளின் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுத்துவிட்டதின் பின் 3-வது மய்யத்துடைய வாரிசுகளுக்கும் ஷெடி தவாபுகின்படி கைக்கு வந்த தொகையின் விப்கால் பாகங்கள் கொடுக்கவேண்டும். எப்படியென்றால் 3-வது மய்யத்தின் வாரிசான ஹமீதா என்பவளுக்கு 3-வது மய்யத்தின் மஸ்அலாவின்படி கிடைத்த பாகமாகிய 1 ஒன்றை ஷெடி 3-வது மய்யத்துக்கு கைக்கு வந்த தொகையின் விப்காகிய 5-ல் பெருக்கவேண்டும். 5×1=5. இப்படி பெருக்கிவந்த தொகையானது 5-ஆக இருக்கிறது. இது ஹமீதா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சயீதா என்பவளுக்கு 3-வது மய்யத்

தின் மஸ்அலாவின்படி கிடைத்த பாகமாகிய 1 ஒன்றை ஷெடி 3-வது மய்யத்துக்கு கைக்கு வந்த தொகையின் விப்காகிய 5-ல் பெருக்கவேண்டும். 5×1=5. இப்படி பெருக்கிவந்த தொகையானது 5-ஆக இருக்கிறது. இது சயீதா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் மஜீதா என்பவளுக்கு 3-வது மய்யத்தின் மஸ்அலாவின்படி கிடைத்த பாகமாகிய ஒன்றை ஷெடி 3-வது மய்யத்துக்கு கைக்கு வந்த தொகையின் விப்காகிய 5-ல் பெருக்கவேண்டும். 5×1=5. இப்படி பெருக்கிவந்த தொகையானது 5-ஆக இருக்கிறது. இது மஜீதா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சாலிஹா என்பவளுக்கு 3-வது மய்யத்தின் மஸ்அலாவின்படி கிடைத்த பாகமாகிய ஒன்றை ஷெடி 3-வது மய்யத்துக்கு கைக்கு வந்த தொகையின் விப்காகிய 5-ல் பெருக்கவேண்டும். 5×1=5. இப்படி பெருக்கிவந்த தொகையானது 5-ஆக இருக்கிறது இது சாலிஹா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். பின்னும் சல்மா என்பவளுக்கு 3-வது மய்யத்தின் மஸ்அலாவின்படி கிடைத்த பாகமாகிய 2 இரண்டை ஷெடி 3-வது மய்யத்துக்கு கைக்கு வந்த தொகையின் விப்காகிய 5-ல் பெருக்கவேண்டும். 5×2=10. இப்படி பெருக்கிவந்த தொகையானது 10-ஆக இருக்கிறது இது சல்மா என்பவளுடைய பாகமாயிருக்கிறது. இதை இவள் நாமத்தின்கீழ் எழுதவேண்டும். இப்படி எழுதினதின்பின் (அல்இஹ்றா) என்ற கோடு வரியவேண்டும். உதாரணம்.

அல்இஹ்றாவுல் முப்லிகு 72

ஹிந்தா	காலிது	சல்மா	ஹமீதா	சயீதா	மஜீதா	சாலிஹா	
9	18	9	0	0	0	0	1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 1-வது மய்யத்தின்படி.
0	0	6	0	0	0	0	1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 2-வது மய்யத்தின்படி.
0	0	10	5	5	5	5	1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி.
9	18	25	5	5	5	5	ஆக

பின்னும் 3-வது மய்யத்தின் மஸ்அலாவும் உயிரோடிருக்கிறவர்களின் நாமங்களும் இதின் கீழ் அவரவர்களின் பாகங்களும் எழுதவேண்டும்.

வியாக்கியானம்.

சல்மாவுக்கு 1, 2, 3 மய்யத்துகளின் மஸ்அலாவின் தஸ்ஹீகளால் 3 விதமான பாகங்கள் கிடைத்திருக்கின்றன. எப்படியென்றால் 1, 2, 3 மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் முதல் மய்யத்தின்படி 9-ம் பின்னும் 1-2-3-ம் மய்யத்துகளின் தஸ்ஹீஹின மூலமாய் 2-வது மய்யத்தின்படி 6-ம் பின்னும் 1, 2, 3 மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி 10-ம் ஆகமொத்தம் 9+6+10=25. இருபத்தைந்து சல்மாவுக்கு கிடைத்திருக்கிறது. இதை (அல்இஹ்றா) என்ற கோட்டின் கீழ் எழுதவேண்டும். பின்னும் ஹிந்தா என்பவளுக்கு 1-2-3- மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் முதல் மய்யத்தின்படி 9-ம் காலிது என்பவருக்கு 1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் முதல் மய்யத்தின்படி 18-ம் ஹமீதா என்பவளுக்கு 1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி 5-ம் சயீதா என்பவளுக்கு 1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி 5-ம் மஜீதா என்பவளுக்கு 1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி 5-ம் சாலிஹா என்பவளுக்கு 1-2-3-மய்யத்துகளின் தஸ்ஹீஹின் மூலமாய் 3-வது மய்யத்தின்படி 5-ம் கிடைத்தது இவைகளை அவரவர்களின் நாமங்களின் கீழ் எழுதவேண்டும். பின்னும் இப்படி எழுதிவந்த பாகங்களை 9×18+25+5+5+5+5=72. கூட்டினால் 72 வந்தது இதின் மொத்தம் முப்லிகு என்ற தொகைக்கு சரியாயிருக்கவேண்டும். ஷெடி தஸ்ஹீஹின் எண்ணே 72-தான் இப்படிக்கு 2 எண்களும் சரியாயிருந்திராமல் வித்தியாசப்பட்டால் அப்போது பாகங்களில் வித்தியாசம் இருந்திருக்கும். ஆகையால் நன்றாக ஆலோசித்து அந்த பிசகை கண்டுபிடிக்கவேண்டும்.

பின்னும் மேல் எழுதி வந்ததெல்லாம். 3 மய்யத்துகளின் சங்கதிகளாயிருந்தன. இப்போது 1, 2, 3, 4 மய்யத்துகள் ஒன்றின் பின் ஒன்றாக பாக பிரிவினைக்கு முன்னமே இறந்துபோனவர்களின் பயான். பின்னும் 5, 6, 7 மய்யத்துகள் வந்தாலும், இவ்விதமாகவே அமல் செய்யவேண்டும். 10-வது காயிதாவில் வருகிறது

10-வது காயிதா.

அறிக்கை.

1. 2 மய்யத்துகள் இருந்தால் அப்போது முதல் மய்யத்தின் மஸ்அலா நிர்க்கேதகபாக செய்து இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் இந்த மஸ்அலாவில் தஸ்ஹீ செய்யும்படி நேரிடும் பக்ஷத்தில் தஸ்ஹீயும் செய்து இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு தன் தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படி முதல் மய்யத்தின் மஸ்அலாவும் தஸ்ஹீயும் செய்துகொண்டதின் பின் 2-வது மய்யத்தின் மஸ்அலா செய்து இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். இதிலும் தஸ்ஹீ நேரிடும் பக்ஷத்தில் தஸ்ஹீயும் செய்துகொண்டு இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு தன் தஸ்ஹீயென்று பேர். பின்னும் இப்படி 2-வது மய்யத்தின் மஸ்அலாவும், தஸ்ஹீயும், செய்துகொண்டதின் பின் 1,2 மய்யத்துகளின் மஸ்அலாக்களை சேர்த்து ஒரு தஸ்ஹீ செய்யவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு முதல் தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படி முதல் தஸ்ஹீ செய்துக்கொண்டதின் பின் இதின் மூலமாய் 1, 2 மய்யத்துகளின் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் இப்படி கொடுத்துவிட்டதின்பின் (அல்இஹ்யா) என்றகோடு வரிந்து ஷெடு 2 மய்யத்துகளின் வாரிசுகளில் எவர்கள் ஜீவந்தராயிருக்கிறார்களோ அவர்களின் நாமங்கள் ஷெடு கோட்டின் கீழ் எழுதவேண்டும். பின்னும் இதின் கீழ் அவரவர்களின் பாகங்களும் எழுதவேண்டும். பின்னும் ஷெடு கோட்டின்மேல் முப்லிகு என்னும் தொகை என்ற வார்த்தையை எழுதி 1, 2 மஸ்அலாக்களை சேர்த்து செய்யப்பட்ட தஸ்ஹீயின் எண்ணை எழுதவேண்டும்.

பின்னும் 3-வது மய்யத்தின் மஸ்அலாவும் செய்து இவனுடைய வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் இதின் தஸ்ஹீ செய்யும்படி நேரிடும்பக்ஷத்தில் இப்படிக்கு இதின் தஸ்ஹீயும் செய்துக்கொண்டு இவன் வாரிசுகளுக்கு பாகங்களை கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு தன் தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படிக்கு 3-வது மய்யத்தின் மஸ்அலாவும், தஸ்ஹீயும், செய்துக்கொண்டதின்பின் 1, 2, 3 மய்யத்துகளின் மஸ்அலாக்களை சேர்த்து ஒரு தஸ்ஹீ செய்யவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு 2-வது தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படி 2-வது தஸ்ஹீ செய்து இதின் மூலமாய் 1, 2, 3 மய்யத்துகளின் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் (அல்இஹ்யா) என்ற கோடு வரிந்து ஷெடு 1, 2, 3 மய்யத்துகளின் வாரிசுகளில் எவர்கள் ஜீவந்தராயிருக்கிறார்களோ அவர்களின் நாமங்கள் ஷெடு கோட்டின் கீழ் எழுதவேண்டும். பின்னும் இதின் கீழ் இவர்களின் பாகங்களும் எழுதவேண்டும். பின்னும் ஷெடுகோட்டின்மேல் (முப்லிகு) என்னும் கைக்குவந்த தொகையென்ற வார்த்தையை எழுதி 1, 2, 3 மஸ்அலாக்களைசேர்த்து செய்யப்பட்ட தஸ்ஹீயின் எண்ணை எழுதவேண்டும்.

பின்னும் 4-வது மய்யத்தின் மஸ்அலாவும் செய்து இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் இதில் தஸ்ஹீ செய்யும்படி நேரிடும்பக்ஷத்தில் அப்படிக்கு இதின் தஸ்ஹீயும் செய்து இவனுடைய வாரிசுகளின் பாகங்கள் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு தன் தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படிக்கு 4-வது மய்யத்தின் மஸ்அலாவும் தஸ்ஹீயும் செய்துக்கொண்டதின்பின் 1, 2, 3, 4 மஸ்அலாக்களையும் சேர்த்து ஒரு தஸ்ஹீ செய்யவேண்டும். இப்படிப்பட்ட தஸ்ஹீக்கு 3-வது தஸ்ஹீ என்று பேர். பின்னும் இப்படி 3-வது தஸ்ஹீ செய்துக்கொண்டதின்பின் இதின் மூலமாய் 1, 2, 3, 4 மய்யத்துகளின் வாரிசுகளுக்கு பாகங்கள் கொடுக்கவேண்டும். பின்னும் 1, 2, 3,4 மய்யத்துகளுக்கு பாகங்கள் கொடுத்துவிட்டதின் பின் (அல்இஹ்யா) என்ற கோடு வரியவேண்டும். பின்னும் இதின் கீழ் 1,2, 3, 4 மய்யத்துகளின் வாரிசுகளில் எவர்கள் ஜீவந்தராயிருக்கிறார்களோ. அவர்களின் நாமங்கள் எழுதவேண்டும். பின்னும் ஷெடு கோட்டின் மேல் (முப்லிகு) என்னும் தொகை என்ற வார்த்தையைஎழுதி 1,2,3,4 மஸ்அலாக்களை சேர்த்து செய்யப்பட்ட தஸ்ஹீயின் எண்ணை எழுதவேண்டும்.

பின்னும் முதல் தஸ்ஹீயின் மூலமாய் எவரெவர்களுக்கு பாகங்கள் கொடுக்கப்பட்டனவோ. அந்த பாகங்களை கூட்டினால் முதல் தஸ்ஹீயின் எண்ணுக்கு சரியாயிருக்கவேண்டும். இப்படியே 2-

வது தஸ்ஹீயின் மூலமாய் எவரெவர்களுக்கு பாகங்கள் கொடுக்கப்பட்டனவோ அவைகளை கூட்டினால் 2-வது தஸ்ஹீயின் எண்ணுக்கு சரியாயிருக்கவேண்டும். இப்படியே 3-வது தஸ்ஹீயின் மூலமாய் எவரெவர்களுக்கு பாகங்கள் கொடுக்கப்பட்டனவோ. அவைகளை கூட்டினால் 3-வது தஸ்ஹீயின் எண்ணுக்கு சரியாயிருக்கவேண்டும். இப்படி கூட்டும்தொகைகள் அந்தந்த தஸ்ஹீயின் எண்களுக்கு சரியாயிருக்காமல் வித்தியாசப்பட்டால் பாகித்துக் கொடுத்த பாகங்களிலாவது அல்லது தஸ்ஹீயின் எண்ணிலாவது பிசகு இருக்கிருக்கும் ஆகையால் கூர்மையாக கவனித்து அந்த பிசகை கண்டுபிடிக்க வேண்டும்.

முதல் மய்யத்தின் மஸ்அலாவின்மேல் எழுத வேண்டியவைகள்.

மய்யத்தின் நாமமும் மஸ்அலாவும் இதின் எண்ணும் 2-வது மஸ்அலா செய்யப்பட்டிருந்தால் இதுவும் இதின் எண்ணும் இந்த மஸ்அலா தஸ்ஹீ செய்யப்பட்டிருந்தால் இதுவும் இதின் எண்ணும் 1, 2 மய்யத்துகளின் மஸ்அலாக்கள் சேர்ந்து தஸ்ஹீ செய்யப்பட்டிருந்தால், அப்போது முதல்தஸ்ஹீஎன்றும் இதின்எண் இன்னதென்றும், இப்படியே 1, 2. 3 மய்யத்துகளின் மஸ்அலாக்கள் சேர்ந்து தஸ்ஹீ செய்யப்பட்டிருந்தால் அப்போது 2-வது தஸ்ஹீ என்றும் இதின் எண் இன்னதென்றும், பின்னும் 1, 2, 3, 4 மய்யத்துகளின் மஸ்அலாக்கள் சேர்ந்து தஸ்ஹீ செய்யப்பட்டிருந்தால் அப்போது 3-வது தஸ்ஹீ என்றும் இதின் எண் இன்னதென்றும், எழுதவேண்டும்.

2-வது மய்யத்தின் மஸ்அலாவின்மேல் எழுத வேண்டியவைகள்.

2-வது மய்யத்தின் பேரும் மஸ்அலாவும் இதின் எண்ணும் இது தஸ்ஹீயாயிருந்தால் தன் தஸ்ஹீ என்றும் இதின் எண் இன்னதென்றும், சுத்த தவாபுக்கு இருந்தால் சுத்த தவாபுக்கு என்றும் தவாபுக்கு(பிஸ்அல்கி)யாயிருந்தால்தவாபுக்கு(பிசுஅல்கி)என்றும்மஸ்அலாவில் விப்கு இருந்தால்மஸ்அலாவின் விப்குஎன்றும் இதின்தொகை இன்னதென்றும், கைக்குவந்த தொகையிருந்தால் கைக்குவந்த தொகை என்றும் இதின் தொகை இன்னதென்றும் கைக்குவந்த தொகை விப்காயிருந்தால் கைக்குவந்த தொகையின்விப்கு என்றும்இதின் தொகைஇன்னதென்றும் (இஸ்திகாமத்து)இருந்தால்(இஸ்திகாமத்து)என்றும்தபாயுன் இருந்தால் தபாயுன் என்றும் எழுதவேண்டும். இவ்விதமாகவே 3-வது, 4-வது, 5-வது, 6-வது மய்யத்துகளுடைய மஸ்அலாக்களின் மேல் எழுதவேண்டும்.

பின்னும் மேல் எழுதிவந்ததெல்லாம் 3 மய்யத்துகளின் சங்கதிகளாயிருந்தன. இப்போது 4 மய்யத்துகள் ஒன்றின்பின் ஒன்றாக பாகப்பிரிவினைக்கு முன்னமே இறந்துபோனவர்களின் பயான். பின்னும் இவ்விஷயத்தில் முப்பிவகை முதல் தஸ்ஹீயின் ஸ்தானத்திலும் 3-வது தஸ்ஹீயை 2-வது தஸ்ஹீயின் ஸ்தானத்திலும் இருக்கிறதென்று எண்ணி வழக்கப்படி அமல் செய்யவேண்டும். பின்னும் 4, 5, 6 மய்யத்துகள் வந்தாலும் இவ்விதமாகவே அமல் செய்ய வேண்டும்.

முதல் மய்யத்தின் மஸ்அலா.

மய்யத்து ஹிந்தா, முதல் மஸ்அலா 4. 2-வது மஸ்அலா 4

பதி	புத்திரி	மாதா	
சைது	கரீமா	ரஹீமா	
$\frac{1}{4}$	$\frac{1}{2}$	$\frac{1}{6}$	
1	3		முதல் மஸ்அலாவின் எண் 4
1	3	1	2-வது மஸ்அலாவின் எண் 4

வியாக்கியானம்.

முதல் இறந்தவள் யாரென்றால் ஹிந்தா என்பவள் தான் இவளுக்கு 3 வாரிசுகள் இருக்கிறார்கள். அதாவது பதியாகிய சைதும் புத்திரியாகிய கரீமாவும், மாதாவாகிய ரஹீமாவுமே இவர்களுடைய பாகங்கள் கொடுக்கவேண்டியதற்காக பதியின் மக்ரஜாகிய 4-ஆல மஸ்அலா செய்து ஷெடி புருஷனுடைய $\frac{1}{4}$-க்கு ஒருபாகம் கொடுத்து விட்டு மீதமிருக்கும் 3 மூன்றை ஒரு புத்திரிக்கு $\frac{1}{2}$-யும், மாதாவுக்கு $\frac{1}{6}$-மாக பாகித்துக்கொடுக்க பாகம் முறிப்படுகிறதாகையால் 2-வது மஸ்அலா செய்யவேண்டும், எப்படியென்றால் ஷெடி 3-ன் இலக்கத்துடன் ஒரு இலக்கத்தை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். 1+3=4. இப்படிக்கு அதிகப்படுத்திக்கொண்டால் 4 ஆகின்றது. இப்படி 4 ஆக்கிக்கொண்டு புத்திரியாகிய கரீமாவுக்கு சேரவேண்டிய $\frac{1}{2}$-க்கு 3-ம், மாதாவாகிய ரஹீமாவுக்கு சேரவேண்டிய $\frac{1}{6}$-க்கு ஒன்றும் கொடுக்கவேண்டும். இப்படி 4-ஆல் பாகித்து கொடுத்த

யால் இது 2-வது மஸ்அலாவா யிருக்கிறது. பின்னும் மீதமிருக்கிற 3-ல் ஒரு இலக்கம் அதிகப்படுத்திக்கொண்டு 4 ஆக்கிக்கொண்டது. சுருக்க வழியாக இருக்கிறது. இதின்விரிவென்னவது மஸ்அலா பதியின் மக்ரஜாகிய 4-ஆல் செய்து பதியின் பாகத்துக்கு $\frac{1}{4}$-க்கு ஒருபாகம் கொடுத்துவிட்டு மறுபடியும் வேறே மஸ்அலா மாதாவின் மக்ரஜாகிய 6-ஆல் செய்து புத்திரியின் பாகமாகிய $\frac{1}{2}$-க்கு 3-ம், மாதாவின் பாகமாகிய $\frac{1}{6}$-க்கு 1-ம் கொடுக்கவேண்டும். இப்போது ஷை 3 மூன்றையும், ஒன்றையும் $3+1=4$. கூட்டினால் 4 ஆகிறது. ஆகையால் இப்படி கொடுப்பதைப் பார்க்கிலும் சுருக்க வழியாக கொடுப்பது நலமென்று மேற்கண்டபடி 2-வது மஸ்அலா 4-ஆல் செய்து புத்திரிக்கு 3-ம், மாதாவுக்கு 1-ம் கொடுக்கப்பட்டது. இப்படி முதல் மஸ்அலா செய்துவிட்டதின்பின் 2-வது இறந்தவனுடைய மஸ்அலா செய்யவேண்டும்.

2-வது மய்யத்தின் மஸ்அலா.

மய்யத்து சைது, மஸ்அலா 4
பத்னி.....பிதா.....மாதா
ஆசியா.....அதா.....அத்மியா
$\frac{1}{4}$ ... 3-ல்2..... $\frac{1}{3}$
1 — 2 —— 1 மஸ்அலாவின் எண் 4-ன்படி

வியாக்கியானம்.

2-வது இறந்துபோனவன் யாரென்றால் ஷை பதியாகிய சைது என்பவன்தான் இவனுக்கு 3 வாரிசுகள் இருக்கிறார்கள். அதாவது ஆசியா என்ற ஒரு பத்னியும், அதா என்ற ஒரு பிதாவும், அத்மியா என்ற மாதாவும்தான், இவர்களுடைய பாகங்கள் கொடுக்கவேண்டியதற்காக பத்னியின் கடைசி மக்ரஜாகிய 4-ஆல் மஸ்அலா செய்து ஷை பத்னியின் $\frac{1}{4}$-க்கு ஒருபாகம் கொடுத்துவிடவேண்டும். பின்னும் ஷை 4-ல் 1 பாகம் போக மீதமிருக்கிறது 3தான், இப்போது மாதாவின் பாகமாகிய மீதசொத்தில் $\frac{1}{3}$-க்கு அவளுக்கு1 கொடுத்துவிடவேண்டும். இப்படி கொடுத்துவிட்டதின்பின் மீதமிருக்கிற 2 இரண்டை பிதாவாகிய அதா என்பவனுக்கு கொடுத்துவிடவேண்டும். இப்படி முதல் இறந்தவனுடைய மஸ்அலாவும் 2-வது இறந்தவனுடைய மஸ்அலாவும் செய்துவிட்டதின்பின் ஷை 1, 2 மய்யத்துகளின் மஸ்அலாவின் தஸ்ஹீ செய்யவேண்டும்.

ஷை 1-வது மய்யத்து.

1-2-மய்யத்தின் தஸ்ஹீ.

மய்யத்து உமிர்தா, முதல் மஸ்அலா 4, 2-வது மஸ்அலா 4
1-2-மய்யத்தின் தஸ்ஹீ 16
பதி.....புத்திரி.....மாதா
சைது...கரீமா.....ரஹீமா
$\frac{1}{4}$ ... $\frac{1}{2}$ ...... $\frac{1}{6}$
1 ——— 3 1-வது மஸ்அலாவின்படி
1 — 3 —— 1 2-வது மஸ்அலாவின்படி
4 — 9 —— 3 1-2-மய்யத்தின் தஸ்ஹீயின்படி

ஷை 2-வது மய்யத்து.

1-2-மய்யத்தின் தஸ்ஹீ.

மய்யத்து சைது, மஸ்அலா 4, தபாயுன் கைக்கு வந்த தொகை 1
பத்னி.....பிதா.....மாதா
ஆசியா.....அதா.....அத்மியா
$\frac{1}{4}$ ...3-ல்2.... $\frac{1}{6}$
1 — 2 — 1 மஸ்அலாவின்படி.
1 — 2 — 1 1-2-மய்யத்தின் தஸ்ஹீயின்படி.

வியாக்கியானம்.

1-2-வது மய்யத்தின் தஸ்ஹீ செய்யவேண்டியதற்காக 2-வது இறந்தவனுடைய (மாபில்யத்) என்ற கைக்குவந்த தொகையின் எண்ணினும் இவனுடைய மஸ்அலாவின் எண்ணினும் 4 வகைகளில் எவ்வகை யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இப்படி பார்த்ததில் ஷை கைக்குவந்த தொகையாகிய 1-உம், ஷை மஸ்அலாவின் எண்ணாகிய 4-உம் தபாயுன் இருக்கிறதென்று தெரியவந்தது, ஆகையால் தபாயுனுடைய காயிதாவின்படி 2-வது மஸ்அலாவின் எண்ணாகிய 4 காலே முதல் மஸ்அலாவின் எண்ணாகிய 4-ஆல் பெருக்கவேண்டும். $4 \times 4 = 16$. இப்படி பெருக்கிவந்த தொகையானது 16-ஆக யிருக்கிறது. இந்த தொகையே 1-வது 2-வது மய்யத்தின் மஸ்அலாவின் தஸ்ஹீயா யிருக்கிறது, பின்னும் இது (முப்லிகு) என்ற தொகையுமாயிருக்கிறது.

பின்னும் இதற்கு முதல் தஸ்ஹீஹ் என்னும் பேர். பின்னும் ஷை. தபாயுனுடைய காயிதாப்படி முதல் இறந்தவனுடைய ஒவ்வொரு வாரிசின பாகத்தை 2-வது மய்யத்துடைய மஸ்அலாவின் எண்ணுடன் பெருக்கி அவரவர்களுக்கு பாகங்களை கொடுத்துவிடவேண்டும், எப்படியென்றால்.

